# மு.வ. நினைவு மலர்

5986

கள்ளோ காவியமோ

தங்கைக்கு

அகல்விளக்கு

கண்ணகி

கரித்துண்டு

பெற்றமனம்

பதிப்பாசிரியர்கள்:
டாக்டர் முத்துச்சண்முகன்
சு. வேங்கடராமன்

86
06
T
5986

மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை
பல்கலை நகர், மதுரை 625021

தமிழ்த்துறை வெளியீடு: 19

# மு. வ. நினைவு மலர்

பதிப்பாசிரியர்கள்:

**டாக்டர் முத்துச்சண்முகன்**, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், மதுரைப் பல்கலைக் கழகம்.

**சு. வேங்கடராமன்**, எம். ஏ.,
தமிழ் விரிவுரையாளர், மதுரைப் பல்கலைக் கழகம்.

**தமிழ்த்துறை**
**மதுரைப் பல்கலைக் கழகம்**
பல்கலைநகர்-625021 : : மதுரை மாவட்டம்

மு. வ. நினைவு மலர்

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு : 19

முதற்பதிப்பு: சனவரி, 1976.

© உரிமை பதிவு.

கிடைக்குமிடம் :

மதுரைப் பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு அங்காடி,
பல்கலைநகர் - 625021 : : மதுரை மாவட்டம்.

அச்சிட்டோர்: சங்கம் பிரிண்டர்ஸ், மதுரை-625001.



டாக்டர் மு. வ.

## நன்றியுரை

தமிழ்த்துறை செய்துவரும் ஆக்கபூர்வமான அனைத்து முயற்சிகளையும் அன்புடன் நெறிபடுத்தி எங்களுக்கு என்றும் துணையாக நிற்கும் துணைவேந்தர் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்களுக்கு என்றென்றும் கடப்பாடுடையோம்.

நினைவுமலர் தொகுப்பது அறிந்து, நாங்கள் விரும்பியவண்ணம் படைப்புக்களை வெளியிட்டுக் கொள்ளலாம் என்று அன்புடன் அனுமதி வழங்கிய படைப்பாளர்கள் அனைவர்க்கும் இதழாசிரியர்கள் அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

இந்த நூலைப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டுவர அனுமதி வழங்கிய மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்க்கும், ஆட்சிக்குழு உறுப்பினர் அனைவர்க்கும், பல்கலைக்கழகத்திற்கும் எங்கள் அன்பும் நன்றியும்.

இம்மலரை உருவாக்குகையில் உதவி செய்த நண்பர், திரு ச. செயபப்பிரகாசம் அவர்களுக்கும், நூலின் அச்சுப்படிகளைத் திருத்த உதவிய தமிழ்த்துறை ஆய்வாளர் திரு இரா. மோகன் அவர்களுக்கும் எம் நன்றி.

நாங்கள் எண்ணியதற்கு மாறாக விரைவில் இந்நூலை உருவாக்கித்தந்த சங்கம் அச்சகத்தின் உரிமையாளர் திரு வெ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் அதன் ஊழியர்கள் அனைவர்க்கும் அச்சுப்படிகளை அன்புடன் திருத்த உதவிய நண்பர்களுக்கும் எம் நன்றி என்றும் உரியது.

பதிப்பாசிரியர்கள்

## பதிப்புரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழைப் பல்வேறு நிலைகளிலும் வளர்த்துத் தமிழர்க்கு என்றென்றும் வழிகாட்டியாக அமைந்தவர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள். சங்க இலக்கியம் முதல் இன்றைய இலக்கியம் முடிய தமிழிலக்கியம் முழுவதிலும் ஒருசேரத் திளைப்பவர்களுள் அவர் முதன்மையானவர். இலக்கணம், இலக்கியம், மொழியியல் என்று அத்துணை கிளைகளாகப் பல்கியுள்ள தமிழின் துறைதொறும் தொண்டாற்றிய அப்பெருமகனார் 1912ஆம் ஆண்டில் அமைதியும் எழிலும் மிக்க வேலம் கிராமத்தில் தோன்றினார். திருப்பத்தூரில் அரசு அலுவலகத்தில் எழுத்தராகப் பணியாற்றத் துவங்கிய அவரின் வாழ்க்கைப்பாதை தமிழரின் நல் ஊழால் தமிழின்பால் அமைந்தது. அன்றுதொட்டு அவரது அயராத உழைப்பு தொடங்கியது. தமிழைக்கற்று ஒவ்வோர் நிலைக்கும் உயர்ந்த அவர், பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றி உழைப்பால் எதையும் பெறமுடியும் என்று வாழ்ந்துகாட்டினார். 1974ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10ஆம் நாள், தமிழர் வாழ்வையும் நலனையும் எண்ணியே வாழ்ந்த அப்பெருமகனார் நம்மைவிட்டு மறைந்தார்.

மு.வ. வின் மறைவிற்குப் பிறகு பல்வேறு இதழ்களிலும் மலர்களிலும் அச்சான்றோரின் நினைவைக் குறித்து அறிஞர் பெருமக்கள் எழுதிய கட்டுரைகள், குறிப்புகள், கவிதைகள் ஆகியனவற்றை முறையாகத் தொகுத்தோம். தமிழகத்திலும் கடல் கடந்த நாடுகளான ஈழம், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய தமிழ்ப்பேசப்படும் நாடுகளிலும் வெளியான அவரைப் பற்றிய கண்ணீர்க் காவியங்கள் யாவும் தொகுக்கப்பட்டு இம்மலரை உருவாக்கின. கட்டுரைகள் முதலிலும், அடுத்து குறிப்புகள் என்பனவும், இறுதியில் கவிதைகளும் ஆக இம்மாலை தொகுக்கப்பட்டுள்ளது. கட்டுரைகள், குறிப்புகள், கவிதைகள் என்பன யாவும் அவை இதழ்களில் வெளியான அந்த வடிவில் தான் இம்மலரில் இடம்பெறுகின்றன. அப்படைப்புக்களை ஆசிரியர் பெயர்களின் அகரவரிசை அடிப்படையில் தொகுத்து இம்மலராக உருவாக்கியுள்ளோம். வைப்பு முறையும் அமைப்பும் தொகுப்பும் பதிப்புமே எங்கள் பணியாக மலர்ந்துள்ளது

டாக்டர் மு.வ. அவர்களை எழுத்தாளராக, பேராசிரியராக நண்பராக, உறவினராக, அன்புத் தந்தையாக, அமுது ஊட்டும் தாயாக, அறநெறி காட்டும் ஆசானாக, மனித தெய்வமாக, இயற்கை மருத்துவராக என்று பல்வேறு நிலைகளில் கண்ட அநுபவங்களைப் படைப்பாளர்கள் வெளியிடும் பாங்கினை இந்த நூல் முழுவதிலும் காணலாம். எந்த நிலையில் பார்ப்பினும் அந்தத் தன்மையில் வெளிப்பட்டு அன்பு செலுத்திய மு.வ.வின் பண்புநலனை ஒவ்வொருவரும் வெளியிடுகின்றனர். சிந்தனைச் செல்வராகவும் மனிதாபிமானம் மிக்கவராகவும் சொல்லும் செயலும் ஒன்றெனக் கொண்டு சான்றோராகவும் வாழ்ந்த அவரை எக்கோணத்தில் பார்ப்பினும் அடிப்படையில் புலனாகும் மனிதப்பண்பை ஒவ்வொரு படைப்பாளரும் வெளியிடுகின்ற மாண்பை நூல் முழுமையிலும் காணலாம்.

மு.வ. அவர்களின் மறைவு என்னும் பேரிடி தாக்கிய உடன் ஏற்பட்ட உணர்ச்சி வெள்ளம் உள்ளத் துடிப்புடன் இப் படைப்புக்களில் வெளியாகின்றது. உணர்வினடிப்படையில் எழுதப்பட்ட அமைப்பை இவற்றில் காணலாம். அவரது அன்பில் திளைத்தவர்கள் மீண்டும் மீண்டும் சிலவற்றைக் கூறுவது கூறியது கூறலாக இருப்பினும் நினைவைப்போற்றும் எண்ணக் குவியலாக விளங்குவதை மறந்துவிடலாகாது.

தமிழன் வாழ்ந்தால் தமிழ் வாழும் என்று அரிச்சுவடி கற்றுத்தந்து,சொல்லைக் குறைத்துச் செயலாற்றும் வாழ்க்கைப் பாடம் பயிற்றுவித்த சான்றோர் மு.வ. வின் நினைவிற்கு அன்புக் காணிக்கையாக மலரும் இந்த நூலைத் தமிழகம் பெரிதும் வரவேற்பதாக.

பதிப்பாசிரியர்கள்

# உள்ளடக்கம்


| ☐ கட்டுரைகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | எழுத்தாளர் மு.வ. | 1 |
| 2. | வள்ளல் மு.வ. | 9 |
| 3. | மு.வ. தமிழ் மூவாத்தமிழ் | 11 |
| 4. | அறிஞர் பற்றி | 18 |
| 5. | பேரொளி அணைந்தது | 23 |
| 6. | காந்தியத் துணைவேந்தர் | 26 |
| 7. | இதயத்தில் விழுந்த இடி | 29 |
| 8. | முன்னுக்கு வா | 31 |
| 9. | டாக்டர் மு.வ. | 35 |
| 10. | தமிழ் உள்ளவரை மு.வ. | 41 |
| 11. | ஒரு தமிழ் நெஞ்சம் மறைந்தது | 45 |
| 12. | முன்னுக்கு வந்தவரின் முனைப்பும் வணக்கமும் | 49 |
| 13. | துறவி மு.வ. | 52 |
| 14. | டாக்டர் மு.வ. சில நினைவுகள் | 58 |
| 15. | ஊருணி | 66 |
| 16. | ஒரு சகாப்தம் முடிகிறது | 77 |
| 17. | விடைபெற்றுக் கொண்டார் | 89 |
| 18. | அறிஞர் அறவாழி | 93 |
| 19. | தமிழிற்கு ஓர் அண்ணல் | 96 |
| 20. | டாக்டர் மு.வ. சில நினைவுகள் | 109 |
| 21. | பண்பிற் சிறந்த பெருமகன் | 115 |
| 22. | மு.வ. வழிகாட்டி | 126 |
| 23. | நெறியின் நீங்கா நீர்மையர் | 128 |
| 24. | பண்பாளர் மு.வ. | 130 |
| 25. | பெருவாழ்வு | 132 |
| 26. | தண்டமிழ்ச் சான்றோர் டாக்டர் மு.வ. | 138 |

27. வழிகாட்டும் பெருஞ்சுடர் 144
28. பண்புடைப் பண்டாரகர் மு.வ. 149
29. தமிழுக்கு விடுதலே தந்தவர் 164
30. என் அனுபவங்களில் டாக்டர் மு.வ. 171
31. பேராசிரியர் மு. வரதராசனுர் ஓர் ஒப்பற்ற கைவிளக்கு 178
32. அன்னேயின் கண்ணீர் 187
33. மு.வ. வின் கடைசி நாட்கள் 192
34. Dr. M. Varadarajan a human scholar 198

□□ குறிப்புகள்

35. தமிழ் வளர்த்த செம்மல் 205
36. புரட்சி செய்த புலவர்மணி 206
37. நடுநிலேச் செம்மல் 206
38. தமிழ்க்கனி வழங்கும் தரு சாய்ந்தது 207
39. வள்ளலார் வாழ்வு நடத்தியவர் 208
40. புகழ்க்கொடி நாட்டியவர் 209
41. பீடும் பெருமையும் மிக்க பேராசிரியர் 210
42. இலக்கிய நிலா 210
43. எளிமையானவர் 211
44. தமிழ் உள்ளவரையில் மு.வ. 212
45. பண்பின் சிகரம் 213
46. வியப்பிறந்த மேன்மையர் 214
47. தமிழ்த்தாயின் தலேமகன் 215
48. தமிழர்—கலேஞர்—சான்ருேர் 215
49. நிலேயான பணி 217
50. ஏழைநாடு 217
51. முயற்சியின் வடிவம் 219
52. நவீனங்களால் தமிழ் வளர்த்தவர் 219

53. சீர்மிகு தமிழர் 220
54. திறன்படைத்த துணைவேந்தர் 220
55. தமிழ்த்திங்கள் 221
56. மு.வ. மறைந்தார் 222
57. அடுத்தடுத்து வந்த துன்பவெள்ளம் 223

□□□ கவிதைகள்

58. மூவாத்தமிழ்மகன் 227
59. தகைமைக் கோயில் 227
60. ஒரு பாலை ஒரு தமிழை இழந்து விட்டோம் 228
61. இரங்கற்பா 229
62. டாக்டர் மு.வ. 230
63. நல்வழிகாட்டும் நமக்கு 230
64. மூவாத்தமிழ் 231
65. குருத்தெனவே நூல்தந்த குரிசில் 232
66. மரணத்தை வென்றவர் 233
67. சுடர்விளக்கு அணைந்தது 234
68. நாமமே போற்றி... 235
69. இமைநனையும் புருவம் உயரும் 236
70. மன்னு புகழ் டாக்டர் 236
71. புகழில் வாழ்வார் 237
72. தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை 238
73. இதயமே! நீ ஏன் அழுகின்றாய்? 238
74. தமிழ்த்தேர் வலவன் 239
75. சாவால் உனக்குச் சாவுண்டோ? 240
76. இதயத்தில் ஒளி வீசும் உதயவான்
வெள்ளி மு.வ. 241
77. உன் பார்வை எங்கள் மீது 242
78. செந்தமிழ் வளர்த்த செம்மல் 245

79. ஓங்கு குன்றம் 245
80. கல்வியை வளர்த்த சீராளன் 245
81. கலைமேதை மு.வ. 247
82. டாக்டர் மு.வ. மீது இரங்கற்பா 248
83. தெய்வமாகிய மு.வ. வுக்கு வாழ்த்து 249
84. நேரெழுத்து ஓவியத்தை என்று காண்போம் 250
85. இதயத்தில் வீழ்ந்த இடி 251
86. மலர்விழி மூடியதேன் 251
87. மு.வ. வைப் பிரிந்தோமே நாம் 252
88. சாவே உனக்கும் ஒரு சாவு வந்து நேராதா? 254
89. நின் முயற்சி இயம்பவற்றே 254
90. தமிழ்த்தென்றல் 255
91. காலனுமை அழைத்ததேனோ? 256
92. மங்காத புகழுக்கோர் மு.வ. 256
93. எழுத்தில் நீ வாழ்ந்திருப்பாய் 257
94. அமிழ்தான தமிழுக்கு ஏற்றம் தந்தார் 258
95. நெருப்பு நினைவுகள் 259
96. மன்பதைத் தமிழர் நெஞ்சில் வல்லிடி வீழ்ந்ததின்று 260
97. உளந்தேற்றி உரைப்பதற்கோ ஒருவற் காணோம் 261
98. இது முறையோ? 263
99. இரங்கல்வரி 264
100. அறிஞர் மு.வ.வுக்கு அஞ்சலி 265
101. தொடர்கதையை இங்ஙன் முடிப்பதுதான் நன்றோ? 266
102. மு.வ. வாழ்கின்றார் 268
103. வளமிகு மு. வரதராச! உடல் மறைந்தீர் புகழ் மறையீரே 269
104. மு.வ. வணக்கம் 270

105. சரி செய்ய யார் வருவார்? 271
106. பேசாத படமானுர் 272
107. மூவாத மு.வ. 272
108. மூவாத் தமிழ் மு.வ. 273
109. தமிழின் தலைவர் 274
110. டாக்டர் மு.வ. 275
111. காலத்தால் அழியாத காவியம் 276
112. என்றினி மு.வ. காண்பேன் 276
113. இருக்கின்ருேம் நாங்கள் மட்டும் 277
114. தெய்வத்திருவிளக்கு 278
115. முத்தமிழ் டாக்டர் மு.வ. 278
116. நெஞ்சப்பாறையில் நினைவு நுரைகள் 279
117. செந்தமிழாம் அன்னைக்குத் தொண்டு செய வருக! 280
118. தமிழ்வீணை அறுந்ததம்மா! 281
119. தமிழ்ச்சோலை வேலி எங்கே ? 281
120, அமரர் மு.வ. 282
121. புலவர் கண்ணீர் 283
பொருளாரம்

# எழுத்தாளர் மு. வ.

அகிலன்

இதோ என் மேசை மீது கடிதங்களின் உருவில் இருந்து சில இதயங்கள் துடிக்கின்றன.

"பெருமைக்குரிய நற்சான்றோரை இழந்து துடிக்கும் நிலை. மு. வ. வின் செய்தியை அறிந்ததும் எதுவும் ஓடவில்லை. உண்ணவும் முடியவில்லை. நல்லார் ஒருவர் நம்மிடைய இப்பொழுது இல்லை. எவ்வளவோ நாட்கள் நானும் அவரும் கடற்கரையில் அமர்ந்து கொண்டு மணிக்கணக்கில் உரையாடியுள்ளோம். டாக்டர் மு. வ. கொண்டிருந்த அன்பு அளவிடற்கரியது." -பேராசிரியர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்களின் கடிதப் பகுதி இது.

"நடமாடிக் கொண்டு நம்மிடைய வாழ்ந்த தெய்வம் மறைந்து விட்டது. ஒருவார காலமாக ஒன்றுமே செய்ய இயலாத மிகவும் நொந்துள்ள மனநிலை. ருஷ்ய எழுத்தாளர் ஷோலகாவ் கூறுவார்: 'தங்கமயமான பெரும்பறவை ஒன்று தன் குஞ்சுகளையெல்லாம் சிறகுகளால் தூக்கி மேலே பறக்கவிட்டதாம்; குஞ்சுகள் கீழே விழ விழ, மீண்டும், மீண்டும் தூக்கி உயரே உயரே

பறக்கவிட்டதாம், அதே போன்ற — உள்ளம் முழுவதும் அன்பால் பொன்மயமான — துணைவேந்தர் என்னையொத்த சிறு சிறு குஞ்சு-களைக்கூடத் தம் அன்புச் சிறகுகளில் அணைத்து ஆதரவு காட்டி வளர்த்-தார், இன்று தாய்ப் பறவையை இழந்து தவிக்கும் சிறு பறவை-களாக வாடுகிறோம். '' — இது மதுரைப் பல்கலைக் கழகத்தில் என் சிறுகதைகளை ஆய்வு செய்யும் குஞ்சுப் பறவையான சு.வேங்கடராமனின் துயரம் தோய்ந்தது.

அதே பல்கலைக் கழகத்தில் மு. வ. வின் நாவல்களைப் பற்றி ஒரு நூல் எழுதிய மற்றொரு குஞ்சுப் பறவையான இரா. மோகனின் இதயக் குமுறலைக் காண்போம்.

'' எதிர்காலம் இன்னும் எத்தனையோ எழுத்தாளர்களை, பேராசிரியர்களை, துணைவேந்தர்களைப் பெறலாம். ஆனால் மலர் போன்ற இரக்க நெஞ்சமும் மலைபோன்ற கொள்கை உறுதியும் கொண்ட ஒரு பண்பாளரை — அறிவுத் தந்தையாய், அன்புத் தாயாய்ப் பலருக்கு விளங்கிய ஒரு நல்லவரை — இறுதி வரையில் கொள்கைப் பிடிவாதம் கொண்டு, அளவோடு நெறி வகுத்து வாழ்ந்து காட்டிய ஒரு பெருந்-தகையாளரை — எதிர்காலத்தில் இனிப் பார்க்க முடியுமா ?''

இன்னும் எத்தனை எத்தனையோ கடிதங்கள். எந்தனை எத்தனையோ பேருக்கு இந்த நாட்டில் மு. வ. வின் பிரிவுச் செய்தி கேட்டவுடன் எழுதப்பட்டிருக்கலாம், மு. வ. வுடன் நேரில் பழகியவர்களுக்கும் நேரில் பழகாமல் நூல்களின் வாயிலாகப் பழகியவர்களுக்கும் அவர் குடும்பத்தில் ஒருவராகத் திகழ்ந்தார். அவருடைய நூல்களில் வந்து வழிகாட்டும் — 'அறவாழி'யாக வாழ்ந்தார். மாணவர்கள் பலரின் லட்சியாசிரியராக இம்மண்ணில் உலவினர்.

அவருடைய பிரிவுச் செய்தி கேட்டவுடன் சென்னை அமைந்த-கரையிலுள்ள அவர் இல்லத்துக்கு விரைந்தவர்களின் எண்ணிக்கை-யையும் அவருடைய இறுதிப் பயணத்தின்போது கலந்து கொண்டவர்-களின் எண்ணிக்கையையும் கண்டு திகைத்தேன். ஓரளவு ஆறுதலும் அடைந்தேன். மலையென அவர் உடல் மீது குவிந்த மாலைகள், இந்த நாட்டு மக்கள் இன்னும் தம்முடைய மண்ணில் பிறந்த சான்றோரை அறவே மறந்து விடவில்லை என்பதற்குச் சான்று கூறின. மு. வ. வுக்கு மலர்களின் மீது கொள்ளை ஆசை. அன்று மட்டும் அவர் தம் கண் திறந்து சற்றே பார்த்திருப்பாரானால் எந்த அளவுக்குப் பூரித்துப் போயிருப்பார் தெரியுமா ?

விளம்பரம் பெற்ற அரசியல்வாதிகளுக்கும் சினிமா நட்சத்திரங்களுக்கும் சென்னையில் கூட்டம் கூடுவது வழக்கம். விளம்பரத்தை அறவே புறக்கணித்துப் புகழ் மட்டும் சுமந்து வாழ்ந்த ஒருவருக்கு அஞ்சலி செலுத்தவா இத்தனை பேர் ! படித்தவர்கள், பண்புள்ளவர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், மாணவர்கள், அலுவலகங்களில் பொறுப்பான பணி செய்வோர் — இப்படிப்பட்ட அறிவு ஜீவிகளின் ஆருத்துயர் நிறைந்த கூட்டமாக இருந்தது அது. மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்தும், டெல்லியிலிருந்தும், வெளியூர்கள் பலவற்றிலிருந்தும் விரைந்தோடி வந்திருந்தனர் பலர். கடைசிமுறையாக அவர் அன்பு முகத்தைக் காண வேண்டுமென்ற துடிப்பால்.

ஒரே மு. வ. வுக்குள் எழுத்தாளர், தமிழ்ப் பேராசிரியர், துணைவேந்தர், கலைஞர், சிந்தனையாளர், லட்சியவாதி, உலகியல் தெரிந்தவர், குடும்பத் தலைவர், உற்ற நண்பர் எனப்பலர் இருந்தார்கள். இவர்களுக்குள்ளே ஒரே ஒருவரை மட்டும் அவர் மிகவும் போற்றினார் என்பது எனக்குத் தெரியும். அதை அவர் வாயாலேயே இந்தச் செப்டம்பர் மாதம் 9 - ஆம் தேதி மதுரைப் பல்கலைக் கழகத்தில் நடந்த என்னுடைய கதைகள் பற்றிய கருந்தரங்கத்தின் துவக்க விழாவில் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

அவர் அன்று பேசியதின் கருத்து இது ; ‘வெறும் பயிற்சியாலும் உழைப்பாலும் திறமையாலும் மட்டிலும் படைப்பிலக்கிய ஆசிரியர்கள் உருவாகி விடுவதில்லை. இறைவனின் தனிப்பட்ட கருணையால் சிலருக்குப் படைப்பாற்றல் கிடைக்கிறதென நம்புகிறேன். படித்தவர்களும் பட்டம் பெற்றவர்களும் ஒரு சிலர் எழுதுகிறார்கள். இவை எதுவுமே இல்லாதவர்கள் சிலர் முன்பும் எழுதியிருக்கிறார்கள் ; இப்போதும் எழுதி வருகிறார்கள் ; சிறந்த படைப்பிலக்கியங்களைத் தோற்றுவிப்பவர்களை இறைவனின் செல்லப் பிள்ளைகள் என்று எனக்கு நினைக்கத்தோன்றுகிறது. அவர்களைச் சமுதாயம் போற்றிப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். நான் கூடத் தொடர்ந்து துணைவேந்தராகப்பணி செய்வதைவிட, இந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்று எங்காவது தனிமையை நாடிச் சென்று இன்னும் சில நாவல்களை எழுதவே விரும்புகிறேன். அதில்தான் எனக்கு முழுமையான மன நிறைவு ஏற்படுகிறது.’

இனி நாவலாசிரியர் மு. வ. வைச் சற்றே கவனிப்போம்.

1950 - க்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே அவர் நாவலாசிரியராக மலர்ந்துவிட்டாலும், 1950 - க்கும் 60 - க்கும் இடைப்பட்ட காலத்தைத் தமிழ் நாவல் உலகில் மு. வ. வின் ஆட்சிக் காலம் என்று சொல்ல வேண்டும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பயின்று பட்டம் பெற்ற ஆண்களில் பலரும் பெண்களில் பலரும் மு. வ. வை விரும்பிப் படித்துப் போற்றினர்கள் அத்தகையோரில் பெரும்பாலோர் தம் சொந்தப் பணத்தைப் புத்தகக் கடையில் கொடுத்து மு. வ. வின் நாவல்களை வாங்கிச் சென்றவர்களாகும். அப்போதே நாட்டினர்க்கு அறிமுகமாகிவிட்ட சிறுகதை ஆசிரியனுகவும் நாவலாசிரியனுகவும், நான் இருந்துங்கூட, மு. வ. வின் வாசகர்களில் ஒருவனுகவும் அவர் நூல்களைக் காசு கொடுத்து வாங்கும் வாசகனுகவும் மாறியிருந்தேன். அதைப் போலவே என்னுடைய வாசகராகவும் அவர் இருந்திருக்கிருர் என்பது எனக்குப் பிறகுதான் தெரியவந்தது. நாங்கள் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாமலே ஒருவரை ஒருவர் நேரில் காணுமலே ஐந்தாறு ஆண்டுகள் ஒருவருடன் ஒருவர் உள்ளத்தால் நெருங்கிப் பழகியிருக்கிரேம்.

அவருடைய நாவல்களான ‘மலர்விழி’, ‘கள்ளோ காவியமோ?’, ‘கரித்துண்டு’, ‘அகல் விளக்கு’, ‘கயமை’, ‘நெஞ்சில் ஒரு முள்’ போன்றவற்றில் நான் அவை வெளிவந்த காலத்திலேயே என் நெஞ்சைப் பறி கொடுத்தவன். ஓரிரு நாவல்களின் மையக் கருத்துக்கள் பற்றி நாங்கள் வெவ்வேறு எண்ணங்கள் கொண்டவர்களாக இருந்திருக்கலாம். ஆனல் அவருடைய கலைத்திறனின் தனித்தன்மையையும் அவர் எழுத்தாற்றலும் அதில் மிளிர்ந்த ஆளுமையும் என்னை மிகவும் கவர்ந்தன. கதைகளினூடே பளிச்சிட்ட கருத்து மின்னல்களின் புத்தொளியில் நா[illegible] ஒரு சுய சிந்தனையாளரைச் சந்தித்தேன்.

தமிழ் நாட்டு எழுத்துலகம் தொடக்க காலத்தில் மு. வ. வை ஒரு படைப்பாளராகவே கருதவில்லை; அது மட்டும் அல்ல, அவரைத் தூற்றுவதே இலக்கியப் பெரும்பணி என்றும் அது கருதிக் கொண்டிருந்தது. அக்காலத்துத் தமிழாசிரியர்களில் பலரோ அவரைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தலைப்பட்டார்கள். பழந்தமிழ் இலக்கியத்துக்கு வெறும் விரிவுரை விளக்கவுரை நிகழ்த்துவதோடு நிறுத்திக் கொள்ளாமல், ஏதேதோ உரைநடையில் இவர் எழுதத் தலைப்பட்டுவிட்டரோ! ‘உரலுக்கு ஒரு புறம் இடி; மத்தளத்துக்கு இருபுறம்

அடி.' எழுத்தாளர்களுக்கும் தமிழாசிரியர்களுக்கும் இடையில் அகப்பட்ட மத்தளமானுர் மு. வ.

எழுத்தாளர் 'கல்கி' யின் தலைமையில் இயங்கிய சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 1953-இலோ 1954 - இலோ 'தமிழ் நாவல்' பற்றி ஒரு ஆய்வுரை படிக்க என்னைத் திருச்சியிலிருந்து சென்னைக்கு அழைத்தது. சென்னை மஹா ஜனசபைக் கூடத்தில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கத்துக்குக் கல்கி, தேவன், க. நா. சு. போன்ற அக்கால நாவலாசிரியர் பலரும் வந்திருந்தார்கள்.

கட்டுரையை நான் படித்துவந்தபோது, மு.வ. பற்றிப் பின் வருமாறு கூறியதாக நினைவு எனக்கு: ''மு.வ. வின் 'கரித்துண்டு' என்ற நாவலைச் சமுதாயக் கண்ணேட்டம் கொண்ட நாவல் என்ற முறையில் நாம் காணலாம். அதில் வரும் குடும்பச் சிக்கலுக்கும் சமுதாயப் போக்கிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மு.வ. வின் நடையில் ஒரு புதுமை, பாத்திரங்களின் பெயர்களில் மட்டுமல்லாமல் படைப்பிலும் புதுமை, அவருடைய கதைக் கருவிலும் புதுமை-இவை என்னைக் கவர்கின்றன. பல எழுத்தாளர்கள் பார்த்த இதே சென்னையைத்தான் அவரும் பார்த்திருக்கிருர். ஆனுல் அவர் ஏழை எளியவர்கள், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்கள் வாழும் குடிசைகளையும் குப்பங்களையும் இரக்கத்தோடு பார்த்திருக்கிருர் என்பது தான் அவர்தம் தனிச் சிறப்பு.''

கூட்டம் முடிந்தவுடன் என்னை வியப்போடு நோக்கினுர்கள் சில எழுத்தாளர்கள். அவர் எனக்கு வேண்டியவராக இருக்கக்கூடும் என்ருர்கள் வேறு சிலர். மு.வ. வை முன்பு நேரில் பார்த்தறியாத நானே அவரைக் கூட்டத்தில் தேடினேன். அவர் அங்கு வரவில்லை. கேட்டுப் பார்த்த பிறகுதான் எழுத்தாளர் சங்கத்து ஆண்டுவிழா அழைப்பு அவருக்கு அனுப்பப்பட்டிருக்குமா என்பதே கேள்விக்குறி ஆயிற்று.

தம் காலத்து எழுத்துலகின் போக்கிற்கு முற்றும் மாறுபட்ட ஒரு போக்கை மு.வ. வகுத்துக் கொண்டு எழுதியதால்தான் அவருக்கு எழுத்தாளர்களிடமும் பதிப்பாளர்களிடமும் தொடக்க காலத்தில் சிறிதும் ஆதரவு கிடைக்கவில்லை. ஆனுல், அதே புதிய போக்குத்தான் பின்னர் லட்சக்கணக்கான வாசகர் கூட்டத்தைத் தேடித் தந்தது.

அவருடைய முதல் நாவலை அக்காலத்துப் பதிப்பகங்கள் சில வெளியிட ஏற்றுக்கொள்ளவில்லையாம். கடைசியில் அதை வெளியிடத்

துணிந்த பாரி நிலையம் செல்லப்பனிடமும் அன்றைய நிலையில் போதிய பொருள் வசதி இல்லை. பின்னர் மு.வ. தம் துணைவியார் ராதா அம்மையாரின் நகைகளை அடகு வைத்து, தமது முதல் நாவலை வெளியிட்டாராம். பெர்னுட்ஷாவின் எழுத்து வாழ்க்கைப் போராட்டம் பயிலத் தமிழில் ஒரு நூல் எழுதிய மு. வ., தாமே அப்படி ஒரு போராட்டத்தை நடத்தியுள்ளார் என்பது பலருக்குத் தெரியாது.

தம் கலைவாழ்வுக்கும் உலகியல் வாழ்வுக்கும் குறுக்கே நின்ற வறுமைப் பேயை ஓடஓட விரட்டி, அதிலும் முழு வெற்றி கண்டிருக்கிருர் மு.வ. சாதாரண எழுத்தாளராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய மு.வ., படிப்படியாகத் தமிழ் பயின்று கல்லூரிப்பேராசிரியராகவும் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் பின்னர்த் துணைவேந்தராகவும் உயர்ந்திருக்கிருர். பொருளீட்டுவதற்காக அவர் நாவல் எழுதியதாக நான் நம்பவில்லை. எழுதும் இன்பத்துக்காகவே அவர் எழுதினுர். ஆனுல் நாவல்களின் வாயிலாகப் பொருள் தானே அவரைத் தேடி வந்தது. பொருள் வராவிட்டாலும் அவர் எழுதியிருப்பார். எழுத்தால் பொருளை எதிர்பார்க்கும் நிலை வரக்கூடாதென்பதற்காக அவர் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டிருக்க வேண்டும் என்றே நான் நினைக்கிறேன். ஆனுல் அந்த ஆசிரியர் தொகுதிக்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியதுதான் அவரது தனிப் பண்பைக் காட்டுகிறது.

அண்மைக் காலம்வரை தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களின் தமிழ் துறைகளுக்கும் இருபதாம் நூற்ருண்டுத் தமிழ் இலக்கியத்துக்கும் தொடர்பே இல்லாமல் இருந்தது. ஒருபுறம் அண்ணுமலைப் பல்கலை கழகத்திலும் மதுரைப் பல்கலைக் கழகத்திலும் இன்றைய இலக்கியம் பரவுவதற்கான வித்துக்களை ஊன்றினுர் தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர். மறுபுறம் சென்னைப் பல்கலைக் கழத்திலும் அதே செயலைத் துணிவோடு மு.வ. செய்தார். தமிழ்த் துறைகளைத் தொல்பொருள் ஆய்வுக்கூடங்களாகவே வைத்திருந்த நிலையை மாற்றி, 'தமிழ் நாவல்கள்' பற்றிய ஆய்வுக்கு டாக்டர் இரா. தண்டாயுதம் என்ற இளைஞருக்கு முதலில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இடமளித்தவர் மு.வ. அவர் காலத்தில் தான் முதல் முதலாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புகுமுக வகுப்புக்கு இன்றைச் சிறுகதை ஆசியர்களின் தொகுப்பொன்று பாடநூலாக வைக்கப்பட்டது.

இன்று இந்த நூற்ருண்டுத் தமிழ் எழுத்தாளர்களது படைப்பிலக்கியங்கள் தமிழ்நாட்டின் மூன்று பல்கலைக் கழகங்களிலும் ஆராயப்-

படுகின்றன. மாணவர்களும் ஆசிரியர்களும் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் இன்றைய படைப்புக்களைத் திறனாய்வுக் கண்ணோட்டத்தோடு படிக்கத் தொடங்கியுள்ளனர். இதிலெல்லாம் எழுத்தாளர் மு.வ. வுக்குள்ள அரும்பெரும் பங்கை யாரும் புறக்கணித்துவிட முடியாது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போன்ற அருஞ்செயல் இந்தச் செப்டம்பர் 9-ஆம் தேதி முதல் நான்கு நாட்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நடந்தது. ஒவ்வோர் ஆண்டும், நம்மிடையே வாழும் படைப்பிலக்கிய ஆசிரியர் ஒருவரின் நூல்களை ஆராய்வது என்ற திட்டத்தின்படி, இந்த ஆண்டு என்னுடைய நூல்கள் ஆராயப்பட்டன. கருத்தரங்கம் நடந்தபோதே அது நடந்த முறையைக் கண்டு நான் வியந்தேன். அதை நடத்திய நடுநாயகரான மு.வ. வின் மறைவுக்குப் பிறகுதான் அதன் அருமை என்னுள்ளே விசுவரூபம் எடுக்கிறது பேராசிரியர் முத்துச் சண்முகனார் முதல் பல்வேறு ஆசிரியர்களும் மாணவர்களும் பம்பரங்களாகச் சுழன்றனர். அரங்கிற்குத் தலைமை ஏற்க வந்திருந்த கி.வா.ஜ., கு. ராஜவேலு, நா.பா. ஆகியவர்களுக்கும் எனக்கும் மதுரைப் பல்கலைக் கழகம் காட்டிய பரிவை என்னால் என்றுமே மறக்கமுடியாது. கி.வா.ஜ. வை வழியனுப்பிவைக்க ரெயிலடி வரையில் வந்த மு.வ. வின் பண்பை என்னவென்பது!

மு.வ. வின் மறைவுக்குச் சரியாக ஒரு மாதத்துக்கு முன்பு அவருடன் மதுரையில் கழித்த நான்கு நாட்களும் என் நெஞ்சில் பசுமையாக நிலைத்திருக்கும் நாட்கள். ஒவ்வொரு நாளும் நன்றாக உண்டு மகிழ்ந்தோம். உரையாடி இருந்தோம். உலவி மகிழ்ந்தோம். நாகமலைச் சரிவில் உள்ள பல்கலைக் கழகத்தின் நிலப் பரப்பைப் பசுஞ்சோலையாக மாற்றியிருந்தார் அவர். வாகை மரச்சாலை, வேப்ப மரச்சாலை, ஆல மரச்சோலை, தென்னஞ்சோலை, கொய்யாத் தோட்டம் என்றெல்லாம் மாற்றியிருந்தார். ஆசிரியர் மாணவ மாணவியர் மட்டும் அல்லாது, ஆயிரக்கணக்கான செடிகொடிகளும் அவரை நினைத்து நெடுமூச்செறிவதை என்னால் உணர முடிகிறது.

மு.வ. தம்மை உருவாக்கிய ஆசிரியர் திரு.வி.க. வை ஒருபோதும் மறந்தாரில்லை. அவர் பெயரால் ஒரு பள்ளியைத் தோற்றுவித்து, அது நன்கு நடைபெறுவதற்காகத் தம் நூல்கள் சிலவற்றின் வருமானத்தையே ஒதுக்கி உள்ளார். மு.வ. வின் வாக்காலேயே அவரைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், ‘அவர் எப்படியாவது வாழ

வேண்டும் என்று நினைக்காதவர்; இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். நல்லவர்; ஆனால் வல்லவர்.'

மனிதர்களின் உள்ளத்து ஆழத்திலே அவர் அமைதியான முறையில் அன்புப் புரட்சி செய்து வந்தார். இன்னும் தம் நூல்களின் வாயிலாகச் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார். அவரைப் பிரிந்து வாடும் அவர் துணைவியார் ராதா அம்மையார். மக்கள் அரசு, நம்பி, பாரி ஆகிய குடும்பத்தினருக்கு அவர் பிரிவைத் தாங்கும் மன உறுதியை இறைவன் அருள்வானாக!

—கலைமகள் — நவம்பர்'74.

# வள்ளல் மு. வ.

அகிலன்

அறத்தின் அடித்தளத்தோடு வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, நேர்மைமிக்க கடினமான உழைப்பால் உயர்ந்து வசதியான வாழ்வுக்கேற்ற பொருள் தேடி, இன்பமாக இவ்வுலகில் வாழமுடியும் என்பதைத் தம் வாழ்க்கையால் மெய்ப்பித்துக் காட்டியவர் டாக்டர் மு. வ. வள்ளுவர் காட்டிய அறம், பொருள், இன்பம் என்ற வாழ்க்கையின் இலக்கணத்துக்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் அவர்கள்.

எளிய முறையில் ஓர் எழுத்தராக வாழ்க்கையைத் தொடங்கி, பிறகு தமிழ்ப் பேராசிரியராகி, பின்னர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் உயர்ந்தது பற்றிப் பலர் பெருமைப் படலாம்.

ஆனல் மு. வ. அவர்களோ தம்முடைய வாழ்க்கையின் சாதனை தாம் படைப்பிலக்கிய ஆசிரியராக மலர முடிந்ததுதான் என மனப்பூர்வமாக நம்பினர்கள்.

நாவலாசிரியர் மு. வ.' என அழைக்கப் பெறுவதில்தான் அவர்கள் பெருமை கொண்டார்கள். மேலும் சில படைப்புக்களை உருவாக்கு வதற்காகவே ஓய்வு பெற விரும்பிய மு. வ. அவர்களை கல்விப்பணி வலுக்கட்டாயமாகத் தன்னகத்தே இருத்திக் கொண்டது.

மதுரைப் பல்கலைகழகத்தைத் தென்னிந்தியாவில் சாந்தி நிகே-தனமாக உருவாக்கி வளர்த்த பெருமையும் மு. வ. அவர்களைச் சாரும். விஞ்ஞானத் துறையின் தீவிரமான வளர்ச்சி ஏற்பட அங்கு சிலப் புது முறை ஆய்வுகூடங்கள் உருவாகி வருவதைக் கண்டேன். அவ்வாறே மொழி-இலக்கியத்துறைகளிலும் அங்கு அமைதியான பெரும் புரட்சி களை ஏற்படுத்தத் தூண்டுகோலாக அவர்கள் விளங்கியிருக்கிறார்கள்.

இன்றைய படைப்பிலக்கியங்களைப் போற்றி வளர்த்து அவற்றின் ஆசிரியர்களைப் பாராட்டி மகிழும் பல்கலைக்கழகங்களின் தமிழகத்தில் முதன்மையான இடம் வகிப்பது மதுரைப் பல்கலைக் கழகம். ஓர் இயக் கமே இதற்காக அங்கு தொடங்கப் பெற்றிருந்ததைக் கண்டு நான் உளம் பூரித்தேன்.

மு. வ. வின் நூல்கள் 1945 க்கும் 1960 க்கும் இடைப்பட்ட காலத்தில் பல்லாயிரக்கணக்கான புது யுக இளைஞர்களைத் தமிழகத்தில் உருவாக்கி உள்ளன. வாழ்க்கையில் உயர்ந்த பண்புள்ள மனிதர்களைத் தோற்றுவிப்பதில் அவை பெரும்பங்கு ஏற்றிருக்கின்றன. அந்தத் தலைமுறையைச் சேர்ந்த பலர் இன்னும் நல்லவர்களாகவும் வல்லவர்-களாகவும் விளங்கி வருகிறார்கள்.

மு. வ. மறைந்து விட்டதாக நான் நினைக்கவில்லை. இனியும் நம்மிடையே மு. வ. அவர்கள் தம் நூல்கள் வாயிலாக வாழ்வார்கள். 1960-70க்குமிடைப்பட்ட காலத்து இளைஞர்களில் பெரும்பாலோர் அவர் நூல்களால் பெறவேண்டிய பயனைப் பெறவில்லை. அவர்களும் இன்றைய இளைஞர்களில் பலரும் மு. வ. அவர்களை மீண்டும் நாடிச் சென்று படிக்க வேண்டும் படிக்காவிட்டால் இழப்பு படிக்காதவர்-களுக்கே. படித்தாலோ பயன் அவர்களுக்கும் உண்டு. நாட்டுக்கும் உண்டு. மு. வ. என்ற வள்ளல் இந்த நாட்டுக்கு அறிவுச் செல்வத்-தையும் கலைச் செல்வத்தையும் கொடுக்கப் பிறந்தவர், அவர் கொடுத்துச் சென்றுவிட்டார். நாம் எடுத்துக் கொள்ள வேண்டாமா?

—தமிழ் உறவு

அக்டோபர் 1974

# மு. வ. தமிழ்

# மூவாத் தமிழ்

அடியார்

'ஈடு செய்ய முடியாத நிலை!'

இந்தச் சொல்லின் பொருள்-அதன் ஆழம் இரண்டும் புரியாமல் பலர் மறைவுக்குப் பலர் இரங்கற் செய்தி கொடுப்பது வழக்கம்.

ஆனால், இதன் பொருளும் ஆழமும் புரிந்தது—டாக்டர் மு. வ. அவர்களைப் போன்றோரின் மறைவின் போதுதான்!

டாக்டர் மு. வ., தமிழாய்ந்த தமிழர் ! பல்கலைக்கழகத் துணை வேந்தர்; பச்சையப்பன் கல்லூரியின் படியெல்லாம் தமிழ் பாடும்படி வைத்தவர்; பழந்தமிழ் இலக்கியங்களைச் சுவையோடு அமுதாக்கி—தமிழர்களைப் பிள்ளைக்கனி அமுதாக்கி ஊட்டி மகிழ்வித்ததாய்! என்றெல்லாம் புகழாரமும் — மெய்க்கீர்த்தியும் பாடி மகிழ்வதற்கு உரியவர்தான் எனினும் ஒரு உண்மையை முதலில் பாராட்டவேண்டும்.

ஏழை எளிய குடும்பத்தில் பிறந்து — உழைத்துச் சம்பாதித்தால்தான் உணவு எனும் நிலையிலும், தனியாகத் தமிழ்ப் பாடம் படித்து ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தராக உயர்ந்தாரே — அந்த உழைப்பின் — வியர்வையின் — விழிப்பின் வெற்றியை நாம் முதலில் வியந்து மகிழ வேண்டும்.

'படிக்க முடியவில்லை; பாழும் வயிற்றுக்கும் பக்கத்திலுள்ள உறவின் முறையாருக்கும் சோறிட்டு மகிழ்வோம்; திருமணம் முடிக்கப்பொருள் சேர்த்தால் போதும்—'பொல்லாத' தமிழ் எதற்கு?' — என்று இளமைக் காலத்தில் அவர் தமிழ் நூலைத் தூக்கி எறிந்திருந்தால் இப்படி ஒரு பல்கலைக்கழகச் செல்வர் கிடைத்திருக்க முடியாது. எனவே, அவரது விடா முயற்சியை—ஊழையும் உட்பக்கம் காணும் தன்னம்பிக்கையை நாம் எண்ணி எண்ணி மகிழ்கிறோம்.

மன்னிக்கவும், சிந்தனைப் பறவை மேலெழுந்து வானில் சிறகு விரிக்கிறது.

ஒரு சாதாரண மு. வரதராசனை—"டாக்டர் மு. வ." ஆக்க தமிழின் தனிப்பாடம் உதவுகிறது.

தமிழைத் தனிப் பாடமாக எடுத்துப் படிப்பவர்கள் — கல்லூரி செல்லாமல்— காலையிலிருந்து மாலைவரை வீட்டுக்கு உழைத்தது போக மீதி நேரத்தைப் பயன் படுத்தி தமிழ் படித்து உயர முடிகிறது.

இது தமிழுக்குத் தனிப் பெருமைதான். உயர் தனிச் செம்மொழியான தமிழுக்குக் கிடைத்த உயர்வுதான்!

ஆனால், தமிழ் இலக்கியம் அல்லாத வேறு பாடங்களில்—கணக்கிலோ—அறிவியலிலோ—பொருள் இயலிலோ—பொருள் இயல்பிலோ —அல்லது அளவை (தத்துவம்) ப்பாடத்திலோ ஊக்கமும்—ஆர்வமும் கொண்டவர்களின் கதி என்ன? அவர்களுக்கு அந்தப் பாடங்களைக் கல்லூரியில்—அல்லது மாலை நேரக் கல்லூரியில்தான் பயிலல் வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது.

கல்லூரிகளும், மாலை நேரக்கல்லூரிகளும் இல்லாத பரந்த பைந்தமிழ் நாட்டு மூலை முடுக்குகளில் உள்ள "மு. வ"—க்களின்கதி என்ன?

பலருக்குத் தெரியாது! தமிழகத்தில் மிகச் சிறந்த — உலக அறிஞர்கள் வியந்து பாராட்டிய இராமானுசம் எனும் கணக்கு மேதை இருந்தார்.

அவரது வறுமை காரணமாக மேற்படிப்பைத் தொடர முடிய வில்லை. சென்னைக் கப்பற் கூடத்தில் கணக்குப் பிள்ளையாகத் தான் வர முடிந்தது.

அவரது கணக்கு அறிவு எத்தகையது? 1,2,3 இலக்கங்களைக் கூட்டிக் கொண்டே போனால் அது முடிவில் பின்னமாகத்தான் வரும் என்று ஆராய்ந்து அறிவித்தார். ஆங்கிலேயன் வியந்தான். ஆராய்ச்-சிக்கு மேல்நாடு அழைத்தான். ஆனால் வறுமையால் ஒடிந்து போன அவரது உடலும் விரைவில் கல்லறை சேர்ந்தது.

இந்த இராமானுசத்திற்கு கணக்குப்பாடம் — தமிழைப்போல் தனி ஏற்றம் தருவதாக இருந்தது. டாக்டர் பட்டமும் வாய்ப்பு, வசதி-யும், அதனால் உடல் வளமும் கிடைத்திருந்தால், தமிழகத்திற்கு இன்-னொரு நோபல் பரிசு கிடைத்திருக்காதா?

உதாரணத்திற்காக ஒன்றைச் சொன்னோம். இப்படி எத்தனை-யோ பேர் கல்வித் துறையின் அகழிகளைத் தாண்ட முடியாமல் வறுமை முதலைகளின் வயிற்றுப்பசிக்கு ஆளாகி யிருக்கிறார்கள்!

இதோ—இக் கட்டுரை கொங்குநாட்டிலுள்ள வெள்ளக் கோவில் திரையரங்கிற்கு எதிரே அமைந்துள்ள விடுதியிலிருந்து எழுதப்படுகிறது திரையரங்கில் பாட்டு ஒலிக்கிறது; (இந்தப்பாட்டு கூட ஆங்கிலப் பாட்டின் தழுவல்தான்!)

இரவுக்கு ஆயிரம் கண்கள்!
பகலுக்கு ஒன்றே ஒன்று!
அறிவுக்கு ஆயிரம் கண்கள்!

—ஆம்! அந்த ஆயிரம் அறிவுக்கண்களில் "மு. வ." போன்றவர்களை உருவாக்கிவிட ஒரே ஒரு தமிழ்க்கண்தான் இருக்கிறது.

இன்னும் 999 கண்கள் திறக்கப்படவேண்டும்! அப்போது ஆயிரக்-கணக்கான "மு. வ."—தமிழ்த் தரணியில் தோன்றுவார்கள்.

டாக்டர் மு.வ. அவர்களைப் பற்றிய இன்னொரு சிந்தனைச் செய்தி.

தமிழ்ப் படித்தவர்களை—தமிழ்ப் புலவர்களைப் பற்றிய பெரிய குறை ஒன்றை உலகம் அடிக்கடி சுட்டிக் காட்டும்!

தமிழ்ப் புலவர்கள் அரைத்த மாவையே அரைப்பவர்கள்.

அகநானூறு—புறநானூறு போன்றவற்றிலேயே தங்கள் அகத்-தையும் முகத்தையும் புதைத்துக் கொண்டிருப்பவர்கள்.

பழந்தமிழ்ப் பனுவல்களுக்குப் பொருளுரை — பதவுரை — பொழிப்புரை சொல்லிச் சொல்லிப் புளிப்பேறப்படுத்துபவர்கள்.

—இப்படி ஏளனம் பேசிய உலகத்திற்கு அருந்தமிழ் உலகத்தின் அறை கூவலாக எழுந்தவர் டாக்டர் மு. வ!

பழைய இலக்கியங்களைப் படிப்பவனால் புதிய இலக்கியங்களை-யும் படைக்க முடியும் என்று இமயக்கொடி நாட்டியவர் டாக்டர் மு. வ!

அவரது தனி மனிதக் குணங்கள் — படிப்பறிவு — இவற்றையெல்-லாம் புறம் தள்ளிவிட்டு—இந்தப் படைப்பு ஆற்றலை மட்டும் வணங்கு-பவர் நாம்!

படிப்பாளி "மு. வ." வைவிட படைப்பாளி "மு. வ." தான் நமது வணக்கத்திற்குரியவர்!

ஒரு காலம் இருந்தது நெடுங்கதை என்றால் ஒரு சிலர்தான். சிறு கதை என்றால் அவர்கள் தான்! தத்துவக் கதை என்றால் அவர்கள் தான்!—என்று அவர்களே 'மணிக்கொடி' போட்டு எழுதிய காலம் அது!

தப்பித் தவறி மேலெழுந்த புதுமைப்பித்தன் கூட அவர்களது பெருவெள்ளத்தில் மிதந்தோடும் சருகானார்.

முடியரசர் காலத்தில் அரண்மனைக் கதைகள் உலவியது போல—இவர்கள் காலத்தில் 'அக்கிரகாரக் கதைகள்' தான் உலவின! 'பாஷை கூட அவர்கள் பாஷைதான்'!

ஆனால் அதை எதிர்த்து தனித்தமிழ் எழுத்தாளர்கள் கதை எழுதி-னார்கள்; நாடகம் எழுதினார்கள்!

ஏன்...மறைமலை அடிகள்கூட அம்பிகாபதி பற்றிய நாடகம் எழுதினார் 'கோகிலாம்பாள் கடிதங்கள்' எனும் கதையும் எழுதினார். கடித வாயிலாக ஒரு பார்ப்பன விதவை தனது காதற் கதையைச்-சொல்வதுபோல் அமைந்த புதுமைப் படைப்புத்தான் அது. ஆயி-

னும் அது போன்ற எழுத்துக்கள் அந்தப் பெரு வெள்ளத்தை எதிர்த்து நில்லாமல் போயின!

ஆனல் தமிழருக்கு ஒரு பொற்காலம் வந்தது. 'அவாள்பாஷை' யும் அல்லாமல் கடுந் தமிழும் அல்லாமல் - எளிய செந்தமிழில் புதுமைப் படைப்புகள் வந்தன! அவற்றைப் படைத்தவர் யார் ?

தற்கால இலக்கியத்தில் தமிழர்களின் பொற்காலத்தை ஏற்படுத்திய 'பொற்-கையர்' -- டாக்டர் மு. வ. தான்!

அந்தக் காலத்தை எண்ணிப் பார்க்கிறோம். கண்களில் நீர்மல்க எண்ணிப்பார்க்கிறோம்.

மு. வ. கட்டுரை!

மு. வ.—சிறுகதை!

மு. வ.—நெடுங் கதை!

என்று எங்கும் ஒலித்த ''மூவாத் தமிழ்க் காலத்தை'' எண்ணி எண்ணி இருதோள் — எண்ணிரு தோளாகப் பூரிக்கிறது.

''என்ன இது—இறந்த காலத்திலேயே உனது சொற்றொடர் அமைகிறது ?''

''இப்போது அந்தப் பொற்காலம் இல்லையோ ?''— எனக் கேட்கத் தோன்றலாம்! ஆம்! ஆம்! அது இறந்த காலம் தான்!

இன்னும் அதிகப்படியாகச் சொல்வதானல் இந்த "டாக்டர். மு.வ'' இறப்பதற்கு முன்பே அந்த "பொற்கால மு. வ.'' இறந்து விட்டார்!

'கள்ளோ; காவியமோ ?' முதல் — 'கரித்துண்டு' — 'நெஞ்சில் ஒரு முள்' வரை — எந்தப் பெரு வெள்ளத்தை எதிர்த்து மு. வ. வெற்றிக்கொடி நாட்டினரோ—அந்தப் பெருவெள்ளம் தனது 'அக்ரஹார' மொழியை மாற்றிக்கொண்டு — 'மு.வ.' — தமிழில் புகுந்து ஆடி— பின்னர் இப்போது எல்லையற்ற ஆங்கிலம் கலந்த தமிழ் எழுத்துலகை உருவாக்கி விட்டது,

இதற்கு மூன்று காரணங்கள்!

ஒன்று. மனு மந்தாதா காலம் முதற்கொண்டு அவர்கள் எடுத்து வரும் 'ராஜதந்திர அவதாரம்!''

இரண்டு: மிகப்பெரிய எழுத்தாளருக்கு உருவாக வேண்டிய எழுத்தாளர் பரம்பரை டாக்டர் மு. வ. அவர்களுக்கு உருவாகவில்லை.

ஆனல் முயற்சி நடந்தது. கு.ராஜவேலுவின் 'அழகு ஆடுகிறது' போன்ற நெடுங்கதைகள் வரத்தான் செய்தன. ஆனல் அரசியல் சாயங்களும், தொடர் முயற்சி இன்மையும் தோல்வியைத் தந்தன.

மூன்று: தமிழர்களின் 'படிக்கிற பழக்கம்' ஒரு குறிப்பிட்ட தலைமுறையின் சடங்காகப் போய்விட்டது. வேறு சொற்களில் கூறுவதானல் — மு. வ. காலத்தில் கல்லூரியிலும் பள்ளிகளிலும் படித்தவர்களின் 'வட்டம்' தான் தொடர்ந்து நின்றதே தவிர — பின்னல் வந்த தலைமுறை இத்தகைய படிப்புக்களை மறந்து வேறு நாட்டம் கொள்ளத்-தொடங்கியது.

இன்றைக்கு நம்முடைய பிள்ளைகள் 'முத்து காமிக்ஸ்' படக் கதைகளிலும் — வடநாட்டு இந்தி சினிமா நடிகர்களின் 'காமவேள் நடனசாலை லீலை'களிலும் மனதைப் பறிகொடுத்து நிற்கின்றன.

இன்னெரு பெரிய 'படிப்பு வட்டமான' தி. மு.கழகம் – தனது ஒப்பற்ற எழுத்தாளர்களை – டாக்டர் மு. வ. அவர்களுக்குச் சமமாக நின்று இலக்கியப்படைப்பு ஆக்கியவர்களை முழுநேர அரசியலுக்குத் தந்துவிட்டு — தன்னையும் அரசியல் வேலைகளில் 24 மணிநேர ஈடு-பாட்டிற்கு ஆளாக்கிக் கொண்டது.

சுருக்கமாக— கிரிக்கெட் ஆட்டத்தில் சில நேரங்களில் பந்தடிக்கும் குழு ஒன்று ஆடத் தொடங்கிய சிறிது நேரத்தில் அற்புதமாக ஆடி—பிறகு அனைவரும் வெளியேறி (ALL OUT) விடுவார்கள், அப்-போது சிறிது நேரத்திற்கு அந்தத்திடல் வெறுமையாகவே காட்சி அளிக்கும்!

அதுபோல் --அறிஞர் அண்ணவையும், கலைஞரும் மு. வ. வும் ஆடிய அந்த இலக்கியத் திடல் இன்று வெறுமையாகவே காட்சி அளிக்-கிறது.

இதற்காக 'மற்றவர்கள்' நிரந்தர மகிழ்ச்சி கொள்ளத்தேவை-யில்லை.

கிரிக்கெட் என்பது ஒரு ஆட்டத்தோடு(டெஸ்டோடு)முடிவதல்ல; புதிய ஆட்டக்காரர்கள் வரத்தான் போகிருர்கள் வெற்றி பெறும் ஆட்டக்குழு என்ற பெயரை நிலை நாட்டத்தான் போகிருர்கள்.

ஆனால் பார்வையாளர்களே இல்லாத ஆட்டத்தாலும் பயனில்லை.

அதுபோல் படிப்பவர்கள் இல்லாத எழுத்தாளர்கள் தோன்றியும் பயனில்லை.

'இன்னொரு கூட்டத்தை'ப் பாருங்கள். 200ரூபாய்ச் சம்பளம் என்றால் 10 ரூபாயைக் கதைகள்—நெடுங்கதைகள் வாங்கப் பயன்படுத்துகிறார்கள்.

இலக்கியத்திடலில் ஆடுவோரும் இல்லை!
பார்ப்போரும் இல்லை!

24 மணி நேரத்தில் 2 மணி நேரமாவது இலக்கியம் படிக்க ஒதுக்குகிறார்கள்.

இந்த அடிப்படைப் பாடத்தை அவர்களிடமிருந்து படித்து—உணர்ந்து வீறுகொண்டு எழுகிற படிப்பாளிகளையும் —பின்னர்படைப்பாளிகளையும் நாம் உருவாக்க வேண்டும்.

தமிழன் என்று சொல்கிறபோது போலியாக அல்லாமல்—உண்மையாகவே நெஞ்சு நிமிர்த்துகிறவர் யாராக இருந்தாலும் புதிய இலக்கியம் படிக்க-என்று ஒரு மணி நேரம் ஒதுக்கினால் போதும்-தமிழ் எழுத்தாளர்களை மனம் திறந்து பாராட்டினால் போதும்.

வெறுமை அடைந்த இலக்கியத் திடலில் புதிய ஆட்டக்காரர்கள் தோன்றுவார்கள்! புதிய உற்சாக மிக்க பார்வையாளர் கூட்டம் அலை மோதும்!

அப்போதுதான் டாக்டர் மு. வ அவர்களின் உண்மையான புகழைத் தமிழகம் பாடியதாகப் பொருள்!

என்ன செய்யப்போகிறது தமிழகம்? —இதுவே டாக்டர் மு. வ. அவர்களை இழந்துவிட்ட தமிழகத்தின் தமிழ் உணர்ச்சிக்கு நாம் விடும் அறை கூவல்!

— நீட்டோலை

## அறிஞர் பற்றி :

தி. நா. அறிவு ஒளி

ஒரு நாட்டின் மதிப்பும் பெருமையும், அந்நாட்டில் தோன்றும் அறிஞர்களின் மாண்பையும் உழைப்பையும் அளவையும் பொருத்தனவேயாகும். நம் காலத்தில் தமிழ்நாட்டின் புகழுக்கு உதவிய அறிஞர்களுள் பேரறிஞர் மு. வரதராசனர் ஆற்றிய தொண்டு ஒப்பற்றதாகும். பழந்தமிழறிவும் இக்கால அறிவும் கலந்து மணிமிடை பவளம்போல் அறிவொளி வீசிய நல்லார் அவரே.

உழைப்பால் உயர்ந்தவர்; நல்லவராகவும் வல்லவராகவும் வாழ்ந்தவர்; விளம்பர வெறிக்கு இரை யாகாத புகழாளர்; தனித்தன்மையுள்ள எளிய இனிய நடை கைவரப் பெற்றவர்;புலமையும் புதுமையும் கலந்த இனிமையானவர்; நல்லாசிரியர்; ஆற்றல் சான்ற எழுத் தாளர்; நுண்ணிய ஆய்வாளர்; அமைதியில் நாட்டமுடை யவர்; குறிக்கோளுடன் வாழ்ந்தவர் எனப்பல்லாற்ருனும் பாராட்டப் பெற்ற பேராசிரியர் மு. வ. அவர்களே.

அவர் எழுத்தராக வாழ்வைத் தொடங்கி மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக விளங்கி நிறைவுற்றார். அவர் வாழ்க்கை இளைஞர்க்கு ஆக்கவூக்கம் அளிக்கும் புகழ் வாழ்க்கையாகும்.

3-4-1912 இல் திரு. முனுசாமி, அம்மாக் கண்ணம்மை என்னும் பெற்றோர்க்கு வடார்க்காடு மாவட்டம் திருப்பத்தூரையடுத்த வேலம் என்னும் ஊரில் வரதராசன் தோன்றினார். உயர்நிலைப்பள்ளியிறுதி வகுப்புக் கல்வியில் தேறியபின் திருப்பத்தூர் வட்ட வருவாய்த்துறை அலுவலகத்தில் சிறிதுகாலம் எழுத்தராகப் பணியாற்றினார். புலவர் தேர்வுக்குத் தனித்தமுறையில் பயின்று தேர்வெழுதி மாநிலத்திலேயே. முதல்வராகத் தேறினார். அதற்க்காக அவர் அப்பொழுதே ஆயிரம் உருபா பரிசைப் பெற்றார். தனிக்கல்வி வாயிலாக கீ. க. இ.(பி. ஒ. எல்.) கீ. க. மு. (எம். ஒ. எல்.) தேறினார்.

1939ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியரானார். 1945இல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவரானார். 1969இல் மதுரைப் பல்கலைக்கழகத்துணைவேந்தரானார். சங்க இலக்கியத்தில் இயற்கைபெறும் இடம் என்னும் ஆய்வு நூலுக்குப் பண்டாரகர் (டாக்டர்) பட்டம் பெற்றார். 1972இல் அமெரிக்க நாடு சென்றார். அங்குள்ள இல்லினாயிடு பல்கலைக்கழகம் அவருக்குச்சிறப்புப் பண்டாரகர்' பட்டம் வழங்கியது.

10-10-74 வியாழக்கிழமை மாலை 5-30 மணியளவில் மாரடைப்பு நோயால் சென்னை பொது மருத்துவ மனையில் அறிஞர் மு. வ. இயற்கை எய்தினார்.

ஏறத்தாழ நூறு தமிழ்நூல்களை எழுதியவர் மு. வ. அவர்கள். பண்டாரகர் ஆய்வு நூலும் இளங்கோவடிகள் நூலும் ஆங்கிலத்தில் அமைந்தவை, 1940ஆம் ஆண்டு ''படியாதவர் படும் பாடு' என்னும் நூல் முதலில் வெளியிடப்பெற்றதாகும், 1944இல் 'செந்தாமரை' என்னும் முதல் புதினம் வெளியாயிற்று. அவரின் 'அகல்விளக்கு' என்னும் புதினம் தில்லி இலக்கியக் கழகத்தின் (சாகித்திய அகாதமி) பரிசுபெற்றது. அவர் எழுதிய 'பெற்றமனம்' திரைப்படமாக வெளிவந்தது,

இளங்கோவின் சிலப்பதிக்காரமும், திருக்குறளும், தாயுமானவர் பாடல்களும், கழக இலக்கியங்களும் மு. வ. அவர்களை ஆட்கொண்ட நூல்கள் எனலாம்.

குறளுக்குத் தெளிவுரை எழுதினார் மு. வ- இதுவே தமிழில் மிக அதிகமான படிகள் விற்ற நூலாகும்.

திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்: குறள் பற்றிய திறனுணர் நூலாகும்.

மொழிநூல், மொழிவரலாறு, மொழியியற் கட்டுரைகள், மொழியின் கதை, சொல்லின் கதை, எழுத்தின் கதை ஆகியவை மொழியியல் தொடர்பான நூல்களாகும்.

இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத்திறன். இலக்கியமரபு, ஓவச்செய்தி கொங்குதேர் வாழ்க்கை, முல்லைத்திணை, பழந்தமிழிலக்கியத்தில் இயற்கை முதலியன அவரின் ஆராய்ச்சி நூல்களாகும்.

அல்லி ஓர் ஒப்பற்ற பாலியல் — உளவியல் புதினமாகும். தமிழில் புது முயற்சி நூல் இது எனலாம். இளைஞர்க்கு மிகவும் பயனாகும் அறிவு நூலாகும்.

மலர்விழி, அந்தநாள், கயமை, நெஞ்சில் ஒரு முள், வாடாமலர், பழியும் பாவமும், மண்குடிசை, கள்ளோ? காவியமோ? கரித்துண்டு, பாவை முதலிய புதினங்கள் நனி சிறப்பானவை. ஒவ்வொரு குறிக்கோளுடனும் ஒவ்வொரு கதையும் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'விடுதலையா'?, 'குறட்டை ஒலி' என்பன சிறுகதைத் தொகுப்பு நூல்களாகும்.

இளங்கோ, காதல் எங்கே? பச்சையப்பர், டாக்டர் அல்லி, மனச்சான்று, மூன்று நாடகங்கள் ஆகியவை நாடகத் தமிழ் நூல்களாகும்-

நடைவண்டி, மணல்வீடு, நற்றிணைச்செல்வம், நற்றிணை விருந்து, குறுந்தொகைச் செல்வம், குறுந்தொகை விருந்து, நெடுந்தொகைச்செல்வம், நெடுந்தொகை விருந்து, தமிழ்நெஞ்சம், புலவர் கண்ணீர், குறள் காட்டும் காதலர், நாட்டுப்பற்று மண்ணின் மதிப்பு, பெண்மை வாழ்க, மொழிப்பற்று, உலகப்பேரேடு முதலியன சுவை நலம் பொதுளிய நலம் பாராட்டு நூல்களாகும்.

'யான் கண்ட இலங்கை' சுற்றுலா நூலாகும். 'குழந்தை' என்னும் அரிய நூல் குழவி உளவியல் இலக்கியமாகும். கி. பி 2000 அரிய எதிர்காலக் கனவிலக்கியமாகும்.

'கண்ணுடைய வாழ்வு' 'கல்வி' 'படியாதவர் படும் பாடு கல்வித்துறை நூல்களாகும்.

குடியொழிப்புக்கென 'பழியும் பாவமும்' என்னும் கதை நூல் அவரால் இயற்றப் பெற்றது.

காந்தி அண்ணல், திரு.வி.க., அறிஞர் பெர்னர்டுசா, கவிஞர் தாகூர் முதலிய வாழ்க்கை வரலாற்று நூல்களையும் மு.வ. அவர்கள் இயற்றினர்கள்.

அன்னைக்கு தம்பிக்கு, தங்கைக்கு, நண்பர்க்கு முதலிய இலக்கிய முடங்கல் நூல்களையும் அவர் இயற்றினர்.

அரசியல் அலைகள், அறமும் அரசியலும், குருவிப்போர், நாட்டுப் பற்று முதலிய அரசியல் நூல்களும் அவரால் எழுதப் பெற்றன.

நல்வாழ்வு என்னும் நலவியல் - சமயநூல் ஒன்றையும் அவர் இயற்றினர்.

மு.வ. தொடாத துறை இல்லை என்னுமாறு அவர் அரும்பெரும் ஆக்கங்களைப் பல துறைகளிலும் அளித்துள்ளார்.

'தமிழிலக்கிய வரலாறு' என்னும் நூல் தில்லி இலக்கியக்கழக வெளியீடாக வந்துள்ளது.

மு.வ. நல்ல கருத்தாளர்; பேச்சாளர்; ஆனல் பாவலர் அல்லர்! வேறுபாடுகளை வளர்க்காமல் ஒற்றுமையை வளர்ப்பதில் பெரிதும் பாடுபட்டவர் அவர்.

'தமிழ் கற்றால் வறுமையே சூழும்' என்னும் மாயநம்பிக்கையை ஒழித்தவர் மு.வ. தமிழால் செல்வரான மு.வ. தமிழுக்குச் செல்வங்கள் பல நல்கினர்.

மு.வ. நெறியான வாழ்வில் நிலைநின்றவர். அவரது எழுத்துகள் தமிழ் உள்ளவரை வாழத்தக்க வெற்றிப் படைப்புகளாகும். தமிழினர் உள்ளங்களைக் கவர்ந்த அறிவு நூல்களால் தமிழின் தகுதியை உயர்த்தி-யவர் மு.வ.

'எளிமை - தெளிவு - இனிமை - மென்மை' என்பவற்றின் கூட்டு-றவே மு.வ. வின் நடையாகும்.

கரடுமுரடான தமிழ்நடையோ, கொச்சையான வழுநடையோ-தாம் இலக்கிய நடை என்னும் போலித்தன்மைகளை மறுத்து எளிய தமிழ்நடையால் பெரும் புரட்சி விளைவித்தவர் மு.வ.

தமிழ் வளர்ந்தால் போதாது; தமிழனும் வாழ-வளர-வேண்டும் என்பதே மு.வ. தமிழகத்திற்கு அளிக்கும் செய்தியாகும்.

தமிழகம் செழிக்கத் தமிழினம் ஒன்றுபட்டுத் தமிழையும் தம் வாழ்வையும் உயர்த்த வேண்டும். இதனை வாழ்ந்து உணர்த்தியவர் பேரறிஞர் மு. வரதராசனார் அவர்கள் ஆவார். மு.வ. வின் புகழ் ஓங்குக! தமிழினம் ஒன்றுபடுக!

தமிழம் - நவம்பர் '74.

# பேரொளி அணைந்தது

பேராசிரியர் : கோ. இராமச்சந்திரன்

அன்று யாரோ ஒருவர், தமிழ் மொழியைக் கற்றுத் தெளிவு பெறுமாறு ஊக்குவித்தார் டாக்டர் மு. வரதராசனார் அவர்களை. தமிழ் மொழியால் தம்முடைய வாழ்க்கையையும் தம்முடைய உழைப்பால் தமிழ் மொழியின் தகுதியையும் உயர்வடையச் செய்துவிட முடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டிய பெருமை அவருக்கே உண்டு. அவருடைய வாழ்க்கையில் இரண்டாவது முறையாகத் தூண்டுகோல் போல அமைந்து (சுடர் விளக்காயினுந் தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்றார் ஒரு புலவர்.) மு. வ. அவர்களுடைய வாழ்க்கைக்குறி செம்மையாக அமைவதற்குப் பெருந்துணை புரிந்தவர் — கலங்கரை விளக்கமாக அமைந்து வழிகாட்டியவர் — திரு. வி. க. அவர்களே. நன்றி மறவாத உள்ளத்தோடு அந்தப் பெரியாருடைய பெயரை நினைவு கூர்ந்து போற்றும் வண்ணம் திரு. வி. க. உயர்நிலைப் பள்ளியைச் சென்னை-

யிலேயே நிறுவினர் மு. வ. அவர்கள். துறவியாகவே தம்முடைய இறுதிக் காலத்தைக் கழித்துவிட்ட திரு. வி.க. அவர்களுடைய உள்ளம் பரந்த உள்ளம்; மொழிப்பற்றும் இனப்பற்றும் நாட்டுப்பற்றும் வளர்வதற்கான வழிவகைகளைக் கண்ட உள்ளம் ஆகும். அந்த உள்ளம் மு. வ. அவர்களை அரவணைத்துக் கொண்டது.

''வெள்ளத் தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு'' என்றார்

அறநெறிக் காப்பாளராக விளங்கிய திருவள்ளுவர், உள்ளத்தளவு உயர்வினைப் பெற்று பெரும் புகழைத் தேடிக் கொண்ட பெருமை மு. வ. அவர்களுக்கு உண்டு. எண்ணி எண்ணிச்செயல்படத் தயங்காத உள்ளமாக அவருடைய உள்ளம் விளங்கியது. எண்ணத்தில் தெளிவு மிக்கவராக வாழ்ந்த தமிழ்ப்பேராசிரியர் அவர் ஒருவரே எனத்துணிந்து கூறிவிடலாம். அத்தகையே தெளிவே அவரை நல்லவராகவும் வல்லவராகவும் வாழச்செய்து விட்டது. Thinks, plan and excute என்னும் மொழி அவருக்கு மறைபோல நின்று கைகொடுத்து உதவியது. அதுவே, அவர் படிப்படியாக உயர்வுபெற — வளர்ச்சியடைய — வழி செய்து விட்டது. தமிழகத்திலே தமிழ் மொழியின் துணையால் அந்த அளவிற்குப் பொருளை ஈட்டியவர்கள் எவரும் இல்லை ; பல அரிய நூல்களை எழுதிப் புகழைப் பெற்றவர்களும் இல்லை ; இனி, அப்படித் தமிழ் மொழியின் துணையால் அவரைப் போலப் பல நூல்களை இயற்றிப் பெரும் பொருளை ஈட்டும் ஆற்றலைப் பெறக் கூடிய ஒரு தமிழர் தோன்றுவார் எனவும் இடமில்லை ?

புத்தருக்குப் பின்னர் அவருடைய இடத்தை நிரப்ப அப்படி ஒருவர் தோன்றவில்லை !

நேரு அவர்களைப் போன்று உலக அரசியல் மேதையாகத் திகழும் பேற்றினை ஒரு இந்தியர் இனிப் பெறுவார் என எண்ணி மகிழ்ந்திட வழியில்லை.

பெரியார் அவர்களுக்குப் பின்னர் விழிப்புணர்ச்சியை, ஊட்டிச் சமுதாயத்தை நடத்திச் செல்லும் வகையில் அவரைப் போல மற்றொருவர் தோன்றித் தொண்டு புரிவார் என எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை.

தொழில் வல்லுநராகவும் பண்பட்ட தமிழ்ச்சான்ருேராகவும் விளங்கிய கோவைப் பெரியார் G. துரைசாமி அவர்கள் இடத்தை மற்ருெருவர் பற்றிக் கொள்ளுவார் எனக் குறிப்பிட வழியில்லை.

ஆம்! அரிய உண்மைகள் !

அவ்வாறே மு. வ. அவர்களைப் போன்று ஒரு தமிழர் உயர்வு பெற்றுச் சிறக்க முடியும் எனத் துணிந்து கூறுவதற்கு வாய்ப்பில்லை.

மு.வ. அவர்கள் தம்முடைய குடும்பத்தினரும், ஊராரும் பயன்பெறும் வகையில் ஒரு பெரும் ஒளி விளக்காகவே திகழ்ந்தார். அந்த ஒளி விளக்கைப் பொருத்தி வைத்தவர் யார் என்பதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு தமிழகத்திற்கு இல்லை போலும்! முதன் முறையாக அந்த விளக்கைத் தூண்டிய பொருமை திரு. வி. க. அவர்களுக்கே உண்டு. பிறகு எவருடைய தூண்டுதலும் இல்லாமலேயே அந்த ஒளி விளக்கு பேரொளியைத் தமிழகத்திற்கு வழங்கி வந்தது. அந்த விளக்கினின்றும் பல விளக்குகள் பொருத்திக் கொள்ளப்பட்டன. சிறு சிறு விளக்குகளாக விளங்கும் அவை அங்கும் இங்குமாக இருந்து இப்பொழுது ஒளிச் சிதறல்களை வழங்கிக் கொண்டு வருகின்றன. அத்தகைய விளக்குகளெல்லாம் ஒன்ருகச் சேர்ந்தாலும் பெருவிளக்கின் அளவிற்கு அவற்ருல் ஒளியினை வழங்க முடியாது எனக் கொள்வது தவருகாது.

"Lead, Kindly Light" amid the encircling gloom,
Lead Thou me on!
The night is dark, I am far from home,
Lead Thou me on!

என வேண்டினுர் மேதையாக விளங்கிய JOHN HENRY NEWMAN என்பவர்.

டாக்டர் மு. வ. என்னும் அந்தப் பெருவிளக்கு—ஒளிவிளக்கு—பலருக்கும் வழிகாட்டி வந்தது. அவருடைய தொடர்பால் அறியாமை நீங்கித் தெளிவு பெற்ருர் பல்லாயிரம் பேர் ஆவர். அவரால் வாழ்வு பெற்ருேர் பெரும் பாலோர்; அவர்களிலே பலர் பேசவோ அன்றி எழுதவோ இயலாத அளவிற்கு இன்று நிலைகுலைந்து நின்று விட்டிருக்கின்றனர். இலக்கியவானில் விடிவெள்ளியாக விளங்கிய அந்த விண்மீன்—பெருவிளக்கு--அணைந்து விட்டது! ஓய்ந்துவிட்டது!! அணைந்தே போய் விட்டது!!!

— தமிழ்ப்பணி

# காந்தியத் துணைவேந்தர்!

பேராசிரியர் மா. பா. குருசாமி

உள்ளத்தில் ஒளி பெருக்கி ஒப்பற்ற பணி செய்து கொண்டிருந்த தமிழறிஞர் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனர் 1974 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை இறைவனடி எய்தினர். பொதுவாகத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கும், குறிப்பாகக் கல்வித் துறைக்கும் இது ஈடு செய்யமுடியாத இழப்பாகும். டாக்டர் மு. வ. காந்திய நெறியில் நின்ற சான்ரோர். தூய கதராடை அணிந்து, எளிய வாழ்க்கை நடத்தியஅவரின் தனி வாழ்க்கையும் பொது வாழ்க்கையும் மற்றவர்களுக்கு வழி காட்டுகின்ற இலக்கியமாக அமைந்தது.

'தமிழகத்தின் காந்தியடிகள்' என்று கருதப்பெற்ற தமிழ்த்தென்றல் திரு. வி.க. வின் வழிவந்த டாக்டர் மு. வ. தமிழ்நாட்டு இயற்கை மருத்துவச் சங்கத்தின்

தலைவராகத் திகழ்ந்தார். இயற்கையைப் போற்றி அதன் வழி வாழ்ந்தால் எந்த நோயையும் வெற்றி காணலாம் என்பதை உணர்த்திய பெருமைக்குரியவர். மதுரை காந்தி நினைவு நிலையத்தின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த டாக்டர் மு. வ, மதுரைப்பல்கலைக்கழகத்தின் ஆக்கப் பூர்வமான வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார் மற்றைய பல்கலைக்கழகங்களில் இல்லாத புதிய துறைகளை வளர்த்த பெருமை அவரைச் சாரும்.

காந்தியச் சிந்தனை-இராமலிங்கர் தத்துவம் பற்றி ஆராய்வதற்காக முன்னதாகவே தொடங்கப்பெற்ற துறைக்கு டாக்டர் மு. வ. புத்தாக்கம் கொடுத்தார். புதிய புதிய சிந்தனைகள் பிறக்க அத்துறை செயல்படுவதற்கு ஊக்கம் வழங்கினர்.

டாக்டர் மு. வ. அவர்களின் வாழ்க்கை ஆரவாரமில்லாத அமைதியான வாழ்க்கை, அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள் எல்லாம் அவரிடம் ஒளிர்ந்த மனிதப்பண்புகளைக் கண்டு வியந்தார்கள். பதவிக்குரிய பகட்டை என்றும் அவர் விரும்பியதில்லை. அவருடைய அன்புள்ளம் இல்லத்தில் வெளிப்பட்டதைப் போன்றே அலுவலகத்திலும் வெளிப்பட்டது. உண்மையில் பற்றுக்கொண்ட அவர் திறமைகளைக் கண்டபோதெல்லாம் பொது நன்மைக்கு அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்கியதில்லை.

நெருங்கிய நண்பர்கள்- அன்பர்களின் திருமண வீடுகளுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் எளிய வெள்ளைக் கதர்வேட்டியும், சட்டையும் அணிந்து அவர் வருவதைப் பலர் கண்டிருக்கலாம். எளிமையை இயல்பாக்கிக் கொண்ட அவரின் சிந்தனைகள் எல்லாம் விண்ணைத்தொடுகின்ற அளவு உயர்ந்து நின்றன.

தமிழ் எழுத்துலகில் தலைசிறந்த இடத்தைப் பெற்றவர் டாக்டர் மு. வ. அறிஞர் பெர்னாட்ஷாவின் கருத்துக்களால் ஈர்க்கப்பெற்ற அவரது நெஞ்சம் தமிழாக மலர்ந்து மணம் பரப்பியது. இறவாத இலக்கியங்களைப் படைத்து அழியாப் புகழ் பெற்றார். அவரது நூற்கள் எல்லாம் அறம் கூறும் ஏடுகள். அவற்றில் பரவலாகக் காந்தியக் கருத்து முத்துக்கள் அணிசெய்வதைக் காணலாம். காந்தி அண்ணலைப் பற்றிய அவரது நூல் அவர் எவ்வளவு காந்தியத்தில்

ஊறிப்போயிருந்தார் என்பதைக் காட்டுகின்றது. அவரது 'அரசியல் அலைகள்', 'விடுதலையா?', 'கி. பி 2000', 'கல்வி' போன்ற நூற்களில் பெயர் குறிப்பிடாமல் பெரிதும் காந்தியம் பேசப்படுகின்ற சிறப்பினைக்காணலாம். அவர் எழுதிய 'அகல் விளக்கு' நூலுக்காக 1963 இல் ராஷ்டிரபதி பரிசைப் பெற்றார். அவர் எழுத்திலிருந்த எளிமையும் செம்மையும் தமிழகத்தில் பலரைக் கவர்ந்தன. சிறுசிறு சொற்களையும், வாக்கியங்களையும் கொண்டு மிகப்பெரிய கருத்துக்களைக் கூட படிப்பவர் உள்ளத்தில் பதிய வைக்கின்ற எழுத்துவன்மை அவருக்குக்கைவந்தகலையாக இருந்தது. அவருடைய எழுத்து உருவாக்கியவர்களை இன்று தமிழகமெங்கும் காணலாம்.

அவர் இறுதியாகப் பங்கு பெற்ற நிகழ்ச்சி மதுரைப் பல்கலைக்கழகம் நடத்திய அகிலன் கருத்தரங்கமாகும். முதல் நாள் விழாவில் படைப்பாற்றல் கொண்ட எழுத்தாளர் என்ற முறையில் அவர் ஆற்றிய தலைமையுரை மறக்க முடியாத ஒன்றாகும். அவர் சிறந்த இலட்சிய நோக்கமுள்ள எழுத்தாளராக இருந்தார். தமிழ் இருக்கும்வரை. தனது பெயரும் நிலைத்திருக்கும் வகையில் தொண்டு செய்திருக்கின்றார்.

டாக்டர் மு. வ. உழைப்பால் உயர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். தொடக்கப்பள்ளி ஆசிரியராக தனது வாழ்க்கையைத் தொடங்கி படிப்படியாக உழைப்பின் மூலம் டாக்டர் பட்டம் வரை பல பட்டங்கள் பெற்று, பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக வாழ்க்கையை நிறைவு செய்துகொண்டார். தன்னிகரற்ற அறிவாற்றலும், நேர்மைத் திறம் கொண்ட உழைப்பும், அறநெறி நிற்கின்ற இயல்பும் அமையப் பெற்றதால் மண்ணுலக வாழ்வில் புகழ்-பொருட் செல்வங்களையும், விண்ணுலக வாழ்விற்கு அருட்செல்வத்தையும் தேடிக்கொண்டவர் டாக்டர் மு. வ.

காந்தியத் துணைவேந்தராக விளங்கிய அவர் போற்றிய, பின் பற்றிய கருத்துக்களையும் கொள்கைகளையும் உணர்ந்து, அறிந்து பின்பற்றுவதுதான் நாம் அவருக்குச் செலுத்துகின்ற காணிக்கையாகும். அவர் தொடங்கிய பணிகளைத் தொடர்ந்து செய்வோம். அழியாத அவரது புகழை நினைவில் கொள்வோம்.

கிராம ராஜ்யம் 18—10—'74

# இதயத்தில் விழுந்த இடி

பேராசிரியர், டாக்டர். ந. சஞ்சீவி

நம் பேராசிரியர் டாக்டர் மு.வ. காலமாகி விட்டார். எதிர்பாராத இடி.

பேராசிரியர் மு.வ. உழைப்பால் உயர்ந்த உத்தமர். நாட்டுப்புறத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து படிப்படியாகப் படிப்பாலும் பண்பாலும் முன்னுக்கு வந்தவர். ஒரு சிறுகாலம் எழுத்தராகப் பணியாற்றிப் பின்னர் எந்தக் கல்லூரியிலும் சேர்ந்து படிக்காமல் தன் முயற்சியாலும் தனிக் கல்வியாலும் வித்துவான், பி.ஓ.எல்., எம். ஓ. எல்., பிஎச்.டி. பட்டங்களில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகத் தமிழில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்றவர் அவர்தான். தம் அன்பாலும் அறிவாலும் கடந்த பத்துப் பதினைந்தாண்டுகளில் ஏறத்தாழ பத்துப் பதினைந்து பேரை டாக்டர்களாக உருவாக்கிய பெருமையும் அவர் தனி உரிமை.

பேராசிரியர் டாக்டர் மு.வ. பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் துறைபோகக் கற்றவர். ஆயினும் தமக்கு முன்னோடிகளாக விளங்கிய பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள், திரு.வி.க. முதலியோர் தொடங்கிய தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தம்முடைய பற்பல புதினங்களாலும் பிற இலக்கியப் படைப்புகளாலும் வலிவும் பொலிவும் பெறச்செய்தார். பேராசிரியர் கல்கியும் பேரறிஞர் அண்ணாவும் போற்றும் எளிய இனிய தமிழ் நடையின் வாயிலாகத் 'தமிழ் நாட்டுப் பெர்னாட்ஷா' என்று திரு. வி. க. வும் போற்றும்படியாகப் புதிய, புரட்சிக் கருத்துக்களை டாக்டர் மு.வ. இளைஞர் நெஞ்சில் விதைத்தார். பத்தாண்டுகட்கு முன்பு ஒரு பத்தாண்டுக்காலம் டாக்டர் மு.வ.வின் கருத்துக்களில் மூழ்குவதையே தமிழ்நாட்டு இளைஞர்கள் தனிப்பேரின்பமாகக் கருதினர்.

தமிழக உயர்கல்வி வரலாற்றில் ஒரு தமிழாசிரியர் துணைவேந்தர் பதவிக்குத் தம் படிப்பாலும் பண்பாலும் உயர முடியும் என்பதை ஓசைபடாமல் முதன் முதல் உணர்த்தியவர் டாக்டர் மு.வ. அயல் நாட்டு-அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றில் D.Litt., மதிப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழாசிரியரும் அவரே.

மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும், உலகப்பற்றும் நிரம்பிய பேராசிரியர் டாக்டர் மு.வ., வள்ளுவர்-காந்தியடிகள்- வள்ளலார் வழி வாழ்வு நடத்தியவர். அப்பழுக்கற்ற ஒழுக்க வாழ்வு உடையவராக விளங்கிய அவர் தம் அடிப்படைச் சிந்தனைகளாலும் ஆரவாரமற்ற அடக்கப்பண்பாலும் உலகத்தவர் உள்ளத்தையெல்லாம் கோயிலாகக் கொண்டுவிட்டார்.

பகைவரிடமும் பகைமை பாராட்டாப் பண்பு படைத்த பேராசிரியர், தம்முடைய இலக்கிய, இலக்கண நூல்களால் தமிழ் மொழிக்குப் புது வாழ்வு தந்ததுபோலவே தம்முடைய தனிப்பட்ட பழக்கவழக்கங்களாலும் பண்பு நலன்களாலும் ஒரு பெரிய உறவுலகத்தையே படைத்துக் கொண்டுள்ளார்.

பேராசிரியர் உடல் மறைந்து விட்டது. ஆனால் அவர் உழைப்பின்-உதவியின்- உயர்வின் பயன்கள் என்றும் வாழும்-வாழ்விக்கும். வாழ்க டாக்டர் மு.வ. புகழ்!

தமிழ்ப்பணி

# முன்னுக்கு வா

டாக்டர் இரா. சனார்த்தனம்

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவி இரண்டாம் முறை ஏற்றுக் கொள்ளுங்கள்—என்ற வற்புறுத்தலை ஏற்று—அந்தச்செய்தியை வீட்டாரிடம் எப்படிச் சொல்வது—தான் தொடர்ந்து பணியாற்றுது ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று மகன் டாக்டர் அரசு நாளும் வற்புறுத்தி, வருகிறானே—வீட்டார் அனைவர் எண்ணமும் அதுவாகத்தானே இருக்கிறது என்று தயங்கியபடி வீட்டில் நுழைந்தார்.

'என்னப்பா-ஒத்துக் கொண்டீர்களா? என்று மகன் கேட்க 'ஆமாம் அரசு-- சூழலிலிருந்து விடுபட முடியவில்லை' என்றார் மு. வ.

வேந்தரும், இணைவேந்தரும், முதல்வரும் கேட்டுக் கொண்டதாலேயே இரண்டாம் முறை துணைவேந்தர் பொறுப்பை ஏற்ற டாக்டர் மு.வ. பதவிக்காலம் முடியு முன்னரே மறைந்தார்கள்.

தாம் 70 வயது வரை வாழ்வோம் என்ற நம்பிக்கை மட்டும் அவருக்கு இருந்து வந்தது. துணைவேந்தர் பணி முடித்து, தேவையான ஓய்வோடு தன் இறுதிநாட்களைக் கழிக்க முடியும் என்ற அவர் நம்பிக்கையோடு இருந்தார்.

மு.வ. ஊசி போட்டுக் கொண்டதோ மாத்திரை உட்கொண்டதோ மருத்துவமனையில் உடலைப்பரிசோதித்துக் கொண்டதோ இல்லை. காரணம் அவர் ஏற்றுக்கொண்டது இயற்கை வைத்திய முறை - மனக்கட்டுப்பாடே மருந்து. நோய்வாய்ப்பட்டால் - வலிக்கும் இடத்தில் ஈரத்துணியில் ஒத்தடம் தந்து, மனக்கட்டுப்பாடு முறையால் குணம் காண்பதே அவர் பின்பற்றிய இயற்கை வைத்தியம்!

மனித உடலில் இயற்கையாக நோயை எதிர்க்கும் வலிமை இருக்கிறது. அந்த வலிமையைக் கொண்டே நோயை சமாளிக்கும் இயற்கை வைத்தியத்தை மாற்றி - மருத்துவ மனைக்கு உரியகாலம் டாக்டர் மு.வ. சென்றிருந்தால் ஒருவேளை இன்னும் சில ஆண்டுகளேனும் இருந்திருப்பார். ஆனால்-நோய் அவதியின்றி தான் இறப்பதே சரி என்பது அவர் எண்ணமாக இருந்திருக்கக்கூடும்.

இயற்கை வைத்திய முறையில் நல்ல தூக்கம் வந்தால் நோய் குணமாகிறது என்பதை அவர்க்கு உணர்த்துமாம். உறக்கம் தொடர்ந்து வராததால்-இனி தன் வைத்திய முறை பயன் தராது என்பது மட்டுமல்ல-எந்த வைத்திய முறையும் தன் உயிரைக்காக்காது என்ற முடிவுக்கு மு.வ. வந்தார்.

இறப்பதற்கு ஒருநாள் முன் மருத்துவமனை செல்ல சம்மதித்தார் மு.வ. ''மருத்துவமனையில் நல்ல கவனிப்பு இருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் உங்களுக்கு நான் ஏற்ற நோயாளி அல்ல'' என்றார் டாக்டர் இராமச்சந்திரனிடம்.

பல்கலைக் கழக, பட்டமளிப்பு விழாவில் ஈடுபட்டபோது, தனக்கு இருதயவலி ஏற்பட்டதை உணர்ந்தார் - இருப்பினும் அதை வெளிக் காட்டாது— மத்திய அமைச்சர் மகிழ விழா நடத்திப் பல்கலைக் கழகத்திற்கு-அரசின் நிதி உதவிபெற ஆர்வம் கொண்டார். முப்பது படிக்கு மேல் உள்ள மாடியில் மூன்று முறைக்கு மேல் ஏறி இறங்கினார். 4-10-74-இல் தான் எழுதி வைத்த குறிப்பில் அப்போது- வலி ஏற்பட்டபோது ஓய்வு எடுத்திருக்க வேண்டும், தன் தவறு ஒரு பாடம் என்று குறித்தும் உள்ளார்.

மு.வ. விற்கு 'டைரி' எழுதும் பழக்கம் இருந்தது. பத்தாண்டுகளுக்கு முன் தான் எழுதிய 'டைரி'யை கிழித்துப் போடும்போது பேராசிரியர் தசரதனும், மு. வ. பிள்ளைகளும் கிழிக்க வேண்டாம், அந்தக் குறிப்புக்களே ஒரு நூலாகப்பலருக்கும் பயன்படும் என்றூர்கள். மு.வ. வேண்டாம் என அதைக்கிழித்துவிட்டார். பிறகு 'டைரி' எழுதும் பழக்கத்தை விட்டு விட்டார். 4-10-74-ல் தனக்கு உடலில் 27-9-74 ஏற்பட்ட இருதய வலியைத் தொடர்ந்து தான் ஓய்வு எடுக்காததை-தன்னிடம் எழுதாமல் இருந்த 1968-ஆம் ஆண்டு டைரியில் எழுதி வைத்தார். அது மு. வ. வின் கடைசி எழுத்து.

கல்வியாளராக வளர்ந்து, வாழ்ந்த மு.வ. கல்விச் சேவையிலேயே தன் வாழ்வை முடித்தார்.

பாரிஸ் தமிழ் மாநாட்டிற்கு அவரோடு பயணமானேன். அவர் பெட்டியை எடுத்து அவர் துணையாளனுகப் பல நாடுகள் கண்டேன்.

மு.வ. விற்கு யாரும் மாலை அணிவிப்பதை விரும்ப மாட்டார். 'எனக்கு இதெல்லாம் பிடிக்காது என்பது தெரியுமல்லவா' என்று சினந்து கொள்வார்-அவர்-மலை போல் மாலைகுவிந்ததை மறுக்காமல் மு. வ. ஏற்றுக்கொண்டது அவரது மறைவுநாள் அன்றுதான்!

லெபனுன் நாட்டில் பயணம் செய்தபோது-குரல் எதிரொலிக்கும் குகையில் மு. வ. பாட ஆரம்பித்தார். தேவாரப் பாடல்கள் அவர் பாட தமிழ் தெரியாத பல வெளிநாட்டினரும் பெரியவர் பாட்டு ஒலியை வியந்து கேட்டனர்.

தமிழ் இசையில், தன்னை மறப்பவர் மு. வ. தன் கடைசி மகன் திருமணத்தில்-சீர்காழி கோவிந்த ராஜன் இசையை இறுதிவரை கேட்டுத் திருமண வரவேற்புப் பணியை மறந்து ரசித்தார்.

அதே தமிழ் பாடல்கள் — அவர் உடல், எவ்வளவோ பேரை வரவேற்ற விதம் அவர் வீட்டு அறையில்-வைக்கப்பட்டபோது தேவாரப் பாடல்கள் பாடினுர்கள். அதை யார் கேட்டார்களோ இல்லையோ மு.வ. கேட்டிருப்பார். இசை வெள்ளத்தில் மூழ்கியிருப்பார்.

பல்கலைக் கழக ஆராய்ச்சியாளராக அவரிடம் சேர்ந்தேன், நான். ஆராய்ச்சிப் பணியோடு-பொதுப்பணியிலும் ஈடுபட்டிருப்பதை குறையாக அவரிடம் சொன்னபோது ''சனுர்த்தனம் நேரம் இருக்கும்போது

பல்கலைக் கழகம் வரட்டும்—தமிழ் ஆர்வம் உடையவர்கள் அனைவரும் தமிழ்த் துறைக்கே வரவேண்டும் என்பதில்லை.''

''பிற—வேறு துறைகளிலும் நம்மவர்கள் தேவைப்படுகிறார்கள்'' என்று என்னை ஊக்கினார்—

பேரறிஞர் அண்ணாவின் நாடகங்களை ஆராய, மு. வ. எனக்கு வழிகாட்டினார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவராக இருந்தபோது இரண்டு ஆண்டு அவர் கீழ் ஆராய்ச்சி நடத்தினேன்.

மதுரையில் பல்கலைக்கழக துணைவேந்தரான பின்னும் கூட தொடர்ந்து அவர் கீழ் ஓராண்டு ஆராய்ச்சி செய்து முடித்தேன் அண்ணா மறைவுக்குப் பிறகு — ஆசிரியராக—வழிகாட்டியாக மு. வ எனக்கிருந்தார். மீண்டும் அண்ணாவை இழந்தேன்.

'முன்னுக்கு வா' என்ற அறிவுரை எழுத்துக்களின் மொத்த உருவமே மு.வ. அவரால் முன்னுக்கு வந்த மாணவர்கள் இன்று தமிழ் உலகில் நிறைந்துள்ளனர்.

யாரையும் புண்படப் பேசாத பண்பாளர் மு. வ. தன்னைத் தாக்கியவர்களையும் மறந்து மன்னிக்கும் மாமனிதர்.

நீட்டோலை 20—10—'74

# டாக்டர் மு. வ.

தையற்கலை சுந்தரம்

எளிமை, இனிமை, தூய்மை, உழைப்பு, கொள்கைப் பிடிப்பு, தமிழ் வளர்ச்சி இவர் தம் குறிக்கோள்கள். யாரையும் வெறுக்காத போக்கு, அனைவருக்கும் உதவும் மனம், திரு.வி.க எவ்வழியோ அவ்வழி டாக்டர் முவ. அவர்கள் சென்ற வழி.

மு.வ. அவர்கள் ஒருவருக்கு உதவி செய்வது என்று தன் மனத்தில்நினைத்து விட்டால், அவ்வுதவி பெறு-பவர்க்கே தெரியாமல் அவ்வுதவியைச் செய்து முடிப்பார். இத்தகைய உதவி பெற்றவர்கள் தமிழகத்தில் பலருளர். குறிப்பாக, ஏழை மாணவர்களென அவருக்குத் தெரிய வந்து, அம்மாணவர் உண்மையிலேயே ஏழை என்பதை அறிந்து கொண்டபின் அவர்களது படிப்பிற்குத் தேவை-யான உதவிகளைப் பலருக்கு மறைமுகமாகவே செய்-துள்ளார்.

டாக்டர் மு. வ. அவர்களது தனிமுயற்சியால் சென்னை செனாய் நகரில் திரு. வி. க. பெயரில் ஓர் உயர்நிலைப்பள்ளி உருவாகிப் சிறப்புற நடைபெற்று வருகிறது. இப்பள்ளியை எப்படியும் தமது வாழ்நாளில் கல்லூரியாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தமது வருவாயில் சிறு பகுதியை இப் பள்ளிக்கு அளித்துச் சிறப்புறச் செயலாற்றி இப்பள்ளியை நடத்தி வந்தார்.

தமக்குப் புகழ் கிட்ட வேண்டுமென்று எத்தகைய வழியாக இருப்பினும் அவ்வழியைக் கடைப்பிடிக்கத் தம் கைப்பொருளைச் செலவழித்தேனும் பலர், பல்வேறு துறைகளில் புகழை ஈட்டமுற்படுவது இன்றைய உலகில் மலிவாகிவிட்டது!

தமக்குப் பிறந்த நாளா? தாம் எழுதிய புத்தகமா? தாம் நடத்திய நாடகமா? திரைப்படமா? ஏன் தாம் அளித்த நன்கொடையா? தமது வீட்டுத் திருமணமா? எதுவாக இருப்பினும் எதிலும், தனிச்சிறப்பு ஏற்பாடுகளைச் செய்து புகழ் ஈட்டத் தவறுவதில்லை. இத்தகைய புகழ் ஈட்ட முயலுவோர் மேற்கொள்ளும் முறைகள் தமிழ் நாடு அறிந்த உண்மை!

டாக்டர் மு.வ. எந்நாளும் மேற்கண்டவாறு தமக்குப் புகழ் ஈட்ட வேண்டும் என விரும்பியதில்லை. ஏன், மனத்தால் கூட நினைத்துப் பார்த்து இருப்பாரா என்பதும் ஐயத்திற்கு உரியதே. ஏன் எனில், டாக்டர் மு.வ. அறுபது ஆண்டு பிறந்த நாள் அன்று, இவருக்கு மிக மிக நெருக்கமான நண்பர்கள் கூடத் தமது அறுபதாண்டு பிறந்த நாள் அன்று தம்மைக் காணவருவதைத் தவிர்க்க நினைத்தாரோ, என்னவோ? அன்றும் ஒரு புதுமையைச் செய்து காட்டி விட்டார். எவருக்கும் தெரியாமல் தமது அறுபதாம் ஆண்டு பிறந்த நாள் அன்று பெங்களூர் தமிழ்ச் சங்க வெள்ளி விழாவில் பங்கு பெற ஒப்புக் கொண்டு, அன்று பெங்களூர்த் தமிழ்ச்சங்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்!

சிறப்புப்பட்டம் தமக்குக் கிடைக்கப் பலரிடம் சுற்றி அலைந்து, சிறப்புப் பட்டம் பெற்றவர்களை நான் நன்கு அறிவேன்!

1965-ஆம் ஆண்டு இந்தியை எதிர்த்து மாணவர் உலகம் போராடிய நேரத்தில், தமிழக அரசு மாணவர்களைச் சுட்டுத் தள்ளியது. இந்த நேரத்தில் மத்திய அரசு டாக்டர் மு.வ.வுக்குப் பத்மஸ்ரீ

பட்டம் வழங்கியது. இந்தியை எதிர்த்த மாணவர்களைக் கொடுமைக்குள்ளாக்கக் காரணமாக இந்திய அரசு இருக்கிறது. எனவே, அவர்கள் அளிக்கும் இந்தச் சிறப்புப் பட்டம் எனக்குத் தேவை இல்லை என மறுத்துவிட்டார் டாக்டர் மு. வ. !

இன்றையத் தமிழகத்தில் பிறரைத் தூற்றியே பெரும் விளம்பரம் ஈட்டியவர்கள், ஈட்ட நினைத்தவர்கள் ஒருசிலர். தூய்மைக்கு உறைவிடமாக விளங்கியவர் டாக்டர் மு. வ. மு. வ. வைத் தங்களது அரசியல் விளம்பரத்திற்கும், புகழுக்கும் பயன்படுத்திக்கொள்ள நினைத்தவர்கள் ஏமாந்தார்கள் !

டாக்டர் மு. வ. வின் தனித்தன்மையும், தமிழ் இலக்கியத்தொண்டும், தூய உள்ளமும், தமிழகத்தின் மக்கள்பால் இவருக்குள்ள நடு நிலைத்தன்மையும் இவரது வளர்ச்சியும் கண்டு இன்றுவரை பொறுக்கமுடியாமல் அடிவயிற்றைப் புண்ணாக்கிக் கொண்ட பெரியவர்களுக்கும் அன்றே சொன்னேன் டாக்டர் மு. வ. தமிழ் அன்னையின் தவப்புதல்வர் என்று. இன்று ஆர்ப்பரிப்பவர்களையும் ஒரு கணம் நினைத்துப் பார்க்கின்றேன். ஆம், எத்தகைய விளம்பரப்பிரியர்கள் தமிழகத்தில் மலிந்துள்ளார்கள்!

பாலை — பாவையாக்கியவர் தமது பேனாவில் மை இருக்கும்வரை இத்துயரை எப்படியெல்லாம் சித்தரித்தார்! சுரபியையும் அமுதத்தையும் அருந்தியவர்கள் எவரும் எளிதில் மறந்து இருக்கமாட்டார்கள். இத்தகையவர் என்ன ஆனார்? பாலைப் பாவையாக்கியவர் நிலை இன்று என்ன?எழுத்துலகில் இருந்தே ஒதுக்கி வைத்தனர் தமிழ் மக்கள். தமிழ் ஐயாவைத் தூற்றியே விளம்பரம் ஈட்ட முற்பட்ட இவர், இன்று இருக்கும் இடம் எத்தகைய இடம் என்று தெரியுமே தமிழ் மக்களுக்கு.

டாக்டர் மு. வ. வின் ஆரம்பகால எழுத்திற்கு அரங்கம் அமைத்துத் தூற்றிய அவர்கள் எங்கே ? அவர்களால் டாக்டர் மு. வ. எழுத்தையும்,கருத்தையும் தமிழ்மக்கள் அறியாவண்ணம் மறைக்கமுடிந்ததா? இல்லையே ! இவர்கள் தூற்ற, தூற்ற டாக்டர் மு. வ. வின் எளிய, இனிய தமிழ் நூல்கள் தமிழ் மக்கள் வாழும் நாடுகளெல்லாம் வாங்கும் எண்ணிக்கை பெருகிப் பரவத் தொடங்கியது. மாற்றாரின் அரங்கமும் துரைத்தனமும் யாப்பிலக்கணமும், மு. வ. அவர்களை என்ன செய்ய முடிந்தது ?

டாக்டர் மு. வ. அவர்கள் தமது வாழ்க்கையில் அரசியலுக்கு அப்பாற்பட்ட காந்திய நெறிமுறைகளை, முழுமையாகக் கடைப்பிடித்தார். இதன் காரணமாக ஒரு சில பழைய தியாகிகள் அன்று மு. வ. அவர்களின் இல்லம் வந்து அவரது அறிவுரையைப் பெற்றுச் சென்றவர்கள், பிற்காலத்தில், அரசு பதவியில் உயர்ந்த பதவி எனக் கருதப்படும் மூன்றெழுத்துப் பெற்ற பின், முற்றும் கற்றவர்போல் தம்மை நினைத்துக்கொண்டு, தம்மிடம் வருவோர் இடம் எல்லாம் கல்வியில் கரைகண்டவர்போல், தாம் ஆரம்பகாலத்தில் அறிவுரைபெற்றவர் மீது புழுதிவாரித் தூற்றிப்போலிப்புகழ் ஈட்ட நினைத்தனர்.

தம்மைத் தூற்றியவர்களுக்கும் மறைமுகமாக உதவிசெய்யத் தவறியதில்லை மு.வ. தம்மாலேயே வளர்க்கப்பட்டவர்களுள் ஒரு சிலர் தமிழால் வளர, டாக்டர் மு. வ. வைத் தூற்றுவதையே தமது வாழ்நாளில் பெருங்கடமை எனக் கொண்டவர்களானமையை அறிந்தும், அறியாதவர்போல் அவர்களிடம் அன்பு கொண்டவர் மு.வ.

டாக்டர் மு. வ. அவர்கள் ஒருவரது திறமையைக் கண்டால் அவர் எத்தகையவர் என்பதைக் கூட எண்ணிப்பார்க்காமல், காலமும் சூழ்நிலையும் கனியும் போது மனமார அவர்களது திறமையைப் பாராட்டத் தவறியதில்லை. மேலும் டாக்டர் மு. வ. மற்றவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் மூழ்கித்திளைத்ததில்லை. எத்தகையவர் ஆனாலும் அவரது திறமையையும், அவர்களது பணியின் மூலம் தமிழ்நாடு தமிழ்மொழி வளர்ச்சி பெறுமா என்பதையுமே அளவுகோலாகக் கொள்வார்!

தன்னலம், பிறர்நலம் என்ற இரு பெரும் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்ட இன்றைய மக்களிடம், பெரும்புகழ் ஈட்டவும், ஈட்டியும் வருவோர் பலதரப்பட்ட துறையினர் எனது மனக்கண் முன்னே தோன்றி மறைகின்றனர்.

ஆம், இத்தகைய நினைவு என் மனதில் அடிக்கடி தோன்றக்காரணம் இல்லாமல் இல்லை. 10-10-74 நாள் மாலை 5-00 மணி அளவில் தமிழ் அன்னையின் தவப்புதல்வர் தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்களின் வழிவந்தவர், தமிழகத்தின் நொதுமலராக விளங்கியவர், தமிழ்க்கடல் டாக்டர் மு. வ. மறைவு என்னை மீளாத் துயரத்தில் ஆழ்த்தியது.

டாக்டர் மு.வ. தம் மறைவுக்கு முன், 9-10-74 ஆம் நாள் மாலை 3-00 மணி அளவில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு உடன் சிகிச்சை

மேற்கொண்டு அவர் 26 மணி நேரம்தான் இருந்தார். அந்த வேளையில் கூட அவர் உண்மையிலேயே எவ்வளவு மன உறுதியோடு இருந்தார் என்று வியக்க வேண்டியுள்ளது. டாக்டர் மு. வ. உண்மையிலேயே உடல்நலம் பெற்று இல்லம் திரும்பி விடுவார் என்று நினைத்தது எனது கோழை உள்ளம்.

டாக்டர் மு. வ. மருத்துவமனையில் இருந்த ஏறத்தாழ 26 மணி நேரத்தில் அவரது குடும்பத்தார் மற்றும் அவரது உற்ற குடும்ப நண்பர்கள் ஆகமொத்தம் பத்து, இருபது பேர் உடன் இருந்து வந்தோம். டாக்டர் பெருமுயற்சி செய்து சிகிச்சையில் ஈடுபட்டு வந்தார். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சிகிச்சையின்போது உடன் இருந்து வந்தார். கல்வி அமைச்சர் நாவலர் வந்து நேரில் பார்த்து உடல்நலம் குறித்துப் பேசிவிட்டுச் சென்றார். மருத்துவக் கல்லூரி இயக்குநர் டாக்டர் நாராயணன் பார்த்துச் சிகிச்சைகளின் தன்மையைக் கவனித்துச் சென்றார்,

நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியரின் ஆலோசனைப்படி இங்குள்ள டாக்டர்கள் இருதய நோயில் தனிச்சிறப்புப் பெற்ற வேலூரில் உள்ள மருத்துவமனை டாக்டர் இடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்து பேசிச் சிறப்புச் சிகிச்சை 10-10-74 ஆம் நாள் பகல் 12 மணி அளவில் மேற்கொண்டனர். 1.30 மணி அளவில் பேராசிரியர், மருத்துவமனையில் சிகிச்சையின்போது வந்து தங்கியிருந்து, குணமடையக்கூடிய நிலை உருவான பிறகே சென்றார். சுமார் 2.30 மணி அளவில் டாக்டர் மு.வ. உடல்நலம் தேறிவிடும் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆனால் 5மணி அளவில் அமரரானார்!

டாக்டர் மு.வ. அவர்களைப் பேராசிரியர் அன்பழகன் அவர்களின் மூலம் நன்கு அறிந்து கொள்ளவும், அவருடன் கலந்து பழகவும், தொடங்கியதிலிருந்து எனக்கு அவரிடம் ஒருவகையான பக்தியும் அடக்க உணர்வும், இயல்பாக அமைந்து விட்டன. டாக்டர் மு.வ. விடம் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் பழகியவன் என்ற முறையில் என் மனக்குமுறலை எப்படி எப்படி வெளிப்படுத்துவது என்ற திகைப்பு ஏற்படுகின்றது!

எனது பிறவியிலேயே நான் மூர்க்ககுணமுடையவனாகப் பிறந்து இருக்கக்கூடும் எனச் சில சமயங்களில் நினைப்பதுண்டு. காரணம் என் மனதில் பட்டதை உடனே வெளியிட என்றுமே நான் அஞ்சியவன் அல்லன். இத்தகைய அடக்கமின்மையால்பல தொல்லைகளைச் சந்தித்துச்-

சந்தித்துத் துன்பப்பட்டவன். இப்படிப்பட்ட மனநிலை கொண்ட நான், அமரர் அண்ணு அவர்களிடமும், டாக்டர் மு. வ. அவர்களிடமும் பல நேரங்களில் எனது மூர்க்க குணம் அடங்கி, அச்சத்தை அணைத்துக்-கொண்ட நிகழ்ச்சிகள் பல உள. மேற்கண்ட அமரர் இருவர் மூல-மாகவும் எனது வாழ்நாளில் பலவகையான இன்ப உணர்வுகளும் துன்பச் சூழல்களில் ஆறுதல்களும் பெற்று மகிழ்ந்துள்ளேன். எனது வாழ்நாளில் சரி பாதிக்கும் மேல் இவ்விரு பெருமக்களிடமும் தொடர்பு உண்டு என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்கையில் என் மனம் சொல்லவொண்ணுத துயரத்தால் துவண்டு விடுகிறது. நல்லதோ தீயதோ எனக்கு ஏற்படும்போதெல்லாம், இவ்விருவரே, என் கோழை உள்ளத்தைத் தேற்றி உள்ளனர் பல நேரங்களில்.

இவ்வளவு பற்றும், பாசமும், அடக்கமும் இவ்வமரர்கள் இரு-வரிடமும் கொண்டு இருந்த நான், இவ்விருவரது இறுதி அடக்கத்தில் கலந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தேன் என்ருல், நான் எத்-தகைய துன்பத்தில் மூழ்கி இருந்து இருப்பேன்; எழுந்து நடமாடக் கூட முடியாத கோழை உள்ளம் கொண்டவனுக, இருந்து இருப்பேன் நான் என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளப் பணிவுடன் கேட்டுக்கொள்-கிறேன்.

எனது வாழ்நாள் முழுவதும் இவ்வமரர்கள் இருவருடைய நினைவு என் உள்ளத்தில் நீங்காது நிலைத்து எனது எஞ்சியுள்ள வாழ்நாள்-களுக்கு வழிகாட்டியாக அமையவேண்டுமென தமிழ் அன்னையைத் தாழ்மையுடன் வணங்குகின்றேன்.

''நெருநல் உளனெருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு''

—திருக்குறள்

— கல்கண்டு 16—1—'75

# தமிழ் உள்ளவரை மு. வ.

நெ. து. சுந்தரவடிவேலு

கோடிக்கணக்கான மக்கள் பிறக்கிறார்கள்; வளர்கிறார்கள்; எப்படியோ இருக்கிறார்கள்; இறுதியில் மறைகிறார்கள். அவர்கள் வாழ்ந்தபோதும் பலருக்குப் பயன் பட்டதில்லை. மறைந்த போதும் பலருக்கு அதிர்ச்சி உண்டாக்கியதில்லை.

இத்தகைய கோடிக்கணக்கான மக்கள் மந்தையிலே, ஒரு சிலர் கோடென உயர்ந்து நிற்கிறார்கள், கற்றுப்பெற்ற புலமையால், நுண்மாண்நுழைபுலத்தால், இடையரு உழைப்பால், பலருக்கும் பயன்படும் தொண்டால் அறிஞராக, சாதனையாளராக சிறந்து விளங்கும் சிலர் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுவர். அச்சிலருடைய தோற்றமும் வளர்ச்சியும், வளமும் வாழ்வும், தங்கள் குடும்பங்களுக்குப் பயன்படுவதோடு நின்று விடாது, ஊருக்கும் நாட்டுக்கும் பெரிதும் பயன்படுவனவாகும். அத்தகையோர் நீர் நிறைந்த ஊருணி

அனையர் வாழ்ந்தபோது பலருக்கும் துணைநின்ற அவர்கள், மறைந்தபோது எண்ணற்ற மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆற்றாமையும் விட்டுச்செல்கிறார்கள்.

தமிழ் மக்களுடைய கெட்ட வாய்ப்பாக, நாம் ஒரு சில நாட்களில் ஐந்து தமிழ்ப் பெரியவர்களை இழந்து துடிக்கிறோம்.

தொழில் மேதையும் தமிழ்ப் பற்றாளரும், கல்வி வள்ளலுமாக வாழ்ந்த கருமுத்து தியாகராசர் மறைவு முதல் இடி; பேரிடி.

தமிழவேள் பி. டி, இராசன் மறைவு,விருந்தோம்பும் மாமலையின் வீழ்ச்சியாகும். தமிழர் எழுச்சிக்குப் பெருந்துணையாக நின்ற பெரியவர் மறைவாகும். எல்லாக் கட்சியினரும் போற்றும் நல்ல பண்பாளர் ஒருவருடைய மறைவாகும்.

தமிழ்க் கடல் சொக்கலிங்கனார் மறைவு, புலமைசால் காந்திய மூத்தோர் ஒருவரின் மறைவாகும்.

திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம் அவர்களுடைய மறைவு ஆங்கிலத்திலும் தமிழிலும் இணையான புலமையும் இருமொழிகளிலும் தன்னேரிலாத பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் பெற்று விளங்கிய ஒரு பெரும் தமிழரின் மறைவாகும்.

இத்தனையும் போதாதென்று மற்றொரு அதிர்ச்சி; எளிதில் ஈடு செய்ய முடியாத மறைவு; தமிழ்பேரறிஞராகவும், சிறந்த எழுத்தாளராகவும், தெளிந்த பேச்சாளராகவும், மதுரை பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் விளங்கிய டாக்டர் மு. வரதராசனார் அவர்களுடைய மறைவு. அறிஞர் உலகிலும் மக்கள் நடுவிலும் சொல்லொணாத் துயரத் தீயை மூட்டிவிட்டது அது.

நடைமுறைச் சமுதாயம் ஒரு சிலரையே முழுப் பெயரால் அழைக்காமல், செல்லப் பெயரால் அழைக்கும். அப்படி அழைக்கப் படுபவர்கள் மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தவர்கள்.

டாக்டர் மு. வரதராசனாரை அமைச்சர்கள் முதல் பொதுமக்கள் வரை பலரும் மு. வ. என்று செல்லமாக வாய்மணக்க அழைப்பார்கள். எல்லோருடைய உள்ளங்களையும் எப்படிக் கவர்ந்தார் மு.வ!

இயற்கை, மு. வ-வுக்கு சிலவற்றைத் தாராளமாக வழங்கியது. நல்ல மதிநுட்பத்தை நிறையக் கொடுத்ததைப் போலவே, ஓங்கி உயர்ந்த உடற் தோற்றத்தையும் கொடுத்தது.

தோற்றத்திலே உயர்ந்து நின்ற மு. வ. தமிழ் புலமையிலேயும் உயர்ந்து விளங்கினர். பலருடைய தமிழ்ப் புலமைக்கு இல்லாத தனிச் சிறப்பு அவருடைய புலமைக்கு உண்டு. என்ன சிறப்பு?

கல்வியின் மேல் நம்மக்களுக்கு நாட்டம் ஏற்படாத கால கட்டத்திலேயே, நாட்டுப் புறத்திலே சாதாரண குடும்பத்தில் பிறந்த மு.வ. பள்ளியிறுதி வகுப்புவரை படித்ததே பெருமை. அதற்குமேல் கல்விக் கூடங்களில் சேர்ந்து படிக்கும் வாய்ப்புக்கள் இல்லாது போயினும் மு. வ. வின் கல்வி வளர்ச்சி தடைப்படவில்லை.

தமிழ்க் கல்லூரியில் சேராது, தாமே படித்து, 'வித்துவான்' பட்டம் பெற்றதோடு, அதற்கான முதற் பரிசையும் தட்டிக் கொண்டவர் மு. வ. அவர்கள்.

அதோடு நின்றுரோ ? இல்லை. 'கற்றது கைம்மண்ணளவு' என்று உணர்ந்த மு. வ. மேலும், தாமே தொடர்ந்து படித்து, தமிழில் மேற்பட்டங்கள் பெற்றுர். ஆய்ந்து அறிந்து டாக்டர் பட்டமும் பெற்றுர்.

அறிவுப் பெருக்கம் பலருக்குப் போதைப் பொருள்; ஆனல் மு. வ. வுக்கு அல்ல. விளைந்து பழுத்த நெற்பயிர், பணிந்து பயன் தருவது போல், பேரறிஞர் மு. வ. வின் நல்லியல்பாகிய அடக்கம் எல்லோருடைய நெஞ்சங்களையும் கவர்ந்தது.

மு. வ. அவர்களின் தமிழ்ப் புலமைக்கு உயிர் தமிழ்ப்பற்று எனவே, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி, நூற்றுக்கணக்கான நன் மாணுக்கர்களை-காலமெல்லாம் தமிழ்ப்பற்று கொண்டவர்களை - உருவாக்கினர். அவருடைய மாணுக்கர்கள், இந்தியா முழுவதும் பரவி, தமிழ்த்தொண்டு ஆற்றி வருகிருர்கள்.

பாடஞ் சொல்லிக் கொடுப்பதோடு அமையாது, தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தும் நன்முயற்சியிலும் முனைந்து வெற்றி கண்டார் மு. வ. தமிழ் இலக்கண மரபு கெடாது, புத்தம் புதிய கோணங்களில் கட்டுரைகள், சிறுகதைகள், புதினங்கள் நாடகங்கள் ஆக்கித் தந்த சிறந்த எழுத்தாளர், டாக்டர் மு. வ. ஆற்றொழுக்குப் போன்ற இனிய எளிய தமிழ் நடையில் எண்பதற்கும் மேற்பட்ட நூல்களைத் தந்த டாக்டர் மு. வ. அவர்களை, நல்ல தமிழுக்காக, புதிய கருத்துகளுக்காக ஏங்கிக் கிடந்த தமிழகம் போற்றி' ஏற்றுக்-

கொண்டது. பலாப்பலத்தை ஈ மொய்ப்பதுபோல். முற்போக்குக்-கருத்துடைய இளைஞர்கள் மு. வ. வின் எழுத்துகளை விரும்பிப் படித்-தார்கள்; தமிழ்ப் பற்றுக் கொண்டார்கள்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒன்பது ஆண்டுகள் தமிழ்த்-துறை தலைவராக இருந்து விளங்கிய பிறகு, மதுரைப் பல்கலைக் கழகத்-துணைவேந்தராகிச் சிறப்புடன் பணி புரிந்தார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் எனக்கு உறுதுணையாய் விளங்-கிய டாக்டர் மு. வ. அவர்கள், பல்கலைக்கழகத்தின் மதிப்பினைக்-கண்ணுங் கருத்துமாய்க் காப்பாற்றி வந்தார்.

டாக்டர் மு. வரதராசன் அவர்களுடைய வாழ்க்கை வெற்றி வாழ்க்கை ! பலருக்கும் எடுத்துக் காட்டான வாழ்க்கை ! இளைஞர்க்கு ஊக்க மூட்டும் வாழ்க்கை.

சாதாரண நிலையில் வாழ்க்கையைத் தொடங்கிய மு.வ. அவர்கள் கல்வித்துறையின் உச்சிக்கு உயர்ந்தார்கள். காலமெல்லாம் தன்னுடைய கல்வியை வளர்த்துக் கொண்டே இருந்தால், சலியாது உழைத்தால் பொறுமையாகப் பாடுபட்டால், இனிய இயல்பினைக் கைவிடாதிருந்-தால் வெற்றிமேல் வெற்றி தேடிவரும் என்பதை அவரது வாழ்க்கை மெய்ப்பித்துக் காட்டுகிறது. தானே முயன்று தேடிக் கொள்ளும் தமிழ்ப் புலமைக்கும் ஆரவாரமற்ற தமிழ்த் தொண்டுக்கும் நம்மை அழைப்பது அவரது வெற்றி வாழ்க்கை. அமைதியான தொண்டு வாழ்க்கைக்கு ஊக்குவிப்பது அவரது சாதனை நிறைந்த வாழ்க்கை.

டாக்டர் மு. வரதராசனாரின் தமிழ்ப் பற்று நம்மைக் கௌவிக்-கொள்வதாக! அப்பற்று மெய்ப்புலமையாக முளைப்பதாக! நல் தமிழ்த்-தொண்டாகத் தழைப்பதாக!

டாக்டர் மு. வரதராசனாரின் இடையறா உழைப்பு இளைஞர் சமுதாயத்தின் மூச்சாவதாக! மு.வ. வின் பொறுமையும் இனிமையும் கடமை ஆட்கொண்டு, நல்வழியில் பயனுள்ள வழியில், சாதனை நிறை-யும் வழியில் நடத்தட்டும்.

தமிழ் உள்ள வரையில் மு.வ. புகழ் ஒளிரும் என்பது உறுதி. தமிழ் மணக்கும் இனிய நண்பராம் பேரறிஞர் மு. வரதராசனார் அவர்-களின் நினைவிற்கு அஞ்சலி.

தமிழ் உறவு
—அக்டோபர் 1974

# ஒரு தமிழ் நெஞ்சம் மறைந்தது

நா. செகந்நாதன்

'சுவிட்ச்' போடத் தெரியாதவர்கள் எல்லாம் தமிழ் ஆசிரியர்களாக இருக்கிருர்கள் என்று பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு கல்விஅமைச்சர் கூறினுர்; தமிழாசிரியர்கள் என்ருலே ஓர் இளக்காரம் என்ற நிலை இருந்தது. திரைப்படங்களிலும், நாடகங்களிலும் தமிழாசிரியரை நகைச்சுவைக் காட்சிப் பொருளாகக் காட்டிவந்தார்கள். அந்த நிலை மெல்ல மெல்ல மாறி, தமிழாசிரியர்களின் நிலையும் மாறிவருவதைக் காண்கிறேம். இந்த நிலை மாறக் காரணமாயிருந்த முன்னேடிகளில் முதல்வரானவர், தலையாயவர் டாக்டர் மு. வரதராசனுர் என்று கூறுவது மிகையாகாது.

தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக்கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்ற முதல்வர்களில் மு. வ. அவர்களும் ஒருவர் ஆவர். டாக்டர் மு. வ. என்று அழைக்கப்படும் பேரறிஞர் தமிழ் கூறும் நல்லுலகம் எல்-

லாம் அறிந்த மிகச் சிறந்த எழுத்தாளர்; புகழ் பெற்ற கட்டுரையாளர்; தலைசிறந்த நாவலாசிரியர். சங்க இலக்கியம் என்ற கூண்டிற்குள் அடைக்கப்பட்டுக்கிடந்த தமிழைப் பாமரர்களும் அறியும் வண்ணம் எளிய, இனிய, அழகிய தமிழில் எழுதி அனைவரையும் வியக்கச் செய்தவர் டாக்டர் மு.வ. ஆவார்.

மெல்லிய, உயரமான உடல்; ஆழ்ந்த அறிவைப் பறைசாற்றும் நெற்றி; ஒளிவீசும் கண்கள்; எளிய வெண்மையான உடை; இவையே டாக்டர் மு. வ. வை அடையாளம் கண்டு கொள்ள உதவும். இவரா டாக்டர் மு. வ. என்று அவரை முன் பின் பாராதவர்கள் வியப்படைவார்கள். அவ்வளவு எளிமையானவர் அவர்.

பள்ளிக்கூட ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய டாக்டர் மு. வ., பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராகப் பலகாலம் பணியாற்றிய பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக உயர்ந்தார். மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவி அவரைத் தேடி வந்தது. நேர்மை, ஒழுக்கம், உழைப்பு, விடாமுயற்சி, அடக்கம் ஆகியவையே அன்னாரின் வெற்றிக்குக் காரணங்களாம். படிக்கட்டும் பைந்தமிழ் பேசும் பச்சையப்பன் கல்லூரியில் இவர் பணியாற்றிய போது பல மாணவ மணிகளை உருவாக்கினார். குறிப்பாக திரு. ந. சஞ்சீவி, திரு. கு. இராஜவேலு திரு. சொக்கலிங்கம், திரு. அ. திருமலை முத்துச்சாமி, திரு. சுப. அண்ணாமலை ஆகியோரைக் குறிப்பிடலாம் இவர் அங்கே பணியாற்றிக் கொண்டிருந்த போது இப்போது அமைச்சராக உள்ள மாண்புமிகு திரு. க. அன்பழகனும் அவருடன் பணியாற்றிய பெருமை பெற்றவராவார். பல்கலை கழகத்திலும் இவர் பல ஆராய்ச்சி மாணவர்களை ஊக்குவித்து அவர்கள் பட்டங்கள் வாங்க துணைபுரிந்தார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் குறிப்பிடத்தக்க வெற்றிகளை மிகக் குறுகிய காலத்தில் ஈட்டிய பெருமை இவரைச் சாரும். தமிழக ஆளுநர் குறிப்பிட்டுள்ளது போல் வெற்றியைச் சந்தித்த துணைவேந்தர்களில் முதல்வர் இவர் என்பது மிகையாகாது.

இனி, இவருடைய இலக்கியத் தொண்டைப் பார்ப்போம். தமிழ் ஆசிரியர்கள் என்றாலே சங்க இலக்கியம் தவிர வேறொன்றையும் பற்றி எழுதத் தெரியாது. குறிப்பாக அவர்களுக்குப் புதினம், சிறுகதை முதலியன எழுதத் தெரியாது என்று ஒரு மாயை இருந்து வந்த காலத்தில் பல அருமையான நாவல்களைப் படைத்துத் தமிழன்னையின் காலடிகளுக்குக் காணிக்கை யாக்கினார். அவருடைய 'அல்லியும்',

'மலர் விழியும்' 'அகல் விளக்கும்', 'கயமையும்', செந்தாமரையும் யாரால் மறக்க முடியும்? எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கனவு கண்டு 'கி. பி. 2000' படைத்தார். வாடாமலரும் மண் குடிசையும் நம் நெஞ்சை விட்டு அகலாத படைப்புகளாகும். 'நெஞ்சில் ஒரு முள்'ளும் 'கரித்துண்டும்' 'பெற்ற மனமும்' 'பாவை'யும் 'அந்த நாளும்' 'பழியும் பாவமும்' படித்தவர் நெஞ்சை விட்டு நீங்காத அற்புதமான சொல்லோவியங்களாகும். 'கள்ளோ காவியமோ' அதே போன்றதாகும். அவர் எழுதிய நாவல்களில் பாத்திரங்களுக்கு வைத்த பெயர்கள் தனித்தமிழில் இருந்தன; மலர்விழி, மான்விழி, அருளப்பர் என்றிருக்கும். ஒரு பாத்திரத்தின் பெயர் 'ஆணவர்'. பெயருக்கேற்ற பாத்திரம். அதேபோல் வசீகரம்! ஏன் மா?, ஏன்' பா? என்று புதுமையாக எழுதியவரும் இவரே!

அவர் எழுதிய இலக்கியக் கட்டுரைகள் எண்ணற்றவை. குறிப்பாக 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'இலக்கியக் காட்சிகள்', இலக்கிய மரபு', இலக்கிய ஆராய்ச்சி', 'உலகப் பேரேடு' முதலியவற்றைச் சொல்லலாம். 'மொழியின் கதை', 'எழுத்தின் கதை', 'சொல்லின் கதை', மொழியியலில் அவர் எழுதியவையாகும். வரலாற்று நூல்களில் 'திரு. வி. க.', 'கவிஞர் தாகூர்', 'காந்தி அண்ணல்' முதலியன குறிப்பிடத் தக்கவையாகும், கடித இலக்கியம் என்ற பகுதியை அவர் புதுமையைத் தொடர்ந்து பல ஏடுகளில் எழுதினர். அன்னைக்கு'ம் 'தம்பிக்கு'ம் என்று அவர், எழுதிய கடிதங்களை யாரால் மறக்க முடியும்.

இவ்வளவு எழுதிக் குவித்த டாக்டர் மு.வ. வின் நூல்கள் நிறைய விற்பனையாயின. தமிழ் நூல்களின் விற்பனையில் பல பதிப்புகள் வெளியிட்ட பெருமை முதல் முதலாக டாக்டர் மு.வ. வின் உடமையாகும், 'திருக்குறள் உரை' என்ற கைஅடக்க உரை பல லட்சம் படிகள் விற்பனையாயின. டாக்டர் மு.வ. தாம் எழுதிய நூல்கள் போலவே அடக்கமாக இருந்தார்.எப்போதும் தன்னைப் பற்றிப் பேசாத 'தமிழ் நெஞ்சம்' அவருடையது! யார் போய் தம் நூலுக்கு முன்னுரைக் கேட்டாலும் எழுதிக் கொடுக்கும் பெருந்தன்மை கொண்ட இவர், பல எழுத்தாளர்களை முன்னுக்குக் கொண்டு வந்துள்ளார். என்னுடைய முதல் நாவலுக்கு அவர் எழுதிக் கொடுத்த முன்னுரை பத்தே வரிகள் தாம். ஆனல் அதனல் நான் பெற்ற பெருமை சொல்ல முடியாது!

இவர் நல்ல பேச்சாளரும்கூட, சுருக்கமாகப் பேசுவார்; சுவை படக் கூறுவார். தனி வாழ்க்கையில் நகைச்சுவை மிக்க உரையாடல்களைக் கலந்து பேசுவார். கலகலவென்று சிரிப்பார். ஒரு முறை உயர்ந்தரகப் பேனா வாங்கியிருந்தார். அது எழுதவில்லை. ''பணக்காரப் பேனா வெல்லாம் இப்படித்தான்; எழுத உதவாது ஒரு ரூபாய் பேனா போல் எழுத இதனால் முடியாது'', என்றார். இப்படி அவரிடம் பழகிய ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளக் கூடிய நிலையில் பல நிகழ்ச்சிகளில் சுவையான செய்திகளைக் கூறியுள்ளார். அவைகளை எல்லாம் தொகுத்து ஒரு தனி நூலே வெளியிடலாம்.

மு.வ. வின் நடை தனி நடை. அவரைப்போல் எழுதவும், பேசவும் எத்தனையோ பேர் முயல்கின்றனர். மு.வ. வின் மாணவர்கள் என்று தனி ஒரு பரம்பரையே உருவாகியுள்ளது. எளிமையும், இனிமையும் கொண்ட அந்தத் தமிழ் நெஞ்சம், தமிழை வளர்த்தது,தமிழால் தான் வயிறு வளர்க்கவில்லை. உண்மையாகவே தமிழை வளர்த்தவர்கள் என்ற பட்டியல் தயாரிக்கப்படும் போது வரலாற்றில் மு.வ. வின் பெயர் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அந்தத் தமிழ்நெஞ்சம் இவ்வளவு விரைவில் இயற்கை அடைந்தது தமிழன்னையின் ஊழ்வினையேயாகும்! அவர் விட்டுச் சென்ற பணி தொடர்வதாகுக!

—தமிழ்ப்பணி

# முன்னுக்கு வந்தவரின் முனைப்பும் வணக்கமும்

புலவர் செங்கைப்பொதுவன்

டாக்டர் மு.வ.வின் உடலை இனிக் கண்ணால் பார்க்கக் கொடுத்து வைக்காத பாவிகளாகி விட்டோம். அவரோ தம் உணர்வாலும், ஒழுக்கத்தாலும், ஒப்பற்ற படைப்புக்களாலும் நம்முடைய உள்ளங்களில் கோயில் கொண்டு விட்டார். இந்தப் பேருவது தமிழர் உள்ளங்களுக்குக் கிடைத்துள்ளதே என்று பெருமைப் படுகிறோம்.

மு.வ. மூவாத்தமிழ் (இளமையான தமிழ்) எழுதினார். அது எளிமையானது; இனிமையானது; தெளிவானது; சுருக்கமானது. எழுத்து படிப்போரின் காலத்தை வீணாக்கக்கூடாது என்பது அவர் கோட்பாடு. எனவே, அவரைப் பற்றிச் சில சொல்லித் தேற்றுகின்றேன்.

"நிறைகுடம் தளும்பாது". தண்ணீர் எடுத்துச் செல்லும் போதுதான் நிறைகுடம் ஆட்டமுறுகிறது. அதனை ஆட்டமுறச் செய்வோர்தான் அந்தக் குடத்தைச் சுமந்து செல்கின்றனர். குடமோ தன் அடக்கமான வாயமைப்பால் தளும்புவதில்லை. அதுபோல மு.வ.வைப் பற்றி ஏதேதோ கூறியவர்கள்தான் அவரைச் சுமந்து

சென்றவர்கள் என்பதை அவர்கள் இன்று தெரிவிக்கும் வருத்த உணர்வுகளிலிருந்து உணர முடிகிறது. எப்படி உலுக்கினும் மு. வ. நிறைகுடமாக விளங்கினார் என்பது உண்மை. அந்த நிறைகுடத்திலுள்ள தண்ணீர் அவரது கல்வியா, பண்பா என்று அறியும் வலிமைகூட நமக்கு இல்லை.

மு.வ. என்பதனை 'மு'ன்னுக்கு 'வ'ந்தவர் என்பதன் சுருக்கம் என்று கூறிவிடலாம் என்று குமுதம் குறிப்பிட்டிருந்தது. அவ்வாறு அவர் முன்னுக்கு வருவதற்கு அவரது வாழ்வில் ஊற்றோடிய 'முனைப்பு', வணக்கம்' ஆகியவற்றின் சுருக்கம் மு. வ. என்று அமைந்தது என்பது அவரோடு பழகிக் கண்ட உண்மையாகும். முனைப்பு என்பது ஊக்கத்தோடு கூடிய விடாமுயற்சி. வணக்கம் என்பது அறிவுக்குத் தலை வணங்கிய அவரது உள்ளப்பாங்கு.

நான் அவரிடம் பாடம் கேட்ட மாணவன் இல்லை. அந்தப் பேறு எளியேனுக்குக் கிடைக்கவில்லை. உண்மையில் அவர் சொன்ன பாடத்தை விட எழுதிக்கற்பித்த பாடம் மிகுதி. அவரது எழுத்துப் பாடத்தை எல்லாரும் கற்றுள்ளோம். எனவே அவர் நமக்கெல்லாம் ஆசிரியர். அவரது கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள் எல்லாம் அவரது மாணக்கர். நானும் அவர்களுள் ஒருவன். ஆசிரியரோடு பழகிப்பயிலும் வாய்ப்பு இக்காலக் கல்வியில் இல்லை. மு. வ. பாடம் சொல்லிக் கேட்கக் கொடுத்துவைக்காத எனக்கு பழகிப் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. அப்பயிற்சியில் நான் கற்ற பாடங்கள் மிகுதி அவற்றுள் சில.

எளிமை:

உடையில் எளிமை, நடையில் எளிமை, காட்சிக்கு எளிமை, திருவிலும் சரி, கல்வியிலும் சரி உலகில் எளியவர்களே மிகுதி. தமிழ்நாட்டு உழவனின் உருவம் காந்தியடிகளைச் சட்டை அணியாதிருக்கும்படி செய்தது. தமிழ்நாட்டு ஏழை ஆசிரியரின் உருவம் மு. வ. வை எளிய உடை அணியச் செய்தது. அவரது பதவிக்கும் செல்வத்திற்கும் எத்தகைய ஆடம்பரமான உடையை அணிந்திருக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான் இந்த உண்மை புலப்படும். எளியோரின் மொழியறிவு அவரது நடையை எளிமையாக்கியது. எளியவர்க்கெல்லாம் எளியவனாய் விளங்கும் இறைவனது தன்மை அவரைக் காட்சிக்கு எளியராக்கியது.

விடாப்பிடியும் விட்டுக் கொடுத்தலும் :

தனது கொள்கையில் அவர் விடாப்பிடி உடையவர். எனினும் அதனைப் பொது வாழ்வில் திணிக்க விரும்புவதில்லை. எத்தகையவர் மனமும் எந்த அளவிலும் தன்னால் புண்படக் கூடாது என்பது அவரது கோட்பாடுகளில் ஒன்று. பொது நிலையில் பிறருடைய கருத்துக்களுக்குக்கூட அவர் முதன்மை கொடுத்துவிடுவார். ஆனால் அதன் பின்னரும் அவர் தம் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. பிறருடைய கருத்துக்கு முதன்மை அளித்துவிட்ட பின்னர் மாற்றிக் கொள்ளாத தம் கருத்தை வலியுறுத்துவதும் இல்லை.

காலத்தைப் பொன்னாக்கியவர் :

மு.வ. தமிழால் வளர்ந்தார் என்பது உண்மை. அதே நேரத்தில் அவரால் தமிழும் வளர்ந்திருக்கிறது. தமிழர் பலரும் வளர்ந்திருக்கின்றனர். உயர்வு பெற்றிருக்கின்றனர். இவற்றிற்கெல்லாம் அடிப்படை அவர் காலத்தைப் பொன்னாக்கியது தான். காலத்தை வீணாக்காது கடமையைச் செய்ததுதான். இதனால் காலமகள் அவர் மேல் கடைக்கண்ணை வீசினாள். பொன்னும் பதவியும் தேடிவந்தன. பின்னும் காலத்தைக் கண்ணைக் கருதினார். காலமகள் (காலன்) தன் மனைவியின் (கால மகளின்) கடைக்கண் வீச்சு மு.வ. வின் மீது மேலும் பாய்வதைக் கண்டு விட்டான். பொறுக்கவில்லை, வெறுக்கவில்லை. அவருக்கு இருந்த காலத்தைச் சுருக்கிவிட்டான். வருந்துகிறோம். வாடுகிறோம்.

வாழ்த்துவோம் அவரது பண்பை. வழிமேற் கொள்வோம் அவர் பாதையில்.

— தமிழ்ப்பணி

# துறவி மு. வ.

பொன். சௌரிராசன்

''என் திருமணம் நிகழ்ந்த பின் ஒருநாள் மனைவியோடு திருப்பத்தூர் ஆசிரமத்துக்குப் போனேன். அங்கிருந்து தொண்டாற்றிய கிறித்துவத் துறவியார் என் மதிப்புக்கு உரிய சான்றோர்; என் எளிய வாழ்வுக்கு, அகந்தையற்ற அறிவுத் தெளிவுக்குக் காரணமானவர். அவர் என் மனைவியைப் பார்த்து, 'அம்மா எங்களவரை உங்களவர் ஆக்கிக்கொண்டாய் அம்மா! உன் மேல் எனக்குக் கோபந்தான்'; என்றார். திரு. மு.வ. அவர்களும் தம்மைப்போல் ஒரு துறவி ஆக வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டவர்; துறவி ஆவார் என்றும் எதிர்பார்த்தவர்'' என்று தன்னைப் பற்றி டாக்டர் மு.வ. இரண்டு மூன்று முறை என்னிடம் கூறியுள்ளார். திரு. மு.வ.வும் இளமையில் அப்படி நினைத்தது உண்டாம். சிறுவனாக வாழ்ந்த காலத்தில் வாலாஜாவுக்கு அருகில் வேலம் மலையடிவாரத்தில், தனியே தாயுமானவரையும்,

மாணிக்கவாசகரையும் பாடிக் கசிந்து உருகியபோது அப்படி ஓர் எண்ணம் அவரையும் ஆட்கொண்டிருந்தது.

ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னர் அவர் உடல்நலம் மிகவும் கெட்டது. இதயத் துடிப்பின் சீரும் ஓரளவு சிதைந்தது. அப்போது இயற்கை மருத்துவத்தாலேயே அக் குறையைச் சரிசெய்து கொண்டார். அப்போதிருந்து சில ஆண்டுகள் உப்பையும் உறைப்பையும் அறவே விட்டுவிட்டார். காலையில் உப்பில்லாச் சப்பாத்தியையும், உப்பு உறைப்பு ஒன்றுமின்றி அவித்த காய்களையும் உண்பதே அவருக்கு வழக்கமாகிவிட்டது. அவர்முன் அமர்ந்து அவரோடு உண்ணும் வாய்ப்பு சிலபோது எனக்கு வாய்க்கும். இட்டிலியும், சாம்பாரும் முறுக்கும் வடையும் தின்று கொண்டிருக்கும் நான் உப்புசப்பற்ற உணவு உண்ணும் அவரைத் துயரோடு பார்ப்பேன். நான் உண்பனவற்றில் தீது குறைந்தது ஏதேனும் இருந்தால் தருவேன். நான் அப்படித் தந்தபோது ஒருநாள் சிரித்துக் கொண்டே "உடம்பும் மிகை-உடம்பும் மிகை" என்று இரண்டாம் முறை 'உம்மைக்கு' அழுத்தம் கொடுத்துக் கூறினார்.

இன்னொரு நாள் அவர் அவ்வாறு உண்ணும்போது நான் அருகில் இருந்தேன். நீண்டநேரம் சப்பாத்தியையும் காய்களையும் மென்று மென்று சுவைத்துக் கொண்டே, "உப்பும் உறைப்பும் இல்லாத போதுதான் உண்மையான சுவை தெரிகிறது.... உண்மை விளங்குகிறது" என்று கூறிச் சிரித்தார். 'ஆம்! அகங்காரமும் மமகாரமும்— யான் எனது என்னும் செருக்கு இல்லாதபோதுதான் உண்மை தெரிகிறது' என்று எண்ணியவாறு நானும் சிரித்தேன்.

மகரிஷிகள், 'நான் நீ' அற்ற அந்தப் பெருநிலையிலிருந்து சிறிது இறங்கிக் கீழே வந்தபோது கவிஞர்கள் ஆகிறார்கள். வால்மீகி மகரிஷி அன்றில் பேடையின் ஆறாத் துயர் கண்டு, மனிதனைப் போல் கலங்கிய போதே, ஆதிகாவியமாகிய இராமாயணத்தின் முதல் சுலோகம் அவர் திருவாயில் அரும்பியது. 'நான் நீ' அற்றவர்கள் கவிஞன் ஆவதற்காக, எழுத்தாளன் நிலையடைவதற்காக எவ்வாறு சிறிது கீழே இறங்கி வர வேண்டி உள்ளதோ அவ்வாறே 'நான் நீ' என்ற இரு கண்ணிகளால் ஆகிய இந்தச் சின்ன குடும்ப வாழ்வில் சிக்கிச் சிதைபவர்களும், அந்தக் கண்ணிகளைக் கடந்து அகண்ட பெரிய உலகையும், ஆண்டவன் படைப்பின் திட்ப நுட்பங்களையும் அதிலியங்கும் உயிரோட்டத்தின் நெளிவு சுழிவுகளையும் கண்டு நெகிழ்ந்து பிறர்க்குக் காட்ட ஓரளவு மேல்நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது

குடும்பத்தைக் கடந்து பார்க்க வேண்டியுள்ளது; அன்றாட வயிற்றுக் கடமைகளை, தன் வாழ்வுக் கடமைகளை மறந்து நினைக்க வேண்டியுள்ளது, நீண்ட நாவல் எழுத வேண்டும்போது பல நாட்கள் அக்கடமைகளைத் துறந்து வாழ வேண்டியுள்ளது. பெரும்பாலும் நாவல் எழுதிய நாளில் எல்லாம் திரு. மு.வ. அகத்தில் மட்டுமன்றிப் புறத்திலும் துறவியாகவே வாழ்ந்தார் எனலாம்.

அகல் விளக்கு, வாடாமலர் எழுதிய நாளில் நான் உடனிருந்தேன். வாடாமலர் அவர் கூற நான் எழுதும் பேறு பெற்றேன். அந்த நாவலை பெங்களூரில் எழுதினோம். முதல் மூன்று நான்கு நாட்கள் என்னைக் கப்பன் பூங்கா, மைசூர் பிருந்தாவனம் முதலிய இடங்களைப் பார்த்துவர அனுப்பி விட்டார். இப்படிப் பல இடங்களைச்சுற்றிப் பார்த்துவிட்டு வந்தபின் நான் கண்ட எழுத்தாளர் மு.வ. வேறு ஒருவராகக் காணப்பட்டார்.

காலையில் அவர் எழுவதற்கு முன் எழுந்து அவரைக் காணக் காத்திருந்தேன். என்றும்போல் எழுந்துவந்த அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். சிறிது நேரம் உற்று நோக்கினார். அவர் கண்கள் என்னைத்தான் பார்த்தன. ஆனால் எனக்கோ அவை எங்கேயோ உள்நோக்கி ஆழ்ந்திருப்பது போல தோன்றின. பிறகு அவரையே பார்த்துக் கொண்டிருந்த என்னை நோக்கி 'ஏதாவது கேட்டாயா?' என்று பேச ஆரம்பித்தார், 'ஆம்' என்பது போல் தலையை அசைத்தேன்: "எழுதும் போது இந்த உலக மனித உறவுகளைவிட அந்த உலக மனிதர்கள், நாவலில் வரும் கதை மாந்தர்கள் மிகவும் நெருங்கி விடுகிறார்கள். அந்த உறவில் இந்த உலகும் தானே விட்டுப்போய் விடுகின்றன'' என்றார்.

இப்படி ஆழ்ந்துவிடும் நிலை அவர்க்கு அப்போதே இயல்பாகிவிட்டது. வளம் வாய்ந்த பிற்காலத்தில் இப்படி மாணவர் ஒருவர் துணையோடு உடல் நலத்துக்கும் மன வளத்துக்கும் உகந்த பெங்களூரில் தனித்து ஓரிரு மாதங்கள் வாழும் துறவு வாழ்க்கையை நான் கண்டேன். அப்படி வளம் வாய்க்காத அந்த இளமை நாட்களிலே வேலத்திலோ அல்லது வேறொரு எளிய கிராமத்தில் எங்கோ ஒரு மூலையில் தாமே சமைத்துக் கொண்டு, கோடை வெப்பத்தை சகித்தவாறு மண்ணெண்ணெய் விளக்கு ஒளியில் இரவெல்லாம் எழுதிக்குவித்த அந்தத் துறவி மு. வ. வை இப்போது நினைந்து பார்க்கிறேன்.

எல்லாம் பெற்று நிறைவு பெருதது நெஞ்சம். பணம், பட்டம், பதவி கிடைத்த பின்பும் புகழுக்காக அது அலேகிறது. வயிறு நிறைந்த பிறகும் வாழ்வு நிறைந்த பின்பும் மனிதனே அது ஆட்டிப்படைக்கிறது. சாதாரண மனிதனே அந்தப் புகழ் தின்னுகிறது. சான்ருேரையும் அது மயக்குகிறது. அந்தத் தின்னும் புகழையும் திகைக்க வைக்கும் புகழையும் தன்னேப் பற்ருமல் விழிப்பாக இருந்தார் திரு. மு. வ. அவரைத் தேடிவந்த பட்டம் பல; பதவி பல; எல்லாம் தலே சிறந்தன; பலகோடி மக்களுள் ஓரிருவரே அடையத்தக்கன. பட்டம் பதவி என்னும் இந்தச் சித்திகள் கண்டு அந்தத் துறவி மயங்கிவிடவில்லே. பட்டம் பதவிகள் வாய்த்தபோது காதல் உருது இராமன் போலக் கடமை உணர்ந்து பணியாற்றினர். அவற்ருல் வரும் புகழை அவர் மதித்ததில்லே; பாராட்டிக் கொள்ளவும் இல்லே; பிறரைப் பாராட்ட விட்டது இல்லே.

புகழ்பற்றிய எண்ணம் இன்னும் ஆழமாக அவர் மனதில் பதிந்திருந்தது. தான் புகழை மதியாமையோடு புகழ்வாய்ந்த பலரிடம் தான் மயங்காமலும் சாதாரண எளியவரை இகழாமலும் அவர் வாழ்ந்ததற்கு அந்த எண்ணமே காரணமாக இருந்தது. அவரிடம் பணிபுரிந்த கடை நிலே ஊழியர்களேயும் சம நோக்குடனே கண்டு மதித்து வந்தார். ''பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'' என்ற கணியன் பூங்குன்றனர் பாடலுக்கு அவர் எடுத்துக் காட்டாக அமைந்தார்.

இன்னும் ஒரு வகையிலும் இதனேப் பார்க்கலாம். தன் வீரத்தால், வெற்றியால், ஆற்றலால் அறிவால், அன்பால், பண்பால் இயல்பாகவே புகழ் வராவிட்டாலும் கொடையால் புகழ் வரும் வாய்ப்பு ஒன்றும் உண்டு. புகழை வெறுத்த அவர் கொடையை மறுக்கவில்லே. தகுதியறிந்து, தேவை உணர்ந்து வருந்துங்காலம் கருதி அவர் எண்ணற்ற இளேஞர்க்கு உதவியிருக்கிருர், அவர் வலது கை கொடுப்பதை இடது கை அறியாது; மனேவி அறியார்: மக்கள் அறியார். மாணவர் ஒருவருக்கு அவர் வழங்குவது அந்த மாணவரோடு உடன்வாழும் நண்பரும் அறியார். அன்றியும் ஏதேனும் வழங்கும்போது, 'யாரிடமும் சொல்லாதே: எனக்கு நீ செய்ய வேண்டிய உதவி இதுதான்' என்ற வேண்டுகோளோடு வழங்குவார். மண், பொன், பெண் ஆசைகளே விட ஆற்றல் வாய்ந்த அந்தப் புகழ் ஆசையின் நிலேயாமை தெளிந்து துறந்தவர் அவர்.

அவர் தனிமையை விரும்பினுர். இறுதி நாட்களில் ஓய்வை விழைந்தார். அதன் காரணத்தை அவர் 7-12-1972 எழுதிய கடிதத்தின் பின்வரும் வரிகள் விளங்கும். ''உழைத்தேன்; போதும், ஓய்வு பெற உரிமை உண்டு. ஓய்வும் அன்று எழுத்து வகையில் உழைப்பு இயன்றது செய்வேன். எனக்குத் தனிமை மிக வேண்டும். அதுவே என் விழைவு. ஏனெனில் இறைவனுடன் நிரம்பப் பேச முடிகிறது.''

அந்தத் துணைவேந்தர்க்குப் பற்பல தொண்டர்கள். அந்த ஆசிரியருக்கு ஆயிரம் ஆயிரம் மாணவர்கள். அந்த எழுத்தாளர்க்கு நூருயிரம் வாசகர்கள். அந்த மனிதர்க்குப் பலகோடி நண்பர்கள். ஆனுல் அந்தத் துறவிக்கு ஓரிரு சிஷ்யர்களே. அவருள் யானும் ஒருவன் போலும். இப்போது, அவர் மறைந்த பிறகு அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

ஏறக்குறைய இருபதாண்டுகள் அவரோடு பழகி வந்தேன். சிற்சில பேசுவோம். பெரும்பாலும் தாயுமானவர் மாணிக்கவாசகர், இராமதீர்த்தர், காந்தி அடிகள் முதலியோரைப் பற்றிப் படரும் எண்ணங்கள். ஒவ்வொரு சொல்லிலும் தாம் கண்ட உண்மைகளே அவர் கூறுவார். நா தழுதழுக்க கண்ணீர் ததும்ப அவர் பாடக் கேட்பேன். இறுதிச் சந்திப்பும் அப்படித்தான் அமைந்தது.

1974 அக்டோபர் 8-ம் தேதி புதன்கிழமை இரவு அவரை எழும்பூர் அரசினர் மருத்துவ விடுதியில் சந்தித்தேன். இதய நோயாளி அறையில் படுத்திருந்தார். கண்டாரை மருட்டும் நுண் மருத்துவக் கருவிகள் பல அவரைச் சுற்றி இருந்தன. ஆனுல் அவர் மட்டும் நோயாளியாக இல்லே. தம் நோய் குறித்து ஒன்றும் சொல்லவில்லே. தம் உடலேயே கருவியாகக் காட்டி எனக்கு அவர் அருளிய கடைசி போதனே இதுதான். இதயத் துடிப்பை ஒரு கருவி நீலமின் ஒளியால் துடித்துத் துடித்துக் காட்டிக் கொண்டிருந்தது. ''அதைப் பார். ஆடலேக் காட்டி என் கடாலாழித் தாண்டு கொண்டான். ஆடும் ஆடலேப் பார்'' என்று சொன்னுர். ''அப்பா! ஒன்றும் பேச வேண்டாம் ... ... பேசக்கூடாது ......'' என்றேன்.

சாய்ந்து படுத்துக்கொண்டு கண்மூடிப் புன்னகை செய்தார். சிறிது நேரத்தில் மீண்டும் விழித்துக் கொண்டார். சிறிது நேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். ''ஊனே நாடகம் செய்து வித்தவா உருகி எந்தனேப் பருகுவித்தவா'' என்ற மாணிக்கவாசகர் திருச்சதகப் பாடலின் அடிகளே அவர் மெல்லப் பாடினுர்.

நான் கேட்டுக் கொண்டிருந்தேன். அதுதான் அவர் எனக்குச் செய்த இறுதி போதனை. முதன் முதலில் அவர் எனக்குச் சுட்டிக் காட்டிய போதனையும் அதுவே.

அமைதியான வேலத்தில், எங்கோ ஒரு மூலையில் துவங்கிப் பரபரப்பான சென்னையில் படாடோபமான மருத்துவ நிலையத்தில் அவர் மறைந்தாலும் அந்தத் துறவி வாழ்வு தாயுமானவர் மாணிக்க-வாசகர் நினைவிலேயே துவங்கி அதிலேயே முடிந்தது. அவர் எனக்குக் காட்டிக் கொடுத்ததும் அதுவே.

— 'மேம் பாலம்'
பிப்ரவரி 1975

# டாக்டர் மு. வ. — சில நினைவுகள்

பேராசிரியர் மா. கி. தசரதன்

எந்தக் கல்லூரியிலும் மாணவராக அடியெடுத்து வைக்காத ஒருவர் கல்லூரிப் பேராசிரியராகிப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகிப் பின் ஒருபல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் ஆகிறார். தம் தகுதிகளைப் பெருக்கிக் கொண்டு, அத்தகுதிகளின் காரணமாக அந்த உயர்ந்த நிலைகளைப் பெறுகிறார். பெறுவதோடு மட்டும் அல்லாது பெற்ற இடங்களுக்கும் பெருமை சேர்க்கிறார்; தமக்கும் புகழ் ஈட்டுகிறார். இந்த 'அதிசயத்'தைச் செய்தவர் டாக்டர் மு. வ.

எப்படி இதனைச் செய்தார் அவர்? எப்படி இயன்றது அவரால்? இந்தக் கேள்விகளுக்கான விடையே டாக்டர் மு.வ. அவர்களின் வாழ்வு.

வேலத்தில் பிறந்த ஒரு வீட்டுப் பிள்ளையின் வாழ்வாக மட்டும் அந்தப் பெருவாழ்வு அமையவில்லை. இந்த நாட்டுக்கெல்லாம் சொந்தமுடையதாக அந்த நல்வாழ்வு அமைந்திருக்கிறது.

'அவர் கேட்டு வந்தது; கொடுத்துவைத்தவர் அவர்' என்றெல்லாம் மிகச் சுலபமாக ஏதேனும் ஒன்றைச் சொல்லிச் சிலர் ஆறுதல் பெறுவர்.

ஆனால் டாக்டர் மு.வ. அவர்களின் வாழ்வைக் கூர்ந்து காண்போர்க்கு அவருடைய உழைப்பே இந்த உயர்வை அவர்க்கு நல்கியது என அறியலாம்.

ஓயாத உழைப்பு; சோர்விலா உழைப்பு; முறையான உழைப்பு; தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு ஒரு எழுத்தரை ஆசிரியரைப் பேராசிரியர் ஆக்கியது: பேராசிரியரைத் துணைவேந்தர் ஆக்கியது. நல்ல எழுத்தாளர் ஆக்கியது; நாடறியும் நல்ல தொண்டராக்கியது.

ஓய்வு என்பது அவரைப் பொறுத்தவரை மாற்று வேலைதான். எழுதுவது-படிப்பது-கடிதங்களுக்கு மறுமொழி எழுதுவது தோட்டவேலை செய்வது என்று ஒன்று மாற்றி ஒன்றில் ஈடுபடுவதே அவருடைய வழி.

'சும்மா இருக்கும் சுகம்' தெரியாதவர் அவர்!

பள்ளியிறுதி வகுப்புத் தேர்வு எழுதிவிட்டு முடிவு தெரிவதற்காகக் காத்திருந்த இரண்டு திங்களையும் அவர் வீணாக்கவில்லை. திருக்குறள் முழுவதையும் அந்த இரண்டு திங்களில் மனப்பாடம் செய்துவிட்டார்.

அதேபோல் எழுத்தராகத் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியாற்றிவந்த காலத்தில் தமிழ் படித்துப் புலவர் (அப்போது வித்துவான்) பட்டம் பெற்றுத் தமிழாசிரியர் ஆனார். தமிழாசிரியராக இருந்து கொண்டு எம்.ஓ.எல்., எம். லிட்,. பி.எச்.டி. ஆகிய பட்டங்களைப் பெற்றார். எழுத்துத்துறையில் ஈடுபட்டு எண்ணற்ற நூல்களை எழுதி முடித்தார்.

அவருடைய வாழ்வு நிறைவான வாழ்வு; பயன் நிறைவான நல்வாழ்வு. அந்த வாழ்வு பலர்க்கும் எடுத்துக் காட்டாக விளங்கக் கூடியது ஆகும்.

எளிமை என்பது அவருடைய இயல்பு. மோதிரம் முதலிய அணிகளை அவர் என்றும் அணிந்தது இல்லை. ஆடை வகைகளிலும் மிக எளிய ஆடைகளையே அணிவார். தம் பணிகளைத் தாமே செய்து கொள்வதுதான் அவருக்குப் பிடித்தம்.

நம் சமுதாயம் ஆடம்பரமான செலவுகளால்தான் பாழாகிறது என்பது அவர் கருத்து. எனவே திருமணம் போன்ற விழாக்களையும் மிகமிக எளிமையாக நடத்த வேண்டும். இதிலே செல்வர்களே அப்படி நடந்து வழிகாட்ட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்.

டாக்டர் மு.வ. அவர்கள் எளிதில் எவரிடமும் நண்பராகிவிட மாட்டார். பலநாள் பழகி , ஒருவரைப் பற்றி நன்கறிந்த பின்னரே அவருடன் நண்பர் ஆவார். அவ்வாறு நண்பர் ஆன பின்னர் அந்த நண்பரின் நலனில் மிகுந்த அக்கறை காட்டுவார். தம்மால் ஆன நல்லுரைகள் உதவிகள் முதலிய செய்வார். நெடுநாள் கழித்துப்பார்த்தாலும் அந்த நண்பரின் உறவினர்கள், குடும்பத்தார் முதலியோரைப் பற்றியெல்லாம் ஆர்வத்தோடு கேட்டறிவார்.

டாக்டர் மு.வ. அவர்கள் இத்துணை புகழ் பெற்றது அவருடைய எழுத்துக்களால் எனினும் அவருடைய ஆசிரியர் வாழ்வே அவருக்குப் பீடும் பெருமையும் நல்கியது. திருப்பத்தூரில் தமிழாசிரியராக விளங்கியபோதிலிருந்து மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப்பேற்கும் வரை அவர் வாழ்ந்தவாழ்வு ஆசிரிய வாழ்வேயாகும்.

மாணவர்களின் மனநிலைக்கு ஏற்ற வகையில் அவர் பாடம் சொல்லும் முறை அமைந்திருக்கும். இடைநிலை வகுப்புக்கும் எம்.ஏ. வகுப்புக்கும் ஒரே மாதிரி விளக்கம் கூறும் ஆசிரியர் அல்லர் அவர்.

பாடங்களை மிக மிக எளிதாக மாணவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் உழைத்துப் பாடம் சொல்லுவதில் வல்லவர். சங்ககால இலக்கியங்களைப் பாடஞ் சொல்லும்போது அவர் உணர்ச்சிக் களஞ்சியமாகிவிடுவார். குறுந்தொகைப் பாடல்களை விரித்துரைக்கும் போது அவரே தலைவன், தலைவி, தோழி, பாங்கன் ஆகிய எல்லாப் பாத்திரங்களுமாகி அவர்களுடைய உணர்ச்சிகளுக்கு இருப்பிடமாகி விடுவார். பாட்டுக்குப் பொருள், இலக்கணக் குறிப்பு என்றும் மட்டும் இல்லாமல் பிற மொழி நூல்களிலிருந்து மேற்கோள்கள், ஒப்புமைப் பகுதிகள் என்றெல்லாம் அவர் வகுப்புகளில் சுவையும் பயனும் நிறைந்து காணப்படும். திருக்குறளில் புதிய உரைகள் விளக்கங்கள் முதலியன அங்கே ஆராயப்பெறும்.

தம் வகுப்பில் பாடம் கேட்ட மாணவர்களைக் கொண்டே டாக்டர் மு. வ, அவர்கள் தமிழகத்தை அளவிட்டார்கள் என்று கூறலாம். சில நேரங்களில் பாடங்களை ஒட்டிச் சில புதிய கருத்துக்கள் அவர்கள்

எடுத்து மொழிந்து மாணவர்களிடம் விவாதிப்பார்கள். சில நாட்களில் இந்த விவாதம் மணிக்கணக்கிலும் நடைபெறும். விவாதங்கள் முடிந்ததும் மாணவர்கள் பெரும்பாலும் அவற்றை மறந்துவிடுவர். சில நாள் கழித்து அவருடைய புதிய நூல் ஒன்று வெளி வருமாயின் அதிலே என்றோ விவாதித்த கருத்து விளக்கங்கள் இருக்கக் காணலாம்.

டாக்டர் மு. வ. அவர்களின் பெயர் நின்று நிலைக்கக் காரணமாக அமைவது அவருடைய எழுத்துக்களே. கதை, கட்டுரை, நாடகம், புதினம் என்ற எல்லா வகைகளிலும் அவருடைய எழுத்துக்கள் அமைந்துள்ளன. அவர் நூல்கள் சுவையோடு பயனும் தரும் வகையில் அமைகின்றன, அவருடைய புதினங்கள் வெறும் கதைக்காக மட்டும் அல்லாது அந்தக் கதைகள் கொண்டுள்ள கருத்துக்களுக்காகவே போற்றப்படுகின்றனர். கள்ளோ காவியமோ என்னும் கதை ஒவ்வொரு குடும்பமும் படித்துப் பாடம் பெற வேண்டிய கதையாகும். தமிழர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். அந்த உணர்ச்சி மேலோங்கும்போது அறிவு செயல்படத் தடையாகிறது. இந்தத் தடையால் உடைபடும் உறவுகள் அறுபடும் நட்புகள் எத்துணை எத்துணையோ; கணவன் மனைவி பிணக்குகள், அண்ணன் தம்பி போராட்டங்கள், நண்பர்களின் பிரிவு இப்படி பலவற்றிற்கும் இந்த உணர்ச்சியின் அளவு மிகுதலே காரணமாகி விடுகிறது. இதனை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி விளக்குகிறது கள்ளோ காவியமோ.

கள்ளும் காவியமும் போதை தருவனவே. ஆனால் எந்த போதை உடலுக்கு நல்லது என்பதனை நாம் உணர்ந்திட வேண்டாமா?

சில கருத்துக்களை வெளியிடுவதில் டாக்டர் மு. வ. அவர்கள் துணிவுமிக்கவர். சிலர் எதிர்ப்பரே என்று சற்றும் எண்ணிடார். அவருடைய 'கரித்துண்டு' என்னும் புதினம் இப்படி ஒரு எதிர்ப்புப் புயலில் சின்னாள் சிக்கியது.

எனினும் டாக்டர் மு. வ. அவர்கள் தம் நிலையில் இருந்து என்றும் மாறினார் இல்லை.

திருக்குறளிலும் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று இருக்கும் முறை மாறி இன்பத்துப்பால், பொருட்பால், அறத்துப் பால் என்று இருந்திட வேண்டும் என்பது அவர் கருத்து. (இந்தப்பால் பாகுபாடு ஒரு புறம் இருக்க திருக்குறளை அகப்பால், புறப்பால் என்று பாகுபாடு செய்வதே தமிழ் மரபோடு ஏற்புடையதாகும் என்பது என் எண்ணம்.)

கதை, புதினம் என்று மட்டும் தம் எழுத்துக்களுக்கு எல்லை கோலிக் கொள்ளாமல் டாக்டர் மு. வ. அவர்களின் அரிய ஆராய்ச்சி நூல்கள் பலவற்றைப் படைத்துள்ளார்கள். அவருடைய 'ஓவச்செய்தி' முதலிய நூல்கள் தமிழ் இலக்கிய மாணவர்க்கு என்றும் துணையாக நிற்கும் வழிகாட்டிகளாகும். கருத்தாழம் மிக்க ஆராய்ச்சி முடிவுகளை எளிய, இனிய தமிழில் வழங்கிய பெருமை அவருடையது.

டாக்டர் மு. வ. அவர்கள் அடிக்கடி தம் மாணவர்களுக்குக் கூறுவது, " யாரையாவது ஒரு சான்றோரை அல்லது ஒரு நல்ல நூலை உங்கள் வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்ளுங்கள். ஒரு பிரச்னையில் உங்களுக்கு ஏதேனும் குழப்பம் நேர்ந்தால் அந்தச் சான்றோர் இந்தச் சூழ்நிலையில் என்ன செய்வார் என்றோ, அந்த நூலின் கருத்துப்படி இப்போது என்ன முடிவு செய்வது என்றோ எண்ணிப் பாருங்கள். குழப்பம் தெளிவடையும் " என்பதாகும்.

அவருடைய வாழ்வைப் பார்க்கும் போது அவருக்கும் அப்படி ஒரு வழிகாட்டி அமைந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

டாக்டர் மு. வ. அவர்கள் சான்றோர் பலரைப் போற்றி வந்துள்ளார். எனினும் அவர்கள் அனைவருள்ளும் அவர் தமிழ்த் தென்றல் திரு வி. க. அவர்களையே தம் வாழ்வின் வழிகாட்டியாகக் கொண்டிருந்தார் என உறுதியாகிறது. திரு. வி. க. அவர்களைப் பற்றி அடிக்கடி போற்றிப் பேசுவார். அவர் தொண்டுகளைப் பற்றி, தமிழ்ப் பற்று பற்றி, சமயநோக்குப் பற்றி, நாட்டுப் பற்று பற்றி டாக்டர் மு. வ. அவர்கள் எழுச்சியோடு குறிப்பிட்டுப் பேசுவார்கள்.

மு. வ. அவர்கள் செல்லம்மாள் தெருவில் வீடு கட்டி குடியேறியபோது அந்த வீட்டுத் தோட்டத்தில் பல்வகைச் செடிகளை வைத்து வளர்த்தார். அவற்றிலே ஒரு மாதுளை நன்கு வளர்ந்து கனி கொடுத்தது. ஒரு நாள் அந்த மாதுளையின் வளர்ச்சி கண்டு மகிழ்ந்தவராய், " இதன் விதை எங்கிருந்து கொண்டுவந்தேன் தெரியுமா ? " என்று கேட்டு அவரே விடையும் சொன்னார். "திரு. வி. க. அவர்கள் சுவைத்துத் துப்பிய விதைகளைக் கொண்டு வந்து போட்டேன் ; நன்றாக வருகிறது " என்றார்கள். இது ஒன்றே அவருக்குத் திரு. வி. க. அவர்கள்பால் இருந்த பக்தியினைத் தெரிவிப்பதாகும்.

ஒரு முறை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்மன்றத் துவக்க விழாவிற்குத் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களை அழைக்கச் சென்றிருந்-

தோம். அப்போது அவர் உடல் நலிவுற்றிருந்தார்கள். எனவே அவரைப்போய்த் தொல்லைப்படுத்தாதீர்கள் என்றார் டாக்டர்.மு.வ. ஆனால் எங்களுக்கிருந்த ஆர்வத்தினால் நாங்கள் திரு. வி. க. அவர்களிடம் சென்று அழைப்பு விடுத்தோம். அவர் "உங்கள் மு. வ. என்ன சொன்னார்?" என்று கேட்டார். "உங்களை வர வேண்டாம் என்றார்" என்று நாங்கள் உண்மையைக் கூறினோம். "அவர் அப்படித்தான் சொல்வார். நான் வருகிறேன்—ஒப்புக் கொண்டேன் என்று அவரிடம் கூறுங்கள்" என்றார் அவர்.

தமிழறிஞர் இருவரும் ஒருவர்பால் மற்றவர் கொண்டிருந்த பற்றினை அறிந்து வியந்தோம்.

சென்னை செனாய் நகரில் திரு. வி. க. பெயரில் ஒரு பெரிய பூங்கா அமைந்துள்ளது. இந்தப் பூங்கா திரு.வி.க. பெயரால் அமைவதற்கு டாக்டர் மு.வ. அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியே பெரிதும் காரணம் ஆகும்.

திரு. வி. க. அவர்கள் இயற்கையெய்தியதை ஒட்டி அவருடைய பால் தெளித்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு டாக்டர் மு.வ. அவர்கள் தமிழ் அறிஞர்கள் சிலருடன் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது எழுந்த பேச்சில் திரு. வி. க. அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்புவது பற்றிப் பேச்சு எழுந்தது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன், டாக்டர் மு.வ., பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்,பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் முதலியோர் திரு.வி.க. நினைவு நிதிக்கு ரூபா நூறு அன்பளிப்பு அளித்தால் மட்டுமே கூட்டங்களில் கலந்து கொள்வது என்ற முடிவெடுத்தனர்.

அதேபோல் டாக்டர் மு.வ. அவர்கள் பெருமுயற்சி எடுத்துப் பெருந் தொகை சேர்த்துச் செனாய் நகரில் திரு.வி.க. பெயரால் ஒரு உயர்நிலைப் பள்ளியை நிறுவினார்கள். இறுதிவரை அதன் நிருவாகக்குழுவில் ஒரு உறுப்பினராக இருந்து அறிவுரைகள் வழங்கி அப்பள்ளியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள்.

திரு.வி.க. அவர்கள் தம் நூல்களில் சிலவற்றிற்கு 'முருகன் அல்லது அழகு', 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை' என்று பெயரிட்டார்கள். இதனையொட்டி டாக்டர் மு. வ. அவர்களும் தம் நூல் ஒன்றிற்குத் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்று பெயர் சூட்டினார்கள். அதோடு டாக்டர் மு.வ.

அவர்கள் அந்த நூலுக்குத் திரு.வி.க. அவர்களிடம் முன்னுரை பெற்ருர்கள். டாக்டர் மு.வ. அவர்கள் தம் மாணவர் சிலரிடம் இரண்டொரு கதை நூல்களுக்கு முன்னுரை எழுதச் சொன்னதல்லாமல் வேறு எவரிடமும் முன்னுரை பெற்றது இல்லை. ஒரே ஒரு விதிவிலக்கு திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் நூல்தான். அதற்கு முன்னுரை வழங்கியவர் திரு.வி.க. அவர்கள்.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்திடும்போது தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களே டாக்டர் மு.வ. அவர்களின் வழிகாட்டியாக அமைந்து அவரை உருவாக்கியவர் என்பதனை உணரலாம்.

ஒரு தமிழறிஞரைத் தம் வழி காட்டியாகக் கொண்ட டாக்டர் மு.வ. அவர்கள் தம் வழிகாட்டியைவிடப் பல துறைகளில் சிறப்பெய்தியவராக விளங்கினர்.

அயல் நாடுகள் பலவற்றிற்கும் சென்று ஆங்குள்ள பல்கலைக் கழகங்கள், கல்வி நிலையங்கள் போன்ற இடங்களில் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றின் பெருமைகளை நிலைநாட்டியவர் ஆவார். வெளிநாடுகளுக்கு அவர் போகும் போதும் திரும்பி வரும்போதும் சரி நண்பர்களுக்குக் கூட அந்தச் செய்தியை அவர் சொல்வதில்லை.

டாக்டர் மு. வ. அவர்கள் சிலவற்றில் பிடிவாதமாகத் தம் கொள்கைகளை நிலைநாட்டி வந்தார்கள். அவற்றுள் ஒன்று நோய்க்கு மருந்துண்ண வேண்டாம் என்பது. அவர்க்கு வாய்வுத் தொல்லை உண்டு. அதற்கு அவர் எந்த மருந்தும் உண்டதில்லை. வலி அதிகமானல் ஒரு துண்டு அடுப்புக் கரியை நன்ருக மென்று தின்பார். இதே போல் அவர்க்கிருந்த மூச்சுத் திணரல் நோயையும் எளிய பயிற்சிகள், உணவு முறைகள் மூலமே வெற்றி கண்டார். நான்காண்டுகளுக்கு முன் அவர்க்குவந்த இரத்த அழுத்த நோயையும் அவர் உப்பு சேராத உணவு உண்டு வென்ருர்: ஆனல் அண்மையில் நேர்ந்த இதய நோய்க்கும் இதே இயற்கை முறை சாலும் எனப்பிடிவாதமாக இருந்து விட்டார். குடும்பத்தினர் வற்புறுத்தலினல் மருத்துவமனைக்குச் செல்ல இசைந்தார். ஆனல் அந்த இசைவு காலங்கடந்த இசைவாகி விட்டது. இயற்கை வழியில் நோய் நீங்கும் முன் அவரே இயற்கையாகி விட்டார்.

அவருடைய படைப்புகள், அவர் உருவாக்கியுள்ள மாணவர் கூட்டம். கூட்டத்தின் வழித்தோன்றல்கள் என்றும் அவர் பெயர் கூறிச் செல்லும்

மூவாத் தமிழுக்கு மு. வ. ஆற்றிய தொண்டுகள் வீண்போகா, தமிழ்ப்பயிர் வளரும்; செழிக்கும்; தமிழர் பயன் பெறுவர்.

— நீட்டோலை — 20-10-'74

# ஊருணி

இரா. தண்டாயுதம்

'நான் இப்பொழுது வகித்து வரும் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து சில ஆண்டுகளில் ஓய்வு பெற்று விடலாம்; அதற்குப் பின்னர் சில ஆண்டுகள் ஆராய்ச்சிப் பேராசிரியராக இருந்து அதிலிருந்தும் ஓய்வு பெறலாம். ஆனால் என்னுடைய வாழ்க்கையின் கடைசி மூச்சு உள்ளவரை நான் ஓய்வு பெற முடியாத ஓய்வு பெற விரும்பாத - ஒரு துறை உள்ளது. அதுதான் எழுத்துத் துறை. அது என்னுடைய உயிருடன் கலந்து விட்ட ஒன்று. என் உடலிலே சக்தி இருக்கும் வரை எழுதிக் கொண்டே இருப்பேன். எழுத முடியாத ஒரு நிலை வந்தால் மற்றவர்களை எழுதச் சொல்லி நான் கூறிக் கொண்டே இருப்பேன்...' சென்ற செப்டம்பர் திங்கள் ஒன்பதாம் நாள் மதுரைப் பல்கலைக் கழகத்தில் நான்கு நாள் 'அகிலன் கருத்தரங்கை'த் திறந்து வைத்து டாக்டர் மு.வ. அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது.

அவர்களுடைய உரையும், அதை அவர்கள் உணர்த்திய முறையும் கண்ணையும் நெஞ்சையும் விட்டு நீங்காத நிலையிலேயே அவர்கள் மறைந்த பேரிடி தமிழர்களின் நெஞ்சங்களிலே இறங்கிவிட்டது. நாம் செய்த தவக்குறைவால்தான் அவர்கள் மறைந்து விட்டார்களோ என்ற ஓர் எண்ணம், அவரிடம் காணப்பட்ட இளமை, உணவுக் கட்டுப்பாடு, நெறியான வாழ்க்கை ஆகியவற்றை நன்கு உணர்ந்த நெஞ்சங்களில் ஏற்படும் அளவிற்கு அவர்களுடைய மறைவு தமிழுலகில் எதிர்பாராமல் நிகழ்ந்துவிட்டது.

டாக்டர் மு.வ. அவர்கள் இந்த நூற்றுண்டுத் தமிழ் அறிஞர்களில் முதன்மையாகக் குறிப்பிடப்பட வேண்டிய ஒரு சிலரில் ஒருவர். சிறந்த சிந்தனையாளராகவும் கலைஞராகவும் ஒருசேர விளங்கியவர். ஆராய்ச்சித் துறையில் மட்டுமன்றி படைப்புத் துறையிலும் முனைந்து உழைத்தவர். மொழி, இலக்கியம், திறனாய்வு, கட்டுரை முதலிய பல துறைகளிலும் ஆக்கபூர்வமான பல நிலைத்ததொண்டுகளைச் செய்தவர். தமக்குப் பின்னாலும் தாம் உழைத்த துறைகளில் நன்கு உழைக்கக் கூடிய பலரைப் பயிற்றுவித்தவர். இவ்வகைகளில் தற்காலத் தமிழ் அறிஞர்களில் இவர் முதன்மையானவர்.

தோற்றம் :

டாக்டர் மு.வ. அவர்கள் தெளிவான சிந்தனையும், கூர்மையான அறிவும் கொண்டவர். தம்மைச் சுற்றிச் சிலர் இருக்கும்போது மிக்க கலகலப்பாக இருக்கும் அவர், தனிமையிலும் பெருநாட்டம் உடையவர். அன்பு, பண்பு, தன்னம்பிக்கை, நேர்மை, கண்டிப்பு, அழகை உணர்ந்து அனுபவிக்கும் கலைமனம் ஆகிய அனைத்தும் அவருடைய உள்ளத்தின் இயல்புகள். இந்த இயல்புகளையே அவருடைய முகமும் தோற்றமும் பிரதிபலித்துக் காட்டின என்பது மிகையாகாது.

'ஆசிரியர் வரதராசனாரை யான் நீண்ட காலமாக அறிவேன். அவரை யான் முதன் முதலில் பார்த்தபோது அவர்தம் மலர்ந்த விழியும் கூரிய மூக்கும், பரந்த நெற்றியும். நீண்ட முகமும் நிமிர்ந்த பிடரியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. இவை அறிவுக்கு உறையுளாயுள்ள மூளையின் திறத்தை அறிவிக்கும் புறக்கருவிகள். அவர்பால் யான் அன்று கண்ட இளமை இன்றும் பொலிகிறது. அவர் என்றும் இளைஞராயிருத்தல் வேண்டுமென்பது எனது வேட்கை. கவலைக்காட்சியை அவர் முகம் வழங்குவதில்லை. நல்ல மூளையும், நிலைத்த

இளமையும், கவலே காணு முகமும் ஒருவரைச் சிறந்த கலேஞராக்கும் நீர்மையன. ஆசிரியர் வரதராசனுர் பெருங்கலேஞராய் நாட்டை நல் வழியில் ஓம்பும் தொண்டராவர் என்று யான் நினைத்ததுண்டு. அந்-நினேவு பழுதுபடவில்லே. அவர் இயற்றியுள்ள நூல்கள் நாட்டை நல்வழியில் ஓம்பி வருதல் கண்கூடு. 'தோழர் வரதராசனுர் ஒரு கலேக் கழகம்; பொறுமைக்கு உறையுள், அமைதிக்கு நிலேக்களன்' என்று தமிழ்த்தென்றல் திரு வி.க. அவர்கள் 1948-ஆம் ஆண்டு டாக்டர் மு.வ. அவர்களின் தோற்றத்தை வருணித்துள்ளார். அந்தத் தோற்றப் பொலிவும், இயல்புகளும் இறுதி வரை டாக்டர் மு.வ. அவர்களிடம் விளங்கி வந்தன; அவையே பல சிறந்த சான்ருேர்களேயும் மாணவர்-களேயும் அவர்களிடம் ஈர்த்தன.

வாழ்க்கை :

டாக்டர் மு.வ. அவர்கள் தமிழகத்தில் வடார்க்காடு மாவட்டத்-தைச் சேர்ந்த வேலம் என்ற கிராமத்தில் வளர்ந்தவர். வரி வருவாய்த்-துறை (Revenue Department) யில் எழுத்தாராகச் (Clerk) சேர்ந்து தம்முடைய வாழ்க்கையைத் தொடங்கிய இவர், சென்னேப் பல்கலேக்-கழக வித்துவான் தேர்வில் மாநிலத்திலேயே முதல்வராகத் தேறி ஓராண்டு திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலேப் பள்ளியில் தமிழா-சிரியராகப் பணியாற்றி, 1939-ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரி-யில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். அங்கு பணியாற்றிய படியே வினேச் சொற்களேப் பற்றி ஆராய்ந்து 1945-ஆம் ஆண்டில் எம். ஓ.எல். என்ற பட்டத்தினேப் பெற்ருர். அதற்கு அடுத்த ஆண்டே பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத்தலேவராகவும் இவர் நியமிக்கப்பட்டார். 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்ற தலேப்பில் ஆராய்ந்து 1948ஆம் ஆண்டில் சென்னேப் பல்கலேக் கழகத்தில் முதன் முதலாகத் தமிழில் இவர் டாக்டர் பட்டம் பெற்ருர். 1961-ஆம் ஆண்டில் சென்னேப் பல்கலேக் கழகத் தமிழ்த் துறைத்தலேவராகிய இவர், 1971-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மதுரைப் பல்கலேக்கழகத்துணே வேந்தரானுர்.

டாக்டர் மு. வ. அவர்கள் இளமையிலே மிகப் பெரிய சீர்திருத்-தவாதியாகவும் புரட்சி மனம் கொண்டவராகவும் விளங்கினுர். அவ-ருடைய அமைதி தவழும் முகத்தையும், அறத்தில் கொண்டிருக்கும் அசையாத உறுதியையும் கடவுள் நம்பிக்கையையும் கண்டவர்கள், அவருள் இத்தகைய ஒரு சீர்திருத்த மனம் இருக்கும் என்பதைக்கூட நம்பமாட்டார்கள். இதன் காரணமாக இளமையில் மேடைப் பேச்சுக்-

களில் அவர் பெரிதும் ஈடுபட்டார். கணக்கற்ற மேடைகளில் பேசி, உடல் நலத்தையும் கெடுத்துக் கொண்ட பிறகு தான் அவருடைய மனம் மேடைப் பேச்சுக்களின் பயனைப் பெறவேண்டுமானால் எழுத்துத் துறையே சிறந்தது என்ற முடிவிற்கு வந்தார். இத்தகைய முடிவிற்கு அறிஞர் பெர்னார்ட்ஷாவின் நூல்கள் பெரிதும் துணை செய்தன என்று அவர் அடிக்கடி கூறுவார். சீர்படாத உலகத்தில் சீர்பட்டவர்கள் பிறந்தால் என்ன செய்ய வேண்டும்? ஒரு வழி, நஞ்சு குடித்துச் சிலுவையில் நின்று அல்லது துப்பாக்கிக்கு இரையாகி மறைய வேண்டும்; மற்றொரு வழி, உலகம் பொல்லாதது என்று இதை விட்டுத் துறந்து காட்டுக்கு ஓடிப்போய்க் கண்மூடி மவுனியாகிக் காலம் கழிக்க வேண்டும். மூன்றுவது வழி, உலகம் திருந்த வேண்டும் என்று உண்மையான ஆர்வத்தோடு காத்திருந்து அதற்கு வேண்டிய வித்துக்களைத் தூவிக் கொண்டு, கடமையை அமைதியாகச் செய்து கொண்டிருக்க வேண்டும்' என்று டாக்டர் மு.வ. பின்னர் கூறிய ஒரு கருத்து இத்தகைய சிந்தனையின் விளைவே எனலாம்.

டாக்டர் மு.வ. அவர்களின் வாழ்க்கை ஒரு செம்மையான வாழ்க்கையாக அமைய வழிகாட்டி நின்றவர்களில் முதன்மையாளர் இருவர். ஒருவர் காந்தியடிகள், மற்றவர் 'தமிழ்த் தென்றல்' திரு வி. கல்யாணசுந்தரனார். டாக்டர் மு. வ. திரு வி. க. விடம் நெருங்கிப் பழகியவர். அவருடைய அன்பு, பண்பு, ஆழ்ந்த சிந்தனை, நெறியான தூய வாழ்க்கை ஆகியவை இவரை வெகுவாகக் கவர்ந்து அவரிடம் பேரன்பு கொள்ள வைத்தன. அதே போல் காந்தியடிகளின் எளிமையும், சத்தியத்தைப் பற்றிய உறுதியும், மனித குலத்திற்குத் தொண்டு செய்யும் மனப் பாங்கும் இவர் உள்ளத்தில் நிறைந்தன. இவையே அவருடைய வாழ்க்கையின் வழிகாட்டிகளாகி, அவருடைய படைப்புக்களிலும் நிறைந்து நின்றன.

**நூல்கள்**

டாக்டர் மு. வ. தம்முடைய வாழ்வு முழுவதையும் ஆசிரியத்துறையிலும் எழுத்துத் துறையிலும் பணியாற்றிக் கழித்தவர். அதன் பயனாக மொழியியல் சிந்தனை, இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத் திறனாய்வு, கடித இலக்கியம், நாவல், நாடகம், சிறுகதை, சிந்தனைக்கதை முதலிய பல துறைகளில் எழுபத்தியொரு நூல்களும் ஆங்கிலத்தில் இரண்டு நூல்களும் தமிழுக்குக் கிடைத்தன. இவ்வாறு பல துறைகளில் தம்முடைய அறிவையும் படைப்பு ஆற்றலையும் செலுத்தி

வெற்றி கண்ட தமிழறிஞர் இந்த நூற்றுண்டிலே இவர் ஒருவராகத்-தான் இருக்க முடியும் என்று பிறர் உணர்ந்து போற்றுமளவிற்கு இவருடைய எழுத்துப் பணி தனித்து நிற்கின்றது.

1946 இல் வெளியான இவருடைய 'செந்தாமரை' என்ற முதல் நூல் தொடங்கி 1973 இல் வெளியான 'நல்வாழ்வு' என்ற இறுதி நூல் வரை ஒரு சேரப் பார்ப்பவர்கள் உள்ளத்திலே ஒரு மலைப்பும் வியப்பும் மதிப்பும் ஏற்படும் வகையில் இவருடைய எழுத்துப்பணி வளர்ந்து கொண்டே செல்கின்றது. புதிய இலக்கியத்தை ஆராய்பவர்கள் இந்தப்பணியின் தாக்கத்தை நன்குணர்வார்கள்.

டாக்டர் மு. வ. சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் தோய்ந்த நெஞ்சம் கொண்டவர். அவ்விலக்கியங்களிலே கண்ட அனுபவங்களையும் அழகுகளையும் பல நூல்களாக எழுதியுள்ளார்; 'இளங்கோ அடிகள்', 'கண்ணகி', 'மாதவி', 'நற்றிணை விருந்து', 'ஓவச் செய்தி', 'நடை வண்டி', 'தமிழ் நெஞ்சம்' முதலிய நூல்கள் இவற்றில் மிக்க சிறப்புடையன. பல இலட்சம் பிரதிகள் வெளியாகியும், இன்னும் ஆண்டுதோறும் மூன்று நான்கு முறை அச்சேறிக் கொண்டிருக்கும் 'திருக்குறள் தெளிவுரை' யும், சிறந்த ஆராய்ச்சிப் புலமையையும் ஆழத்தையும் உணர்த்தும். 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலும் டாக்டர் மு. வ. அவர்களுக்குத் தமிழுலகில் தனியானதொரு சிறப்பிடத்தைத் தேடித் தந்தன.

பலரும் புரிந்துகொள்ள எளிதில் இயலாத மொழி தொடர்பான செய்திகளை எல்லாம் இவர் அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் மிக எளிமையாக எழுதியுள்ளார். 'மொழியின் கதை', 'எழுத்-தின் கதை', 'சொல்லின் கதை', 'மொழி வரலாறு', 'மொழி நூல்', 'மொழியியற்கட்டுரைகள்' ஆகிய நூல்கள் இத்தன்மைத்தன.

இலக்கியத் திறனாய்வுத் துறையில் தமிழில் நுழைய விருப்பம் கொண்டுள்ளவர்கள். இத்துறையில் தமிழில் நிறைய நூல்கள் வெளி-வராத கொடுமையினை நன்கு உணர்வர். அக்கொடுமை சிறிதாவது தணிய இவர் எழுதியுள்ள 'இலக்கிய ஆராய்ச்சி,' 'இலக்கியத் திறன்' 'இலக்கிய மரபு' ஆகிய மூன்று நூல்களும் தமிழ்த் திறனாய்வுத் துறை-யில் இன்றும் முதலிடம் பெற்று விளங்குகின்றன.

தம்முடைய உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த சான்றோர்கள் சில-ரைப் பற்றியும் டாக்டர் மு.வ. நூல்கள் எழுதியுள்ளார். 'அறிஞர் பெர்-

ஞர்ட் ஷா', 'காந்தியண்ணல்', 'கவிஞர் தாகூர்', 'திரு வி. க.' ஆகிய நான்கு நூல்களும் இவ்வகையில் அமைந்தவை.

ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டிருந்த அவருடைய மனம், சமுதாயத்தையும் மறந்து விட வில்லை. மனித குலத்திடம் பொதுவாகவும் தமிழ்ச் சமுதாயத்திடம் சிறப்பாகவும் பரிவும் ஈடுபாடும் கொண்டிருந்த அவருடைய மனம் சமுதாயத்தின் பல்வேறு துறைகளையும் பற்றிச் சிந்தித்தது. அந்தச் சிந்தனையின் பயனாகக் கிடைத்த 'அறமும் அரசியலும்', 'அரசியல் அலைகள்', 'குழந்தை', 'கல்வி', 'மொழிப் பற்று', 'நாட்டுப் பற்று', 'உலகப் பேரேடு', 'நல்வாழ்வு' முதலிய நூல்கள் சமுதாயத்திற்குக் கிடைத்த அரிய செல்வங்கள் என்றே கூறலாம்.

இத்தகைய அரிய சிந்தனைகளையும் அறிவுரைகளையும் கற்பனைக் கடித வாயிலாகவும் அவர் தந்துள்ளார். 'அன்னைக்கு', 'தம்பிக்கு', 'தங்கைக்கு', 'நண்பர்க்கு' ஆகிய நான்கு நூல்களும் செம்மையான வாழ்வு நடத்த விரும்பும் இளைஞர்க்கு நல்ல வழிகாட்டிகள்; இப்போதும் திருமணங்களில் இந்நூல்களை மணமக்களுக்கு அன்பளிப்புச்செய்து மகிழ்கின்ற நெஞ்சங்கள் உண்டு.

டாக்டர் மு.வ. அவர்களுக்கு இயற்கையில் நிறைய ஈடுபாடு உண்டு. அதே அளவிற்கு இயற்கை மருத்துவத்திலும் ஒரு தனியான ஈடுபாடு உண்டு. இறுதி வரை மருந்து உட்கொள்ளாமல், உணவு முதலியவற்றில் காட்டிய கட்டுப்பாட்டின் காரணமாகவே தமக்கு வந்த நோய்களையெல்லாம் இவர் தணித்துக் கொண்டார். இவ்வகையில் தம்முடைய அனுபவங்களையெல்லாம் ஒரு நூல் வடிவாக்கித் தர அவர் பெரிதும் விருப்பம் கொண்டிருந்தார். ஓய்வு பெற்றவுடன் அப் பணியினை மேற்கொள்ள அவர் கருதி இருந்தார். தன்னுடைய இரகசியங்கள் எங்கு வெளியாகி அனைவருக்கும் தெரிந்து விடுமோ என்று இயற்கை அன்னையே அஞ்சினாள் போலும்! தன்னிடமே தன் தலைமகனை அழைத்துக் கொண்டுவிட்டாள்!

நாவல்கள்:

பழைய இலக்கியங்களின் அழகிலும் கருத்துச்செறிவிலும் நெஞ்சம் பறிகொடுத்தவரானாலும், டாக்டர் மு.வ. புதிய இலக்கிய வகைகளிலும் அளவற்ற ஈடுபாடு கொண்டவர். 'மூன்று நாடகங்கள்', 'காதல் எங்கே?', 'பச்சையப்பர்' 'மனச்சான்று', முதலிய நாடக நூல்களும் 'விடுதலையா?', 'குறட்டை ஒலி' முதலிய சிறுகதைத் தொகுப்-

புக்களும் 'கி.பி 2000' 'பழியும் பாவமும்' ஆகிய சிந்தனைப் புனைக்கதை-களையும் எழுதி இருந்தாலும் அவருடைய படைப்பிலக்கிய ஆவல் நாவல் எழுதுவதிலேயே முனைந்து நின்றது. 'கள்ளோ? காவியமோ?', 'அந்த நாள்', 'மலர் விழி', 'அல்லி', 'கரித்துண்டு', 'கயமை', 'நெஞ்-சில் ஒரு முள்', 'அகல் விளக்கு', 'மண் குடிசை', 'வாடாமலர்' முதலிய அவருடைய நாவல்கள், தமிழ் நாவல் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி-யுள்ளது. இளைஞர்களுடைய மனம் நல்ல நல்ல நெறிகளிலே பற்றுக் கொள்ளவும், முறையான வாழ்க்கை நடத்தவும் இந்த நாவல்கள் வழி-காட்டியுள்ளன; வழிகாட்டி வருகின்றன.

டாக்டர் மு. வ. அவர்கள் சமுதாயத்திடம் கொண்ட பரிவுணர்ச்-சியே அவரை இத்தகைய நாவல்கள் எழுதத் தூண்டியது. தனி மனி-தனைச் சாடாமல், சமுதாயத்திலுள்ள குற்றங் குறைகளை ஆராய்ந்து, அவற்றைப் போக்கவே அவருடைய நாவல்கள் வழிகாட்டுகின்றன. 'பொல்லாதவர் கொடியவர் என்று சிலரைச் சுட்டிக் காட்டி எல்லாத் தீமைக்கும் அவர்களே காரணம் என்று பழியைஎல்லாம் அவர்கள் மேல் சுமத்துவது பொதுவான வழக்கம்; அது பெரும்பான்மையான நாடகங்களும் காவியங்களும் காட்டிய மரபு. அவர்கள் ஏன் கொடிய-வர்கள் ஆனார்கள் என்று உணர்வதே அறிவு நெறி. கருதியதை வலி-யுறுத்துவதற்கு அறிவு வேண்டியதில்லை. காரணம் கண்டு திருந்து-வதற்கே அறிவு வேண்டும்' என்று 'மலர்விழி' நாவலுக்கு அவர்கள் எழுதியுள்ள முன்னுரை, அவருடைய எல்லா நாவல்களின் நோக்கத்-தையும் சிறப்பாக உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

நாவல் எழுதுவதே ஒரு தனி அனுபவம் என்று அவர்கள் அடிக்-கடி கூறுவார். நாவலாசிரியன் தான் படைத்த உலகில் ஆழ்வதை-யும், அவனுடைய கதை மாந்தர்களோடு இரண்டறக் கலந்து அவர்-களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்வதையும் தம்முடைய நாவல் எழுதும் அனுபவத்தோடு கலந்து அவர் அடிக்கடி கூறுவார். 'கற்பனை மாந்தரின் இன்பத்தில் மகிழ்தலும் அவர்களின் துன்பத்தில் மூழ்கிக் கண்ணீர் வடித்தலும் அவர்க்கு [கதையாசிரியர்க்கு] இயல்-பாகும். தாம் படைத்த துன்பத்தில் தாமே சிக்கி அழுது அழுது கண்-ணீர் சிவந்து முகம் வீங்கிய கதையாசிரியர்கள் பலர் உண்டு; அவர்கள் எழுதிய கதையின் ஏடுகள் அந்தக் கண்ணீரால் நனைந்தவையே ஆகும்' என்று 'இலக்கிய மரபு' நூலில் அவர் எழுதுவது, அவருடைய உண்-மை அனுபவத்தையே நன்கு உணர்த்தி நிற்கின்றது.

வகுப்புக்கள் :

டாக்டர் மு. வ. எழுத்துத் துறையிலே எந்த அளவிற்கு வல்லமை பெற்றிருந்தாரோ, அந்த அளவிற்குப் பாடங்களை நடத்துவதிலும் வல்லமை பெற்றிருந்தார். தாம் எடுத்துக் கொண்ட பாடத்தில் ஆழ்ந்து, மனம்ஒன்றி அவர் நடத்தியதால் மாணவர் உள்ளங்களிலும் அது மிக எளிதாக ஆழப் பதிந்துவிடும். சங்க இலக்கியம் சிலப்பதிகாரம், இலக்கியக்கொள்கை ஆகியவற்றை அவரிடம் பாடங்கேட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் அவற்றை மறக்க இயலாது.

டாக்டர் மு.வ. அவர்களிடம் காணப்படும் ஒரு தலை சிறந்த இயல்பே தெளிவுதான். இலக்கியமானுலும் சரி, ஆராய்ச்சியானுலும் சரி, அல்லது சமுதாயமானுலும் சரி எதனையும் பன்முறை சிந்தித்துச்-சிந்தித்து தெளிவாக்கிக் கொள்வார். அவ்வாறு தெளிவாக்கிக் கொண்டபின் அதை என்றும் மறக்கமாட்டார். ஒரு முறை 'யாப்பருங்கலக் காரிகை' நடத்த வேண்டிய ஆசிரியர் வராமல் போகவே, நாங்கள் வகுப்பறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அப்போது அந்த வழியாக வந்த டாக்டர் மு.வ. வகுப்பறையில் நுழைந்து என்ன பாடம் என்று கேட்டார். நாங்கள் கூறியவுடன், அப்படியே 'யாப்பருங்கலக் காரிகை'யை நடத்தத் தொடங்கி விட்டார். கையில் நூலும் இல்லாமல் ஒரு மணி நேரம் அந்த இலக்கண நூலின் பிழிவையே தந்துவிட்டார். இளங்கலை வகுப்பில் சேர்ந்திருந்த நான் அவர்களிடம் முதலில் கேட்ட பாடம் அதுதான். அவர்கள் அன்று பாடம் நடத்திய காட்சி இன்னும் என் கண் முன்னர் உள்ளது.

வாழ்க்கை நெறி :

டாக்டர் மு. வ. அவர்கள் நெறியான வாழ்க்கையை முறையாக வாழ்வதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். அதே அளவிற்குத் திட்டமிட்டு வரையறுத்து வாழ்ந்தவர்கள். இளமை முதல் இவ்வாறு வாழ்வதில் அவர்கள் ஒரு பிடிவாதமும் கண்டிப்புமே கொண்டிருந்தார்கள் என்று கூறுவது மிகையாகாது.

ஒருமுறை பச்சையப்பன் கல்லூரியில் பேசும் போது, அந்தக் கல்லூரியில் பணியாற்றும் வரை ஆண்டிற்கு மூன்று நூல்கள் தருவது தம்முடைய திட்டம் என்று கூறினர். அதேபோல் முதல் பருவ விடுமுறை, இரண்டாம் பருவ விடுமுறை, கோடைவிடுமுறை ஆகிய

மூன்று விடுமுறைகளிலும் மூன்று நூல்கள் எழுதித் தொடர்ந்து வெளியிட்டு வந்தார். விடுமுறை தொடங்கும் நாள் இரவிலேயே பெங்களூர் சென்று, தனியே வாழ்ந்து, நூல் எழுதிக் கல்லூரி திறக்கும் நாள் காலையில்தான் சென்னை திரும்புவார். பெங்களூரில் அவருடைய வீட்டின் முகவரி அவருடைய குடும்பத்தார்கள், மற்றும் ஓரிருவர் தவிர வேறு யாருக்கும் தெரியாது.முதல் முறை நான் அந்த வீட்டிற்குச் சென்றபோது வீடு தெரியாமல் வீட்டின் முன்னாலேயே நின்று கொண்டு அங்குள்ள ஒருவரிடம்'டாக்டர் மு.வ. அவர்கள் வீடு எங்குள்ளது?' என்று கேட்டேன். அவரோ, தாம் அதே தெருவைச் சார்ந்தவர் என்றும், டாக்டர் மு.வ. அவர்கள் வசித்தால் தமக்குக் கட்டாயம் தெரிந்திருக்கும் என்றும் கூறினார். நான் திகைத்து நின்று தடுமாறிக்கொண்டிருக்கும் போதே உலவச் சென்றிருந்த டாக்டர் மு.வ.அவர்கள் திரும்பினார்கள்.

நேரத்தைப் பொன்னாகப் போற்றும் டாக்டர் மு.வ. அன்பு, பண்பு, தாய் மனம் முதலிய அனைத்தும் நிறைந்தவர். தமக்குக் கடிதம் எழுதுபவர்களுக்குப் பதில் எழுத அவர் தயங்கவே மாட்டார். இந்த நாட்டிலும் கூட திரு ரெ. சண்முகமும், திரு செல்வராஜ் முதலிய பலர் அவரைப் பார்க்காத காலத்திலும் கடிதங்கள் எழுதிப் பதிலைப்பெற்று மகிழ்ந்துள்ளனர்.

அவருடைய மறைவு நம்மைப் பெரிய அளவு கலக்கினாலும், சாவைக் கண்டு அவர் என்றும் அஞ்சியதில்லை. இயற்கையினுடைய தவிர்க்க முடியாத ஒரு கூறு என்று சாவினை அவர் அடிக்கடி கூறுவார். 'சாவு என்பது வாழ்வுக்குத் தேவையானது. சாவும் வாழ்வும் சேர்ந்தால் வட்டம். இது இல்லையானால் அது இல்லை. இலை பழுத்து வாடி உதிர்ந்தால்தான், தளிர் பசுமையாகத் தோன்றுகிறது. பழுப்பதும் தழைப்பதும் போல்தான் சாவும் வாழ்வும்' என்று அவரே ஓரிடத்தில் சாவைப்பற்றி எழுதியுள்ளார். 1968ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு உடல் நலம் மிகமிகக் குன்றியிருந்த போது சாவைப் பற்றிய அவருடைய எண்ணங்களையும் மனப்பக்குவத்தையும் நான் நன்கறிய முடிந்தது. எழுத்தில் மட்டுமல்ல. எழுதியவற்றைப் பின்பற்றுவதிலும் அவர் எவ்வளவு தீவிரமாக இருந்தார் என்பதை என்னால் அப்போது நன்கு புரிந்து கொள்ள முடிந்தது.

**விளம்பரம் விரும்பாமை :**

எளிமையிலும் அமைதியிலும் நிறைவு கண்ட டாக்டர் மு.வ. ஆடம்பரத்திலும் ஆரவாரத்திலும் என்றும் விருப்பம் காட்டியதில்லை,

தனி மனித புகழ் அவர் விரும்பாத ஒன்று. 'தனிச் சிறப்பு, தனிப்புகழ், தனிமானம் வேண்டாம். அதனுல் வரும் பிளவும் பிரிவும் வேண்டாம்' என்று 'இளங்கோ' நாடகத்தில் அவர் கூறுவது இதனை நன்குணர்த்தும். இதன் காரணமாகவே 'திருக்குறளி'ல் காணப்படும் 'புகழ்' என்ற அதிகாரம் இக்காலத்திற்குப் பொருந்தாது என்றும் கூறுவார். வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் அவர் பல பரிசுகளும் பட்டங்களும் பெற்றிருந்தாலும் அவற்றை அவர் கூறவே மாட்டார். அண்மையில் தமிழகம் சென்றிருந்த போது, அங்கு நான் தங்கியிருந்த ஆறு மாத காலத்தில் அவரைப் பல முறைகள் சந்தித்து மணிக்கணக்கில் அவரோடு இருந்தேன். சில நாட்கள் அவருடனேயே தங்கியும் இருந்தேன். இருப்பினும் இங்குத் திரும்பிய பின்னர்தான் அமெரிக்க நாட்டின் இல்லினய்ஸ் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டு அவருக்கு 'டி. லிட்' பட்டம் அளித்துக் கௌரவித்த செய்தியை அறிந்தேன். அதுவும் ஒரு வார இதழின் மூலம்தான் அந்த செய்தி எனக்குத் தெரிந்தது. இந்த அளவிற்கு அவருடைய எளிமை மிக உயர்ந்து நின்றது.

இரண்டாண்டுகளுக்கு முன்னல் அவருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு நாள் வந்தது. அவருடைய மாணவர்களாகிய நாங்கள் அந்த நாளைக் கொண்டாடி அந்நாளில் ஒரு நல்ல இலக்கிய மலரினைத் தரவிழைந்தோம். சென்னையிலிருந்து டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் இதனை டாக்டர் மு. வ. விற்கு எழுதி அனுமதி கேட்குமாறு எனக்குப் பணித்திருந்தார். நானும் எழுதினேன். என் கடிதத்திற்கு அவருடைய பதில் இதில் தான் : 'அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, மலர் இவை கொண்டாடக்கூடாது. இவ்வளவு காலம் என்னுடன் நெருங்கிப் பழகிய பழைய மாணவர்களே என் உள்ளத்தை உணர முடியாமல் இருக்கிருர்களே, மற்றவர்களைப் போலவே கண்மூடி நடக்க விரும்புகிருர்களே என்று நினைத்து வருந்துகிறேன். ஒரு சிலரையும் முற்போக்காக, துணிவாகப் புதிய பாதையை நோக்கச் செய்ய முடியாமற்போனதால் என் வாழ்க்கை ஒரு வகையில் தோல்விதான். முயற்சி விடுக.' அவருடைய மனத்தை நன்கு உணர்ந்தும் ஆசையால் எழுதி அவருடைய மனத்தை நோகச் செய்த இந்த நிகழ்ச்சி இன்றும் நெஞ்சில் ஒரு முள்ளாக என்னுடைய உள்ளத்தை உறுத்திக் கொண்டே உள்ளது.

இத்தகைய பெருவாழ்வு வாழ்ந்து தொண்டின் இலக்கியமாய்த் திகழ்ந்த டாக்டர் மு. வ. ஒரு இலக்கியப் பல்கலைக் கழகமாய் மதுரைப் பல்கலைக்கழகம் உருவாகி வரும் நிலையிலேயே மறைந்தது, ஈடு

செய்ய முடியாத ஒரு பெரிய இழப்புதான். அவருடைய வாழ்க்கை-யைப் பற்றி எண்ணும் போதெல்லாம் 'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்ற குறள்தான் என் நினைவிற்கு வரும். ஊரார் நீர் உண்ணும் குளம் நீரால் நிறைந்தது போன்றது பெரிய அறிவாளியின் செல்வம்' என்பது இதன் பொருள். டாக்டர் மு. வ. அவர்கள் தம்முடைய பெருவாழ்வையும், வாழ்வின் பயனை நூல்களையும் தமிழர்களுக்கு ஊருணியாக நீர் நிறைந்த ஊருணியாக-விட்டுச் சென்றுள்ளார். அது நாம் பெற்ற பேறு.

தமிழ்நேசன் — 20—10—'74

# ஒரு சகாப்தம் முடிகிறது

இரா. தண்டாயுதம்

இந்த நூற்றுண்டின் தமிழ் அறிஞர்களிலே ஒரு தனித்த இடத்தைப் பெற்றிருப்பவர் மறைந்த பேரறிஞர் டாக்டர் மு.வ. அவர்கள். ஆராய்ச்சித் துறையில் மட்டு-மன்றிப் படைப்பிலக்கியத் துறையிலும் இவர் பெரு நாட்டம் செலுத்தினர். சொல்லுவதைத் தெளிவாகச் சிந்தித்தலும், சிந்தித்தைச் சிக்கலின்றி யாவரும் புரிந்து கொள்ளும்படி எளிதாக்கிச் சொல்லுதலும் இவருடைய இயல்புகள். மொழியியலானலும் சரி, அல்லது இலக்-கியத்திறனய்வானலும் சரி, அல்லது சிந்தனைக்கட்டுரை-களானலும் சரி இவ்வியல்புகளை டாக்டர். மு. வ. வின் நூல்களில் எங்கும் காணலாம்.

ஆராய்ச்சியும், சிந்தனையும், படைப்பிலக்கிய ஆற்றலும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவைபோலத் தோற்-றம் தரும். ஆராய்ச்சியும், சிந்தனையும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாலும், படைப்பிலக்-கிய ஆற்றல் இவற்றிலிருந்து தனித்தே நிற்கின்றது.

ஆராய்ச்சிக்குக் கூரிய அறிவு வேண்டும்; படைப்பிலக்கியம் படைக்கவோ தேர்ந்த கற்பனையாற்றல் வேண்டும்; கற்பனையுலகிலே வாழ்ந்து, அங்குப் போராடிக் கொண்டிருக்கும் கற்பனை மாந்தருடைய உணர்ச்சிகளிலெல்லாம் பங்கு கொள்ளவேண்டும். இவ்வாறிருந்தாலும், ஒன்றுக்கொன்று முரண்படாமல் தம்முடைய கூரிய அறிவையும் சிந்தனை ஆற்றலையும் படைப்பிலக்கிய முயற்சிகளுக்கு நன்கு பயன்படுத்திக்கொண்டவர் டாக்டர் மு.வ. 'கலை வாழ்க்கைக்காகவே' என்பதில் அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையும் இத்தகைய ஓர் அரிய சேர்க்கையினை அவர் தம்முடைய படைப்புக்களில் மேற்கொள்ளத் துணைசெய்தது. அறிவும் சிந்தனையும் கலைமனமும் கலந்து படைக்கப்பட்ட இவர் படைப்புக்கள் இதனால்தான் தற்காலத் தமிழ் இலக்கியத்திலே இவருக்கு ஒரு நிலையானதும் மிகச் சிறந்ததுமான ஒரு இடத்தைப் பெற்றுத் தந்துள்ளன.

சிறந்த ஆசிரியர் :

டாக்டர் மு.வ. தம்முடைய இருபத்திரண்டாவது வயதிலேயே ஆசிரியத் தொழிலுக்கு வந்து விட்டார். அதற்குப்பின் சுமார் நாற்பது ஆண்டுகள் ஆசிரியத் துறையுடனேயே தம்முடைய வாழ்க்கையை இறுகப் பிணைத்துக் கொண்டார். தாம் தேர்ந்தெடுத்துக் கொண்ட துறையின் காரணமாகப் பழக நேர்ந்த இளைஞர் உள்ளங்களையெல்லாம் நன்காராய்ந்தார். அவ்வாறு பெற்ற அனுபவங்களெல்லாம் அவருடைய நாவல்களுக்குக் கதைப் பொருளாயின. 'அல்லி', 'அகல் விளக்கு' ஆகிய இரண்டு நாவல்களும் இந்த வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நாவல்கள் ஆகும்.

டாக்டர் மு.வ. இலக்கிய ஆராய்ச்சி எப்படிச் செய்ய வேண்டும், ஓர் இலக்கியத்தை எப்படி அணுக வேண்டும், இலக்கியத்தைச் செய்த புலவருக்கு எத்தகைய இடத்தைத் தர வேண்டும் என்பதையெல்லாம் நன்கு ஆராய்ந்து தேர்ந்தவர். அதிலும் சங்க இலக்கியங்களிலே அவர் பெற்றிருந்த ஆழ்ந்த புலமை பலரை வியப்பில் ஆழ்த்தியது. பாடலிலே சொல்லப்பட்டிருக்கும் கருத்து, தம்முடைய மனம் ஏற்றுக் கொள்ளாத ஒன்றாயினும் தொடர்ந்து ஆராய்ந்து ஆராய்ந்து புலவருடைய உள்ளத்தை உணரவே அவர் முற்படுவார். 'ஓவச் செய்தி' இவ்வாறு கிடைத்த ஒரு புதையல் எனலாம். 'ஒரு பாட்டு; அதைக் குறித்துப் பல நாள் போராட்டம்; இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றாம் நாள் மாலையில் வேலத்துமலையை அடுத்து அழகிய ஓடையில் உலவும்

போது எதிர்பாராத விளக்கம்; உள்ளத்தின் தெளிவால் பிறந்த பேருவகை—இவையே இந்நூலாக உருப்பெற்றன!' என்ற முன்னுரையுடன் தொடங்கும் இந்நூல், சங்க இலக்கியங்களை ஆய்பவர்களுக்கெல்லாம் ஒரு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கின்றது. வகுப்பில் அவருக்கு மிகமிகப் பிடித்த சங்க இலக்கியங்களையும். சிலப்பதிகாரத்தையும் மாணவர்களுக்குப் போதிக்கும்போதும் நன்கு சிந்தித்தே அவர்களுடைய மனங்கொள்ளப் போதிப்பார். இலக்கியத் திறன், மொழியியல் முதலிய மற்ற ஆராய்ச்சிப் பாடங்களையும் இலக்கியத்தைப் போதிப்பது போன்றே போதிக்கும் ஒரு தனித்த ஆற்றலும் இவரிடம் இருந்தது. எனவேதான் ஆசிரியராக—ஆசிரியர்களுள் ஒரு ஒளிமிக்க மணியாக—அவரால் திகழ முடிந்தது.

நூல்கள்:

டாக்டர் மு.வ., தம்முடைய வாழ்வின் பயனாகத் தமிழுக்குத் தந்த நூல்கள் எழுபத்து மூன்று. அவற்றில் எழுபத்தொன்று தமிழ் நூல்கள்; இரண்டு ஆங்கில நூல்கள். இவை அல்லாமல் நூல் வடிவம் பெறாத கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக நூற்றுக் கணக்கில் உள்ளன. இலக்கிய ஆராய்ச்சி, இலக்கியத் திறனாய்வு, மொழியியல், சிந்தனைக் கட்டுரைகள், கடித இலக்கியம், பயண இலக்கியம், நாவல், சிறுகதை, நாடகம் முதலிய பல துறைகளைச் சார்ந்தவை இந்த நூல்களும் கட்டுரைகளும். 'கல்வி', 'குழந்தை', 'உலகப் பேரேடு' முதலிய நூல்களில் காணப்படும் இவருடைய புதிய சிந்தனைகள் உலக அறிஞர்களோடு இவரையும் வைத்து எண்ணத்தக்க வகையில் அமைந்துள்ளன. 'அறமும் அரசியலும்', 'அரசியல் அலைகள்' ஆகிய நூல்களில் காணப்படும் கருத்துக்கள் இவரை ஒரு தலைசிறந்த சான்றோராகக் காட்டுகின்றன. 'தம்பிக்கு', 'தங்கைக்கு', 'நண்பர்க்கு', 'அன்னைக்கு' முதலிய நூல்களில் காணப்படும் அறிவுரைகள் இன்றைய சமுதாய நிலைக்கு நோய் தீர்க்கும் மருந்துகள் போல் அமைந்துள்ளன

டாக்டர் மு. வ. வின் முதல் நூல் 1946-ஆம் ஆண்டு—பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் பொறுப்பேற்றுக் கொண்ட ஆண்டு—வெளிவந்தது. அப்போது அவருக்கு வயது முப்பத்து நான்கு. 'செந்தாமரை' என்ற அந்த முதல் நூலில் தொடங்கிய அவருடைய எழுத்துப் பணி பின்னர் ஓயவே இல்லை. அதுவும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியாக அவர் இருந்த பதினைந்து ஆண்டுகளும் (1946-1961) தமிழுக்கு ஓர் அரிய

வாய்ப்பாகவே அமைந்து விட்டது. இந்தப் பதினைந்து ஆண்டுகளில்-தான் அவருடைய எழுபத்து மூன்று நூல்களில் அறுபத்தொன்பது நூல்-கள் அச்சில் வெளிவந்தன. 'குறள் காட்டும் காதலர்', 'தமிழ் இலக்-கிய வரலாறு', 'நல்வாழ்வு', 'Ilango Adigal' ஆகிய நான்கு நூல்களே பின்னர் வெளிவந்தவை. பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகவும் அவர் இருந்த பதினோராண்டுக-ளும் தமிழுக்கும் தமிழர்க்கும் மிகமிகப் பயனுள்ள காலமாகவே கழிந்-தன.

மேடைப்பேச்சு:

டாக்டர் மு.வ. மேடையில் மிகச்சிறந்த முறையில் பேச வல்லவ-ரென்றாலும், மேடைப்பேச்சுக்களில் அவர் அவ்வளவு நம்பிக்கை வைத்-தவரில்லை. ஆண்டில் சில கூட்டங்களிலேயே மேடைகளில் பேசுவார். மேடைகளில் பேசுவதற்கு அழைக்க வருகின்றவர்களிடம் 'தாம் வர-முடியாது என்று கண்டிப்பாக மறுத்து விடுவார். இருப்பினும் அவரு-டைய இளமைக் காலத்தில் அவர் ஓயாது கூட்டங்களில் பேசியவர். அப்பொழுது அவர் பெற்ற அனுபவங்களே பின்னர் மேடைப்பேச்சுக்-களைக் குறைத்துக் கொள்ளத் துணைநின்றன. 'தம்பிக்கு' என்ற அவ-ருடைய நூலில் இந்த அனுபவம் வெளிப்பட்டுள்ளது. "தம்பி! மேடை-யில் முழங்குவதைக் கொஞ்ச காலம் நிறுத்திவைத்தாலாவது, இதை எண்ணிப் பார்க்க ஒரு வாய்ப்பு உண்டாகும் என்று எனக்குச் சில வேளைகளில் தோன்றுகிறது. இது பைத்தியக்கார எண்ணமாக உன் போன்ற இளைஞருக்குத் தோன்றலாம். ஆனால் அனுபவத்தால் சொல்-கிறேன்; மேடை நிகழ்ச்சி நமக்குக் கடமை மறதியை உண்டாக்கு-கிறது. சிறந்த பேச்சு, நல்ல கைத்தட்டு இரண்டும் சேர்ந்தால் உணர்ச்சித் தணிவு, அடுத்த நிலையாகப் பழைய பிற்போக்கு வாழ்வு— இவைதான் இதுவரையிலும் கண்டவை. நம்மை எண்ணித்தான் திருவள்ளுவர் சொன்னாரோ என்னவோ தெரியவில்லை. நமக்காகவே சொன்னது போல உள்ளது அந்தக் குறள். நம்மைப் பற்றி நாமே மகிழ்ந்து அந்த மகிழ்ச்சியில் மயங்கியிருக்கும் போது, கடமையைப் புறக்கணித்துக் கெட்டழிந்தவர்களை நினைத்துக்கொள்ள வேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை சொன்னது எவ்வளவு பொருத்தம்-மேடைப்பேச்சைக் கேட்டுக் கைத்தட்டுவோரைக் காணும் போதெல்-லாம், 'இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக' என்ற அந்தக் குறள் என் நினைவிற்கு வந்து விடுகிறது, என்னை அறியாமல்."

மேடைப் பேச்சில் நம்பிக்கை குறைந்தாலும் எண்ணத்திற்குள்ள வலிமையை டாக்டர் மு.வ. மறக்கவில்லே. ''நம்மால் உடனே மாற்றி-யமைக்க முடியாமற் போகலாம். மாற்றியமைக்க வேண்டும் என்று எண்ணுவது நம்மால் ஆகும். எண்ணிய எண்ணத்தைப் பிறரிடம் பரப்ப நம்மால் ஆகும். திட்பமாக எண்ணிப் பிறர்க்கும் உணர்த்த முடிந்தால் அதுவே பெரிதுதான். இன்று எண்ணத்தை வெற்றியுடன் பரப்பிவிட்டால், நாளே அது எப்படியும் செயலாக உருக்கொள்வது திண்ணம். விதைத்த விதை முளேக்கத் தவறினலும் தவறும்; பெரும் பாலோர் எண்ணும் எண்ணம் செயலாகத் தவருது'' என்று இந்த எண்ணத்தின் வலிமையை 'நண்பர்க்கு' என்ற நூலில் டாக்டர் மு. வ. வற்புறுத்துகிருர். எண்ணத்தின் வலிமையை உணர்ந்து, சிந்திக்கும் ஆற்றலே வளர்த்து, மற்றவர்களிடம் பரப்பவே எழுத்துத் துறையை டாக்டர் மு.வ. தேர்ந்தெடுத்தார் என்றே படுகிறது. ''எண்ணங்களா-கிய விதைகளே ஊன்றிச் செல்வோம், நூல்கள் வாயிலாக. பயன் தரும்போது தரட்டும்'' என்று அடிக்கடி கூறி வந்ததும் இதனேயே உறுதிப்படுத்துகிறது.

நோக்கம் :

குறிக்கோள் நிறைந்த வாழ்க்கை வாழ்வதிலேயே அவர் பெரு-விருப்பம் கொண்டவர். பொழுதுபோக்கானலும் அது பயனுள்ள பொழுது போக்காயிருக்கவேண்டும் எனப் பெரிதும் அவர் விரும்புவார். அதனலேயே ஓயாமல் சிந்தித்துச் சிந்தித்துத் தம்முடைய நாவல்களி-லும், நாடகங்களிலும், சிறு கதைகளிலும் கூடச் சமுதாயத்திற்குத் தாம் தர விரும்பும் செய்திகளுக்கே முதன்மை தந்து அவற்றைக் கலேவடிவம் ஆக்கிக் காட்டினர். தம்முடைய கருத்துக்களுக்கு எத்தகைய முதன்மை தந்தாரோ அதே அளவிற்குத் தாம் கையாளும் இலக்கிய வகைகளுக்-கும் முதன்மை தந்து, இலக்கிய வகைகளின் வடிவம் எந்த வகையிலும் சிதருவண்ணம் தம்முடைய கருத்துக்களே அவர் தந்த முறைதான் அவரை ஒரு சிந்தனேயாளராகவும் படைப்பாசிரியராகவும் ஒருசேர எண்ண வைக்கின்றன. ''நாவல் ஓர் இலக்கிய வகை. இலக்கியம் ஒரு கலே. கலே என்ற வடிவிலே அதற்கு இருக்க வேண்டிய எல்லாம் செம்மையாக அமைந்தால்தான், அந்தத் தகுதியை அது பெறும். நாவல் என்பது கதையைக் கருவாகக் கொண்டு அமைக்கப்பட வேண்-டிய நல்ல கலே. அந்தக் கலே உருவம் பெறுவதற்கு, அழகிய வடிவம் பெறுவதற்கு வேண்டிய எல்லாக் கூறுகளும் அதற்கு அமைந்திருக்க வேண்டும். அந்தக் கூறுகளில் குறைவு ஏற்பட்டால் அது நாவலுக்கு

பழுதாகும். நான் படைக்கின்ற நாவல்களிலே இவை குறைபடுவதாக-எனக்குத் தோன்றவில்லை. இவை எல்லாம் — அதாவது நல்ல உணர்ச்சிச் செறிவு, கற்பனை வளம், கலை வடிவு—அமைந்துவிட்ட பிறகு, அதற்கு மேலே ஆசிரியர் தம்முடைய கருத்துக்களையெல்லாம் அமைக்க இடமுண்டு. ஆனால், அமைக்கும் போது அந்தக் கருத்தை வெளிப்படுத்தத் தக்க பாத்திரங்களைப் படைத்து, அத்தகைய கருத்துக்-களை வெளிப்படுத்தலாம்'' என்று ஒரு பேட்டியில் அவரே இதனை வெளிப்படுத்தி உள்ளார். அறவாழி, முருகையா முதலிய சில கதை மாந்தர்கள் இப்படி இவருடைய கருத்துக்களை வெளிப்படுத்தி நிற்பதை அவருடைய நாவல்களில் காணலாம்.

## ஏது ? யார் ?

டாக்டர் மு. வ. தமிழ்ச் சமுதாயத்தின்மேல் தனிப் பற்றும் பரிவும் கொண்டவர். பண்பாட்டில் மிகச் சிறந்து, வரலாறு படைத்த அந்தச் சமூகம் இன்று உறும் இன்னல்கள் அவருடைய சிந்தனையைத் தூண்டின. ஆனால் மற்றவர்களைப் போல் குறிப்பிட்ட சிலரைக் குற்றவாளிகளாக்க அவர் முனையவில்லை. மாறாகச் சமுதாயத்தின் எந்தப் பகுதி அவர்களைக் குற்றவாளிகளாக்கியது என ஆராய்ந்து அந்தப் பகுதிகளையே களைய வேண்டும் என அவர் தம் நூல்களில் அறிவுறுத்தியுள்ளார். 'எவர் குற்றம்!' என்று ஆராய்வதை விடவும் 'எது குற்றம்?' என்று ஆராய்வதே பயன்தரத்தக்கது என்றும். முன்னது திரைப் படங்களைப் போல நல்லது செய்வதாகத் தோற்ற-மளித்து அல்லது செய்துவிடும் என்றும், பின்னதே உண்மையாகக் கொள்ளத்தக்கது என்றும் 'அல்லி' நாவலில் அவர் வற்புறுத்தி-யுள்ளார். இந்நாவலில் வரும் கதை மாந்தருள் ஒருவரான அறவாழி, 'சாக்கடையை ஒழிக்காமல் கொசுக்களை அழித்து என்ன பயன்?' என்று கேட்பதும் இதனையே உணர்த்துகிறது. ''பொல்லாதவர், கொடியவர் என்று சிலரைச் சுட்டிக் காட்டி எல்லாத் தீமைக்கும் அவர்களே காரணம் என்று பழியை எல்லாம் அவர்கள்மேல் சுமத்துவது பொது-வான வழக்கம். அது பெரும்பான்மையான நாடகங்களும் காரியங்-களும் காட்டிய மரபு. அவர்கள் ஏன் பொல்லாதவர்கள் ஆனார்கள், ஏன் கொடியவர்கள் ஆனார்கள் என்று உணர்வதே அறிவுநெறி. கருதியதை வலியுறுத்துவதற்கு அறிவு வேண்டியதில்லை. காரணம் கண்டு திருந்துவதற்கே அறிவு வேண்டும்'' என்று 'மலர்விழி' நாவலின் முன்னுரையிலும் டாக்டர் மு. வ. இதனையே குறித்துள்ளார்.

இக்கருத்தின் ஒரு முழுமை வடிவமாகவே 'கயமை' உருவெடுத்துள்ளது எனலாம்.

'கயமை'

டாக்டர் மு. வ. வின் நாவல்களிலே ஒரு தனி இடம் பெற்ற நாவல் கயமை. இன்றுள்ள சமூக அரசியல் சூழ்நிலைகளை இந்நாவலில் பின்னணியாக்கியுள்ள டாக்டர் மு. வ., மற்ற நாவல்களில் செய்யாத ஒரு புதுமையை இதில் செய்துள்ளார். மற்ற நாவல்களில் சமுதாயப் பின்னணி இருந்தாலும் அவற்றில் வருகின்ற கதை மாந்தர்கள் சமுதாயத்தின் உறுப்பினர்களாகவே காணப்படுவர். இந்த நாவலிலோ, இன்றுள்ள சமுதாயத்தின் பல்வேறு இயலபுகளையே கதை மாந்தர்களாக டாக்டர் மு. வ. உருவகப்படுத்தி விட்டார். அதனால்தான் வாழ்க்கையில் காணாத ஆணவர், வசீகரம் போன்ற பெயர்களெல்லாம் இங்குக் கதை மாந்தர்களின் பெயர்களாக மாறி விட்டன. அதிலும் ஆணவருடைய பாத்திரப் படைப்பு இந்த நாவலிலேயே ஒப்பற்றதாக விளங்குகிறது. சமுதாயத்திலும், அரசியலிலும் காணப்படும் கயமைத்தனங்களின் ஒரு மொத்த உருவமாகவே இவர் படைக்கப்பட்டுள்ளார். இரக்கமின்மை, மற்றவர்களுடைய பலவீனங்களை அறிந்து செயல்படுதல், தயங்காமல் பொய் பேசுதல், அதிகாரத் திமிர், கோழை மனம், மனமறிந்து தீயவை செய்தல், நட்புக்கும் வஞ்சகம் செய்தல், ஆடம்பரம், ஆரவாரம், சொல் வேறு செயல் வேறு என்று வாழும் வாழ்க்கை ஆகிய பல்வேறு சமுதாயத் தீமைகளையும் ஆணவர் ஒருவர் உருவகத்திலே காட்டி, பாத்திரப் படைப்பை ஓர் உருவகமாகவே இந்நாவலில் டாக்டர் மு.வ. செய்துள்ளார்.

இயற்கை :

டாக்டர் மு. வ. இயற்கையில் பெரும் ஈடுபாடு கொண்டவர். இயற்கையின் நியதிகளை நன்குணர்ந்து வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதைத் தம்முடைய நூல்கள் பலவற்றிலும் அவர் வலியுறுத்தியுள்ளார். "இயற்கை தெளிவான நோக்கமும் திட்டமும் உடையது. அதை எப்படியும் வெல்ல முடியாது. இயற்கையான வேறுபாடுகளைப் போக்கவும் முடியாது'' என்று தம்முடைய நூல் ஒன்றில் எழுதும் டாக்டர் மு. வ. இயற்கையைப் பகைக்காது வாழவேண்டும் என்றும் கூறுகிறார். "இயற்கையைப் பயன்படுத்தலாம்; எதிர்க்கக் கூடாது. நெடுங்காலம் எதிர்த்துச் சென்றால்,

இயற்கை அழித்துவிடும்'' என்று மற்றோர் இடத்தில் டாக்டர் மு. வ. இதனைக் குறித்துள்ளார்.

மனிதருடைய வாழ்க்கையையும், பறவை விலங்கு முதலியவற்றின் வாழ்க்கையையும் கூர்ந்து நோக்கிப் பல உண்மைகளைக் கண்டு தெரிந்தவர் இவர். "நெடுநேரம் அமைதியாக உட்கார்ந்திருக்கும் உயிர் வேறு எதுவும் இல்லை, விலங்கும் இல்லை. மனிதர் மட்டுமே நெடுநேரம் உட்கார்ந்திருக்கிறார்கள். அதனால்தான் மனிதர்க்கு மட்டும் நோய்கள் பல ஏற்படுகின்றன. பறவை விலங்குகளுக்கு அவ்வளவு நோய்கள் இல்லை'' என்று அவர் கண்டு உணர்த்திய அத்தகையதொரு உண்மை ஆழ்ந்து சிந்திப்பதற்குரியது.

கடித இலக்கியம் :

டாக்டர் மு.வ. வின் நூல்களிலேயே ஒரு தனிச் சிறப்பிடம் பெற்ற நூல்கள் அவருடைய கற்பனைக் கடித இலக்கியங்களான 'அன்னைக்கு', 'தம்பிக்கு', 'தங்கைக்கு', 'நண்பருக்கு' ஆகிய நூல்கள். ஆயிரமாயிரம் இளைஞர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட இந்த நூல்கள் அவர்களுடைய சிந்தனை ஆற்றல்களையெல்லாம் நன்கு தூண்டிவிட்டன. நாட்டைப்பற்றியும், சமுதாயத்தைப் பற்றியும், குடும்பத்தைப் பற்றியும், மொழியைப் பற்றியும், இனத்தைப்பற்றியும், இந்நூல்களில் பற்பல சிந்தனைகளைக் காணலாம். அறவுரைகளை நேரடியாகத் தராமல் பல காட்சிகளின் மூலமாக மிக எளிதில் உணர்த்தும் வண்ணம் இந்த நூல்கள் அமைந்துள்ளன.

இந்த நூல்கள் நான்குமே ஒரு நல்ல அன்பான கற்பனைக் குடும்பத்தினர் ஒருவருக்கொருவர் எழுதுவதுபோல அமைந்துள்ளன. வளவன், எழில் ஆகிய இருவரும் உடன் பிறந்தவர்கள். இவர்களுடைய அன்னையும் தங்கையும் அறிவு நிரம்பியவர்கள். இவர்களுடைய குடும்ப நண்பன் நம்பி. இவர்களை மையமாக வைத்துத் தாம் சொல்ல நினைத்த கருத்துக்களையெல்லாம் இந்நூல்களில் வாழ வைத்துள்ளார் டாக்டர் மு.வ. ''தமிழன் எப்படியாவது காலத்தை உணர்ந்து மாறுதல்களை உணர்ந்து வாழ்ந்தால் போதும். காலம் அறிந்து, இடம் அறிந்து, சூழல் அறிந்து வாழத் தெரியாத காரணத்தால், அன்னப் பறவையின் இனம் ஏறக்குறைய அழிந்துவிட்டதாம்; யானையின் இனமும் அழிந்து கொண்டிருக்கின்றதாம். தமிழனும் அப்படிப்பட்ட கண்மூடி வாழ்வு வாழாமல் தன் வாழ்வை மாற்றி அமைத்துக் கொண்டால்

போதும். அன்னம் போலவும், யானை போலவும் உயர்ந்த வாழ்வு வாழ்ந்து புலவரால் பாடப்பட்டால் போதுமா? அப்படி வாழ்ந்து அழிந்து போவதை விட, எறும்பு போலவும் காக்கை போலவும் அழியா வாழ்வு பெறுவதே நல்லது. எறும்பும் காக்கையும் எந்த இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்றபடி உண்டு வளர்ந்து வாழவில்லையா? வாழ்க்கைப் போராட்டத்தில் யானையும் அன்னமும் தோற்றுப்போக, எறும்பும் காக்கையும் வெற்றி பெறவில்லையா?" என்று 'அன்னைக்கு' எழுதும் ஒரு கடிதத்தில் கேட்கிறான் எழில். தமிழும் தமிழர் சமுதாயமும் உயர இத்தகைய சிந்தனைகள் பலவற்றை இந்நூல்களில் தருகிறார் டாக்டர் மு. வ. அந்த வகையில் இக் கடித இலக்கியங்கள் பின்னால் வந்த சில நூல்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவே அமைந்துவிட்டன.

மொழி இயற் கட்டுரைகள் :

ஆராய்ச்சித் துறையிலும் படைப்பிலக்கியத் துறையிலும் ஈடு-பட்டு வந்த டாக்டர் மு. வ. மொழியியல் துறையிலும் நிறைந்த பணி-யாற்றியுள்ளார். இவருடைய 'மொழி நூல்' இவ்வகை நூல்களுக்கே ஒரு முன்னோடியாக அமைந்துள்ளது. 'மொழிவரலாறு' என்ற நூல் மிகச் சுவைபட மொழியின் வரலாற்றை விளக்கிச் செல்கிறது. 'எழுத்-தின் கதை', 'சொல்லின் கதை', 'மொழியின் கதை' ஆகிய மூன்று நூல் களும் மிக எளிமையாக எழுதப்பட்ட அரிய நூல்கள். மிகச் சாதாரண அறிவு பெற்றவர்களும் மொழி, எழுத்து, சொல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள இவை துணை செய்கின்றன.

எதையுமே சுவைபட எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் கூறு வதும் எழுதுவதும் டாக்டர் மு.வ. அவர்களுடைய இயல்பு, மொழி-யியலைப் பற்றி எழுதும் போதும் அதே சுவையுடனும் எளிமையாகவும் எழுதவல்ல இவருடைய ஆற்றலை 'மொழியியற் கட்டுரைகள்' என்ற நூல் நன்கு எடுத்துக் காட்டுகிறது. 'கள்' என்ற விகுதியைப் பற்றி ஆராயும் கட்டுரைக்கு அவர் தந்திருக்கும் தலைப்பே '''கள்' பெற்ற பெருவாழ்வு'' என்பதுதான். அத்துடன் மட்டுமல்ல. 'கள்' மிகப் பழையது; நெடுங்காலத்திற்கு முன்பே இருந்தது. 'மக்கள்' தோன்றிய பழங்காலத்திலேயே 'கள்' இருந்தது. ஆனால் பழங்காலத்தில் ஒரு வரையறை இருந்தது. இக்காலத்தில் அந்த வரையறை இல்லாமற்-போய்விட்டது வருந்தத்தக்கது. உயர்திணைக்குக் 'கள்' ஆகாது என்றும், அது அஃறிணைக்கே உரியது என்றும், அஃறிணையிலும் சில இடங்களிலேயே உள்ளது என்றும் தொல்காப்பியனார் வகுத்திருக்கிறார்.

இக் காலத்திலோ அஃறிணை உயர்திணை என்ற வேறுபாடு இல்லாமல் 'கள்' இடம் பெற்றுவிட்டது. அஃறிணையை உயர்திணையிலேயே ,கள்' மிகுதியாகப் பயன்படுவது போல் தோன்றுகிறது.'' என்று தொடங்கி எழுதிச் செல்லும்போது எந்தக் 'கள்'ளைப் பற்றி அவர் எழுதிச் செல்கின்றார் என்ற ஒரு மயக்கமே நமக்கு ஏற்படுகிறது. இவ்வாறு இரு பொருள் பட—அதுவும் மொழியியலைப் பற்றி ஆராயும் போதும்-- எழுதி, எழுதும் முறையில் சுவை சேர்ப்பதுடன் சிந்திக்கவும் வைப்பவர் டாக்டர் மு. வ. என்பதை அவருடைய பல நூல்களும் எடுத்துக் காட்டினாலும், சிறப்பாகக் காட்டி நிற்பது 'மொழியியற் கட்டுரைகள்'.

இளங்கோ :

டாக்டர் மு. வ. வின் நாடகங்களிலே ஒப்பற்ற ஒரு பெருஞ்-சிறப்பைப் பெற்றது 'இளங்கோ' நாடகம். தாம் உணர்ந்தவற்றை-யும் உணர்த்த நினைப்பவற்றையும் இளங்கோ என்ற வரலாற்றுப் பாத்திரத்தின் மூலம் - அந்தப் பாத்திரத்தின் பண்பு நலன் எந்த வகையிலும் ஓர் இம்மியும் சிதைவுறாதபடி—இந்நாடகத்தில் அவர் உணர்த்தியிருக்கும் திறம் நினைத்து நினைத்து மகிழ்தற்குரியது. தங்-களுக்குள் எந்த நேரமும் சண்டையிட்டுப் பகைவளர்த்து வேற்றுமை-களைப் பெருக்கிக் கொண்டிருக்கும் நிலையை மாற்றி, இனியாவது ஒற்றுமையாய் இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை இந்த நாடகத்தில் மிக அழுத்தமாகக் காட்டுகிறார் டாக்டர் மு. வ. தனிப் புகழ், தனி மானம் என்று கவனம் செலுத்தாமல் சமுதாயத்தின் மானத்-திலும் புகழிலும் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை இந்த நாடகத்தில் அவர் உணர்த்தியுள்ள முறை சிந்திப்பதற்குரியது. ''தமிழரே! தமிழகத் தலைவரே! தனிச் சிறப்பு, தனிப் புகழ், தனி மானம் இவற்றை நாடாதீர்; தேடாதீர். தமிழை, தமிழகத்தை நாடுவீர், தேடு-வீர். பொறாமை வேண்டா; அதனால் விளையும் பிளவும் பிரிவும் வேண்டா; அவை அனைத்தும் தமிழ்க்கும் தமிழகத்திற்கும் இடையூறுகள்; நலிவுசெய்யும் நோய்கள். ஆதலின், தமிழகத் தலைவரே! தமிழரே! ஒன்று படுவீர்; தமிழ் வாழ, தமிழகம் விளங்க, ஒன்று படுவீர். யான் போகி-றேன்; மறைகிறேன்; தமிழ் போகாதிருக்க, தமிழகம் மறையாதிருக்க, தமிழரே! வேண்டுவது ஒன்றுதான்; அதுதான் ஒற்றுமை, ஒற்றுமை, ஒற்றுமை!'' என்று இந்நாடகத்தின் இறுதியில் இளங்கோவடிகள் கூறுவது, இன்று டாக்டர் மு. வ. வே கூறுவது போலுள்ளது.

உவமை நயம் :

டாக்டர் மு.வ. தம்முடைய கருத்தினை விளக்கப் பெரும்பாலும் தாம் கண்ட காட்சி ஒன்றினையோ, கேட்ட நிகழ்ச்சி ஒன்றினையோ கூறி, அதனை உவமையாக்கி அதன் மூலம் தாம் உணர்த்த நினைப்பதை உணர்த்துவார். பெரும்பாலான கட்டுரைகளில் இவ்வியல்பினைக் காணலாம். இவ்வாறு விளக்கும்போது நாமறிந்த சாதாரண செய்திகளாகவும் நிகழ்ச்சிகளாகவுமே அவை அமையுமாறு பார்த்துக்கொள்வார். அவ்வாறு அமையும்போது எளிதில் புரிந்துகொள்ள இயலுமல்லவா? மாணவர்களுடைய அறிவுநலம் பற்றிய அவருடைய கருத்தொன்று இதனை நன்கு விளக்கும். ''மாணவரின் மூளை பாலாறு போன்றது. தண்ணீரே இல்லை. எல்லாம் மணல்தான். எங்கிருந்தாவது தண்ணீரைக் கொண்டுவந்து பாய்ச்ச வேண்டும் என்று எண்ணக் கூடாது. பார்ப்பதற்கு மணல்தான் இருக்கும். தோண்டினால் நீர் சுரக்கும். தொட்டனைத்து ஊறும் மணல்கேணி. மாணவர் மூளை, யிலும் நிரம்ப அறிவு இருக்கிறது. அது ஒளி வீசுவதற்குப் பள்ளிக் கூடமும் ஆசிரியரும் வாய்ப்புத்தர வேண்டும்'' என்ற அவருடைய விளக்கம் 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' என்று நாம் அறிந்த ஒரு குறளை நினைவுபடுத்தி, சொல்ல வந்ததை அதனோடு இயைபுபடுத்தி உணர்த்தும் அவருடைய ஆற்றலை நன்குணர்த்துகிறது.

அதேபோலக் கற்பைப் பற்றிய அவருடைய மற்றொரு விளக்கமும் சிந்தனைக்குரியது. ''கற்போடு ஆணும் பெண்ணும் வாழ்வது எளிது அல்ல. பல குழந்தைகளைப் பெறும் தாய் தன் கற்பைக் காத்துக் கொள்வது, கையும் காலும் உடையவன் ஒற்றை மாட்டு வண்டி ஓட்டுவது போல. மலடாக இருப்பவள் கற்போடு வாழ்வது கால் இல்லாத முடவன் ஒற்றை மாட்டு வண்டி ஓட்டுவது போல் கொஞ்சம் அருமையே. ஆண் மலடாக இருக்கும் கணவனோடு வாழ்பவள் தன் மனத்தைக் காத்து கொள்வது, கை இல்லாத முடவன் ஒற்றை மாட்டு வண்டி ஓட்டுவது போல மிகத் தொல்லையானது, காலால் மாட்டை வேகமாகத் தட்டிவிட முடியும். ஆனால் அடக்கியாளக் கை இல்லை.'' இதனை ஆழ்ந்து பார்க்கும்போதே, எத்தகைய சாதாரண உவமைகள் மூலம் எவ்வளவு வாழ்க்கை உண்மைகளை அவர் விளக்கியுள்ளார் என்பது புரியும்.

உலகப் பேரேடு :

உலகத்தில் சான்றோர்களின் சிறப்பிடத்தையும், முடியாட்சி குடியாட்சி அமைப்பு முறைகளில் உள்ள நன்மை தீமைகளையும், கட்சி

ஆட்சியின் தீமைகளையும், தேர்தலால் நிகழும் கொடுமைகளையும், விளம்பர மாயைகளையும் விளக்கும் டாக்டர் மு.வ. வின் ஒரு நூல் 'உலகப் பேரேடு'. நிகழ்காலச் சமுதாயத்தையும் உலகையும் மக்களை-யும் கூர்ந்து பார்த்தபோது அவருடைய சிந்தனையில் புலப்பட்டவை இந்நூலில் கட்டுரை வடிவம் பெற்றுள்ளன.

உலகத்திற்கு நன்மை செய்தவர்களையும், உலகத்திடமிருந்து பெற்று வாழ்ந்தவர்களையும் பற்றி இந்நூலில் டாக்டர் மு.வ. இவ்வாறு எழுதுகிருர்: "உலகம் வரவு செலவுக் கணக்குப் பார்க்கிறது. ஒருவர் உலகத்தில் பிறக்கும்போது கொண்டு வந்தது இல்லை; இறக்கும்போது கொண்டுபோவது இல்லை; இடை நடுவே வாழும் இந்த வாழ்வில் அந்த ஒருவர் உலகத்தினிடமிருந்து எவ்வளவோ பெற்றுக்கொள்கிருர். உலகத்திற்கும் எவ்வளவோ தருகிருர். அவர் உலகத்திடம் பெற்ற உணவு உடை முதலிய எல்லாம் உலகத்தின் கணக்கில் (அதன் பேரேட்டில்) செலவு வைக்கப்படும். உலகத்திற்கு அவர் தந்த உழைப்பு, உதவி முதலிய எல்லாம் அந்தக் கணக்கில் வரவு வைக்கப் படும். உழைக்காமல் வாழும் சோம்பேறிகளின் கணக்கு அந்தப் பேரேட்டில் வரவைவிடச் செலவு மிசுந்ததாக இருக்கும்—ஆனுல் ஒரு சிலருடைய கணக்கு உலகப் பேரேட்டில் செலவைவிட வரவு மிகுந்த-தாக இருக்கிறது. அத்தகைய கொடையாளிகளை உலகம் என்றும் மற-வாமல் போற்றுகிறது. இந்தப் போற்றுதலே புகழ் என்று கூறப்படுவ தாகும்''. டாக்டர் மு.வ. வின் வாழ்க்கையையும் அதன் பயனுன நூல்-களையும் உள்ளபடி உணரும் எவரும் உலகப் பேரேட்டில் அவர் பெறும் இ[illegible]த்தை உணர்வார்கள். பழைய இலக்கியத்திற்கும் புதிய இலக்கி-யத்திற்கும் ஒரு பாலமாக அமைந்து, புதிய இலக்கிய வகைகளின் செவிலித் தாயாகி, ஆராய்ச்சி உலகிற்கும் திறனுய்வு உலகிற்கும் வழி காட்டியாகி, தமிழரும் தமிழும் வாழக் காலமெல்லாம் உழைத்த சான்ருேராகி, பல துறைகளிலும் இடையருது உழைத்த அறிஞராகி, அறிந்தவர்க்கும் அறியாதவர்க்கும் நல்லோராகி, நடைமுறை வாழ்க்கையை உணர்ந்த வல்லோராகி, மாணவர் உள்ளங் கவர்ந்த ஆசிரியராகி, எண்ணற்ற நூல்களைத் தந்து நூலோராகி டாக்டர் மு. வ. இன்று ஒப்பற்றுத் திகழ்கிருர். பல துறைகளில் கிளைத்து நின்று ஆல்போல் பரவிய அவருடன் தமிழிலக்கிய வரலாற்றில் ஒரு சகாப்தம் முடிகிறது. அவருடைய வாழ்த்துக்கள் புதிய சகாப்தத்தைத் தொடங்கி வழி நடத்த என்றும் துணை நிற்கும். வெல்க அவர் புகழ்!

—'தமிழ் ஒளி' 1974—1975

# விடை பெற்றுக் கொண்டார்

தமிழன்பன்

எரிமலை வெடிக்க வேண்டும் என்று நினைத்து வாயைத் திறந்த போது பூக்களாகக் கொட்டினால் எப்படியோ அப்படித்தான் தமிழ் நாட்டில் அதிதீவிரப் புரட்சிச் சிந்தனைகளை மனதில் குமுறிக் கொண்டு—எழுதும் போது அவற்றைப் பதப்படுத்தி - தொனி இறக்கித்தந்த டாக்டர் மு.வ. ஆவேசப் புயலைக்கூடத் தன் பேனாப் புல்லாங்குழலில் அடக்கி—இசை யாக வடித்தவர்.

சமுதாய மாற்றங்கள் எதனையும் அவர் எழுத்துக்கள் பளிச்சென்று தோன்றும்படி சாதித்து விடவில்லை என்று சிலர் சொல்லும் போதே, டாக்டர் மு.வ. அப்படித் தன் எழுத்துக்கள் சாதிப்பதற்காகவே புறப்பட்டவை என்று கருதினாரா என்பதையும், எண்ண வேண்டும். ஆனால் ஒன்று சொல்ல முடியும், அவர் எழுத்துக்களால் சமுதாய மாற்றங்களை விரும்பும் இளைய தலைமுறை—இப்போது அது இளைய தலைமுறையல்ல—இயக்கங்கள்

ஒற்றை ஒற்றையாக நின்று ஒரு உணர்வுத் தீண்டலைப் பெற்றன என்பதை இலக்கிய நாகரிக நெஞ்சம் எதிர்க்காது என்பது உண்மை.

டாக்டர் மு.வ. இறுதி நாள்களில் எழுத்தோய்ந்து போனுர். அவர் ஆற்றல் அவரைத் தனிமைப்படுத்தி விட்டு போய் விட்டதாகச் சிலர் அர்த்தம் கற்பித்துக் கொண்டு ஒரு 'காலகட்டத்தை' அவர் வாழ்க்கைக்குள் வகுப்பார்கள். திட்டமிட்டு ஒரு நாடு அல்லது சமுதாயம் முன்னறேலாம் என்பதற்கு மறுப்பிற்கிடமில்லாத உதாரணம் இருக்கிறதோ இல்லையோ, ஆனுல் ஒரு தனி மனிதர் முன்னேறலாம் என்பதற்கு மு.வ . உதாரணமாக —எவரும் ஒப்புக் கொள்ளத்தக்க வகையில் விளங்கியிருக்கிருர்.

விரல்களையும் பேனுவையும் சொன்ன சொல் கேட்கும்படி வைத்திருந்த அவருக்கு அவர் எழுத்தாற்றல் அறிவு வல்லமை— ஒத்துழையாமை இயக்கம் நடத்தி அவரை மறுதலித்து விட்டதாகக் கருத நியாயமே இல்லை—காரணம் அவர் திட்டங்கள் தோற்றதில்லை— மரணம் உட்பட —

அவரை அலைவீசும் கடலெதிரே சென்னை பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தலைவர் அறையில் அதன் நாயகராக-14-10-1966 அன்று ஈரோட்டிலிருந்து வந்து சந்தித்தேன். நான் எழுதியிருந்த ஒரே ஒரு நாவலை அவர் கையில் கொடுத்து ஆவலோடு அவர் ஆதர விளைவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். பொதுவாகப் பாராட்டி விட்டு, நாவலில் எளிய நடை வேண்டும்—சந்தி பிரித்து எழுத வேண்டும் என்று சொன்னுர். "நன்ருக விருந்தது —என்று எழுதாமல் நன்ருக இருந்தது—என்று உங்கள் நாவலைப் பாராட்டி நான் எழுத வேண்டும்'' என்று கூறினுர். எனக்கு அவருடைய பாராட்டுரை மகிழ்ச்சியைத் தந்தாலும் இப் பேராசிரியர் நல்லதையே காணும் மனம் படைத்தவர் வளரவேண்டும் என்று ஊக்குவிப்பதற்காக-எவரை-யுமே குறைசொல்லி தளர்ந்து போகச் செய்கிறவர் அல்லர் என்பதை நான் உணர்வேன்.

'வாடா மலரு'க்குப்பின் நீங்கள் எழுதவில்லையே என்று கேட்டேன். சிந்தனைரேகை முகத்தில் பூக்க இனி அதிகம் எழுத எண்ணமில்லை. உடம்பை இனியும் வருத்தி எழுதிட நான் விரும்பவில்லை; முதுமை வர வர உடம்பு கெட்டுப் பெரும் இடர்ப்-பாடாகப் போய்விடும் என்ருர். அவர் குரலுக்குள் ஒரு திரு. வி. க.

வைத் தரிசித்தேன். 'ஒரு நூல் கூட—அதாவது ஒரு நாவல் கூட எழுத மாட்டீர்களா?' என்று அப்போதிருந்த என் ஏக்க மிகுதியைப் புலப்படுத்தினேன்.

'இன்னும் இரண்டு நாவல்கள் எழுத மட்டும் எனக்குள் திட்டமிருக்கிறது.—அதற்குமேல் எதுவும் எழுதப்போவதே இல்லை' என்றார்.

அந்த இரு நாவல்களுக்கும் அவருள் ததும்பிக் கொண்டிருந்த கருப்பொருள்கள் எவையோ? உலாவ இருந்த பாத்திரங்கள் யார் யாரோ?—எண்ணிப் பார்க்கிறேன்: அவ்விரு நாவல்களையும் டாக்டர் மு. வ. வின் பட்டியலில் எழுதப்படாத நாவல்களாக—நான் சேர்த்துக் கொள்கிறேன்—கதையும் கருவும் தெரியாத போதும்.

நாவல்களில் 'ரியலிசம்—இயல்பியல்' பற்றி மேலும் தொடர்ந்தேன். கதையோ பாத்திரங்களோ 'மூளைச்சட்டியில்—ஆகாயக் கிழங்கால் வேகவைக்கப் பட்டு எடுக்கப்படுவதில்லையே—'

'ஏன் உங்களூரிலேயே கண் முன்னால் வாழுகின்ற பாத்திரம் இல்லையா—நீங்கள் முயன்றால் எழுதலாமே' என்றார்.

'எங்கள் ஈரோட்டிலா?' டாக்டர் மு.வ. அவர்கள் சுட்டிக் காட்டுகிற ஒரு பாத்திரமா? எனக்கு வியப்பு...திகைப்பு.

'யாரைச் சொல்கிறீர்கள்' என்றேன் புன்முறுவல் இதழில் நெளிய...'உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் ஒரு பாத்திரம் தான். ஒரு பள்ளிக்கூட நிர்வாகி. சொல்லொன்றும் செயலொன்றுமாக இருக்கிற மனிதர்—ஒழுக்கக்குறை வைத்துக் கொண்டே ஊர், உலகச் செல்வாக்கால் பெரிய மனிதராக இருப்பவர். என்று அளவாகக் கோடிட்டுக் காட்டி நிறுத்தினார்—எனக்கு யார் என்பது விளங்காமலா போயிருக்கும். டாக்டர் மு. வ. அடையாளங் காட்டிய அந்தப் பாத்திரத்தை வைத்து ஒரு நாவல் எழுதி அவர் வாழ்நாளிலேயே காட்டாமல் போனது என் குறையாக மட்டுமன்று — அவருடைய வாழ்நாள் குறையாகவும் போனது என்னை இன்று வருத்துகிறது!

சென்ற ஆண்டு தமிழக அரசு நடத்திய பூம்புகார் விழாவில் கலந்து கொண்ட எனக்கு அவருடன் இரண்டு நாட்கள் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது. என் மனதுக்கினிய சிலம்பொலி செல்லப்பனாரும் நானும் அவர் தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையில் தங்கியிருந்-

தோம். எங்களுக்கு ஒரு கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விழா நிகழ்ச்சிகளுக்கு அவருடன் அவ்வப்போது அரங்கத்திற்குச் செல்வதும் அறைக்கு மீள்வதும் எங்களுக்கு மிகப் பெருமையாக இருந்தது. அவர் ஒரு பல்கலைக்கழகத் துணை வேந்தர்-பேரறிஞர்-எழுத்துச் சிற்பி-என்கிற நினைவும் எங்களுக்கு இல்லாதபடி - நெருங்கிய நேயத்துடன் மிக மிக ஒன்றி எங்களுடன் பழகினார்: இளமைத் துடிப்பும் கட்டற்றுப்பீறும் இதயத்துள்ளலும் - அவரிடம் கண்டோம். மாலையில் கடற்கரை அரங்கிற்கு புறப்பட்டோம், காரில் உட்கார்ந்தவுடன், "வாருங்கள் ஐயா-கடற் கரையில் வருந்தும் அந்த மாதவியை அழைத்துக் கொண்டுவந்து விடுவோம்", என்றார். மாதவிக்கு அவர் மனத்தில் ஏற்பட்ட இரக்கமா - இலக்கிய உருக்கமா - அன்புப் பெருக்கமா - என்னவென்று உணரத் தத்தளித்தோம். ஒவ்வொரு சிலை வார்ப்பையும் அவர் கண்டு அதிசயித்து நின்றது — நறுக்கு நறுக்கான விமர்சனம் செய்தது - நாங்கள் ஓடிவரும்படியாக - முன்னால் வீறு நடை போட்டது - பட்டி மண்டபத் தலைமையில் - புதிரடுக்கி- முடிவுற்றிய அவையைத் திணரடிக்க வைத்தது. எல்லாவற்றையும், மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். டாக்டர் மு.வ. மறைந்தா விட்டார்?

விழா முடிந்து ஊருக்குப் புறப்பட்டோம். அவர் ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். வழிப் பயணத்துக்குத்தான் கொண்டு வந்திருந்த புட்டியில் தண்ணீர் நிரப்ப உட்கார்ந்தார். ஒரு மூலையில் உள்ள தண்ணீர் பானையின் அருகில், உட்கார்ந்து கொண்டு, உடனே அவரருகே நான் ஓடி நிரப்பித் தர முயன்றேன். 'நான் செய்து கொள்கிறேனய்யா' என்று மறுத்தார். பிறகு அந்த இனிய பணியை நான் செய்ய வாய்ப்பளித்தார்.

நிலையத்திற்குச் செல்ல வண்டி ஏறும்போது - எங்களுடன் புறப்படாத நண்பரைப் பார்த்து - "போய் வருகிறோம். நல்லுறக்கம் கொள்க - மாதவிக் கனவு வராத நல்லுறக்கம் கொள்க" என்று-கேலியும் அன்பும் ததும்ப விடை பெற்றுக் கொண்டார்.

அந்த நல்லுறக்கம் - மு.வ. அவர்களையா தழுவிக் கொண்டது? அவரா விடைபெற்றுக் கொண்டார்?

— நீட்டோலை - 20 - 10 - '74

# அறிஞர் அறவாழி!

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு

தமிழ் அன்னைக்குப் புத்தம் புதிய அணிகள் பலவற்றை அணிவித்து மகிழ்ந்தவர் அறிஞர் அறவாழி. அறிஞர் ஆராய்ச்சித் தமிழிற்கு அரங்கம் அமைத்துத் தந்தவர் அறவாழி! இரு வேறு துருவங்களுக்குச் செல்லாது நடுநிலையில் நின்று தமிழகம் வாழ்வதற்கு வழிகாட்டியவர் அறிஞர் அறவாழி! கூட்டத்தில் கூடி நின்று கூடிப்பிதற்ருது, நாளும் நல்ல கொள்கைகளை நடைமுறையில் கண்டுபிடித்தவர் அறவாழி! ஒல்லும் வகையெல்லாம் ஓயாது கடமைகள் செம்மையாகவும் சிறப்பாகவும் செய்து முடித்த செயல்வீரர் அறிஞர் அறவாழி! தமிழ்ப் பண்பாட்டினை மேல்நாட்டு அறிவாராய்ச்சிக் கண்ணோட்டத்தில் விளக்கமுறச் செய்தவர் அறிஞர் அறவாழி! விளம்பரத்தை விரும்பாத வித்தகர் அறிஞர் அறவாழி! மனிதனை மனிதனாக மதித்துப் போற்றிய மனித நலக்கோட்பாட்டாளர் அறிஞர் அறவாழி!

அவர் ஒரு புலவர் 'அவர் வாழ்தல் வேண்டிப் பொய் கூறு' வாய்மையாளர் ; அவர் ஓர் அறிஞர் ; அவர் ஒரு கலைஞர் ; அவர் ஒரு மெய்யறிவாளர் ; அவர் ஒரு அறவோர் ; அவர் ஒரு சான்றோர் ; அவர் ஒரு சைவர் ; இல்லை ; வேதாந்தி ; அவர் ஒரு காந்தியவாதி ; இல்லை......; மார்க்கசியவாதி! சனநாயகத்தின் பண்புகளை மதித்துப் போற்றிய சனநாயகவாதி.

தமிழே அவருடைய உடல். அறமே அவருடைய உயிர். அன்பே அவருடைய நெறி. பண்பே அவருடைய வாழ்க்கை.

சமயங்களிடையே சமரசத்தைக் கண்டவர் அவர் சமுதாயச் சீர்கேடுகளைச் சாடியவர் அவர். மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்க முயன்றவர் அவர். எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கக்கூடிய புதியதோர் உலகைத் காணத் துடித்தவர் அவர். தனி வாழ்க்கையிலும் பொது வாழ்விலும் வேற்றுமைக்கிடையே ஒற்றுமையைக் கண்டு போற்றிய பொதுமைப் பொறியாளர் அவர். பல்வேறு அரசியல் கட்சியினரும் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர், என்று உரிமை கொண்டாடும் வகையில் வாழ்ந்த ஒரே தமிழறிஞர், அவர்.

இவ்வாறு தமிழ் கூறும் நல்லுலகம் பெருமிதத்தோடு போற்றி-டும் அறிஞரே அறவாழி!

அவர் யார்?

அண்மையில் நம்மையெல்லாம் துன்பக் கடலுள் ஆழ்த்திவிட்டு இயற்கையோடு இயற்கையாக மாறிவிட்ட மூதறிஞர் மு.வ. அவர்கள்! தமிழுலகம் பரிவோடும் பாசத்தோடும் போற்றும் ஈறெழுத்திற்குரிய தலைவர் அவர்! தாம் படைத்த 'நாவல்'களில் தம்மையே ஒரு பாத்திர-மாகப்படைத்துத்தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் முகவராகக் காட்டி-யுள்ளார்'. அப்பாத்திரமே அறிஞர் அறவாழி! ஐந்திற்கும் மேற்பட்ட 'நாவல்'களில் அறவாழி நம்மோடு கலந்து உறையாடுவதைக் காண-லாம்! ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராக அறவாழி காட்சி தருகிறார். அறவாழியின் பண்பு நலன்கள் அனைத்தும் அறிஞர் மு.வ. அவர்களிடம் குடிகொண்டிருந்தன. இவ்வாறு தம்மையே ஒரு கதைப்பாத்திரமாகத் தம்முடைய கதைகளில் படைத்துவிட்ட முதல் தமிழ் எழுத்தாளர் டாக்டர் மு.வ. அவர்களேயாவர்.

பேராசிரியர் மு. வரதராசனரின் வாழ்க்கை ஒரு ‘திறந்த புத்தகம்’. நமக்கெல்லாம் வழி காட்டும் ‘ஒளி விளக்கு’. ‘உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?’ என்னும் முதுமொழிக்குச் சான்று பகரும் சாகாதப் பேரிலக்கியம்! ‘தம் புகழ் கேட்டார் போல் தலைசாய்ந்து மரம் துஞ்ச, என்று பாடினன் அன்று ஒரு புலவன். ‘தம் புகழ் விரும்பாத’ தகைமையாளராக வாழ்ந்து காட்டியவர் அறிஞர் அறவாழி!

அவருடைய மறைவால் ‘மலர்விழி’ மதிமயங்கி விழுகிருள்; ‘பாவை’ செயலற்றுப் பாவை போலாகி விட்டாள்; ‘மண்குடிசை’யில் ஒளி வீசிய அகல்விளக்கு’ அணைந்து விட்டது! ‘மனச்சான்று’ ஓடி ஒளிந்து கொண்டது! ‘கொங்குதேர் வாழ்க்கை’ அஞ்சிறைத் தும்பி ‘முல்லைத்திணை’யிலிருந்து நானிலமெங்கும் பறந்து சென்று, ‘ஓவச் செய்தி’யை- ‘ஐயா ஓய்ந்த செய்தியை’ ஓலமிடுகிறது! ‘தம்பி’ துடிக்கிருன்! ‘தங்கை’ தவிக்கிருள்! ‘அன்னை’ தேம்பித் தேம்பி அழுகிருள்! தமிழகமே துன்பக் கடலில் மூழ்கிவிட்டது.

தமிழ்ப்பணி

# தமிழிற்கு ஓர் அண்ணல்

பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு

இருபதாம் நூற்றுண்டில் தமிழ்மொழி சீரும் சிறப்பும், வலிவும் பொலிவும், வாழ்வும் வளமும் பெற்று வளர்ந்து வருகிறது. இவ்வளர்ச்சிக்கு உரமிட்ட தமிழ் அறிஞர் சிலர்; நீருற்றி வளர்த்தவர் பலர்; வேலியிட்டு, பயிரைப் போற்றிக் காத்த தமிழ்க் காவலர் சிலர். தரமான புதிய விதைகளைத் தேடிப் பழைய தமிழ்ப் பண்ணையில் விதைத்து நீர்ப்பாய்ச்சி உரமிட்டுப் பயிரினைப் பேணி வளர்த்தவர் மிகச் சிலராவர். மேற்கண்ட அரும்பணிகள் அனைத்தையும் கண்ணுங் கருத்துமாகச் செய்த ஒருவர் உண்டென்றால், இவர் யாராக இருத்தல் கூடும்? எங்கள் பேராசான் டாக்டர் மு. வரதராசனாராகத்தான் இருக்க முடியும்! மூத்த தமிழை, மூவாத கன்னித் தமிழை; என்றுமுள தென்தமிழை ஏற்றமுறச் செய்த அண்ணலே பேராசிரியர் மு. வ. அவருடைய தமிழ்த் தொண்டு நிலத்தினும் பெரிது; அவருடைய தமிழுணர்வு

வானினும் உயர்ந்தது; அவருடைய தமிழ்ப் புலமை கடலினும் ஆழமானது. கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்ருது, நாட்டத்தில் நல்ல கருத்துக்களைக் கொண்டு அமைதியாக அன்புப் பணியைப் புரிந்த அண்ணல் டாக்டர் மு.வ. அவருடைய எழுத்து எண்ணற்ற இளைஞர் உள்ளத்தைக் கவர்ந்தது! ஆயிரக்கணக்கான அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டியது! முதுபெரும் புலவர்களின் உள்ளத்திலே 'தமிழிற்கு வாழ்வு உண்டு!' என்னும் நம்பிக்கை ஒளியை ஊட்டியது!

"ஆசிரியர் வரதராசனுரை யான் நீண்ட காலமாக அறிவேன். அவரை யான் முதன் முதல் பார்த்த பொழுது அவர் தம் மலர்ந்த விழியும், கூரிய மூக்கும், பரந்த நெற்றியும், நீண்ட முகமும், நிமிர்ந்த பிடரியும் என்னுள்ளத்தைக் கவர்ந்தன... ஆசிரியர் வரதராசனுர் பெருங்கலைஞராய் நாட்டை நல்வழியும் ஓம்புந் தொண்டராவர் என்று யான் நினைத்தது உண்டு. அந்நினைவு பழுதுபடவில்லை! அவர் இயற்றியுள்ள நூல்கள் நாட்டை நல்வழியில் ஓம்பி வருதல் கண்கூடு"

என்று தமிழ்ப்பெரியார் திரு.வி. கலியாணசுந்தரனுர் முப்பதாண்டுகளுக்கு முன்பு மு. வ. அவர்களைப் பாராட்டியுள்ளார்.

### இளமைப்பருவம்

பேராசிரியர் அவர்கள் 25-4-1912 ல் பிறந்தார். அவர் பிறந்த ஊர் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள வேலம் என்னும் சிற்றூராகும். தந்தையார் முனிசாமி முதலியார். அவர் உழவுத் தொழில் புரிந்து வாழ்க்கை நடத்தியவராவர். உயர்நிலைப் பள்ளிப்படிப்பைத் திருப்பத்தூரிலும், வேலூரிலும் பயின்ருர். சிறிது காலம் திருப்பத்தூர்த் தாலுகா அலுவலகத்தில் மு.வ. அவர்கள் எழுத்தராகப் பணிபுரிந்தார். பின்னர், ஆசிரியப் பயிற்சி பெற்று, தொடக்கப் பள்ளி ஆசிரியராகச் சில ஆண்டுகள் பணி புரிந்தார். தொடக்கப் பள்ளி ஆசிரியராகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய ஐயா அவர்கள், துணைவேந்தராகத் தம் வாழ்க்கையை நிறைவுறச் செய்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது.

பிறகு, புலவர் முருகையன் என்னும் சான்ருேரிடம் தமிழைப் பயின்ருர். சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வில் (1937) அவர் முதல் வகுப்பில் முதல் நிலையைப் பெற்றுத் தேர்ச்சியுற்ருர்; ஆயிரம் ரூபாய் பரிசினைப் பெற்றதோடு, தமிழ்ப் பெரும் புலவராக விளங்கத் திட்டமிட்டு உழைக்கலானுர். 1939 ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பர் கல்லூரிக்குள் அவர் பயிற்றுசிரிய (Tutor) ராக நுழைந்-

தார். 1944 அளவில் பி.ஓ.எல். (B.O.L.) தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சியுற்றார். தக்காரை அடுத்துத் தம் ஐயந்திரிபுகளைப் போக்கிக் கொண்டு, தாமாகவே தனி முறையில் தேர்வுகள் பலவெழுதி எம்.ஏ. பட்டம் பெற்ற பெருமை (பழைய B.O.L. பட்டத்தை M.A. பட்டமாகப் பல்கலைக் கழகத்தினர் மாற்றினர்) பேராசிரியர் மு. வரதராசனாருக்குரியதாகும். 'தன்னம்பிக்கையும் உழைப்பதற்குச் சலிக்காத ஆர்வமும் கொண்டவர் யாரும், எந்தத் தேர்வையும் நல்ல முறையில் எழுதி வெற்றி பெற இயலும்' என்னும் திடமான நம்பிக்கை அவருக்கு என்றும் உண்டு. இந்நம்பிக்கையின் அடிப்படையிலேயே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் 'அஞ்சல்வழிக் கல்வி முறையைத்' துணிச்சலாக அவர் தொடங்கினார்; அதில் பெரு வெற்றி பெற்று மனம் மகிழ்ந்தார்.

## ஆசிரியப்பணி

பச்சையப்பன் கல்லூரியில் பணி புரிந்த காலத்தில் தமிழின் வளர்ச்சிக்கும், தமிழைக் கற்போரின் வாழ்க்கை வளம் பெறுவதற்கும் பல அரிய பணிகளைத் திரைமறைவில் இருந்து—விளம்பரத்தை விரும்பாமல்-செய்துள்ளார். B.O.L.க்கு மேற்பட்ட பட்டப்படிப்பு ஒன்று வேண்டும் என்பதை அவர் நன்குணர்ந்தார். அதற்காகப் பல பெரியவர்களைக்கண்டு, எடுத்துரைத்தது B.O.L. (Hons) பட்டப்படிப்பை, முதன் முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் புகுத்துமாறு செய்தார்; அப்படி பட்டப் படிப்பைத் துணிச்சலுடன், தாம் பணியாற்றிய பச்சையப்பர் கல்லூரியில் கொண்டு வந்தார்; தொடக்கத்தில் பலவகைப் புது முறைப் பாடங்களையும் அவரே நடத்தும் பொறுப்பினை ஏற்றார். பின்னர், தம்முடன் பணியாற்றிய ஆசிரியர்களைப் புதிய கலைத் துறைகளில் ஈடுபடுத்திப், பல ஆண்டுகள் தொடர்ந்து பாடம் நடத்தச்செய்து அக்கலைகளில் அவர்களை வல்லுநராக்கினார்.

சில ஆண்டுகளுக்குள், தமிழ் நாட்டு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவினர் B.O.L. (Hons) பட்டம் பெற்றவர்களை M.A. பட்டதாரிகளுக்குச் சமமாக மதிக்க மறுத்தனர். தம்முடைய மாணவர்களுக்கு—தமிழைப் பயின்ற இளைஞர்கட்கு—உண்டான இன்னலைக் கண்டு அவர் மனம் நொந்தார். உடனடியாக B.O.L. (Hons) பட்டம் பெற்றோர், அதை M.A. ஆக மாற்றிக் கொள்ளும் உரிமையை சென்னைப் பல்கலைக்கழகம் அளிக்குமாறு அவர் செய்தார். வந்த தீங்கிலிருந்து தமிழ் மாணவரைக் காத்த பெரியார், அதோடு வாளா இருந்து விடவில்லை! மேலும், தீமை வருமுன் காக்க முனைந்தார்.

1950 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் M.A. பட்டப்படிப்புகளுக்கு வழிவகுத்துத்தந்தார். 1961 வரை செம்மையாகவும் சிறப்பாகவும் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பணியாற்றினர்.

அக்காலத்தில் அவரிடம் M.A யில் சிறப்புத் தமிழைப் பயின்றோர் முந்நூறுக்கு மேற்பட்டவராவர். அவர் ஆசிரியராக மட்டும் விளங்கவில்லை! அவருடைய மாணவர்க்குத் தாயாக, தந்தையாக, நண்பனாக, தோழனாக, நெறிப்படுத்தும் ஆறவோராக அவர் திகழ்ந்தார். அவர் எப்பாடத்தை நடத்தினாலும் அதில் எளிமை இருக்கும்; தெளிவு மேலோங்கி நிற்கும்; திட்பமும் நுட்பமும் தொக்கி நிற்கும்; நயம் பெருக்கெடுத்து ஓடும். மறந்தும் அவர், பிறருடைய குறைகளைச் சுட்டியதும் இல்லை! அதைப் போன்றே தம்மைப் பற்றியும் தம் வாழ்க்கையைப் பற்றியும் ஒரு சொல் கூடச் சொன்னது இல்லை! இதனால், எண்ணற்ற இளைஞர்களின் 'உள்ளங்கவர் கள்வனாக' அவர் விளங்கினார்.

ஆசிரியராகப் பணிபுரிந்த அக்காலத்திலேயே, எழுத்தாளர் வரதராசனாரும், ஆராய்ச்சிப் பேரறிஞர் வரதராசனாரும் உருவாகிக்கொண்டிருந்தனர். அவர் தமிழின் வளர்ச்சிக்குப் புதிய வழிவகைகளை வகுத்துதந்தார்; புராணத் தமிழின் மத்தியில் மூழ்கிக்கிடந்த மக்களுக்குச்சங்கத் தமிழினை விருந்தாகப் படைத்தார். அதன் மூலம் ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய தமிழ் இலக்கியங்களை தமிழ் மக்கள் சுவைத்து மகிழவும், தங்கள் பண்பாட்டுப் பாரம்பரியத்தை உணர்ந்து போற்றவும் செய்தார். இதனால் சங்கத் தமிழிற்குப் புது மெருகும் புது வாழ்வும் கிட்டியது. தமிழின் மறுமலர்ச்சிக்கு நல்லதொரு பாதையை அவர் அமைத்துத்தந்தார்!

தமிழாராய்ச்சிக்கு வழி வகுத்து, தமிழறிஞர் M.O.L. ஆராய்ச்சிப்பட்டம்பெற உதவி செய்தார். 'திராவிட மொழிகளில் வினைச் சொற்கள்' என்னும் ஆய்வுரையை ஆங்கிலத்தில் அளித்து, அவர் M.O.L. பட்டம் பெற்றார். பின்னர், 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை'-யெனும் ஆய்வுக் கட்டுரை வரைந்து டாக்டர் பட்டத்தையும் அவர் பெற்றார். இதற்கு இடையில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் மதிப்புறு துணைப் பேராசிரியராக (Honoraray Reader) ப் பணியாற்றினர். பின்னர், 1949 அளவில் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகவும், இந்திய மொழிகளின் துறைகளுக்குத் தலைவராகவும் அவர் சிறப்புற்றார்.

அக்காலத்தில் அவர்படைத்த நூல்கள் எழுபதுக்கு மேற்பட்ட-வையாகும். அவருடைய சிந்தனைச் சிறப்பையும், கருத்தோட்டத்தை-யும், இனிய பாங்கையும் கண்டு வியந்தவர் பலர். அவருடைய அரிய படைப்புகளான கள்ளோ காவியமோ எனும் புனைகதைக்கும், அரசியல் அலைகள் எனும் கட்டுரை நூலுக்கும் ஓவச்செய்தி எனும் இலக்கிய ஆராய்சிக்கும் மொழியியற் கட்டுரைகள் எனும் ஆராய்ச்சி நூலுக்கும் தமிழ்நாடு அரசு பரிசுகள் வழங்கிப் பாராட்டியது. தில்லி சாகித்திய அக்காதெமி, பேராசிரியருடைய அகல்விளக்கு எனும் புனை-கதைக்கும் 1957 ஆம் ஆண்டு பரிசளித்துப் பெருமை பெற்றது. இந் நூல்கள் அல்லாமல், திருக்குறள் அல்லது வாழ்க்கை விளக்கம் என்னும் ஆராய்சி நூலையும், விடுதலையா? எனும் சிறுகதைத் தொகுப்பையும், மொழிநூல் என்னும் மொழியியல் ஆய்வு நூலையும் தமிழ் வளர்ச்சிக்-கழகம் பாராட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய காலத்திலேயே புகழ் அவரை தேடி வந்தது. உலகின் மூலை முடுக்குகளில் உள்ள தமிழர் பலரும், அவரோடு நெருக்கமான கடிதத் தொடர்பு கொண்டனர்; தங்கள் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உதவுமாறு அவரை வேண்டினர். பண்பட்ட தமிழ் உள்ளம் வாய்க்கப் பெற்ற பேராசிரியரின் அறிவும் ஆற்றலும், அன்பும் பண்பும் பரிவும் பாசமும் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்தது; மு. வ. எனும் ஈரெழுத்தாலாகிய பெயர், தமிழகத்தின் வீடுகள் தோறும் மதிப்பிற்குரிய திருப்பெயராக ஒலிக்கலாயிற்று.

பல்கலைக் கழகப் பேராசிரியர்

1962-ஆம் ஆண்டு முதல் 1971 வரை டாக்டர் மு.வ. அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக தொண்டாற்றினார். பின்னர் 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் அவர் மதுரைப்-பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தொண்டு புரிந்தார். தமிழ்ப்-பேராசிரியராகப் பணி புரிந்த காலத்தில், தமிழினை, உலகத்தின் பல்வேறு நாட்டு அறிஞர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். ‘திறமையான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்’ என்பது பாரதியாரின் வாக்கு. அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியவர் நம் பேராசிரியர். செக் நாட்டு அறிஞர் டாக்டர் கமில்சுவலெபில், இங்கிலாந்து நாட்டு அறிஞர்களான டாக்டர் ஆஷர், டாக்டர் ஜான்மார், மேற்குஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் (செல்வி) ஹெல்கா ஆண்ட்டன், ருஷ்யநாட்டு அறிஞரான

டாக்டர் ரூதின் போன்றோர் டாக்டர் மு. வரதராசனாரிடம் தமிழ் இலக்கியங்களைப் பயின்றனர். அவருடைய நூல்களுள்-சிறப்பாகப்-புதினங்களுள்-சிலவற்றைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்துத்-தங்கள் ஆசானுக்கு அவர்கள் சிறப்பைத் தேடித்தந்தனர். அக்காலத்-தில் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிற்குச்சென்று 'தேமதுரத் தமி-யோசை உலகமெலாம், பரப்பும் பணி'யை அவர் செய்துள்ளார்.

சென்னையில் தமிழ்க்கலை மன்றத்தை (Academy of Tamil Culture) தொடங்க உறுதுணையாக இருந்ததோடு, பல ஆண்டுகள் அதன் வளர்ச்சிக்காக அவர் அரும்பாடு பட்டார். பின்னர், அதனு-டைய கிளை அமைப்பாக அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை (IATR) நிறுவி. மூன்று உலகத்தமிழ் மாநாடுகளைச் சிறந்த முறையில் நடத்துவதற்கு, ஒல்லும் வகையெல்லாம் அவர் ஓயாது முயன்றார். சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைதோற்று விப்பதற்குக்-காரணமாக இருந்ததோடு,அதனுடைய முதல் இயக்குநராகப் பொறுப் பேற்று, அதன் வளர்ச்சிக்குரிய வழிவகைகளை நம் பேராசிரியர் வகுத்-துத் தந்தார்.

துணைவேந்தர்

மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவியேற்ற நாள் முதல், அதனுடைய வளர்ச்சிக்குப் பலவகையில் டாக்டர் மு.வ. பாடுபட்டுள்ளார். அதனைத் தம்முடைய நான்காவது குழந்தையாக அவர் கருதினர். அதனுடைய விரைவான வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கின்ற வகையில், இன்னல்களையும் இடையூறுகளையும் கண்டு மனந்தளராது பேராசிரியர் மு.வ. அவர்கள் ஓயாது உழைத்-தார். 'உழைப்பே உயர்வு தரும்' என்னும் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த அவர், உழைப்பின் சின்னமாகத் தம்மை உலகிற்கு உணர்த்தி, 10-10-74 அன்று மாலை 5-30 மணிக்கு மறைந்து விட்டார்!

தமிழ்ப் பணி

புலவர் மு. வரதராசனாகத் தம் வாழ்க்கையைத் தொடங்கிய காலத்தில், பல புதிய துறைகளில் நம் அன்னைத்தமிழை வளர்க்க அவர் திட்டமிட்டார்; ஆரவாரமின்றிப் பையப்பைய அத்திட்டங்களை தம் எழுத்தின் மூலம் அவர் செயல்படுத்தி வந்தார். 'பேச்சைக்குறை; எழுத்தை நிறை' எனும் கொள்கையோடு, மேடைப் பேச்சுக்கு இரை-

யாகமால், நடுவு நிலையில் நின்று, நாளும் எழுதிக் கொண்டே இருந்தார். ஆண்டுதோறும் இரண்டு அல்லது மூன்று நூல்கள் வெளிவந்து கொண்டே இருந்தன. 1945 முதல் 1960 வரை அவர் ஓயாது எழுதினர். எழுதியவற்றைச் செப்பம் செய்து, தாமே நூலாகப் பெரும்பாலும் வெளியிட்டு வந்தார்.

புத்தம் புதிய துறைகளில் அவர் தமிழை வளர்த்தார்; மற்றவர் எவ்வெத் துறைகளில் தமிழை வளர்க்கலாம் என்பதைக் கோடிகாட்டியும், வழி வகுத்தும் கொடுத்தார். 'மாடுகளும் வழக்கத்தால் செக்கை சுற்றும்' என்பார்கள். பழமையில் ஊறிய தமிழ்ப்புலவரான டாக்டர் மு. வரதராசனர், தமிழை வளர்ப்பதற்கு இக் காலத்திற்கு உகந்ததாக உள்ள துறைகள் பலவற்றைப் புதியதாக அவர் தேர்ந்தெடுத்தார்; பழமையின் அடிப்படையில் புதுமைக்கு விளக்கம் கொடுத்தார்; புதுமையிலே பழமையின் சிறப்பியல்புகளைக் கண்டு போற்றினர். அவர் மரபுவழி வந்த தமிழ்ப் புலவர்! சங்ககாலச் சான்றோர்களின் நெறியில் நின்று அவர் இன்றைய உலகை நோக்கினர்! அச்சான்றோர்களின் அறவுரைகளையும் அறிவுரைகளையும் இன்றைய மக்களுக்குப் பயன்படும் வகையில், இன்றைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி விளக்கிக் கட்டுரைகளைபும் புனைகதைகளையும் பேராசிரியர் வடித்துத் தந்தார். அவருடைய உள்ளத்தில் வள்ளுவரின் வாய்மொழியும், அப்பரின் அருண் மொழியும், மாணிக்கவாசகரின் மணிமொழியும் ஆழமாகப் பதிந்திருந்தன. அவற்ளேடு மனித இன நலக்கோட்பாடு உணர்வுமிக்க தாயுமானவரின் தவமொழிகள் அவருடைய கருத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தன. இராமதீர்த்தரின் மெய்யுணர்வுக் கருத்துக்களிலும், அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை நெறியிலும் பேராசியரின் உள்ளம் தோய்ந்திருந்தது. ஜெர்மானிய நாட்டு மெய்யுணர்வாளரான காண்ட்டின் அறவேட்கையிலும், இங்கிலாந்து நாட்டின் சிந்தனைச் சிற்பியான ஜார்ஜ் பெர்னுட்ஷாவின் சோசலிசக் கோட்பாட்டிலும் அவர் பேரீடுபாடு கொண்டிருந்தார். அவருடைய எழுத்துக்களில் இச்சான்றோர்களின் எண்ணங்கள் நிழலாடின.

பேராசிரியர் மு. வரதராசனர் பல பட்டைகள் தீட்டப்பட்ட ஒரு வயிரமணியாவார். இதனல், அவருடைய தமிழ்ப்பணியும் பல்வேறு வகைகளாகப் பல்கிப் பெருகியுள்ளன. அவருடைய எழுத்துரைகள் பலநூல்களாக வடிவம் பெற்றுள்ளன. இன்றைக்கு அவருடைய நூல்கள் நம்முடன் 78 பேசுகின்றன. அவருடைய பெயர் குறிப்பிடப்படாமல் நான்கைந்து வெளிநாட்டுக் கதைகளின் தமிழாக்கம் இருபத்-

ஞைந்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ளன. ஏராளமான கட்டுரைகளும் கருத்துரைகளும் தொகுக்கப் பெருமல் இன்னும் உள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்தால் தமிழில் பத்து நூல்களும், ஆங்கிலத்தில் இரண்டு மூன்று நூல்களும் வெளியிடலாம். பேராசிரியருடைய படைப்புக்களைப் பன்னிரண்டு வகைகளாக நாம் பாகு படுத்தலாம்.

1) பழைய இலக்கியங்களுக்குப் புதிய விளக்கம்

சங்கத்தமிழ் இலக்கியங்களுள் சிறந்த பாடல்கள் பலவற்றைத்தேர்ந்தெடுத்து, அவற்றை இன்றைய மக்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, எளிய நடையில் ஓரளவிற்குத் தமிழை அறிந்தவரும் புரிந்து கொள்ளும் வண்ணம், பல கருத்தோவியங்களை அவர் வரைந்துள்ளார். அவை தமிழின் மறுமலர்ச்சிக்கு உரமூட்டின; புதியதொரு விழிப்புணர்ச்சியை உண்டாக்கின. அவை 1) தமிழ் நெஞ்சம், 2) புலவர் கண்ணீர், 3) மணல் வீடு, 4) நடைவண்டி, 5) நெடுந்தொகை விருந்து, 6) நெடுந்தொகைச் செல்வம், 7) குறுந்தொகை விருந்து, 8) குறுந்தொகைச் செல்வம், 9) நற்றிணை விருந்து 10) நற்றிணைச்செல்வம், 11) இலக்கியக் காட்சிகள், 12) குறள் காட்டும் காதலர் என்பனவாகும்.

2) கட்டுரைகள்

நாட்டின் அன்றாடச் செய்திகளுள் சில மனச்சான்றை மதித்துப்போற்றும் மனிதனுடைய உள்ளத்தைத் தாக்கியும் சிந்தனையைத் தூண்டியும் எழுச்சியுறச் செய்தன. அவற்றைக் கருத்தில் கொண்டு, அவற்ருல் உண்டாகும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் முறையில் பத்திரிகைகள் சிலவற்றில் அவ்வப்போது எழுதிய கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்புக்களும், நூல்களாகவே வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இதனுள் அடங்கும். அவை 1) அறமும் அரசியலும் 2) அரசியல் அலைகள் 3) மொழிப்பற்று 4) நாட்டுப்பற்று 5) மண்ணின் மதிப்பு 6) கல்வி 7) பெண்மை வாழ்க 8) உலகப் பேரேடு 9) படியாதவர்படும்பாடு 10) கண்ணுடைய வாழ்வு 11) குருவிப்போர் 12) நல்வாழ்வு.

3) கடிதங்கள்

தமிழிலக்கிய வகையுள் கடிதங்கள் புதியதோர் இலக்கிய வடிவமாகும். வாழ்க்கைப் போராட்டத்தையும் உலக இயல்புகளையும்

நுணுக்கமாக அலசி, ஆராய்ந்து தெளிவுபெற உதவும் வகையில் கற்பனைக் கடிதங்கள் பலவற்றை அவர் எழுதியுள்ளார். அவை 1) அன்னைக்கு 2) தம்பிக்கு 3) தங்கைக்கு 4) நண்பர்க்கு எனும் நான்கு நூல்களாக வெளிவந்துள்ளன.

வாழ்க்கை வரலாறு

சான்றோர்களின் வாழ்க்கை நமக்கு ஒப்பற்ற கைவிளக்காகும். அவர்களுடைய வரலாற்றை அறிவதன் மூலம் நம்முடைய வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள இயலும். இளைஞர்கள் உலகப் பெருஞ்சான்றோர்களின் வாழ்க்கையையும் அவர்தம் தொண்டினையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் நம் பேராசிரியர் நான்கு நூல்களைப்படைத்துள்ளார். அவை 1) காந்தி அண்ணல் 2) அறிஞர் பெர்னட்ஷா 3) கவிஞர் தாகூர் 4) திரு. வி. க. என்பன.

5) சிறுவர்க்கான செந்தமிழ்

பள்ளியில் பயிலும் சிறுவர்களுக்கு மொழியின் வரலாற்றையும். எழுத்தின் வரலாற்றையும், சொற்களின் வரலாற்றையும் விளக்கி, பேராசிரியர் வானொலியில் ஆற்றிய தொடர் சொற்பொழிவுகளின் தொகுப்பாக மூன்று நூல்கள் வெளிவந்துள்ளன. அவை 1) மொழியின் கதை 2) எழுத்தின் கதை 3) சொல்லின் கதை என்னும் சிறு நூல்களாகும்.

6) நாடகங்கள்

பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத்தின் சார்பில் ஆண்டு தோறும் முத்தமிழ் விழாவினைக் கொண்டாடுவது வழக்கம். அவ் விழாவில் நடிப்பதற்காகப் பேராசிரியர் ஓரங்க நாடகங்கள் சிலவற்றை எழுதினர். வேறு சில நாடகங்கள் வானொலியில் ஒலிப்பரப்பப்பட்டன, அவை 1) மனச்சான்று 2) காதல் எங்கே ? 3) இளங்கோவடிகள் 4) டாக்டர் அல்லி 5) பச்சையப்பர் 6) மூன்று நாடகங்கள் என்பன.

7) உரைவிளக்கம்

பழைய தமிழ் இலக்கியங்களுள் திருக்குறளுக்கு டாக்டர் மு. வ. அவர்கள் வரைந்துள்ள உரைவிளக்கம் எளிமையும் தெளிவும் உடையவை; கையடக்கமானது. ஓரளவிற்குத் தமிழைப் பயின்றோரும் படித்து

எளிதில் புரிந்து கொள்ளத்தக்கது. திருக்குறள் தெளிவுரை என்னும் நூல் முதன் முதல் 1949-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இன்று வரை பன்னிரண்டு இலட்சத்திற்கு அந்நூலின் பிரதிகள் விற்பனையாகி-யுள்ளன. இதனால், அந்நூல் நாட்டு மக்களிடையே பெற்றுள்ள செல் வாக்கினை நாம் நன்குணரலாம், ஆனால், அந்நூலால் ஆசிரியர் அடைந்-தது சில நூறு ரூபாய்களே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதா-கும். இது தமிழ் நாட்டு எழுத்தாளனுடைய உண்மையான நிலையை விளக்கப் போதிய சான்றாகும்.

8) இலக்கிய ஆராய்ச்சி

நம்முடைய இலக்கியங்களின் அருமை பெருமைகளை அறிய-வும் அவற்றின் சிறப்பியல்புகளை நாம் உணர்ந்து போற்றவும் உதவி புரிவது இலக்கிய ஆராய்ச்சியாகும். சங்க இலக்கியங்களான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள் ஆகிய இலக்கியங்களிலும், சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய செந்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்திலும் டாக்டர் மு. வரதராசனார் நுண்மாண் நுழை புலம் வாய்க்கப்பெற்றவராவார். அவ்விலக்கியங்கள் நல்கும் இன்-பத்தில் அவர் மூழ்கித் திளைத்தார். அவற்றின் அரிய பண்புகளைப் பிறரும் அறிந்து இன்புறும் வண்ணம் இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் சிலவற்றைப் படைத்துள்ளார். அவற்றால், ஆராய்ச்சித் தமிழ் வளர்ந்-தது; பழந்தமிழ் இலக்கியத்தின் ஏரும் எழிலும், சீரும் சிறப்பும் விளக்கமுற்றன. அவை 1) ஓவச் செய்தி 2) கொங்குதேர் வாழ்க்கை, 3) முல்லைத்திணை 4) பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை (டாக்டர் பட்டத்திற்காக எழுதப்பட்ட ஆய்வுரை), 5) திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், 6) கண்ணகி 7) மாதவி, 8) இளங்கோ 9) இலக்கியத் திறனாய்வு என்பன. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்-டுள்ள 'Treatment of Nature in Ancient Tamil Literature' Ilango Adigal எனும் நூல்களும் இங்கு குறிப்பிடத்தக்கன.

இலக்கியத் திறனாய்வு இந்தியர்களுக்குப் புதியதொருதுறை. தமிழில் இலக்கியத்திறனாய்வு இன்றும் குழவிப் பருவத்திலேயே இருந்து வருகிறது இத்துறையில் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே, விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுவு நிலையில் நின்று, உண்மை காணும் வேட்கையோடி அவர் ஈடுபட்டார். அதன் விளைவாக மேலை நாட்டு இலக்கியக் கொள்கைகளை நம் மாணவர்களும் தமிழறிஞர்களும் புரிந்து கொள்ளத் தக்க வகையில் எடுத்துரைத்தும். தமிழிலக்கியங்

களில் அவற்றை பொருத்திக் காட்டியும் அவர் விளக்கம் தந்துள்ளார். சாகித்திய அக்காதமியின் சார்பில், தமிழிலக்கிய வரலாறு என்னும் நூலை அவர் வெளியிட்டுள்ளார். இந்நூலும் தமிழிலக்கியத்தின் வர லாற்றைத் திறனாய்வு முறையில் எடுத்துரைக்கிறது. அவருடைய இலக்கியத் திறனாய்வு நூல்கள் 1) இலக்கியத்திறன் 2) இலக்கிய மரபு 3) இலக்கிய ஆராய்ச்சி 4) இலக்கிய வரலாறு என்பனவாகும்.

## 10. மொழியியல் நூல்கள்

இலக்கிய ஆராய்ச்சியில், ஈடுபாடு கொண்டிருந்த நம் பேராசிரி-யர், மொழியாராய்ச்சிலும் ஆர்வம் காட்டினார். இலக்கணத்தை ஆழக் கற்றவர்களே மொழியாராய்ச்சியில் ஈடுபடமுடியும். பொதுவாக இலக்கியபுலவர்கள் இலக்கணப் புலவர்களாக இருப்பதில்லை, இலக்-கியத் திறனாய்வாளர்கள், மொழியியல் அறிஞர்களாகச் சிறப்புறுவ-தில்லை. நம் பேராசிரியர் இவ்விரு கலைகளிலும் தேர்ச்சியும் முதிர்ச்-சியும் பெற்றிருந்தமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. திராவிட மொழிகளின் அமைப்பினையும் இயல்புகளையும் தாமே கண்டு அறிவ-தற்காகப் பத்தாண்டுகளுக்கு மேல் அவர் கன்னடம், தெலுங்கு, மலை-யாள மொழிகளைப் பயின்றார். அவற்றைப்பச்சையப்பர் கல்லூரியின் கன்னட, தெலுங்கு, மலையாளமொழி விரிவுரையாளர்களே பயிற்று வித்தனர். அவர்களுள் சிலர் நம் பேராசிரியருடைய சிறப்புமிக்க புனைகதைகளான கள்ளோ காவியமோ, மலர்விழி, கரித்துண்டு போன்றவற்றைத் தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் மொழி பெயர்த்துள்ளனர். மொழி ஆராய்ச்சியில் தமக்குப் புலனாகிய உண்மைகளை எளிய முறையில், கட்டுரைகளாக அவ்வப்போது, அவர் சில ஆய்வேடுகளில் வெளியிட்டுள்ளார். அவற்றைத் தொகுத்து மொழியியற் கட்டுரைகள் எனும் நூல்களாக்கியுள்ளார். மொழியியல் நூல்களாவன; 1) மொழிநூல் 2) மொழி வரலாறு 3) மொழியியல் கட்டுரைகள் - முதற்பகுதி 4) மொழியியல் கட்டுரைகள் இரண்டாம் பகுதி என்பனவாகும்.

## 11) சிறுகதை

நற்றமிழில் புலவரான டாக்டர் மு. வரதராசனார் சிறுகதைகள் சிலவற்றைத் தொடக்க காலத்தில் எழுதியுள்ளார்; அவற்றைத் தொகுத்து 'விடுதலையா?' எனும் நூலாக வெளியிட்டுள்ளார். அத் தொகுப்பில் உள்ள கதைகள் சில, நம் பேராசிரியருடைய இளமைப்

பருவ நிகழ்ச்சிகளைக் கருவாகக் கொண்டவை. இச் செய்தியை ஆசிரியரே என்னிடம் தெரிவித்துள்ளார். 'குறட்டை ஒலி' என்பது மற்றொரு தொகுதியாகும்.

12) புனைகதைகள்

தமிழ்ப்பேராசியரான டாக்டர் மு.வ. அவர்களைக் கல்வியறிவில்லாத பாமரமக்களும் நாவலாசிரியராக நன்கு அறிவார். இத்துறையில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நல்ல பணியினை அவர் ஆற்றியுள்ளார். அவருடைய புதினங்களுள் பாவை ஒன்றே, லோகோபகாரி எனும் வார இதழில் தொடர்ந்து வெளி வந்தது. மற்றவை எல்லாம், ஆசிரியரால் எழுதி முடித்தவுடன் நூலாக வெளியிடப்பட்டவையாகும். அவருடைய நாவல்கள் அனைத்துமே சமூக நாவல்களாகும். அவையாவும் குடும்ப வாழ்க்கையில் எழும் சிக்கல்களைக் கருவாகக் கொண்டுள்ளன. இன்றைய வாழ்க்கைப் போராட்டத்தின் எதிரொலிகளை அவற்றில் நாம் கேட்கின்றோம். டாக்டர் மு. வரதராசனார் படைத்துள்ள எழுபதுக்கு மேற்பட்ட கதைப் பாத்திரங்களுள், ஒருவருடைய சாதியைக் கூட நாம் அறிய இயலாது. அவர்கள் யாவரும் சாதிவேறுபாடற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுடைய பேச்சு நடையைக் கொண்டும், நாம் சிறிது கூட அவர்களுடைய சாதியை இனங்கண்டு கொள்ள இயலாது. இது ஆசிரியரின் எண்ணப் போக்கினை எடுத்தியம்புகிறது.

நம் பேராசிரியரின் நாவல்கள் யாவுமே பயன் மதிப்பை (Values) த் தெளிவுபடுத்தும் கருத்து விளக்க நாவல்களாகும். இதனால்,அவை 'பிரசாரம்' செய்யும் நாவல்களாகக் கருதப்படுகின்றன. 'கலை இன்பம் தருவது மட்டும் அன்று; வாழ்க்கையைத் திருத்திச் செம்மைப் படுத்துவதுமாகும்' என்னும் கொள்கையில் நம் பேராசிரியர், அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால், அவருடைய புனைகதைகள் யாவும் கருத்து விளக்கக் கதைகளாக அமைந்துள்ளன. அவை 1) பாவை 2) கள்ளோ காவியமோ 3) செந்தாமரை 4) மலர்விழி 5) அல்லி 6) கரித்துண்டு 7) கயமை 8) நெஞ்சில் ஒரு முள் 9) அகல் விளக்கு 10) மண்குடிசை 11) வாடாமலர் 12) பழியும் பாவமும் 13)அந்த நாள் 14) கி.பி. 2000 என்பனவாகும்.

இவற்றுள் கள்ளோ காவியமோ, கரித்துண்டு, மலர்விழி, அகல் விளக்கு என்னும் நாவல்கள் நம் பேராசிரியருக்குப் பொன்றாப் புகழைத் தேடித்தந்தன.

13) பிரயாண இலக்கியம்

தமிழில் பிரயாண இலக்கியங்கள் மிகமிகக் குறைவாக உள்ளன. வெளி நாடுகளுக்குச் சென்று வந்தவர்கள் தம் அனுபவத்தை எடுத்துரைப்பது நம் நாட்டில் அரிய செயலாக இருந்து வருகிறது. பேராசிரியர் மு.வரதராசனுர் அவர்கள் 1950 அளவில் முதன்முதல் இலங்கைக்குச் சென்று வந்தார்கள். அப்பயணத்தில் தாம் கண்டவற்றையும், பெற்ற புதிய அனுபவங்களையும் ஆற்றெழுக்கான இனிய நடையில் யான் கண்ட இலங்கை எனும் நூல் வாயிலாக அவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார்.

14) குழந்தை உளவியல்

குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களைப் புரிந்து கொள்ளுவது அரிய செயலாகும். அவர்களுடைய உள்ள உணர்ச்சிகளை மதித்துப் போற்றி, உரிமை அளித்தால் அவர்களுடைய அறிவுத்திறனும் செயல் திறனும் நன்கு மலர்ச்சியடையும் என்பது டாக்டர் மு.வ. அவர்களுடைய கருத்தாகும். மாண்டிசொரி அம்மையாரின் கருத்துகளைக் கருத்தில் கொண்டு குழந்தையின் மன வளர்ச்சியைக் கூர்ந்து நோக்கி, நுட்பமாக ஆராய்ந்து, அவர் ஒரு நூலினை எழுதியுள்ளார். அதற்குக் குழந்தை என்பதே பெயராகும்.

எளிய நடையில், தெளிவு மிக்க வகையில், இனிமையும் மென்மையும் வாய்ந்த சொற்களால், அவர் இவ்வரிய நூல்களையெல்லாம் இயற்றியுள்ளார். 1972 ஆம் ஆண்டு, மே மாதம், அமெரிக்காவில் உள்ள இலினுய்சு பல்கலைக் கழகம் டாக்டர் மு.வரதராசனுர் அவர்களைப் பாராட்டி, டி.லிட். (D. Lit.) பட்டமளித்து பெருமையுற்றது. 'புதிய தமிழைப் போற்றி வளர்க்கும் பேராசான்' என்பதற்காக இப்பட்டத்தை அளிப்பதாக அப்பல்கலைக் கழகம் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தமிழறிஞர்களுள் முதன்முதலாக வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தினரால் சிறப்பு மிக்க அறிஞராகப் போற்றிப்பட்டம் அளித்துப் பாராட்டப் பெற்ற நல்லறிஞர் நம் பேராசிரியராவர்.

- நூலகம்

டிசம்பர் 1974

# டாக்டர் மு. வ. — சில நினைவுகள்

சி. தில்லைநாதன்

என் தாயைவிட என் மொழியைவிட என் நாட்டை விட உண்மை பெரிது''. இவ்வாறு உரத்துப் பேசியவர் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார். 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றும் நாள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் அ. ச. ஞானசம்பந்தன் நிகழ்த்திய திரு. வி. க. பற்றிய கல்கி நினைவுச் சொற்பொழிவிற்குத் தலைமை தாங்கிய வேளையிலேயே அவ்வாறு அவர் கூறினார்.

வசதி குன்றியதொரு குடும்பத்திற் பிறந்த சாதாரணத் தமிழாசிரியராகத் தம் வாழ்வினைத் தொடங்கிய டாக்டர் மு.வ. உண்மையான உழைப்பின் மூலம் உயர்ந்தவர். தமிழாசிரியராகத் தொடங்கித் தம் இடைவிடா முயற்சியின் மூலம் கலா நிதியாகவும் பேராசிரியராகவும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் உயர்ந்தவர் அவர். ஆசிரியப்பணி மூலமாகவும், அதைவிட மேலாகத் தம் பெருந்தொகையான எழுத்துக்-

களின் மூலமாகவும் பல்லாயிரம் மாணவர் உள்ளங்களிலும் மக்கள் உள்ளங்களிலும் குடிபுகுந்துகொண்டவர் அவர். தமக்கென ஒரு நடையையும் ஒரு வழியையும் வகுத்துக் கொண்டதால் மட்டுமன்றி, எளிமையும் அன்பும் நிறைந்த பண்பினாலும் பலரை வசீகரித்தவர் அவர். அத்தகைய ஒரு பெருமானிடனை இழந்து இன்று தமிழ்பேசும் உலகம் கலங்குகிறது.

அதிர்ச்சி தந்த செய்தி:

சென்ற பத்தாம் தேதி வியாழன் அன்று மாலை வடமொழி விரிவுரையாளரான கலாநிதி திருமதி ரங்கராஜன் தாம் பெங்களூர் செல்லவிருப்பது குறித்துப் பேசிக் கொண்டிருந்தபோது, நான் 'எங்களுடைய பேராசிரியர் மு.வ. வும் ஒவ்வொரு விடுமுறைக்கும் பெங்களூருக்கே செல்வதுண்டு' என்றேன். தொடர்ந்து நாம் பேராசிரியரைப் பற்றி பேசிக்கொண்டிருந்தோம். மறுநாள் மாலை வழியில் என்னைக் கண்ட அதே திருமதி ரங்கராஜன்' மு.வ. மறைந்த சேதியைக் கூறக்கேட்டுப் பெரும் அதிர்ச்சியும் கலக்கமும் அடைந்தேன்.

1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் மு.வ. வின் கீழ் ஆராய்ச்சி மாணவனாகச் சேர்வதற்கு யான் சென்னைக்குப் பயணமானேன். என் நண்பர் செ. கணேசலிங்கன் மு.வ. வைப்பற்றி நிறையச் சொல்லியிருந்தாராயினும் நான் நேரில் மு.வ. வைக் கண்டதில்லை. அன்று 17ம் தேதியென்று நினைக்கிறேன். நான் பல்கலைக் கழகத்துக்குக் காலையில் போய் நீண்ட நேரம் காத்திருந்தேன், பேராசிரியர் மு.வ. வைக் காணும் ஆவலோடு. பன்னிரண்டு மணி நெருங்கிக் கொண்டு வரவும் அவர் வராததாற் பொறுமையிழந்த நான் பக்கத்திலிருந்த வங்கிக்குச் சென்று பேராசிரியருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டேன்.

''வந்துவிட்டீர்களா? எப்போது வந்து சேர்ந்தீர்கள் ? இன்று வருவது எனக்குத் தெரியாதே. காலையிற் சாப்பிட்டீர்களா? நான் ஒரு மணிக்கு வருவேன். எனக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். போய் மத்தியானம் சாப்பிட்டுவிட்டு ஆறுதலாக வாருங்கள். அவசரப்பட வேண்டாம்''. இவ்வாறு இயற்கைக்கும் செயற்கைக்கும் இடைப்பட்ட ஒரு நடையில், மிகுந்த அக்கறையோடும் அன்போடும் அவர் பேசினார். எங்களூரில் ஒரு பேராசிரியர் ஒரு தடவை தொலைபேசியிலே தம்முடன் தொடர்பு கொண்டமைக்காக, நேரில் வந்து காண முடியாதோ என்று என்னோடு சினந்து கொண்டமையும் என் நினைவுக்கு வந்தது.

உதவி செய்யும் பண்பு

மு.வ. வைச் சிரித்த முகத்தோடு நேரில் கண்டபோது எனக்கு மிக மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருந்தது. மாணவனுகப் பதிவு செய்வதற்கு வேண்டிய வேலைகளைக் கவனித்து விட்டு, அன்று விடுதித் தலைவராக இருந்த வரலாற்றுப் பேராசிரியர் கே. கே. பிள்ளை யிடம் என்னை அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தி, எனக்கு விடுதி வசதிகளை விரைவிற் செய்து தருமாறும் வேண்டிக் கொண்டார். மு.வ. அதன்பின் சென்னையில் என் வசதிகளைப் பற்றிப் பலவாருக விசாரித்து விட்டு, ஏதாவது பிரச்சினை நேருமிடத்துத் தயக்கமின்றி உதவி நாடத்-தக்க நல்லவர் எனத் தம்முடைய ஒரு மாணவர் பெயரையும் குறிப்பிட்-டார். அவர்தான் இன்று மலேசியப் பல்கலைக் கழகத்திலே தமிழ் விரி-வுரையாளராகவுள்ள நண்பர் கலாநிதி இரா. தண்டாயுதம் ஆவார்.

ஒரு நாள் மு.வ. தம் வீட்டுக்குச் சாப்பாட்டுக்கு அழைத்திருந் தார். பஸ்ஸிலே செல்லும்போது அவரது வீடு இருக்குமிடத்தை அறி யும் நோக்கோடு அருகில் இருந்தவரிடம் பேச்சைக் கொடுத்தேன். அவர் மு.வ. வின் வீடு எங்கே இருக்கிறதென்பதைச் சரியாகக் கூறினர். அப்போது டாக்டர் மு.வ.வைத் தெரியுமா என்று அவரிடம் கேட்டேன். ''அவரை நான் பார்த்ததே இல்லீங்க. அந்த அம்மாவை நல்லாத் தெரியும். அவங்கதான் எப்பவும் கடைப்பக்கம் வருவாங்க'' என்று அவர் கூறினர், வீட்டுக்குச் செல்கிறவர்களை இதமாக உபசரிக்கும் பொறுப்பினை முக்கியமாக மு.வ. வின் மூத்த மருமகளும், வீட்டு வேலை களையும் தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பினை அவரது துணைவி-யாரும் ஏற்றிருப்பதைப் பின்னர் அவதானித்தேன். அந்தக் காரியங்-களைப்பற்றிய கவலையின்றி மு. வ. படித்துக் கொண்டும், எழுதிக்-கொண்டும், பேரப் பிள்ளையான புகழேந்தியுடன் அரட்டையடித்துக் கொண்டும் இருப்பார்.

உணர்ச்சிவசப்படாதவர்

மு. வ. பிரச்சினைக்குரிய சிக்கலான விஷயங்களிலிருந்து ஒதுங் கியிருக்க விரும்பியவரென்றே நினைக்கிறேன். அதே வேளையிற் பிற-ரைச் சிக்கலுக்குள் மாட்டி வைப்பதையும் அவர் விரும்பாதவர். மிகுந்த பொறுமையை அவரிடம் அவதானித்த நான் அவர் உணர்ச்சி வசப்பட்டதை என்றும் கண்டதில்லை. தமது நாவலொன்றுக்கு மு. வ. விடம் அணிந்துரைபெற்ற ஓர் எழுத்தாளர் கூட்டமொன்றில் மு. வ. வைக் கிண்டல் செய்தாராம். அதனை இன்னெருவர் வந்து

மு. வ. விற்கு வர்ணித்தார். எதுவித சலனமுமின்றி முழுவதையும் கேட்ட மு. வ., அதற்கென்ன ? அவரும் தமிழ் வாத்தியார், நானும் தமிழ் வாத்தியார். இதையெல்லாம் நீங்கள் பெரிது படுத்தலாமோ? என்று நிதானமாகக் கூறிவிட்டுப் பேச்சை மாற்றிக் கொண்டார். பிறர் மனதை நோகவைக்க விரும்பாத மு.வ. தம்மனதை நோகவைக்கவும் விரும்புவதில்லை.

சில கல்விமான்கள் தாம் நினைப்பதுதான் சரியென்று பிடிவாதம் பிடிப்பதும், தம்கருத்தைப் பிறர் ஒப்பாதவிடத்து ஆத்திரமடைவதும் தம் கருத்துக்களைப் பிறரிடம் திணிக்க முயல்வதும் உண்டு. இக்குணங்களற்றவர் மு. வ. கருத்து மாறுபட்டுக்கு மதிப்புத் தருகிற- தம் கருத்துக்களைத் திணிக்க நினையாத அவரது பண்பு என்னை மிகவும் கவர்ந்தாகும். வேண்டியவிடத்து, அவர் ஆலோசனை கூறவோ உதவி செய்யவோ பின்வாங்கார். வேண்டாதவிடத்து அல்லது வேண்டப்படாத விடத்து அவர் ஒதுங்கியிருப்பார். தனக்குப் பிடித்தவர்களைத் தலைக்கு மேல் தூக்குவதிலோ, பிடிக்காதவர்களைக் காலின் கீழ் மிதிப்பதிலோ அவர் என்றும் ஆர்வம் காட்டியதில்லை.

மு. வ. எவ்வாறு வகுப்பு நடாத்துகின்றுர் என்பதைக் காணும் ஆவலால் ஒருநாள் அவரது எம்.ஏ. மாணவர்களுக்கான திறனுய்வு வகுப்புக்குச் சென்றிருந்தேன். நாவல் இலக்கியம் தமிழில் தோன்றி வளர்ந்த கதையை மிகவும் சுவைபட அவர் கூறினுர். முந்திய பரம் பரையைச் சேர்ந்த மு. வ. வின் ஆசிரியரும் தோழருமான திரு. வி.க. நாவலை படிக்கவே மாட்டாராம். மு. வ. எழுதிய 'கள்ளோ ? காவிய மோ' என்ற நாவல் திரு. வி. க. அறிந்த ஒருவரது வாழ்வோடு சம்பந்தப்பட்டது. ஆகையால் அந்நாவலின் கையெழுத்துப் பிரதியை மு. வ. வாசித்துக்காட்டத் திரு. வி. க. செவிமடுத்தாராம் அவ்வளவே.

நாவல் பிரசுர அனுபவம்

புதிய இலக்கிய வகைகளைப் பழந்தமிழ்ப் புலவர்கள் வெறுத் தொதுக்கிய காலத்தில் நாவல் எழுத தொடங்கிய ஒரு தமிழ்ப்புலவர் மு. வ. முதல் நாவலை எழுதி முடித்த மு. வ. அதனை ஒரு புத்தக வெளியீட்டாளரிடம் தந்தார். மு. வ.வின் ஓரிரு பழந்தமிழிலக்கியக் கட்டுரை நூல்களை வெளியிட்ட அவ்வெளியீட்டாளர் நாவலை வேண்டிப் பலகாலமாகியும் அதனை அச்சேற்றத் துணியவில்லை. தமிழ் வாத்தியாருடைய நாவலை யாராவது படிக்கக் கிடைப்பார்களா என்ற

சந்தேகமே அதற்குக் காரணம். தன் நாவல் வெளிவராதது கண்டு கவலைப்பட்ட மு. வ. அச்சிடும் செலவுகளைத் தாமே தருவதாக முன்வந்தார். விற்பனைப் பொறுப்பை வெளியீட்டாளர் ஏற்றுக்கொண்டார். மு. வ. எழுதிய நாவல்கள் விற்ற மாதிரித் தமிழ் நாட்டில் வேறு யாருடைய நாவல்களும் விலைபோனதில்லை. இதை எதிர்பாராத அந்தப் புத்தக வெளியீட்டாளரே நடந்ததையெல்லாம் ஒருநாள் எனக்குச் சொன்னார். இப்படியாகும் என்று தெரிந்திருந்தால், வெளியீட்டு உரிமையையும் அவரே ஏற்றிருப்பார்.

மாணவர்கள் மிகவும் துன்பப்பட்டு வேலை செய்வதாகவும், விஷயங்கள் புரியாமல் திணறுவதாகவும் காட்டிக் கொண்டால்தான் இந்தியப் பேராசிரியர் பலருக்குத் திருப்தியாயிருக்குமென்று பலர் சொல்லக்கேட்டிருக்கிறேன். எனவே ஆராய்ச்சி மாணவர்கள் காலைமுதல் மாலைவரை பேராசிரியரையும் நூல் நிலையத்தையும் சுற்றிச் சுற்றி வரவேண்டுமாம். அவ்வாறு செயற்படும் இயல்பினைப் பெறாத யான் மு. வ. வை என் ஆராய்ச்சியை நெறிப்படுத்தும் பேராசிரியராகப் பெற்றது நற்பேறேயாகும்.

### மனித நலனில் நாட்டம்

அதிக நாட்களாக என்னைக் காணக் கிடைக்கவில்லையென்றால், நேரிற் சந்திக்குமாறு ஒரு குறிப்பினை எழுதி வரவு இடாப்புக்குள் வைத்துவிடுவார். அத்தகைய ஒரு குறிப்பினைக் கண்ட ஒருநாள் மாலை இசைவிழா பார்ப்பதற்கு அண்ணாமலைமன்றத்துக்குச் சென்றேன். வாசலில் மு. வ. நின்றார். எனது ஆராய்ச்சி காலத்தோடு நிறைவுபெற வேண்டுமென்பதில் என்னைக் காட்டிலும் மு. வ. அதிக அக்கறையுடையவர் என்பதையும், காலத்தை வீணாக்கும் விசயத்தில் அவர் மிகவும் கண்டிப்பானவர் என்பதையும், ஆராய்ச்சியைக் காட்டிலும் அப்போதைக்கு இசைவிழா முக்கியமா என்று கண்டிக்கும் உரிமை அவருக்கிருந்ததென்பதையும் நான் அறிந்திருந்தமையால் குறுகுறுக்கும் நெஞ்சோடு தயங்கித் தயங்கிச் சென்றேன். மலர்ந்த முகத்தோடு என்னை வரவேற்ற மு. வ. அருகில் நின்ற பிறிதொரு பேராசிரியருக்கு என்னை அறிமுகம் செய்துவிட்டு இசைவிழாப் பற்றிச் சின்னக் குழந்தையைப் போலப் பேச ஆரம்பித்து விட்டார், அவருடன் பேசுவது மிக இதமாயிருக்கும். பழகியபின் அவர் உரிமையோடு 'உனக்கென்ன' 'நீ என்ன' என்று பேசத் தொடங்கி விட்டாராயின் அது மிகவும் ஆனந்தமாயிருக்கும்,

இசைவிழாக் காலங்களில் அண்ணுமலை மன்றத்திலே பகலில் நடைபெறும் பண்ணுராய்ச்சி மாநாடுகளில் மு. வ. செய்யும் பங்களிப் பினைப் பற்றிப் பலர் அறியார். இசைவல்லாருடனும் ஓதுவார்களுட-னும் தேவாரங்களுக்குப் பண் அமைப்பது குறித்து அவர் விவாதிப்பது சுவையாகவும் அவரது இசைப் புலமையைக் காட்டுவதாகவும் இருக்கும்.

வெறும் இலக்கியவாதியாகவன்றி, மனித நலனிலும் நாட்டங்-கொண்டவர் மு. வ. ஏற்றத் தாழ்வற்ற ஒரு சோசலிஸ அமைப்பே அவரது இலட்சியக் கனவாக என்றும் இருந்தது. ஒடுங்கிய இன-வாதத்தையோ வகுப்பு வாதத்தையோ துவேஷத்தையோ அவர் நாடவில்லை. தமிழ்ப்புத்தகாலய உரிமையாளர் கண. முத்தையா வீட்டில் நடந்த ஒரு சிறு விருந்தின் பின் மு. வ. மனந்திறந்து பல விஷயங்களைப் பற்றி உரையாடக் கேட்டேன். அமெரிக்காவில் சில காலம் பணியாற்றிவிட்டுத் திரும்பியிருந்த அ. ச. ஞானசம்பந்தன் அமெரிக்காவில் இளைய தலைமுறையிடம் தாம் கண்ட ஒழுக்க முரண்பாடுகளையும், நிம்மதியற்ற பீதியையும், கிறுக்குப்போக்கு-களையும் சுவையாக விவரித்துக் கொண்டிருந்தார். பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் சொந்த நாட்டிலே அவதானித்த ஊழல், இலஞ்சம், ஒழுக்க முரண்பாடு பற்றிய பல விஷயங்களைக் குறிப்பிட்டார். மு. வ. சோவியத் நாட்டில் மலர்ந்த சோஷலிச அமைப்பிலே தாம் பெற்ற அனுபவங்களை விளக்கிய விதம் ஏனையவர்-கள் எழுப்பிய பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் எது தீர்வு மார்க்க-மாகும் என்பதைச் சுட்டுவது போல் இருந்தது.

அவரின் பூதவுடலை இன்று எம்மிடமிருந்து பறித்துவிட்ட அந்-தக் கொடிய மாரடைப்பு முன்னரும் ஒரு தடவை மு. வ.வைத் தாக்கிய-போது, படுக்கையிற் கிடந்த அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர் 'விவேகானந்தரின் சம்பாஷணைகள்' என்ற நூலைப் படித்துக்-கொண்டு படுத்திருந்தார். அன்று விவேகானந்தர் தினம் என்பதை எனக்கு நினைவு படுத்திய மு. வ. எந்த ஒரு பெரியாரின் நினைவு தினத்-திலும் அவருடைய ஏதாவது ஒரு நூலைக் காலை முதல் வாசிக்கும் தம் வழக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். மு. வ. வையும் இன்று பிரிந்து விட்டதால் அவரது நூல்களிலேயே இனியவரைத் தரிசிக்க வேண்டும்.

தினகரன் — 20—10—'74

# பண்பிற் சிறந்த பெருமகன்

பேரறிஞர் நாரண. துரைக்கண்ணன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டாம் ஆண்டு புதுமை இலக்கியம் படைக்கிறோம் என்ற பெயரால் 'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என்று தங்களுக்குத் தாங்களே பெயர் சூட்டிக்கொண்டு ஒரு சிறு கூட்டத்தினர் தமிழ்மொழியை அதன் நடையைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருந்த காலம் அது. அச்சிறு கூட்டத்துக்காகவெனவே நடத்தப்படுவது போல் 'மணிக்கொடி' என்ற பெயரால் ஒரு இதழை டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களும் ஸ்டாலின் சீநிவாசன் அவர்களும் சென்னை நகரில் நடத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு, கல்கி போன்ற எழுத்தாள சகோதரர்களால் பிற்காலத்தில் 'எழுத்தாளர் முதல்வர்'' என அன்பாக அழைக்கப்பட்ட வ.ரா. (வ. இராமசாமி ஐயங்கார்) அவர்கள் ஆசிரியராயிருந்தார்.

தமிழில் போதிய பயிற்சியில்லாமல் ஆங்கிலத்திலும் அரைகுறை அறிவே கொண்டிருந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்போர் சிலர் தங்கள்மனம் போனபடி கிறுக்கிவைப்பதை யெல்லாம் வ.ரா. அவர்கள் நல்ல நடையென்றும் 'நாம் எழுதுவது அங்காடிக் கூடைக்காரிக்கும், ரிக்ஷாக்காரனுக்கும்கூடப் புரியக் கூடியதாயிருக்க வேண்டும். ஆதலால், தமிழ் எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதைகளைப் பேச்சு நடையில் எழுத வேண்டுமேயொழிய பண்டித நடையில் எழுதக் கூடாது' என்று கூறிகொண்டிருந்தார்.

இவருக்குத் துணை போவதுபோல், ரசிகமணி டி.கே.சி. அவர்கள் கம்பன் கவிச்சுவையை மக்களிடையே பரப்புவதென்ற பெயரால், 'இலக்கண முள்வேலி போட்டுக் கவிதைகளைக் கெடுத்து விட்டார்கள்' எனக் குற்றஞ்சாட்டித் தமிழ்ப்புலவர்களைக் கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்தார். அத்துடன் அவர் நிற்கவில்லை. சந்தி மிக வேண்டாத இடங்களிலெல்லாம் மிக வைத்து அவர் கிறுக்கு நடையொன்றைப் புகுத்த முயன்றார்.

வ. ரா. அவர்கள் மகாகவி பாரதியாரைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டு, அவரைத் தமிழ் மக்களுடைய உள்ளங்களில் குடியேறி வைத்ததோடல்லாமல், தேசபக்தியுடன் சமூக சீர்திருத்த நோக்கங்கொண்டு பல சிறுகதைகளையும் நாவல்களையும் சரளமான நடையில் எழுதிப் புதுமை இலக்கியத்தை வளப்படுத்தியிருக்கிறார்.

டி. கே, சி. அவர்களோ 'ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில்தான் சிறந்த கவிதைகள் இருக்கின்றன' என்று கூறி மேனாட்டு மோகங்கொண்டு அலைந்தவர்களை யெல்லாம், தமிழில் நல்ல கவிதைகள் இருக்கின்றன; மற்ற மொழிகளிலுள்ள கவிதைகளையெல்லாம் விஞ்சக்கூடிய அளவில் சிறந்த கவிதைகள் இருக்கின்றன என்று ஆணித்தரமாக அடித்துச் சொல்லித் தமிழ்க்கவிதைப் பித்துக்கொள்ளச் செய்திருக்கிறார். புலவர்களிடையே மட்டும் உலவிக் கொண்டிருந்த கம்பன் கவிதைகளை அவர் பாமர மக்களும் கேட்டு ரசிக்கும்படியாகச் செய்திருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட இருபெரும் அறிஞர்களும் இலக்கணத்தில் தங்களுக்குப் போதிய பயிற்சியில்லாதது காரணமாகத் தமிழ்புலவர்களை வெறுத்து வந்ததுடன், ஒருவரையறையன்றி உரைநடையை எழுதலாம் என்று சொல்லிவந்ததைக்கண்டு நான் மிகவும் வருந்தினேன்.

வ. ரா. அவர்களும் டி. கே. சி. அவர்களும் வற்புறுத்தி வந்த உரைநடைக் கொள்கையைக் குறித்து வாசகர்கள் என்ன கருத்துக்கொண்டிருக்கிறார்கள் ? பெரும்பாலர் எவ்விதமான உரைநடையை விரும்புகிறார்கள் என்று நான் அறிந்து கொள்ள விரும்பினேன்.

ஆகவே, நான் ஆசிரியனாக இருந்து இலக்கியப் பணிபுரிந்து வந்த ''பிரசண்ட விகடன்'' இதழில் ''பேச்சு நடை வேண்டுமா? இலக்கிய நடை வேண்டுமா ?'' என்ற தலைப்பில் ஒரு விவாத அரங்கைத் தொடங்கினேன். பட்டிமண்டபம் போல் பல்சுவையுடன் நடை பயின்ற இவ்விவாதத்தில் முன்னணி எழுத்தாளர்களும் வாசகர்களும் பலர் கலந்து கொண்டனர்.

''பேச்சு நடையே வேண்டும்'' என்ற வாதத்தத்துவத்தை நிலைநாட்ட தொ. மு. சிதம்பர ரகுநாதன் முனைந்து நின்றார். வித்வான் எம். சாம்பாசிவம் 'இலக்கிய நடையே இருக்கவேண்டும்' என்று தக்கக் காரணங்காட்டித் தன் கட்சியை நிலைநிறுத்த முயன்றார். இந்திமொழி வல்லுநர் க. இராஜகோபால். தி. முத்துராம கிருஷ்ணன், ந. வேங்கடராமன், புலவர் க. சிதம்பரம்பிள்ளை, இராம. பெரியசாமி, வத்ஸன் முதலிய தமிழன்பர்கள் இருகட்சிகளிலும் கலந்து கொண்டு வாதிக்கின்றனர்.

இவ்விவாத அரங்கை நான் தொடங்குகையில் இது இவ்வளவு தீவிரமாகும் என்று எதிர்பார்க்கவில்லை. நான் எந்நோக்கத்தோடு இதைத் தொடங்கினேனோ அந்நோக்கம் முழுமையாக வெற்றி பெற்றது. எனக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது.

இவ்விவாத அரங்கு விளையாட்டைப் போல் ஆறு திங்களுக்கு மேல் நீண்டது. மேலும் வளர்ந்துகொண்டுபோகவேண்டாமென்ற எண்ணத்தில் நான் இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டியதாயிற்று.

இவ்விவாத அரங்கின் இருதரப்பு வாதங்களையும் ஆராய்ந்து நன்முடிவு கூறுமாறு பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரை நான் கேட்டுக் கொண்டிருந்தேன். என் வேண்டுகோளுக்கு இசைவு தந்திருந்த அவர் விவாதம் முடிவுறுஞ் சமயத்தில், மொழியியல் கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொள்வதற்காகக் கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார். அவருக்குப் பதிலாக, அச்சமயத்தில் வேறு அறிஞர்

எவரையும் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லே. ஆதலால், நானே இருதரப்பு வாதங்களில் காணப்பட்ட அரிய கருத்துகளேச் சீர்தூக்கிப்பார்த்து, பெரும்பான்மையோரின் கருத்துரைகளே உளத்திற் கொண்டு நடுநிலேயில் நின்று முடிவுரை தர வேண்டியதாயிற்று. ''மைவண்ணன்'' என்ற புனேபெயரில் என் கருத்தை வெளியிட்டிருந்தேன்.

பேச்சு நடை என்ருல் எதைப் பேச்சுநடை என்பது? ஒவ்வொரு மாவட்டத்தினரும் ஒவ்வொரு விதமாகப் பேசுகின்றனர். ஒவ்வொரு சாதியினரும் சமயத்தினரும் ஒவ்வொரு விதமாக உரையாடுகின்றனர். பிராம்மணர் ஒரு விதமாகப் பேசுகின்றனர். அதிலும் ஸ்மார்த்தப்பிராம்மணர் பேசுவது வேறு; வைணவ பிராம்மணர் பேசுவது வேறு; மாத்வபிராம்மணர் பேசுவது ஒரு விதம்; இஸ்லாமியத் தமிழர் பேசுவது மற்ருெரு விதம்; கிறிஸ்துவத் தமிழர் பேசுவது இன்னெரு விதம்; இலங்கை தமிழரிலேயே யாழ்ப்பாணத் தமிழர் ஒருவிதமாகப் பேசுகின்றனர்; பர்மாவாழ் தமிழர் பேசுவது ஒருவிதம்; மலேயாவில் குடியேறியிருக்கும் தமிழரின் பேச்சுப் போக்கு தனி. இவற்றில் எந்தப்பேச்சை யார் பேசும் பேச்சை உரைநடையாகக் கொள்ளுவது? எப்பிரிவினரின் பேச்சை எல்லாப் பகுதியினரும் பின்பற்றும் பொது நடையாக்குவது என்று கேட்டு மடக்கினர், இலக்கிய நடைவேண்டும் என்ற அணியினர். இக்கேள்விக்குப் பேச்சு நடையே வேண்டும் என்ற அணியினரால் சரியாகப் பதில் சொல்ல முடியவில்லே.

நான் ' இலக்கிய நடை என்ருல் பலருக்குப் புரியாத முறையில் புலமை தோன்ற எழுதப்படும் பண்டித நடையல்ல' என்று முதலில் தெளிவுப்படுத்தினேன். 'எல்லோருக்கும் புரியும்படியாக, பழகு தமிழில் இனிய எளிய நடையில் எழுதுவதைத்தான் இலக்கிய நடையென்று சொல்ல வேண்டும்' என்று விளக்கமும் தந்து தீர்ப்பு வழங்கினேன்.

இம்முடிவுரையில் என் மனத்தை நீண்ட காலமாக உறுத்திக்கொண்டிருக்கும் ஓர் எண்ணத்தையும் ஆற்ருமையோடு வெளிப்படுத்தினேன்.

''காலத்துக் கேற்றவாறு இலக்கியம் உருவாவதற்கும் வளர்வதற்கும் உறுதுணேயாக இருக்க வேண்டியவர்கள் இலக்கியங்களேக்கற்றுத்தரும் பெரும்பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ்ப் பேராசிரியர்களேயாவர்; ஆனல், அவர்களோ தாங்கள் உண்டு; தங்கள் தமிழ் உண்டு: தாங்கள் பாடஞ் சொல்லித்தரும் பழைய இலக்கியங்கள் உண்டு' என்ற

அளவோடு திருப்தியடைந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் வேகமாக வளர்ந்து வரும் புதுமை இலக்கியப் படைப்புக்களைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படுவதேயில்லை ; அவை எப்படியிருக்கின்றன ? அவை தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவதற்கு எந்த அளவு உதவியாக உருவாகி வருகின்றன என்று அறிந்து கொள்ளக் கூடப் படித்துப் பார்ப்பதில்லை.

தமிழ்ப் பேராசிரியர்கள் புதுமை இலக்கியப் படைப்பைப்-புரவலராயிருந்து வளர்க்கவும், பாதுகாக்கவும் கடமைப்பட்டவர்கள், இன்னும் கேட்டால் அவர்களும் புதுமை இலக்கியப் படைப்புப் பணியில் ஈடுபடுவது நல்லது.

'யார் யாரோவெல்லாம் நாங்கள் தான் இலக்கியம் செய்கிறோம். புதுமை இலக்கியத்துக்கு நாங்கள் தான் சொந்தக்காரர்கள்' என்று சொல்லி உரிமை கொண்டாடி வருகிறார்கள். இலக்கியத்துக்கு உண்மையிலேயே உரிமையுடைய இவர்கள் இப்படி ஒதுங்கியிருக்கலாமா ? அவர்கள் இலக்கியப் படைப்புத் துறையில் துணிந்து இறங்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்''

இவ்வுரை தமிழ்ப் பேராசிரியர்கள் பலருடைய உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறது. பயனுள்ள இவ்விவாத அரங்கைத் தொடங்கி நன்முடிவு ஏற்பட உதவியதற்காகப் பலர் எனக்குப் பாராட்டுத் தெரிவித்திருந்தனர். 'மைவண்ண'னுக்கும் புகழ்மாலை சூடியிருந்தனர்.

டாக்டர் மு. வரதராசன் அவர்கள் என் இல்லத்துக்கு நேரிலேயே வந்து எனக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள். தமிழ்ப் பேராசிரியர்களுக்கு நான் விடுத்துள்ள வேண்டுகோளை அவர் வரவேற்றுப் பெரிதும் வாழ்த்தினர்.

''என்னை வறிதே வாழ்த்திவிட்டுப் போவதில் பயனில்லை. என் வேண்டுகோளை உண்மையிலேயே நீங்கள் மதிப்பதானால், நீங்கள் அதற்கு உடனடியாகச் செயலுருவம் கொடுக்க வேண்டும். உங்களைப்-போன்றோர் படைப்பு இலக்கியப் பணியில் ஈடுபடுவது அவசியம்'' என்று வற்புறுத்தினேன் நான்.

''எனக்கும் விருப்பந்தான் உங்களுடைய நாவல்களையும் சிறு கதைகளையும் எங்கள் கல்லூரி மாணவர்கள் பலர் விரும்பிப் படிப்பதைப்-பார்க்கும்போது எனக்கும் எழுத வேண்டுமென்று ஆசையுண்டாகத்-

தான் செய்கிறது. ஆனால், எழுத வர வேண்டுமே? எல்லோராலும் முடிகிற செயலா?'' என்றார் மு.வ. அவர்கள்.

''ஏன் முடியாது? நீங்கள் அடிக்கடி பெர்னாட்ஷாவின் நாடகங்களை விரும்பிப் படிப்பதாக, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் சொல்லுகிறார்களே! நீங்கள் நினைத்தால், முயன்றால், பெர்னாட்ஷா போல ஒரு நாடகாசிரியராக, எழுத்தாளராக நிச்சயம் வர முடியும்'' எனக்கூறி நம்பிக்கையூட்டினேன்.

''முயன்று பார்க்கிறேன், ஐயா! உங்கள் அன்புக்கு நன்றி'' எனக்கூறி மு. வ. அவர்கள் விடைபெற்றுச் சென்றார்.

அத்துடன் நான் விடவில்லை. எங்கள் 'ஆனந்த போதினி','பிரசண்டவிகடன்' களுக்கு ஆண்டு மலர், பொங்கல் மலர்,சிறப்பு இதழ்கள் வெளியிடுகையில் சிறுகதை எழுதியனுப்புமாறு மு. வ. அவர்களுக்குக் கடிதம் எழுதி வந்தேன். மு. வ. விடம் கதை கேட்குமாறு சகோதரப் பத்திரிகாசிரியர்கள் சிலரையும் தூண்டி விட்டேன்.

சங்க இலக்கியக் கட்டுரைகள் எழுதுவதாகச் சொன்னால், ''அவற்றையெழுதுவதற்குப் பல பெரும் புலவர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். தற்கால இலக்கியங்களைப் படித்தின்புறுவதில் ஆர்வமுடைய நீங்கள் உங்களுடைய சிந்தனைகளைச் சிறுகதைகளாக, நாவல்களாக வடித்துத் தாருங்கள்'' என வற்புறுத்தலானேன். என் நச்சரிப்பைப் பொறுக்க முடியாமல் மு. வ. அவர்கள் சிறுகதைகளில் சிலவற்றை எழுதித்தந்து வந்தார். அவ்விதம் பல பத்திரிகையில் வந்த சிறுகதைகள் தாம், ''விடுதலையா?'' என்ற தலைப்பில் 'இன்பநிலையம்' வெளியீடாக வந்தது.

மு. வ. அவர்கள் 'அன்னைக்கு', 'தம்பிக்கு', தங்கைக்கு', எனப் புதிய முறையில் கடிதக் கட்டுரைகளும் எழுதினார்.

இவற்றில் பல, சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தொடங்கிச் சிலகாலம் நடத்தி வந்த 'தமிழ் முரசு,' திங்கள் இதழில் தொடர்ந்து வெளி வந்தன. மொழிப் பற்றையும் இனப் பற்றையும் தூண்டும் இலக்கிய இதழான ''தமிழ் முரசின்'' வளர்ச்சிக்காக மு. வ. அவர்கள் பிறருக்குத் தெரியாமல் பொருளுதவியும் புரிந்திருக்கிறார்.

சிறுகதை எழுதுவதை விட, நாவல் எழுதுவதில்தான் மு. வ. வுக்கு ஆர்வம் அதிகமாயிற்று. நாவலில் முழுநாட்டம் பதிந்ததும் அவர் ''செந்தாமரை'', ''கள்ளோ காவியமோ?'' போன்ற நாவல்களை எழுதலானார்.

''கள்ளோ? காவியமோ?'' நாவலை மு. வ. வின் மாணவர்களில் ஒருவரான ம. ரா. போ. குருசாமி சக்தி வெளியீடாகக் கொணர மிகப்பாடுபட்டார். ஆனால், சக்தி வை. கோவிந்தன் இதை ஒரு நாவலாகக் கருதவில்லை. கொண்டு வந்து தந்த குருசாமியிடமே அவர் அதைத் திரும்பிக் கொடுத்துவிட்டார். இப்படித் திருப்பியனுப்பப்பட்ட நாவல் தான் பின்னர் தமிழ்வளர்ச்சிக்கழகத்தின் பரிசைப்பெற்றது.

இந்த முதல் அனுபவமே அவருக்கு நல்ல படிப்பினையைத்தந்தது. அடுத்து அவர் எந்தப் பதிப்பகத்தினர் தயவையும் நாடாமல் தாமே தம் நூல்களை வெளியிட்டு விற்பனைக்கும் ஏற்பாடு செய்துகொண்டார். இத் தன் முயற்சியில் அவர் ஒரு பெரும் வெற்றியையே கண்டு விட்டார். இவ்வகையில் இவருக்குத் தக்க யோசனை சொல்லித்தம் சாது அச்சுக்கூடத்தில் அச்சிட்டுத் தந்து பேருதவி புரிந்தவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் ஆவார்.

இவருடைய நூல்கள் சில தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுகளைப்பெற்றதுபோலவே 'அகல் விளக்கு' என்ற நாவல் சாஹித்ய அகாடமி பரிசையும் பெற்றது.

இவ்விதம் புதுமை இலக்கியப் படைப்புகளால் டாக்டர் மு.வ. அவர்கள் பெற்ற பெரும் புகழும் பொருளுந்தான் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவராகும் அளவுக்கு உயர்வைத் தந்தது; வெளிநாடுகள் பலவற்றுக்கு இலக்கியத் தூதுவராகச் செல்லும் செல்வாக்கையும் தந்தது என்றால் மிகையாகாது.

டாக்டர் மு.வ. அவர்கள் இயற்கையிலேயே அடக்கமும் அமைதியும் வாய்ந்தவர், அவர் செல்வம் செல்வாக்கால் உயரஉயர அடக்கத்தை அதிகமாக்கிக் கொண்டார்; அமைதியே வடிவானார்.

தக்கவர்கள்பால் அன்பும் மதிப்பும் காட்ட அவர் எப்போதும் தவறியதேயில்லை. பிறரிடம் குற்றங்குறை காணும் இயல்பே அவருக்குச் சிறிதும் கிடையாது. யாரைப் பற்றியும் புறங்கூறி நான் கேட்டதில்லை. குற்றத்தையும் குணமாகக் கொள்பவர் அவர்.

புலவர் மு.வ. வாக அவர் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்ததிலிருந்து நான் அவரை அறிவேன். அதற்கு முன்பே திரு. வி.க. அவர்கள் வாயிலாக இளைஞர் மு. வ. வின் குணநலன்களைக் கேட்டறிந்திருக்கிறேன். அடுத்தடுத்த பேட்டையில் வாழ்ந்து அன்புத் தம்பியாகப் பழகி வந்த என்னிடம் திரு.வி.க. தம் அன்புக்கு ஆளானவர்களைப் பற்றியெல்லாம் விவரிப்பது வழக்கம்.

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் திரு.வி.க. தான் மு. வ. வை எனக்கு நண்பராக்கி வைத்தார். நாங்கள் சென்னைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் தெ.பொ.மீ. நடத்தி வந்த இலக்கியக் கூட்டங்களிலும் பிற தமிழ்க் கூட்டங்களிலும் சந்தித்து அளவளாவுவோம்.

மு.வ. அடிக்கடி என் குடிலுக்கு வருவார். நானும் சேத்துப்பட்டிலுள்ள அவருடைய இல்லத்துக்குச் செல்லுவேன். இருவரும் ஒரே பகுதியில் வசித்தால் இன்னும் அணுக்கமாகப் பழகி நட்பாடுவதற்கு வசதியாயிருக்கும் என்ற எண்ணத்தில் அவர் தமக்கெனச் சொந்தமாக வீடு அமைத்துக் கொள்வதற்கென மனை தேடுகையில் நான் வசிக்கும் சூளைமேடு பகுதியிலேயே இருத்தல் நலம் எனப் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருக்கும்அரங்கநாதன் என்ற நண்பர் மூலம் சொல்லி அவ்விதமே நெடுஞ்சாலையில் நான்கு மனைக்கட்டை நாலாயிரத்துக்கு விலை பேசி வாங்கினர். அவருக்கு மாணவராயிருந்த ரா. சீநிவாசன் தான் உடனிருந்து பத்திரம் எழுதிப் பதிவு செய்து உதவினர்.

கவிஞர் எஸ்.டி. சுந்தரமும் எங்களுடன் வசிக்க விரும்பி அதற்கான முயற்சியைச் செய்யலானர்.

ஆனல், நாங்கள் வசிக்கும் கோடம்பாக்கத்தையும் சேத்துப்பட்டையும் பிரித்துக் கொண்டிருந்த கூவம் ஆறுதான் நாங்கள் ஒரே பகுதியில் வாழ்வதற்கான முயற்சியிலும் குறுக்கிட்டுத் தடுத்துவிட்டது.

டாக்டர் மு.வ. சூளைமேட்டில் வீட்டு மனை வாங்கிய காலத்தில் கூவம் ஆற்றுக்குப் பாலங்கிடையாது. பெருமழை பெய்தால் ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிப் போக்குவரத்தையே தடுத்து விடும். மு. வ. வின் மூத்த மகன் திருநாவுக்கரசு அப்போது பள்ளிச் சிறுவன். மழைக் காலத்தில் பிள்ளைகள் பள்ளி செல்வதற்கு இடைஞ்சலாயிருக்கும் என்று கருதி மு. வ. சூளைமேட்டில் வீடு கட்டும் எண்ணத்தை அறவே

விட்டு, அமைந்த கரையில் செல்லம்மாள் வீதியில் மனைவாங்கி இல்லம் அமைத்துக் கொண்டார்.

இதனல் எங்கள் அணுக்கங் குறையவில்லை. செல்வம் செல்வாக்கு மிகுந்துள்ள நிலையிலும் டாக்டர் மு. வ. என்போன்ற நண்பர்களிடம் மாரு அன்பு கொண்டு பெருந்தன்மையாக நடந்து கொண்டிருந்தார். இதற்கு ஒரு உதாரணங் காட்ட விரும்புகிறேன்.

பிரபல விஞ்ஞானியாயிருந்த ஜி.டி. நாயுடு அவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்குச் சென்று வந்தது பலருக்குத் தெரிந்திருக்கும். அவ்வாறு போய்த் திரும்புகையிலெல்லாம் அவருடைய அன்புக்கு ஆட்பட்டவர்களுக்கு ஏதாயினும் அருமையான பொருள்களை வாங்கி வந்து தருவது அவர் வழக்கம். ஒரு முறை ஜெர்மனிக்குச் சென்ற அவர் நான் படித்தறியத்தக்கவை எனக்கருதிய சில ஆங்கில இலக்கிய நூல்களை உடனடியாக வாங்கி அங்கிருந்தே தபாலில் அனுப்ப விரும்பியிருக்கிருர். ஆனல், என்னுடைய முகவரி அவருக்கு அச்சமயம் நினைவுண்டாகவில்லை போலும். சென்னை பச்சையப்பன் கல்லூரிக்கு அனுப்பி அப்புத்தங்களை என்னிடம் சேர்ப்பித்து விடுமாறு டாக்டர் மு. வ. வுக்கு அவர் கடிதமெழுதியிருக்கிருர். டாக்டர் மு. வ. தம் மாணவர் யார் மூலமாகவாயினும் கல்லூரியாட்கள் எவர் வாயிலாகவாயினும் அப்புத்தகங்களை என்னிடம் அனுப்பியிருக்கலாம். அவருடைய மாணவர்கள் பலரும் என்னைப்பார்த்துப்பேச அடிக்கடி வருவதுண்டு. கந்தசாமி கல்லூரி முதல்வராயிருந்த மா. கி. தசரதன் எம்.ஏ., சென்னை நீதிமன்ற வழக்கறிஞர் அ. கஜபதி போன்ருர் வாரத்துக்கு ஒரு முறையாயினும் என்னைச் சந்தித்து விட்டுச்செல்வார்கள். அவர்கள் டாக்டர் மு. வ. விடம் வாழ்க்கைக்கு வழிகாட்டி என்று மதித்து அவர்பால் பேரன்பு பூண்டு ஒழுபவர்கள். இவர்களில் யாராயினும் ஒருவரிடந்தந்தனுப்பினல் கூட மகிழ்ச்சியுடன் அப்புத்தகங்களை என்னிடம் சேர்த்திருப்பார்.

டாக்டர் மு. வ. அவ்விதம் யாரிடமும் புத்தகங்களை எனக்குக்கொடுத்தனுப்பவில்லை. அப்புத்தகங்கள் தபாலில் வந்த அன்று மாலையே அவர் தாமே அவற்றை எடுத்துக் கொண்டு வந்து என்னிடம் தரலானர்.

இவருடைய இச்செயலைக் கண்டு நான் விம்மிதமுற்றுவிட்டேன்,

"இவற்றை வேறு யாரிடமாயினும் கொடுத்தனுப்பியிருக்கலாமே; நீங்கள் வரவேண்டுமா ?"

நெஞ்ச நெகிழ்ச்சியுடன் கேட்டேன்.

அவர் இயற்கையான புன்முறுவலுடன், "ஏன்? நான் கொண்டு வரக் கூடாதா? நம் சந்திப்பு கூடுவதற்கும் இது வாய்ப்பாகி விட்டதே! அது மட்டுமா? அந்தப் பெரிய மனிதர் தாம் அனுப்பும் புத்தகங்களை உங்களிடம் ஒழுங்காக நான் சேர்ப்பேன் என்ற நம்பிக்கையில் தானே என் பெயருக்கு அனுப்பியிருக்கிறார். அவருக்கும் உங்களுக்கும் தெரிந்த பொதுவான நண்பர்கள் பலர் இச் சென்னை நகரில் இல்லாமலா இருப்பார்கள்? அவர்களையெல்லாம் விட்டு எனக்கு அனுப்புவதென்றால்...? அந்நம்பிக்கையைப் பொய்ப்படுத்தலாமா? நானையே அவருக்கு அவர் கேட்டுக் கொண்டபடி புத்தகங்களை உங்களிடம் சேர்த்து விட்டேனென்று கடிதமெழுதியனுப்புவேன். நீங்களும் அவருக்கு எழுதி விடுங்கள்" என்று கூறினார்.

அவருக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்று தெரியாமல் நான் தவிக்கலானேன். இச்சிறு நிகழ்ச்சியிலிருந்தே மு. வ. அவர்களுடைய நற்பண்பை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

டாக்டர் மு. வ. புதுமை இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்துப் படைப்பு இலக்கியங்கள் எழுதத் தொடங்கிய பிறகு தமிழ்ப்பேராசிரியர்கள் பலருடைய நோக்கிலும் போக்கிலும் ஒரு பெரிய மாறுதலே ஏற்பட்டது. சிலர் மு. வ. வைப் பின்பற்றிப் படைப்பு இலக்கியத் துறையில் இறங்க முயன்றனர். மற்றும் பலர், 'இன்றைய இலக்கியத்தில் என்னதான் புதுமை இருக்கிறது? பொருள் இருக்கிறது பார்ப்போமே!' என்று எண்ணிப் படைப்பு இலக்கியங்களைப்பார்வையிடலாயினர்.

ஒருவருக்கொருவர் ஒட்டுறவு இல்லாத இரு வேறு சாதியினர் போலிருந்த இலக்கியப் படைப்பாளர்கள், தமிழ்ப் பேராசிரியர்களிடையே ஒருமைப்பாடும் நட்புறவும் முகிழ்க்கலாயிற்று, ஒருவரையொருவர் மதித்து அன்பு பாராட்டக் கற்றுக் கொண்டனர்.

டி. எஸ். சொக்கலிங்கம், வ. ரா., ம. ப. பெரியசாமித்தூரன், நான், கல்கி, ம. பொ. சி., தேவன் அகிலன் முதலியோர் முதன்மையாயிருந்து அரும்பாடுபட்டு வளர்த்து வந்த தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆராய்ச்சி அறிஞர் வையாபுரிப்பிள்ளை, மு. இராகவையங்கார் சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, பல்கலைச்செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் போன்ற தமிழ்ப் பெரும் புலவர்களுக்கெல்லாம் அவர்களுடைய தமிழ்ப்பணிக்காகக் கேடயம் வழங்கிச்சிறப்பிக்கலாயிற்று. இதன் கிளைச்சங்கங்கள் சிலவற்றுக்கு டாக்டர்

மா. இராசமாணிக்கம், ஔவை துரைசாமிப்பிள்ளை போன்றோர் தலைவர்களாயிருந்தனர். இப்பதவி பெற்றதைப் பெருமையாகவும் கருதினர்.

தமிழ்ப் பெரும் புலவர்களில் குறிப்பிடத்தக்கவரான டாக்டர் மு. வ. அவர்கள் பழைய இலக்கியங்களைத் திறனாய்வு முறையில் ஆராய்ந்து எழுதியதுடன், புதுமை இலக்கியங்களையும் படைத்து வந்தது வாயிலாகப் பழமைக்கும் புதுமைக்கும் ஒரு பாலத்தையமைத்தது தான், தமிழ்ப் புலவர்களும் தமிழ் எழுத்தாளர்களும் இரண்டறக்கலந்து உறவாடி எதிர்காலச் சந்ததியாருக்கு வளமான புதுமை இலக்கியத்தை வழங்குவதற்கு வழி வகுத்துத் தந்திருக்கிறது என்று நன்றியுடன் குறிப்பிட வேண்டும்.

எல்லாம் வல்ல இறைவனின் அற்புதப் படைப்பான மு. வரதராசன் என்ற மாமனிதர் தம் 62-ம் வயதில் பருவுடலை நீத்து இயற்கையில் கலந்து விட்டார். ஆனால் டாக்டர் மு. வ. படைத்துள்ள புதுமை இலக்கியப் படைப்புகள் தமிழ் மொழி உள்ளளவும் வாழ்ந்து, அப்பெருமகனுடைய நற்பெயரை என்றென்றும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கும் என்பது திண்ணம்.

—தமிழ்ப்பணி

# மு. வ. வழிகாட்டி

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

டாக்டர் 'மு.வ.' அவர்கள் எளிய பள்ளி ஆசிரியர். தாலுக்கா அலுவலக எழுத்தர் பதவியிலிருந்து பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு முறையாக உயர்த்தப்பெற்றவர். இந்த உயர்வுக்குக் காரணம் அவர்தம் உழைப்பும் நல்லுணர்வுமே காரணங்களாகும். தாமே முயன்று பயின்று பல்கலைக் கழகப்பட்டம் (வித்துவான்) பெற்று, முதல்நிலையில் வெற்றி பெற்று, ஆயிரம் ரூபாய்ப்பரிசும் பெற்றவர். பின் முறையாகப் பயின்று பட்டங்கள் பலபெற்றுப் படிப்படியாக உயர்வு பெற்றவர்.

பச்சையப்பர் கல்லூரியில் பணியாற்றிய காலத்தில்தான் அவருடைய ஆய்வுப் பட்டங்களுக்கான கட்டுரைகளும் பல நாவல்களும் ஆய்வுநூல்களும் உருவாயின. ஆகவே அவர் பச்சையப்பரை விட்டுப் போனாலும் இதைத் தாய் வீடாகவே கருதி வந்தார். சில சமயங்கள், ஒரு பணியும் இல்லாத போதும், பச்சையப்பன் கல்லூரி-

யில் நுழைந்து ஒவ்வொரு இடத்துக்கும் சென்று, அங்கங்கே தாம் செய்த பணிகளை எண்ணிக் கொண்டிருப்பார். இக் கல்லூரியில் அன்றும் இன்றும் பயின்ற-பயிலும் மாணவர்களை எங்கே கண்டாலும் இன்முகத்தோடு நலன் விசாரித்து மகிழ்வார். பச்சையப்பர் வாழ்க்கை-யையே நூலாக வடித்துத் தந்தார். இவ்வாறு நன்றிப் பெருக்கோடும், சேயுளத்தோடும் பச்சையப்பரைப் பாராட்டிய பண்பாளர் இன்று இல்லை. உண்மையிலே பச்சையப்பர் கல்லூரி ஒரு நல்ல மகனை இழந்து விட்டது. தமிழகம் தக்க வழிகாட்டியை இழந்து விட்டது. தமிழாசிரியராக இருந்து கொண்டே, தரணி போற்றும் பேரும் புகழும் பட்டமும் பதவியும் பெற்றும் அவற்றால் செருக்குறாது, தாழ்ந்து எளிய வாழ்வு வாழ்ந்த அன்னார் வாழ்க்கை மற்றவர்களுக்குச் சிறப்-பாகத் தமிழாசிரியர்களுக்குப் பாடமாக அமையவேண்டும். எளிய நடையில் இனிய வகையில் இன்பத் தமிழை மாணவர் உள்ளங்களில் ஊட்டி, அவர்களை மனிதராக வாழவைக்க முயன்ற அன்னார் புகழ் என்றும் நின்று நிலவும் என்பது உறுதி.

— தமிழ்ப்பணி

# நெறியின் நீங்கா நீர்மையர்

அ. மு. பரமசிவானந்தம்

பேரறிஞர் டாக்டர் மு. வ. அவர்கள் மறைவு நாட்டுக்கு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். அவரோடு பழகியவர் யாரும் அவர்தம் மனிதப் பண்பாட்டை உணர்ந்திருப்பர். காட்சிக்கெளியவராய் அனைவரையும் இன்முகமும் இன்சொல்லும் கொண்டு வரவேற்று அவர்களுக்கு வேண்டுவன செய்யும் அன்னார்தம் பண்பு நாடறிந்த ஒன்று. தம்மால் செய்ய இயலாதவற்றையும் கூட அவர் சொல்லும் முறை, கேட்போர்க்கு அவர்தம் உளப்பண்பாட்டை உணர்த்தும்.

குழந்தைகளோடு குழந்தையாக வாழும் உள்ளம் படைத்தவர் டாக்டர் மு.வ. அவர்கள் கள்ளம் கொள்ளாப் பிள்ளை உள்ளத்தவராகிய அவர் இளங்குழந்தைகளுக்கு எழுதிய நூல்கள் அக்குழந்தை உள்ளங்களைக் கொள்ளை கொண்டதில் வியப்பில்லையன்றோ!

வளர்ந்த கல்லூரி மாணவரிடை மாணவராகவே நின்று,

அவர்தம் போக்கும் நிலையும் அறிந்து, எழுத்திலும் பேச்சிலும் அவர் தம் உள்ளங்களைத் தட்டி உணர்வூட்டிய அவர்தம் செயலைப் பச்சையப்பன் கல்லூரியில் அவரிடம் பயின்ற மாணவர் நன்கறிவர்.

ஆய்வாளருக்கு ஆய்வாளராய், அறிஞர்க்கு அறிஞராய் சான்றோர்க்குச் சான்றோராய் திகழ்ந்த டாக்டர் மு. வ. அவர்கள் நல்லவராகவும் வல்லவராகவும் செயல் வீரராகவும் திண்ணிய உளஉரம் கொண்டவராகவும் வாழ்ந்ததோடு கொண்ட கொள்கைகளை விடாத நெறியில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டவர். ஆம்! எப்படிக்கொள்கைக்கெனவே வாழ்ந்தாரோ அப்படியே தம் கொள்கைக்கெனவே தம் உயிரையும் அளித்து இன்று நம்மைவிட்டு மறைந்து விட்டார். அவர் உயிர் இறையருளில் திளைக்கவும் அவர்தம் குடும்பத்தார் ஆறுதல் பெறவும் ஆண்டவர் அருள்வாளுக!

தமிழ் உறவு
அக்டோபர் '74

# பண்பாளர் மு. வ.

நா. பார்த்தசாரதி

டாக்டர் மு.வ. அவர்கள் மறைந்து விட்டார் என்பதை இன்னும் என்னல் நம்பக்கூட முடியவில்லை. அந்தப் புன்முறுவல் பூத்த இன்முகம், பிறர் அதிரப் பேசாத இனிய சொற்கள், நயத்தக்க நாகரிகம், நெடிய உருவம், அன்புமயமான பழகு முறைகள், எல்லாம் பசுமையாக நினைவிருக்கின்றன. மறக்க முடியாதபடி நினைவில் இருக்கின்றன.

சென்ற மாதம் மதுரைப்பல்கலைகழகப் பட்ட மளிப்பு விழா மண்டபத்தில் நடைபெற்ற அகிலன் பற்றிய கருத்தரங்குக்காகச் சென்றிருந்த போது அந்தப்-பல்கலைக் கழகத்தைச் செம்மையாகவும் புதுமையாகவும் அவர் வளர்க்க அயராமல் ஆற்றிய-ஆற்றும் ஆற்ற-விருக்கும் அரும்பணிகளைப் பற்றி நேரிடையாக அறிய நேர்ந்ததும் என்னல் வியப்படையாமலிருக்க முடிய-வில்லை.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பார்கள். இதையே கொஞ்சம் மாற்றி 'நல்ல பல்கலைக்கழகம் ஒரு சீரான குடும்பம்' என்று கூறலாம். மு.வ. அவர்களின் குடும்பமும் ஒரு பல்கலைக்கழகம். அவர் பணியாற்றிய மதுரைப் பல்கலைக் கழகமும் அவரைப் பொறுத்தவரை அன்பும், பண்பும் பாசமும் நிறைந்த ஒரு குடும்பமே. அதிகாரத்தையோ, பதவியின் சக்திகளைக் காட்டாமல் அன்பையும் அருளையும் நட்பையும், பாசத்தையும் காட்டியே மதுரைப் பல்கலைக்கழக ஆசிரியர்களிடமும் மாணவர்களிடமும் ஊழியர்களிடமும் பழகினர் அவர். பல்கலைக்கழகத்தின் எல்லாத் துறைகளுக்கும் முழுமையான சுதந்திரத்தை அவர் அளித்திருந்தார். மறுமலர்ச்சி இலக்கியங்களுக்கும் நவீன படைப்பாற்றல்களுக்கும் பல்கலைக் கழகக் கல்வியில் முக்கிய இடமளித்த துணிவுக்காகத் தமிழ் எழுத்தாளர் உலகம் காலமுள்ளளவும் அவரை நன்றியுணர்வோடு பாராட்டும். அவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராக இருந்தபோது அந்தப் பெரும் பதவியையும் பெருமைபடச் செய்தார். அதற்கு முன்பு பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் பதவியிலிருந்தபோது அந்த பதவியும் அவரால் பெருமை பெற்றது. நிறைவாக அவர் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகயிருந்த காலத்தில் அந்தப் பல்கலைக்கழகம் இன்னும் சில வருடங்களில் தென்னுட்டு பல்கலைக்கழகங்களிலேயே முதலிடத்தைப் பிடிக்கும் என்று கூறுமளவிற்கு வளரத் தொடங்கியிருந்தது. மு.வ. அவர்களின் மறைவால் அவரது குடும்பத்திற்கு எவ்வளவு பேரிழப்போ அதைவிடப் பேரிழப்பு மதுரைப் பல்கலைக்கழகம் என்ற பெரிய குடும்பத்திற்குத்தான். அவரைப் போல் ஒரு நல்லத் துணைவேந்தர் இனி அப்பல்கலைக்கழகத்திற்கு கிடைப்பது அரிது.

தென்னுட்டில் ஓர் எழுத்தாளர். தமிழாசிரியர் படிப்படியாக உழைத்து முன்னேறித் தம்முடைய திறமையாலும் தகுதியாலும் துணைவேந்தர்பதவி வரை வளர்ந்திருக்கிருரே என்று பெருமிதமாக நினைப்பதற்கு நம்மிடையே ஒரே எடுத்துக்காட்டாக அவர் இருந்தார். இனி அப்படி ஓர் அரிய எடுத்துக்காட்டு இருக்காது என்பது மட்டுமில்லை. தேடிக் கண்டுபிடிப்பது கூடச் சிரமமாகத் தான் இருக்கும். டாக்டர் மு.வ. அவர்களின் மரணத்தால் நேர்ந்துவிட்ட வெற்றிடம் வேறு யாராலும் நிரப்பப்பட முடியாதது. அன்பு, பண்பு, அடக்கம், சால்பு இவை எல்லாம் இல்லாத ஆயிரம் அறிவாளிகள் இன்றே, நாளையோ நமக்குக் கிடைக்கலாம். ஆனல் இவற்ருேடு கூடிய ஓர் அருமையான பண்பாளரை நாம் இழந்துவிட்ட இழப்பை அதனல் எப்படி ஈடு செய்ய முடியும்?

தமிழ் உறவு, அக்டோபர் '74

# பெருவாழ்வு

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

## இளமை

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் திருவள்ளுவர். அப்பொன்னுரையினை மெய்ப்பித்தவர் மு. வ. அவர்களாவர். தமிழ்நாட்டின் வடவெல்லை மாவட்டமாக அமைந்துள்ள வடார்க்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் 25-4-1912 பிறந்தார். பள்ளிக்-கல்வியைப் பாங்குறப் பயின்றார். எல்லாப் பாடங்-களிலும் ஏற்றம் பெற்று விளங்கினார். கணக்கில் நூற்றுக்கு நூறு என்று மதிப்பெண்கள் பெற்றார். ஆசிரியப் பெருமக்கள் பாராட்டு அன்றே கிடைத்தது. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து அன்றோ ? பதினாறு வயதில்—1928-ல் பள்ளியிறுதித் தேர்வு ( S. S. L. C. ) எழுதிச் சிறக்கத்தேறினார்.

இயற்கை வாழ்வு

இவர்தம் சொந்த ஊர் வாலாசாப் பேட்டையையடுத்த வேலமாகும். இவ்வூரின் பெயரே அருகில் பீடுற நிமிர்ந்து நிற்கும் வேலமலையை யொட்டி வந்ததாகும். இவர் படித்த திருப்பத்தூருக்கு அண்மையில் ஜவ்வாது மலை உளது. விடுமுறை நாட்களில் இவர் பள்ளித் தோழர் திரு.யோகசுந்தரம் (பின்னாளில் இவர் வேலூர் ஊரிஸ் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றியவர்) அவர்களுடன் மலையேறி மகிழ்வார். எடுத்துச் செல்லும் கட்டுச் சோறும் நூலும் அங்குப் பயன்படும். இயற்கையன்னையின் இனிய காட்சிகளைக் கண்டு மனம் மகிழ்ந்து நிற்பார். திரு. வி. க. அவர்களின் இயற்கையைப் பரவும் நாட்டைப் போற்றும் இனிய பாடல்களை வாய்விட்டுப்பாடி, அப்பாடல் மலை முழைஞ்சுகளில் எதிரொலிக்கக் கேட்டு மகிழ்வார். இவ் அரிய போக்கு இவர்தம் வாழ்நாளின் இறுதி வரையிலும் நிலைத்தது.

தாம் துணைவேந்தர் பதவி வகித்த மதுரைப் பல்கலைக்கழகம் அமைத்துள்ள பல்கலை நகரில் நிறைய மரங்களை நட்டு வளர்த்தார். வேப்பஞ் சாலை, வாகைச் சாலை, தென்னைஞ்சாலை, கொய்யாச்சாலை, மாஞ்சோலை என்றெல்லாம் சாலைகளுக்குப் பெயரிட்டுள்ளார். பெரிய ஆலமரத்தினடியில் ஒரு சிறு கருத்தரங்கமே நடைபெறும் வண்ணம் மேடையமைத்து அதற்கெனத் திட்டமிட்டார். இவையெல்லாம் பெரு மரங்களாக வளர்ந்து நிழல்தரும் நாளில் அங்குச் சென்று (ஓய்வு பெற்ற பிறகு) பார்த்துவிட்டு வரவேண்டும் என்று அம்மாவிடம் (அவர்தம் துணைவியாரிடம்) கூறிக் கொண்டிருப்பாராம். என்னிடமும் இதுபற்றிக் கூறியுள்ளார். "நீ மதுரை வரும் வாய்ப்பு எதிர்காலத்தில் நிரம்பக் கிடைக்கலாம். அப்பொழுதெல்லாம் இம் மரங்களின் வளர்ச்சியினைக் காண்பாய்'' என்று கூறுவார்.

இயற்கை மருத்துவமே அவர் வாழ்வாயிற்று. மூன்றாண்டுகள் திருப்பத்தூரில் தாலுக்கா அலுவலகப் பணியாற்றிய அவர் உடம்பு நோயால் நலிவுற்று மெலிவுற்றபோது அவர் நண்பர் திரு. யோகசுந்தரம் அவர்கள்மூலமாக நல்லதொரு இயற்கை மருத்துவ நூலொன்று கிடைத்தது. வேலம் சென்று அந்நூலைப்படித்துத் தம் உடம்பை தேற்றியதோடன்றி உரம் பெறவும் செய்து கொண்டார். இயற்கை மருத்துவத்தின்மீது தாம் கொண்ட நம்பிக்கையினை இறுதி வரை இவர் தளர்த்தவே இல்லை.

தமிழ்ப்பணி

வேலத்தில் உடல் நலிவுற்று வாழ்ந்த மூன்ருண்டுகளில் 'வித்துவான் முதல்நிலே'த் (Preliminary) தேர்வெழுதிச் சிறக்கத் தேறினர். திருப்பத்தூர் உயர் நிலேப்பள்ளியில் இவருக்குத் தமிழ்க் கற்றுக் கொடுத்த ஆசிரியர் திரு. முருகைய முதலியார் அப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அப்பணியினே 1932 ஆம் ஆண்டில் ஏற்ருர். மறு ஆண்டில் தைத் திங்களில் இவர் மாமன் மகளார் இராத அம்மையாரை மணந்தார். திருமணம் வேலத்தில் நடைபெற்றது. அதே ஆண்டில்—திருமணத்திற்குப்பின் இரண்டு திங்களில் 'வித்வான் நிறை நிலேத்' (Final) தேர்வெழுதி மாநிலத்திலேயே முதல்வராக வந்து திருப்பனந்தாள் மடத்துப் பரிசாகிய ஆயிரம் ரூபாய்ப் பரிசினேயும் தங்கப் பதக்கத்தினேயும் பெற்ருர். 1939 வரை திருப்பத்தூர் உயர் நிலேப் பள்ளித் தமிழாசிரியர் பணி நீடித்தது.

1939 ஆம் ஆண்டிற்குள் பீ. ஓ. எல் (B. O. L.) தேர்வு எழுதி வெற்றி பெற்றிருந்த இவர் பச்சையப்பர் கல்லூரியில் தமிழாசிரியர் பணியினே ஏற்ருர். 1945 ஆம் ஆண்டின் எம். ஒ. எல். (M. O. L.) பட்டமும்,1948 ஆம் ஆண்டில் டாக்டர் (Ph. D) பட்டமும் ஆராய்ச்சி வழி பெற்ருர். முன்னேய பட்ட ஆராய்ச்சி வினேச் சொற்களேப் பற்றியது; பின்னேப்பட்ட ஆராய்ச்சி 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்பது குறித்ததாகும்.

பச்சையப்பர் தமிழ்ப்பணி 1961 ஆம் ஆண்டு சூன் திங்கள் இறுதிவரை நீடித்தது. இக்கால எல்லேக்குள் இவர் உருவாக்கித் தமிழகத்திற்குத் தந்த மாணவ மணிகள் மிகப்பலர். இவர் வீடே உணவுச் சாலேயாகவும் பள்ளியாகவும் துலங்கியதனேப் பழைய மாணவர் சிலர் இன்னும் நன்றியோடு நினேக்கின்றனர்.

1961 முதல் 1791 ஜனவரி முடிய இவர்கள் சென்னேப் பல்கலேக் கழகத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினர்கள். சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளே அவர்கள் வற்புறுத்தலின் பேரிலேயே இவர் இப்பணியினே ஏற்றுக் கொண்டார்.

எழுத்துப் பணி

எழுபதிற்கும் மேற்பட்ட நூல்களே எழுதிக்குவித்த கை இவருடைய கை. நூல்கள் பல திறத்தன. சிலமொழி ஆராய்ச்சி நூல்கள்; இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் பல; கடித இலக்கியங்கள் ஐந்து; நாவல்

கள் பத்துக்கும் மேல்; நாடக நூல்கள் சில; சிறுகதை நூல்கள் சில; கட்டுரை நூல்கள் பல என அவை அமையும்.

தொடக்க நாளில் எழுதிய 'திருக்குறள் தெளிவுரை' இதுவரை எட்டு இலட்சம் படிகளுக்குமேல் விற்றிருப்பது இத்துறையில் ஒரு பெரிய சாதனையாகும். இவர் முதலில் எழுதிய நாவல் 'செந்தாமரை'. 1944 ஆம் ஆண்டில் வெளிவந்தது. 'நல்வாழ்வு' எனும் நூல் இறுதி-யாக 1973 ஆம் ஆண்டில் வெளிவந்தது. அந்நாளில் திருமணப் பரிசாக இவர் எழுதிய நூல்களே வழங்கப் பெற்றன. பொழுது போக்குக்கென நூல்களை எழுதாமல் கருத்துகளுக்கென எழுதிப் படிப்-போர் வாழ்வைத் திருத்தமடைய செய்தவர் இவர். பள்ளி, கல்லூரி மாணவியரிற் பலர் இவர்தம் வாசகர்கள் ஆவர்.

பல்கலைக் கழகப் பணியினை ஏற்ற பிறகு இவர்கள் நூல்கள் எழுதியதில்லை. துணைவேந்தர் பதவியேற்ற பிறகு இவர் எழுதி வெளிவந்த நூல் 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகும். இந்நூல் சாகித்திய அகாதெமியினர் வெளியீடாகும். இந்நூல் வெளியான ஆறு திங்களில் அச்சிடப்பெற்ற மூவாயிரம் படிகளும் விற்றுத் தீர்ந்து விட்டன.

ஒரு சிறு பாட்டே 'கொங்குதேர் வாழ்க்கை'எனும் நூலாயிற்று. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதினொன்றும் ஆண்டு விழாப் பேச்சு (19-2-1949-ல் நிகழ்த்தியது) இவ்வாறு இந்நூலாக மலர்ந்தது. 'ஓவச் செய்தியும்' அவ்வாறே இவர் ஆராய்ச்சி மனத்தின் உளைச்சலால் எழுந்த நூலாகும். "ஒரு பாட்டு; அதைக் குறித்துப் பலநாள் போராட்டம்; இரண்டு நாள் இரவும் பகலும் ஏக்கம்; மூன்றும் நாள் மாலையில் வேலத்து மலையை அடுத்த அழகிய ஓடையில் உலவும்போது எதிர்பாராத விளக்கம்; நல்ல தெளிவால் பிறந்த பேருவகை-இவையே இந்நூலாக உருப்பெற்றன," என்று எழுதியுள்ளார். மொழி நூல் துறையில் முதன்முதலில் பாட நூல்களை எழுதியவர் இவர்; இலக்கிய ஆராய்ச்சித் துறையிலும் தரமான, திறமான, நூல்களை எழுதி வழங்-யவர் இவரே. 'இலக்கிய மரபு' எனும் எழுதி, அதனைத் தம் எம்.ஏ.,வகுப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கினர் இவர்.

இவர்தம் நூலால் என்றும் வாழ்வார்.

பிறர்கென வாழும் வெற்றி: இவர் அள்ளித் தந்த கொடைகள் பல: ஆனல் விளம்பரம் இவருக்குச் சற்றும் பிடிக்காது. இவர் செயல்களை விளம்பரம் படுத்துவோரையும் கடிந்து கொள்வார். 'வலக்கை தருவது இடக்கைக்கும் தெரியக் 'கூடாது' என்பது இவர் கோட்பாடு. கல்லூரி மாணவர் பலருக்குக் கல்லூரிப் படிப்புக் கட்டணம் (College Tution Fees) கட்டியுள்ளார்; தேர்வுக் கட்டணமும் (Examination Fees) கட்டியுள்ளார். சிலர் உண்டி வசதியினை மேற்கொண்டுள்ளார். ஒரு சிலர்க்கு உறையுள் வசதியினையும் வழங்கியுள்ளார். பலர்க்குப் பல நேரங்களில் பொருள் வசதியினை வழங்கியுள்ளார. பிறர் தேவையினை நுட்பமாக உணர்ந்து, தாமே முன்சென்று அவர் அறியாதவாறும் ஆன உதவிகளை செய்து வருவது இவர்தம் அரும் பண்பாகும். இவரால் எந்தவொரு சிறு உதவியும் பெருத மாணவர் இலர் என்று கூறும் அளவுக்கு இவர் கொடைச் சிறப்பு விளங்கியது.

வலக்கையில் இரண்டே விரல்கள் கொண்ட ஏழை இளைஞன் ஒருவன் பீ.ஏ., தேர்வு பெற்று எம்.ஏ., படிக்க வேண்டும் என்று மதுரை வந்தான். பல கல்லூரிகளாலும் புறக்கணிக்கப்பட்டான். இறுதியில் இவரிடம் இரந்தான்; உள்ளங் கசிந்துருகும் உயர் பண்பு கொண்ட இவர் அம்மாணவனைத் தன் கைகளால் எழுதிக் காட்டச் சொன்னர். வேகமாகவும் விரைவாகவும் எழுதிக் காட்டினன். எம். ஏ. வில் இடம் கொடுத்து அவனுக்கு வாழ்வு நல்கினர். அவன் 'அவரின்றேல் இவ்வுலகில் தனக்கு வாழ்வு அமைந்திருக்காது' என அவர் மறைவுக்கு ஆற்ருது அலமந்து எழுதிய கடிதத்தினை நான் படித்துப் பார்த்தேன்.

எளிமை:

உணவிலும், உடையிலும் வாழ்வின் எத்துறையிலும் எளிமையைப் போற்றியவர் இவர். முருங்கைக் காய் சாம்பாரும், மிளகுக் குழம்பும், அப்பளக் கூட்டும், வாழைப்பூ வடையும், முருங்கைக் கீரை சூப்பும், கத்தரிக்காய் வறுவலும் இவருக்குப் பிடித்த உணவு வகைகள். மலைவாழை, திராட்சை, ஆப்பிள், சாத்துக்குடி, பப்பாளி இவர் விரும்பி யுண்ணும் பழங்கள். தூய கதராடை இவர் மதித்துப் போற்றியுடுத்தும் உடைகள்.

தமிழ்ப் பெரியார் திரு வி.க. வின் எளிமை இவரிடம் நிறைந்தொளிந்தது. அவர் மாட்டு இவர் கொண்ட பேரன்பு 'திரு. வி. க உயர் பள்ளி'யாக சென்னைய் நகரில் மலர்ந்துள்ளது. அப் பள்ளியின் அருகில்

அமைந்துள்ள பூங்காவிற்குத் 'திரு.வி.க. பூங்கா' என்ற பெயரும் இவர் தம் விடாமுயற்சியின் பயனேயாகும். திரு.வி.க. பள்ளிக்கென்றே தாம் எழுதிய நூல்கள் சிலவற்றை உரிமையாக்கியுள்ளார்.

ஆடம்பரம் இவருக்கு அறவே பிடிக்காது; அமைதி வேண்டித்-தனிமையை நாடுபவர் இவர். தன் முனைப்பு இவரிடம் இல்லை. தன் முயற்சி என்றும் இவர்பால் இருந்தது.

பெருவாழ்வு

'எப்படியும் வாழலாம்' என்று இராமல் 'இப்படித்தான் வாழ-வேண்டும்' என்று வரம்பு கண்டு வாழ்ந்த வாழ்க்கை இவருடைய வாழ்க்கை. தாம் கொண்ட கொள்கைகளில் ஓர் உறுதிப் பிடிப்பு இவர்-தம் வாழ்நாளில் இறுதிவரையில் இருந்தது. உழைப்பால் உயர்ந்து பண்பால் வளர்ந்து பீடுறு பெருவாழ்வாய் நிறைந்து காணும் இவர் வாழ்க்கை ஒரு 'குன்றின் மேலிட்ட விளக்கு'.

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்றார் பாவேந்தர் பாரதிதாசன். அருமை அப்பா மு. வ. நம் நெஞ்சில் வாழ்கிறார்.

நித்திலக்குவியல்—நவம்பர் '74

# தண்டமிழ்ச் சான்றோர் டாக்டர். மு.வ.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

எளிய குடும்பத்தில் பிறந்து, உழைப்பாலும் உண்மையாலும் உயரிய பண்பாட்டாலும் உலகத்தார் உள்ளத்திலெல்லாம் நிறைய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த பெருந்தகை டாக்டர் மு.வ.அவர்களாவார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் காவலனும் பாவலனும் வாழ்ந்த கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி என்ற பாண்டியகுல மன்னன், 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்களால் இம்மண்ணுலகம் இடையறுது இயங்கிக் கொண்டிருக்கிறது' என்று குறிப்பிட்டான். சிலர் பலருக்காக வாழ்வதனுல் உலகின் இயக்கம் நடைபெற்றுக் கொண்டேயுள்ளது. இம்முறையில் இந்நூற்றுண்டில் சீலமுற வாழ்ந்தவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. ஆவர். அவர் தம் அடியொற்றி, அவர்தம் வாழ்வு வழியில் மாரு நம்பிக்கை கொண்டு பெரு வாழ்வு-தூய வாழ்வு—வாழ்ந்தவர் டாக்டர் மு. வ. அவர்கள் ஆவர்.

நவசக்தி அளித்த தமிழார்வம்

வடாற்காடு மாவட்டத்தில் வாலாஜாவிற்கு அருகில் உள்ள வேலம் என்னும் சிற்றூரே நம் பேராசிரியர் அவர்களின் சொந்த ஊர். ஆயினும் இவர் பிறந்து வளர்ந்து படித்துப் பணியாற்றிய ஊர் திருப்பத்தூராகும். 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் பிறந்தவர் நம் பேராசிரியர். அவர்களின் தாயார் பெயர் அம்மாக்கண்ணு. தந்தையார் பெயர் முனிசாமி என்பது ஆகும். பிறவியிலேயே மெலிந்த உடம்பு. ஊரில் நல்ல செல்வாக்குப் படைத்த பெருந்தனக்காரரின் ஒரே மகன். செல்லங்கொடுத்துச் சீராட்டிப் போற்றி வளர்க்கப்பட்டார். இவ்வாறு இளமைப் பருவம் கழிகின்ற காலையில் 'நவசக்தி' என்னும் வார ஏடு அவர் கண்ணிற்பட்டது. தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் நடத்திய அத்தமிழ் ஏடு, இவர் தம் வாழ்க்கையில் ஒரு புதிய திருப்பத்தை உண்டுபண்ணிற்று எனலாம். அவ்வேட்டின் தமிழ் நடையில் இவர் நெஞ்சம் திளைத்தார்; கருத்துக்களில் மூழ்கினர்; அழகு தமிழில் அகங் குளிர்ந்தார். விருந்துண்ட மகிழ்ச்சி இவருக்கு ஏற்பட்டது. விடாது அவ்வேட்டினை வாங்கிப் படிக்கும் பழக்கம் வந்து வாய்த்தது. அவ்வேட்டில் இடம் பெற்ற கட்டுரைகளில் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருந்த தமிழ்ப்பாடல்களை மனப்பாடம் செய்யத் தொடங்கினர். இதனால் தமிழார்வமும், நல்ல தமிழ் படிக்கும் பழக்கமும் இவரிடம் வந்து படிந்தன.

இவருக்கு அப்போது பதின்மூன்று வயது நடந்துகொண்டிருந்தது. வகுப்புத் தோழன் ஒருவன், எங்கும் கிடைக்காத நூலென்று யாப்பிலக்கண நூலொன்றினை இவரிடம் காட்டினன். அந்நூலில் செய்யுள் இயற்றும் வகை கூறப்பட்டிருப்பதறிந்து களிப்புக் கொண்டார். ஏற்கனவே செய்யுள் இயற்ற வேண்டும் என்று ஆர்வங்கொண்டிருந்த இவருக்கு அந்நூல் நல்ல விருந்தினை நல்கியது. யாப்பிலக்கணத்தை வரையறை செய்த அந்நூலே 'யாப்பருங்கலக் காரிகை' எனப்படுவது. அந் நூலினை அந் நண்பனிடம் கெஞ்சிக் கேட்டு, இரண்டு நாட்களுக்கென்று இரவலாகப் பெற்று, அதனை முழுவதுமாகப் படி செய்துகொண்டு ஓசைப்படாமல் நூலைத் திருப்பித் தந்து விட்டார். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். அம்முறையில் இவர்க்கு யாப்பிலக்கணப் பயிற்சி இளமையிலேயே வாய்த்து விட்டது. பிற்காலத்தில் பன்முறை இந்நூலினை இவர் சிறப்புத் தமிழ் பயிலும் மாணவர்க்கு வகுப்பறையில் கற்பிக்கும் நிலையும் நேர்ந்தது.

மெலியாத உள்ளம்

உயர்நிலைப் பள்ளியோடு இவர் படிப்பு முடிவுற்றது. தாலுக்கா அலுவலகத்தில் சேர்ந்தார். கடமையினைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்தார். உயர் அலுவலர்கள் இவர் தம் வேலைத் திறனைக்கண்டு மகிழ்ந்தனர்; பாராட்டினர். ஆனால் அதே சமயத்தில் அளவுக்கு மீறிய வேலைச் சுமையால் இவர் உடல் நலிவுற்றது. எனவே, ஊர் திரும்பினார்; உடல் நலம் காத்தார். தமிழ் கற்றார்; புலவர் தேர்வு எழுதினார்; மாநில முதன்மை பெற்றார். ஆயிரம் ரூபாய்ப் பரிசும் வந்தெய்தியது. பி. ஓ. எல். தேர்விற்குத் தொடர்ந்து படித்தார். நன்முறையில் தேறினார். சென்னை, பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்ப்பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.

தாயினும் பரிவு

பச்சையப்பர் கல்லூரியே இவர் புலமையை வளர்த்தது; புகழைச் சேர்த்தது. இவர் தம் இனிய சொத்தாக மாணவச் செல்வங்கள் வாய்த்தனர். இவர் தம் வீடு விருந்தோம்பும் உணவுச் சாலையாக மாறிற்று. அருமை அம்மா அவர்கள் இன்முகத்தோடு பசியறிந்து, பெற்ற தாயினும் பரிந்து உணவு நல்கி, மாணவர் பலரைப் பெற்ற மைந்தரினும் பேணி வளர்த்தனர். வயிற்றுக்கு உணவுப் பொறுப்பு அம்மாவுடையதும், அதற்கு முன்னும் பின்னும் நெஞ்சத்திற்கு உணவு ஊட்டுவதும் நம் பேராசிரியருடையதுமாக ஆயிற்று. கல்லூரியில் ஏட்டுக் கல்வி பெற்ற மாணவர் சிலர், இவர் வீட்டில் வாழ்க்கைக் கல்வியை—கல்வியுணர்வை—பண்பாட்டுக் கல்வியைக் கற்றனர். அவ்வாறு கற்றவர்களில் பலர் இன்று வாழ்வில் பல்வேறு துறைகளில் புகழ் பூத்து விளங்குகிறார்கள்.

டாக்டர் மு. வ. அவர்கள் கடும் உழைப்பாளி. எந்நேரமும் அவர்கள் படித்துக் கொண்டோ அல்லது வருபவர்களிடம் சுருங்க—பெருக உரையாடிக்கொண்டோ இருப்பார்கள். சிந்தனையில் தனித்து மூழ்கிவிடுவார்கள். இதன் விளைவாக நூல்கள் எழுதத் தொடங்கினார்கள். 'செந்தாமரை' வெளிவந்தது. பின்னர், 'கள்ளோ காவியமோ?' வெளிவந்தது. தமிழ் நாட்டில் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர் பலரை இவர்தம் நீங்காத வாசகர்களாக (Readears) இந் நூல்கள் ஆக்கின.

### இரு கண்கள்

இதற்கிடையில் மொழியியல் ஆராய்ச்சி செய்து 'வினைச் சொற்கள்' பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையெழுதி எம்.ஓ.எல். பட்டமும், இலக்கிய ஆராய்ச்சி மேற்கொண்டு 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (The Treatment of Nature in Sangam Literature) என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினை எழுதி 'டாக்டர்' (Ph. D.) பட்டமும் பெற்றார்.

### சிறப்புகள் சேர்ந்தன

நூல்கள் பலதுறைகளிலும் பல்கிப் பெருகின. நாவல்கள் படிப்போர் நெஞ்சங்களைக் கவர்ந்தன. அதிகப்படிகள் விற்கும் நூல் இவருடையதே என்ற நிலை ஏறத்தாழப் பத்தாண்டுக் காலம் (1951—1960) நிலவியது. நாளும் நாளும் பட்டிதொட்டிகளிலும் இவருடைய நூல்களைப் படிப்போர் தொகை பெருகிற்று.

இந்திய விடுதலைப் போராட்ட நூற்றாண்டு விழா 1957-ல் நாடெங்கும் கொண்டாடப் பெற்றது. தமிழ்நாட்டு அரசாங்கம்—அப்போது அதன் பெயர் சென்னை அரசாங்கம்—முத்தமிழின் மூச்சான அறிஞர் பெருமக்களைப் பாராட்ட எண்ணி, இயற்றமிழுக்கு டாக்டர் மு.வ. அவர்களையும், இசைத் தமிழுக்குத் திருமதி கே.பி. சுந்தராம்பாள் அவர்களையும், நாடகத் தமிழுக்குப் பம்மல் பி. சம்பந்த முதலியார் அவர்களையும் தேர்ந்தெடுத்துப் பாராட்டியது. இவர் எழுதிய 'அகல் விளக்கு' என்னும் நாவலுக்கு 1963 ஆம் ஆண்டில் சாகித்திய அகாதெமி பரிசு ரூபாய் ஐயாயிரம் கிடைத்தது. தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசினைக் 'கள்ளோ காவியமோ?','கி.பி. 2000', 'மொழியியற் கட்டுரைகள்' முதலிய நூல்கள் பெற்றன,

### துணைவேந்தரானார்

1939 தொடங்கி 1961 ஆம் ஆண்டு ஜூன் வரை பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்ப்பணியாற்றிய டாக்டர் மு.வ. அவர்கள் 1961 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சென்னைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியரானார்கள். தமிழ் அன்பர்களின்—மாணவர்களின் இதய வேந்தராக விளங்கிய மு.வ. அவர்கள், 1971 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் நாள் தொடங்கி, மூன்றாண்டுக் காலம் மதுரைப் பல்கலைக்கழகத்துணைவேந்தர் பதவி வகித்தார். இவ்வாண்டு, மீண்டும் ஒருமுறை மூன்றாண்டுக் காலத்திற்கு பதவி நீடிக்கப்பட்டது.

இறுதியில் அவர் வாழ்வு 10—10—1974 வியாழன் அன்று மாலை 5-30மணிக்கு முடிவெய்தியது.

அமெரிக்காவின் மதிப்பு

மேலை நாட்டுப் பல்கலைக் கழகம், அமெரிக்காவின் 'இல்லினொய்ஸ்' (Illinois) பல்கலைக் கழகம் இவருக்குச் சிறப்பு 'டி. லிட்' '(D.Litt) பட்டம் வழங்கிப் பாராட்டியிருக்கிறது. தமிழ் படித்த எவரும் இதுவரை பெறாத சிறப்பு இது.

சான்றாண்மைக்கு ஆழி

டாக்டர் மு. வ. அவர்கள் எளிமையும் தூய்மையும் தொண்டும் கனிவுங் கொண்டு இனிய புன்முறுவல் பூத்த முகத்துடன் காட்சியளிப்பார்கள். எந்தப் பதவி வகித்த நிலையிலும் செருக்கென்பது அவரிடம் ஒரு சிறிதும் காணப்படவில்லை. ஆடம்பரம் அவர் வாழ்வில் கால்கொள்ளவில்லை. எப்போதும் எவரையும் குறை தூற்றாத பண்பு; இயன்றவரை அனைவருக்கும் இயன்ற அளவு உதவுகின்ற மனப்பான்மை—இவை அவருடைய நீங்கா பண்புகள்.

திருவள்ளுவர் கண்ட 'சான்றாண்மை'க்கு ஒரு உருவம்—வடிவம் தந்தவர் இவர். 'சான்றாண்மைக்கு ஆழி' என விளங்கிய இவர்கள் இன்று இயற்கை எய்தி விட்டார்கள்.

தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு என்று மூச்சு ஓயுமட்டும் வாழ்ந்த ஓர் ஒப்பற்ற பெருமகனார் அவர்.

மதுரைப் பல்கலைக்கழகம் பல்கிப் பெருக அஞ்சல்வழிக் கல்வித்துறை இந்தியாவிலேயே முதலிடம் பெற உயர்த்தி நின்ற ஒருவர் இன்று நம்மிடையே இல்லை.

தமிழ்இசைச்சங்க நிகழ்ச்சிகளில் தவறாது கலந்துகொண்டு, பலர் ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வந்தவர் இவர்.

சொற்பொழிகளுக்குச் செல்வதில் தயக்கங்காட்டிய இவர் நாடகங்களைப் பாராட்டிப் பேச ஒப்புக்கொண்ட நிலை நாடகத் தமிழ் வளர்ச்சியில் இவர் காட்டிய அக்கறையினை உணர்த்தும்.

மு. வ. வின் சமயநெறி

'எல்லாரும் வாழ வேண்டும்' எனும் உயரிய மனம் இவருடையது.

திருநாவுக்கரசரிடமும் தாயுமானவரிடமும், இராமதீர்த்தரிடமும் தோய்ந்த மனம் ஆன்மீக நெறியில் திளைத்தது,

நீரில் உப்பு கரைவதுபோல, கற்பூரம் எரிந்து காற்றில் கலப்பது போல, உலக உயிர்கள் இறைவனோடு கலந்து விடவேண்டும் என்பது இவர் கோட்பாடு.

நெஞ்சகத்தையே கோயிலாகக் கொண்டு, இறைவன் அருளைச்சுகந்தமாகக்கொண்டு, அன்பையே மஞ்சன நீராக அபிடேகித்து, பராபரனைப் பூசை கொள்ள அழைத்த தாயுமானவர் வழி இவர் ஆன்மிக நெறி.

உலகம் சுற்றி வந்தாலும் செருக்கு தலையைச் சுற்றாத அடக்கம் இவர் இயல்பு.

சுருங்கச் சொன்னால்—

தமிழர் பண்பாட்டின் உயர்தனிக் காவலர் இவர்.

இவர் மறைந்துவிட்டாரா?

இல்லை! நம் நெஞ்சங்களில் வாழ்கிறார்.

டாக்டர் மு. வ. வின் திருப்பெயர் வாழ்க!

அவருக்கு நம் வணக்கங்கள்.

தமிழ் உறவு

அக்டோபர் '74

# வழிகாட்டும் பெருஞ்சுடர்

பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன்

நெருநல் நம்மொடு இருந்த தமிழறிஞர் மு. வரதராசனர் அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்பதை நம்மால் நினைக்கவும் முடியவில்லை. எப்பக்கம் திரும்பினலும் அவர்தம் இனிய குரல் நம் காதில் ஒலித்த-படியே இருக்கின்றது. அண்மையில் நடந்தேறிய அவர்-தம் திருமகனரின் திருமணவிழா நாளில் அவ்வளவு பெரிய கூட்டத்திலும் அங்கு வந்த ஒவ்வொரு நண்பரை-யும் இன்முகம் காட்டி, வரவேற்று, உணவருந்தி விட்டுச்-செல்லுங்கள்' என்று அன்புக் கட்டளை இட்டது இன்றும் நம் கண்முன் காட்சி தந்தபடியே இருக்கின்றது. தமிழ் வரலாற்றை இனிது இணைத்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து புகழெய்திய மு. வ. அவர்களின் சிந்தனையை-யும், செயலையும் தொடர்ந்து பின்பற்றத் துடித்து நிற்கும் தமிழுலகும் நீடு வாழும் என்பது உறுதி.

தமிழே மு.வ.

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தம் இரங்கல் உரையில் ''தமிழால் அவர் ஏற்றம் பெற்றார்; அவரால் தமிழ் ஏற்றம் பெற்றது'' என்று குறிப்பிட்டது போல், 'தமிழே மு. வ., அறிஞர் மு. வ. அவர்களே தமிழ்' என்ற நிலையில் அவர் தமிழுடன் இரண்டறக் கலந்து நிறை வாழ்வு வாழ்ந்த செம்மலானார்.

வட ஆற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூரில் தோன்றிய அவர் எளிமையில் வளர்ந்து, உழைப்பால் உயர்ந்து, தமிழில் டாக்டர் பட்டம் பெற்று அறிஞர்களால் பாராட்டப்படும் நேரத்தில், 1948-ஆம் ஆண்டு என நினைக்கிறேன், பச்சையப்பர் கல்லூரி மன்றத்திலே டாக்டர் செங்கல்வராயன் அவர்கள் ''எனக்கு மு. வ. அவர்களைப் பிடிக்கும்; மு. வ. அவர்களுக்கும் என்னைப் பிடிக்கும்—நாங்கள் இருவரும் கறுப்பு நிறம் கொண்டவர்கள் ஆனதால்'' என்று பேசியபோது இனிய முகத்தினராய், அவர் முகிழ்த்த புன்சிரிப்பு இன்றும் கண்முன் இருந்து கொண்டே இருக்கின்றது! இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர்'கறுப்பு உழைப்பின் உருவகம்' என்று கதைகளிலும், கட்டுரைகளிலும் தீட்டித் தமிழ் இளைஞரின் உள்ளத்தைத் தமிழ் நெறிப்படுத்தியதமிழ் உள்ளம், அண்மையில் தமிழ் பண்பில் தனி ஆர்வம் கொண்டு தமிழகம் வந்த ஆப்பிரிக்க நாட்டு அதிபர் செங்கோருக்குத் தமிழில் கறுப்பின் சிறப்பு பற்றி 'கறுப்பில் அழகு உள்ளது', 'கண்ணிற்கு அழகு கறுப்பு' என்ற பழமொழிகளை நினைவூட்டியது.

காலம் கனியவைத்தார்

மறுமலர்ச்சி என்ற பெயரிலே தலைதீபாவளிக்கு வரும் மாப்பிள்ளைகளையும் அவரைத் தாங்கிப் பிடிக்கும் மாமனார்களையுமே பற்றி எழுதிவந்தவர்களில் சிலர் ''தமிழ்ப் புலவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் 'ஒற்று எங்கு மிகும்? எங்கு மிகாது?' என்பதே பெரும் கவலையாகப் போய்விட்டது'' என்று நகைத்துப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், பேராசிரியர்களை உருவாக்கும் பேராசிரியராகவும், பெரும் புலவர்களைத் தோற்றுவிக்கும் பெரும் புலவராகவும் இருந்த மு. வ. அவர்கள் பகுத்தறிவுக்கும், மறுமலர்ச்சிக்கும் ஏற்ற புதிய கருத்துக்களை இனிய, எளிய இலக்கியத் தமிழில் குழைத்துக் 'கள்ளோ காவியமோ', 'நெஞ்சில் ஒரு முள்', 'அகல் விளக்கு' போன்ற அரிய படைப்புக்களை ஆக்கிப் புகழைப் பெருக்கினார். டாக்டர் மு. வ. அவர்கள் வாய்ப்புக்கும் வசதிக்கும் என்றுமே காத்திருந்ததில்லை. கையில் கிடைப்பது கரித்துண்டேயா-

ளுலும் அதனையே கருவியாகக் கொண்டு கலைஞனால் கலைச்செல்வத்தை நிலையாக்கி விலையாக்க முடியும் என்ற உண்மையைக் 'கரித் துண்டு' என்ற தமது படைப்பால் விளக்கியிருக்கின்றார்.

நலம் விளக்கும் நாவல்கள்

நம் வாழ்வில் நிகழும் பல நிகழ்ச்சிகளை வெளியுலகிற்குக் கூற இயலாத நிலையில் ஊமையன் கண்ட கனவாக மறைந்து போக விட்டு விடுகின்றோம். ஆனால், அத்தகைய நிகழ்ச்சிகளும் வெளியில் தெரிய வந்தால் பலருடைய வாழ்வும் பண்படவும், பயன்பெறவும் கூடும் என்பதை அறிந்த மு. வ. அவர்கள் தமது 'டாக்டர் அல்லி' என்ற புத்தகத்தை வெளிக் கொணர்ந்தார்.

'மக்களே போலும் கயவர்' என்று வள்ளுவர் கூறிய தொட-ருக்கு நல்லதொரு விளக்கமாக எழுந்து வாழ்க்கை நிலையில் பல்வேறு மட்டங்களிலே உலாவும் பசுத்தோல் போர்த்திய புலிகளை நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் நல்ல முயற்சியே 'கயமை' என்னும் அவரது படைப்பாகும்.

அவர்தம் 'அகல் விளக்கு' சாகித்திய அகாடமி விருது பெற்றது. 'பெற்ற மனம்' நாட்டில் நல்லதொரு நவீனமாக வரவேற்கப்பட்டுப் பாராட்டுதலைப் பெற்றது. 'மலர்விழி' அனைவரது உள்ளத்தையும் மலர்வித்தது. கடிதங்கள் வாயிலாகக் கருத்தைப் பரப்பும் முறையும் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற வேண்டும் என்ற இவர்தம் ஆர்வமே 'தம்பிக்கு', 'தங்கைக்கு', 'நண்பர்க்கு', 'அன்னைக்கு' முதலிய நூல்களை அவனிக்கு அளித்தது.

மொழியியலிலும் ஒப்பிலக்கணவியலிலும் இலக்கிய வரலாற்றுத் துறையிலும் இவர் தம் பணி இளைஞருலகிற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ்கின்றது.

அறப்போர் வீரர்

அறிஞர் மு. வ. அவர்கள் ஓர் அறப்போர் வீரர். 'ஆகாசவாணி' வானொலியாகி வளம் பெறுவதற்கு அவர் மேற்கொண்ட துளக்கமில்லா முறை இன்னும் நமக்கு முன் மாதிரிப் பாடமாக இருந்து வழிகாட்டி நிற்கின்றது.

அறிஞர் மு. வ. அவர்களுடன் நெருங்கிப் பழகிப் பணிபுரியும் நற்பேறு பெற்றவர்களில் தாமும் ஒருவர் என்று எண்ணுவது எவருக்கும் மகிழ்ச்சியே தரும். 1961 முதல் 1967 வரை நான் தமிழக அரசின் குழந்தை இலக்கிய ஆராய்ச்சித் துறையின் தலைவனாகப் பணிபுரிந்து வந்த காலத்தில் அறிஞர் அவர்கள் ஆராய்ச்சியை நெறிப்படுத்தி வந்த அறிவுரைக் குழுவில் உறுப்பினராக இருந்து, அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி உதவினார். இறுதியாக அவரைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டுவந்த தமிழ்நாட்டின் வரலாறும் எழுதும் குழுவிற்குத் தமிழ் வளர்ச்சி இயக்குநர் என்ற வகையில் செயலாளனாக இருந்து பணி புரியும் பேறும் எனக்கு வாய்த்தது. உண்மை வரலாறு மலர்ந்து கொண்டிருக்கும் நல்ல நேரத்தில் அறிஞர் மு. வ. அவர்கள் நமக்குத் தொடர்ந்து வழிகாட்ட இயலாமற் போனது தமிழ் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும்.

தமிழ் எழுத்துச் சீர்பட வேண்டும் என்பதில் தந்தை பெரியாரின் கொள்கையை உடனடியாகத் தமிழகம் ஏற்றேயாக வேண்டும் என்பதனை மு. வ. அவர்கள் உளம் திறந்து பேசினார் என்பதை உலகம் அறியும்.

சீர்திருத்த அக்கறை

''பனை ஓலையில் இரும்பாணியால் எழுதுவதற்கு உதவியாக அமைக்கப்பட்ட பழங்கால எழுத்து வடிவங்களை இனியும் போற்றிக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை. தட்டெழுத்துப் பொறிக்கும் அச்சுப்பொறிக்கும் ஏற்ற வகையில் அவற்றைச் சிறிது மாற்றியமைக்க முற்பட வேண்டும். இந்த வகையான முன்னேற்றம் கருதிய சீர்திருத்தம் செய்யும்போது கண்மூடித்தன்மையான பழமைப் பற்று—மொழிப்பற்று என்ற பெயராலும் குறுக்கிடலாகாது'' என்று தந்தை பெரியாரின் 94-வது பிறந்த நாள் விழா மலரில் வெளியிட்ட அவர்தம் கருத்துக்குச் செயல்படுவதே தமிழ் உலகம் உடனடியாக மேற்கொள்ள வேண்டியதொன்றாகும். தந்தை பெரியாரும், தமிழையே நெஞ்சமாகக் கொண்ட மு. வ. வும் வாழ்ந்து மறைந்த பின்னருங்கூடத் தமிழ் எழுத்து வடிவம் திருந்தவில்லையென்றால்—'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டு ஓடும்' என்ற கருத்தை விளக்க, சுக்கு+அரிது→சுக்கரிது என்று கரும்பலகையில் எழுதி ஓடுகிற யகரத்தையும் காட்டமுடியாது தமிழ் மொழி திணறிக் கொண்டிருக்கும் இன்றைய நிலைமையிலிருந்து எப்பொழுதுதான் நமக்கு விடுதலை கிட்டப்போகிறது? சஉக்கஉ+அரஇ-

தஉ—→சஉககஅரஇதஉ என்று மொழியியல் வழி நின்று எழுதி உலகோ-ரை மகிழ்விக்கும் நல்ல நாள் என்று தான் புலரப்போகின்றது? ஆம், நிற்க நமக்கு நேரமில்லை; நீண்ட தொலைவு நாம் சென்றாக வேண்டும்.

இத்தகைய புரட்சி உள்ளம் கொண்ட நம்பெருமகனார் பற்றி இவர்தம் ஞானாசிரியராகத் திகழ்ந்த திரு. வி. க. அவர்கள் கொண்ட கருத்து நம் உள்ளத்தைப் பெரிதும் நெகிழ்விப்பதாய் இருக்கின்றது.

"வரதராசனார் தமிழறிஞர் என்பது வெள்ளிடைமலை; சீர்திருத்-தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு. அவரது சீர்திருத்தப் பேச்சுக்களை யான் பலமுறை செவிமடுத்துள்ளேன். அவர் வாழ்க்கைச் சீர்திருத்தக்-காரர் — சமூகச் சீர்திருத்தக்காரர் — நாட்டுச்சீர்திருத்தாரர் என்பதில் ஐயமில்லை......"

சீர்திருத்தச் செம்மல் தமிழறிஞர் மு. வ. என்னும் பெருஞ்சுடர் என்றும் நம் முன்னின்று வழிகாட்டி நெறிப்படுத்திக்கொண்டிருக்கும்.

—தமிழ்உறவு
அக்டோபர் 1974

# பண்புடைப் பண்டாரகர் மு. வ.

இரா. முத்துக்குமாரசாமி

இருபதாம் நூற்றூண்டு இந்தியா, கட்சி அரசியலைக் கண்ட இந்தியாவாகும். ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகட்கு மேல் முடியாட்சி ஒன்றையே கண்டுவந்த இந்தியா பல்வேறு அரசியல் கட்சிகளால் ஆளப்படும் குடியாட்சி முறையைப் பின்னர்க் கண்டது. கட்சிகளில்தாம் எத்தனை வகைகள்! ஒரு கட்சிக்குள்ளேயே எத்தனை பிரிவுகள்! வலதுஅணி, இடது அணி, தீவிர அணி என்று ஒரே கட்சிக்குள் உணர்ச்சியை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட பாகுபாடுகள் பல.

இத்தகைய கட்சிப் பாகுபாடுகள் பெருகுவதற்கு முன்னரே தமிழ் அறிஞர்களிடையே உரைநடை அமைப்பை வைத்துச் சில அணிகள் உருவாயின.

இதுவரை பழக்கத்திலுள்ள ‘மணிப்பிரவாள நடை’யே போதும் என்ற கருத்துடைய வலது அணி,

வடசொற்கள் மட்டுமன்று; பிறமொழிச் சொற்கள் எவற்றையும் கலக்கக் கூடாது என்ற நோக்கம் கொண்ட தீவிர அணி. அதுவு-மின்றி இதுவுமின்றி மக்களுக்கு விளங்கக் கூடிய எளிய நடை : தேவையான இடங்களில் பழகிய பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதும் நடையைப் பின்பற்றிய இடது அணி.

இவ்வணிகளில் முதலில் குறிப்பிட்ட வலது அணி தலைவ-னில்லாத படை; இருப்பதைக் காப்பதற்கென்றிருந்த என்றுமுள தமிழறிஞர்கள் .

பிறமொழிச் சொற்களைக் கலவாது எழுதும் தனித் தமிழியக்கத்தைக் கண்டு அதன் தானைத் தலைமைப்பொறுப்பை ஏற்று நடத்திய மறைத்திரு. மறைமலையடிகளாரின் தீவிர அணி.

முன்னவரின் மந்த நடையுமின்றி, பின்னவரின் பீடுநடையு-மின்றி இடைப்பட்ட ஒரு தென்றல் நடையை உருவாக்கி அதன் தலைவராகத் திகழ்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனாரின் இடது அணி.

அடிகளாரின் பீடுநடையைப் பின்பற்ற முடியாத நிலையில் குறு-முனியின் தென்றல் நடையைப் பின்பற்ற அறிஞர்களில் ஒரு சிலர் முன் வந்தனர். அவர்களுள் முன்னணியிலிருந்து முதல்மணியாகத் திகழ்ந்தவர் மறைவுற்ற பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் ஆவர்.

திரு.வி.க. அவர்களையே தம் ஆசானாக ஏற்றுக் கொண்ட மு.வ. எழுத்துப்பணியில் மட்டும் அவரைப் பின்பற்றினாரேயன்றி அரசியல், தொழிலாளர் நலன் போன்ற திரு.வி.க. வின் வேறு பல துறைகளில் அடியெடுத்து வைக்கவில்லை.

திரு. வி. க. தம் நடையைக் கட்டுரை, கவிதை, சொற்பொழிவு ஆகியவற்றுக்கு மட்டுமே பயன்படுத்தினார். இலக்கியத்தின் பிற துறைகளில் அவர் புகவில்லை. அதனால் திரு. வி. க. வின் நடை படித்த பண்டிதர்களிடம் மட்டுமே பரவி வந்தது. அந்நடையைப் பெரும்பாலும் இக்கால மக்கள் பயிலும் இலக்கியத் துறைகளான சிறுகதை, புதினம் போன்ற துறைகளில் பயன்படுத்தி, பிறமொழிச் சொற்கள் பெரும்பாலும் கலவாத எளிய இனிய நடையை மக்களுக்கு அறிமுகப்-படுத்திய பெருமை டாக்டர் மு.வ. அவர்களையே சாரும். அவர் அத்-துடன் நிற்காது அந்நடையே தம் ஆசிரியர் தொழிலுக்கும் பயன்

படுத்திக்கொண்டு மாணவர்களுக்கேற்ற வகையில் புதிய இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் மொழியியல் நூல்களையும் படைத்தார். அதனால் மொழியியல் போன்ற மிகக் கடினமான துறைகூட மு.வ.வின் எளிய நடையால் மாணவர்களுக்கு எளிதில் விளங்கிற்று.

இறைவனை இறைமைக்காகவே வழிபட்டவர்கள் சைவ சமயக் குரவர்களான அப்பர் முதலியோர். காலச் சூழ்நிலைக்கேற்ற கருத்துக்களைக் கூறி, இச் சூழலுக்கிடை என்னை வாழ வைத்துவிட்டாயே, எனக்குக் கடைத்தேற்றம் கிடையாதா? என்று கேட்டவர் தாயுமானவர். அவர் இறைவனை இறைமைக்காக அன்றித் தமக்காக வழிபட்டவர். வாழ்க்கைச் சிக்கல்களை எடுத்துக்கூறி, சிந்திக்கச் செய்தவர் அவர். அவருடைய பாடல்களும் சுவாமி இராமதீர்த்தருடைய அறிவுரைகளும் மு. வ. வை மிகவும் கவர்ந்தன. அதனால்தான் அவர் வாழ்க்கையில் ஏற்படும் பல சிக்கல்களை எடுத்துக்கூறி அவற்றை விடுவிப்பதற்கு வழியும் கூறினார். மு.வ. கூறிய வாழ்க்கைத் தத்துவங்கள் சில அறநெறிக்குச் சற்று முரணாகக்கூடத் தோன்றும். ஆனால், இன்றைய வாழ்க்கை முறைக்கு அவை தேவையென்பதால் அவற்றைத் துணிந்து கூறினார். 'ஒரு கூடைப் பழங்களில் பெரும்பாலானவை அழுகியிருக்க ஒரு சில பழங்கள் மட்டும் அழுகாது இருத்தல் பயனில்லை. அப் பழங்களும் வாழ வேண்டுமென்றால் பிற பழங்களைப்போல அழுகித்தானாக வேண்டும்' என்று ஒரு கருத்தை மு.வ. கூறுகிறார். இஃது 'அதிர்ச்சி வைத்தியம் தான்! ஆனால் இன்றைக்குத் தேவையான வைத்தியம்' என்று மு.வ. கருதினார். இவ்வாறு சிந்தனையைத் தூண்டும் கருத்துக் கோவைகளும், வாழ்க்கைத் தத்துவங்களும் கொண்ட 'சிந்தனைக் கட்டுரை'களுக்கும் மு.வ. தம் எளிய நடையைப் பயன்படுத்தினார்.

டாக்டர் மு.வ. தம் தெளிவான நடையைப் பேச்சிலும் புகுத்தினார்; அவர் சிறந்த பேச்சாளர். தமிழுலகம் போற்றும் உரையாசிரியர்; சங்க இலக்கியக் கனிகளைச் சுளை சுளையாக எடுத்து வைத்துத் தமிழ் மக்களைச் சுவைக்கச் செய்த இலக்கிய ஆராய்ச்சியாளர்; மொழி நூலறிஞர்; பைந்தமிழ் பாடும் பச்சையப்பன் கல்லூரியிலும், பல்கலைக் கழகத்திலும் பன்னூற்றுக் கணக்கான பைந்தமிழ்த் தொண்டர்களை உருவாக்கிய பெரும் பேராசிரியர். பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை ஆட்சி செய்த கல்வியாளர். இவையனைத்துக்கும் மேலாக மிகச் சிறந்த பண்பாளர்—ஒரு சிறந்த மனிதர்.

டாக்டர் மு.வ. அவர்களைப் பலர் பல கோணங்களிலிருந்து கண்டுள்ளனர். 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்னுமாறு ஒவ்வொரு கோணத்தைக் கண்டவர்கள் அதையே கண்டு வந்தனர். டாக்டர் ந. சஞ்சீவி அவர்கள் மறைமலையடிகள் நூல் நிலையத்தில் நடைபெற்ற மு.வ. இரங்கல் கூட்டத்தில் குறிப்பிட்டதுபோன்று 'மு.வ.வை முழுதும் அறிந்தவர்கள் நம்மில் யாருமே கிடையாது' என்பது பேருண்மை.

தெளிவான எழுத்தும் பேச்சும் மு. வ. விற்குக் கைவந்த கலைகள். அவ்வாறே எளிய உடையணிந்து கொள்வது அவருக்கு மெய்வந்த கலை. எளிய உடையணிவதில் அவர் காந்தியைப் பின்பற்றினார். 'கதரு'டையும் அணிந்தார். வாழ்வியலில் காந்தீயத்தைப் பின்பற்றி-னார். ஆனால், அரசியலில் அவர் காந்தியைப் பின்பற்றவில்லை. 'இந்தி' தமிழ் நாட்டில் திணிக்கப்பட்டபோது அதனை எதிர்த்தார். அதையும் கருத்துப் போராட்ட அளவில் வைத்துக் கொண்டாரே தவிர, கட்சிப் போராட்ட அளவில் இறங்கவில்லை-

உணர்ச்சிகளை அடக்கிவைத்துக் கொண்டுதான் பேசுவார். ஆனால் சில வேளைகளில் தம்மையும் மீறி, கேட்போர் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் பேசி விடுவார். உடனே 'தமிழன் உணர்ச்சிக்கு இடம் கொடுத்ததால்தான் உயராமல் கெட்டான்' என்று கூறி உணர்ச்சியை அடக்கச் சொல்லுவார். எனவே, உடையிலும் சரி உள்ளத்துணர்ச்சியிலும் சரி எளிமை வேண்டும், புரட்சி கூடாது' என்று எண்ணி வந்தவர் அவர்.

எளிமையே உருவான மு.வ. 1912 ஆம் ஆண்டு வட ஆர்க்-காட்டைச் சார்ந்த திருப்பத்தூரில் முனிசாமி முதலியார்க்கும் அம்மாக் கண்ணு அம்மையார்க்கும் தமிழ்த்தாய் செய்த தவத்தின் பயனாய்த் தவமகனாய்த் தோன்றினார். தம் பள்ளிக் கல்வியை அவ்வூரிலிருந்த கிறித்தவ அறநிலையத்தார் நடத்தி வந்த பள்ளியிலேயே பெற்றார்.

உண்மை, ஒழுங்கு இவற்றுக்கு மேலாக ஒழுக்கம் ஆக இவற்றைக் கற்பிப்பதே கல்வியின் நோக்கம் என்று கிறித்தவ அறநிலை-யத்தினர் இவற்றையே மாணவர்களுக்குப் புகட்டினர். மு.வ. இவற்றை முழுக்க முழுக்கக் கைப்பற்றிக் கொண்டதோடன்றித் தம் வாழ்நாள் முழுவதும் கைவிடாது காப்பாற்றி வந்தார்.

மகான் காந்தியின் எளிய வாழ்வு மு. வ. வுக்குப் பிடித்திருந்தது. அதை அன்றே 'சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே' என்று பிடித்துக் கொண்டார். அதைச் 'சிக்கென'ப் பிடித்ததன் விளைவாகச்'சிக்கனத்தை'யும் மிக உறுதியாகப் பின்பற்றிக் கொண்டார். எப்போதும் எதிலும் எளிமை; எதற்கும் எங்கும் சினமுருமை; யார் எந்தத்தவற்றைச் செய்யினும் அதைப் பொறுத்துக்கொள்ளும் சகிப்புத் தன்மை; இளமை முதல் முதுமை வரை எப்போதும் அவர் முகத்தை விட்டு அகலாத புன்முறுவல் இவையனைத்துமே அவரைத் தலைசிறந்த பண்பாளராக உருவாக்கின எனலாம்.

பதினாரும் வயதில் பள்ளிப்படிப்பு முடிந்தபின் அன்றும், இன்றும், என்றும் உள்ள நிலையான உண்மையான 'வில்லை'-யணிந்த வேலையாளை வேலை ஏவும் 'அரசு வேலையே பெரிய வேலை' என்ற கருத்திற்கிணங்க மு.வ. வும் வட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் எழுத்தர் வேலையை ஏற்றுக்கொண்டார். அவர் வாழ்நாளை அவருடைய 62ஆம் அகவையில் முடித்து வைத்த ஈளை நோய் அவரை அத் தொடக்க காலத்தில் எழுத்தர் பணியைப் போக்குவதற்கும் உதவியாக இருந்தது. அப்போதே மு. வ. நேர்மையை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை எழுந்தது. அவர் பார்த்துவந்த 'ஆப்காரி' எழுத்தர் பணி மதுவிலக்கு நடைமுறையில் இருந்த காரணத்தால் பெரும் கையூட்டுப் பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது. எனினும் அறத்தைத் தம் வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த மு.வ. நேர்மையிலிருந்து ஒரு சிறிதும் பிறழவில்லை.

அந்நாளிலேயே காந்தியத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்றின் காரணமாகக் கதர் உடைதான் அணிவது வழக்கம். ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அலுவலகக் கடிதம் ஒன்றை எடுத்துக்கொண்டு மு. வ. நேரில் செல்ல வேண்டியிருந்தது. அப்போது அருகில் இருந்தவர்கள் 'கதருடை அணிந்திருக்கிருயே, ஆட்சித் தலைவர் அதைக் கண்டிப்பாரே' என்றனராம். அதற்கு ஒரு சிறிதும் அஞ்சாத மு. வ. 'இந்த வேலையே போயினுஞ் சரி, இதற்காக என்னுடைய உடையை மாற்றிக் கொள்ள மாட்டேன்' என்று கூறினாராம். இந்தப் பற்று அவர் வாழ்நாள் இறுதிவரை ஒரு சிறிதும் குறையாமல் இருந்தது பாராட்டுதற்குரியதாகும்.

ஓராண்டிற்குப் பின் அலுவலகப் பணியாய் நிலஅளவைக்காக வெளியே சென்று பணியாற்றுகையில் இருமித் துப்பினர். அதில்

குருதி இருந்தது. அத்துடன் எழுத்தர் வேலைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு மூன்றாண்டுகள் வேலம் கிராமத்தில் ஓய்வு எடுத்து வந்தார். அவ்வாறு நோயுற்றபோதுதான் மு. வ. இயற்கை வைத்திய முறையில் நாட்டம் கொண்டார். செர்மானிய இயற்கை வைத்திய ரான டாக்டர் கூன் என்பார் எழுதிய 'The oneness of all diseases என்ற நூலைப் படித்து அந் நூலில் கூறப்பட்டுள்ள சிகிச்சை முறைகளைக் கையாண்டு தம் ஈளை நோயைப் போக்கிக் கொண்டார். அவ் வேளையில் தான் நண்பர்கள் அறிவுரையின்படி தமிழ் படித்தார்.

திருப்பத்தூர் முருகைய முதலியாரிடம் தமிழ் பயின்று 1931இல் வித்துவான் முதனிலைத் தேர்வில் தேறினார். உடன் திருப்பத்தூரில் தமிழாசிரியராகப் பணியேற்றார்.

'வரதராசனார் தமிழறிஞர் என்பது வெள்ளிடை மலை; சீர்திருத்தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு' என்று தமிழ் முனிவர் திரு. வி.க. பின்னர்த் தம் வாழ்க்கைக் குறிப்பில் மு.வ. வைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இதற்கு எடுத்துக்காட்டாக அவர் இளமைக் கால நிகழ்ச்சியையே காணலாம். மு. வ. வித்துவான் இறுதித் தேர்வுக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்காக வீட்டை விட்டுப் புறப்படுகையில் மயிர் வினைஞர் ஒருவர் எதிர்பட்டாராம். 'சகுனம் சரியில்லை' என்று வீட்டிலிருந்தவர்கள் தடுத்தார்களாம். அதற்கு மு. வ. 'தேர்வில் நான் வெற்றி பெறேனாயின் அஃது என்னுடைய தவறுதானே தவிர இவ் வினைஞர் எதிர்ப் பட்டதுதான் என்று எப்படியாகும்? நான் உறுதியாக வெற்றி பெறுவேன்' என்று கூறிவிட்டுச் சென்று தொகையைச் செலுத்தி, தேர்வெழுதி மாநிலத்தில் முதல்வராகத் தேறி ரூ. 1000 திருப்பனந்தாள் பரிசும் பெற்றார்.

1935 இல் வித்துவான் தேர்வில் தேறிய பின் திருப்பத்தூர் நகராண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியின் தலைமைத் தமிழாசிரியர் பணி அவரை நாடி வந்தது.

மு. வ. பள்ளியாசிரியராக இருந்தபோதே எளிய உடையைத் தம் ஆசிரியப் பணிக்கென அமைத்துக் கொண்டார். கைத்தறி வேட்டியைக் கச்சம் வைத்துக் கட்டிக் கொள்வார். மேலே கதர் சட்டை, அதன் மேல் வண்ணக் கதர்க்கோட்டு, தலையில் வெள்ளைப் பாகை, நெற்றியில் சிறு சந்தனப் பொட்டு, இதுதான் மு. வ. வின் எளிய

தமிழாசிரியர் கோலம். இதைப் பின் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியர் பணியேற்ற சில ஆண்டுகள் வரை பின்பற்றி வந்தார். ஈளை நோயே மு. வ. வை எழுத்தர் பணியிலிருந்து மீட்டு நமக்குத் தந்தது. ஆனல், அதுவே நேரத்தில் அவர் உயிரை நம்மிடமிருந்து பறித்துக் கொண்டும் போய்விட்டது. நோயே மருந்தாவதும் அம் மருந்தே நோயாவதும் தமிழிலக்கியம் நமக்குக் கற்றுக் கொடுத்த பாடம்தானே?

தமிழ்த்தொண்டு செய்ய அவர் தயங்கியதே கிடையாது. திருப்பத்தூருக்கு அருகே உள்ள கிறித்துவ குல ஆசிரமத்தில் தொண்டாற்றி வந்த சில அன்பர்களுக்கு மு. வ. இரண்டு கல் தொலைவு நடந்து சென்று வாரத்திற்கு இருமுறை 'தமிழ்' கற்றுக்கொடுத்து வந்தார்.

அப்போது சிந்தனையைத் தூண்டும் வகையில் மக்கள் நல்வாழ்வுக்குப் பயன்படக்கூடிய கட்டுரைகளைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் நடத்திவரும் 'செந்தமிழ்ச் செல்வி' மாத இதழுக்கு எழுதத் தொடங்கினர். அவர் எழுதிய 'ஊணும் உறக்கமும்' என்ற கட்டுரை 1939ஆம் ஆண்டு இதழில் வெளி வந்தது. அதன்பின் மொழியியல் கட்டுரைகளையும் அவர் எழுதலானர்.

திருக்குறளுக்குப் புதுவிளக்கம் காண வேண்டுமென்ற அவா அப்போதே அவருக்கு ஏற்பட்டது. அவர் எழுதிய முதல் நூல் 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்பதே. ஆனல் அவருடைய பல நூல்கள் அச்சேறிய பின்தான் அஃது அச்சுப் பொறியைக் கண்டது.

திருப்பத்தூரில் மு. வ. இருந்தபோதே அவருக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் தொடர்பு ஏற்பட்டது. செந்தமிழ்ச் செல்விக்குக் கட்டுரைகளை எழுதி வந்த மு. வ. சிறுவர்க்குரிய சில நூல்களையும் எழுதினர்.

மு. வ. விடமிருந்த திறமையைக் கண்ட அவர் நண்பர்கள் சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினல் சிறப்படையலாம் என்று எண்ணி அப்போது அக் கல்லூரியின் அறங்காவலர் குழுவில் உறுப்பினராக இருந்த டாக்டர் இலக்குமணசாமி முதலியாரவர்களுக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினர்களாம். மு. வ. வின் திறமையைக் கண்ட இலக்குவனர் உடனே பச்சையப்பன் கல்லூரியில் பயிற்றுசிரியர் பணியில் அவரை அமர்த்தினர்.

புதிதாகச் சென்னையில் குடியேறிய டாக்டர் மு. வ. அவர்கட்குக் கழக ஆட்சியாளர் திரு வ. சு. அவர்கள் வீடு அமர்த்திக்கொடுத்ததோடு சிறுவர்க்கேற்ற வகையில் சில நூல்களையும் எழுதும்படி தூண்டினர்.

தாம் எழுத்தாளரான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு 1970 - இல் அனைத்திந்திய புத்தகச் சந்தை சென்னையில் கூடியபோது ஒரு கருத்தரங்கத்தில் மு. வ. வே குறிப்பிட்டார். 'இதோ என் எதிரே அமர்ந்திருக்கும் சுப்பையா பிள்ளை அவர்கள்தாம் என்னை முதன் முதல் புத்தகம் எழுதுமாறு தூண்டியவர்' என்று குறிப்பிட்டுச் சொன்னர்.

முதன் முதலாக மு.வ. எழுதிய நூலான 'குழந்தைப் பாட்டுக்கள் 1939 இல் கழக வழி வெளிவந்தது. அதன்பின் சிறுவர்க்கேற்ற சில கதை நூல்களை எழுதினர்.

மு. வ. எழுதிய 'திருக்குறள் தெளிவுரை' தான் தமிழ்ப் புத்தக விற்பனையுலகில் ஒரு பெரும் புரட்சியையே செய்து வருகின்றது. வேறு எந்த இலக்கிய நூலும் இந்திய மொழிகளில் இதுவரை எட்டு நூருயிரம் படிகள் விற்பனையானதில்லை. இதுவே அவருக்கு நிலைத்த புகழைத்தரும் நூல்.

1940 சூன் மாதம் பச்சையப்பன் கல்லூரியில் மு. வ. வின் பைந்தமிழ்ப் பணி தொடங்கியது. அப்போது அங்குத் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்தவர் மோசூர் கந்தசாமி முதலியார். அப்போதுதான் சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய பாடத்திட்டத்தின்படி தமிழ் இலக்கியத்தைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு பி. ஓ. எல். (ஆனர்சு) வகுப்பு தொடங்கப் பெற்றது. பாடத் திட்டத்தில் 'மொழி நூல்','மொழி வரலாறு' போன்ற புதிய பாடங்கள் சேர்க்கப் பெற்றிருந்தன. அவற்றைக்கற்பிக்கும் பேறு மு.வ. வுக்குக் கிட்டியது. அதுதான் மேலை நாட்டு மொழியியல்துறை தமிழ்நாட்டில் புகுதற்கும் அத்துறையில் அரிய வழிகாட்டியாகத் திகழ்கின்ற 'மொழி நூல்' 'மொழிவரலாறு' நூல்களை மு. வ. தமிழில் எழுதுவதற்கும் காரணமாயுமிருந்தது. அவற்றைக் கழகமே வெளியிட்டுள்ளது. கழகப் பெருவிழா மலர்கள் நான்கிற்குக் கட்டுரைகளும் பாராட்டுரைகளும் வழங்கியுள்ளனர். கழகப் பத்துப்பாட்டு மாநாட்டுக்கும் கழக 1008 ஆவது வெளியீட்டு விழாவிலே மொழி மாநாட்டுக்கும் தலைமை தாங்கிச் சிறப்பித்தனர்.

அவரிடம் முதலணியில் பயிற்சி பெற்ற மாணவர்கள் நால்வர், டாக்டர் ரா. சீனிவாசன், திரு. ம. ரா. போ. குருசாமி, திரு. ச. ரகு-

நாயகம். திரு. சி. வேங்கடசாமி. அந்த அணியைந் தொடர்ந்து பச்சையப்பன் கல்லூரியில் மு. வ. விடம் சிறப்புத் தமிழ் பயின்றவர்கள் ஐநூறுக்கும் மேற்பட்டவராவார்.

அவர்தம் தோற்றப் பொலிவும் நிமிர்ந்த நன்னடையும் புன்னகை தவழும் முகமும் மாணவரை ஆட்கொண்டன. மாணவர் இயல்பறிந்து அவர்தம் உளமறிந்து ஏற்கும் வகையில் பாடஞ் சொல்வதில் மு.வ. வல்லவர்.

மு.வ. வின் ஆற்றலை உணர்ந்திருந்த கல்லூரி முதல்வர் திரு. ஆர். கிருட்டிணமூர்த்தி அவர்கள் சிறப்புத் தமிழ் பயில மாணவர்களைச் சேர்க்கும் பொறுப்பை மு.வ. விடமே இறுதிவரை ஒப்படைத்திருந்தார். பின்னால் வேறு சில கல்லூரிகளில் தமிழ்ச் சிறப்பு வகுப்பு நடைபெற்ற போது கூட 'மு.வ.விடம் பயில வேண்டும்' என்ற ஒரே நோக்குடன் பழ மரத்தை நாடும் பறவைகளைப் போல மாணவர்கள் பச்சையப்பன் கல்லூரியை மொய்த்தனர்.

கல்லூரியில் மு.வ. ஆசானாக மட்டும் விளங்கவில்லை. ஆதர-வற்ற மாணவர்கட்குப் பொருளுதவும் தந்தையாய், அரும் பசிக்கு அன்னமளித்து அரவணைக்கும் அன்னையாய்த் திகழ்ந்தார். வலக்கை-யளிப்பதை இடக்கை யறியாது வழங்கிய வள்ளல் அவர். அவரிடம் பொருளுதவி பெற்ற மாணவர்கள் பலர். அவருடைய மாணவர்கள் கல்லூரியை விட்டுச் சென்ற பின்னரும் அவரையே தம் வாழ்க்கைக்கு வழிவகுக்கும் தலைவராய் எண்ணி அவருடைய உதவியை நாடி வாழ்ந்தனர். கல்விப்பணி வளர்க்கும் திரு. வி.க. பள்ளிக்கு ரூ 11,000 உதவியதோடு தம்முடைய நூல்களுள் நான்கை அப்பள்ளிக்கே உரிமைப்படுத்தியுள்ளார்.

பேராசிரியராகத் திகழ்ந்த மு.வ. பேரும் புகழும் பெற்ற எழுத்தாளராய், கேட்டார்ப்பிணிக்கும் வகையில் சொற்பெருக்காற்றும் பேச்சாளராய் வளர்ந்தார். அவ்வகையில் அவர் தமிழ் முனிவர் திரு.வி.க. அவர்களையே தம் ஆசானாய் ஏற்றுக் கொண்டார்.

ஆற்றொழுக்கான எளிய நடையில் அறத்தின் ஆற்றலை வலி-யுறுத்தும் கட்டுரைகளையும் கதைகளையும் எழுதத் தொடங்கினார். அவருடைய எழுத்துக்கள் அவருடைய மாணவர்களை மட்டுமன்றித் தமிழ்நாட்டு மக்களனைவரையும் கவர்ந்தது. தமிழ்ப் பேராசிரியராக இருந்து கொண்டு முதன் முதல் புதினங்களை எழுதியவர் அவரே.

அத்துறையிலும் பிற எழுத்தாளர்கள் யாரும் இதுவரை சாதிக்க முடி-யாததையும் சாதித்து விட்டார். அவருடைய புதினம் எதுவும் பத்திரி-கைகளுக்குத் தொடர்கதையாக எழுதப்பட்டதன்று; எல்லாமே முதலில் நூல்வடிவில்தான் வெளிவந்தன. ஒன்றிரண்டு மட்டும் தொடர்கதைகளாக வந்திருப்பினும் கூட அவை முழுவதுமே ஒரே சமயத்தில் எழுதப் பட்டவைதாம்.

கதை கட்டுரைகளைப் படைப்பதோடு மட்டும் மு.வ. நின்று விடாது பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபட்டார். 'தமிழில் வினைச்சொற்கள்' என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து 1945 ஆம் ஆண்டில் 'எம்.ஓ.எல்' பட்டம் பெற்றார்.

டாக்டர் மு.வ. அவர்கட்கு இயற்கைக் காட்சிகளில் இளமை முதலே ஈடுபாடு உண்டு. காலையிலும் மாலையிலும் ஊரை விட்டு வெகுதொலைவு சென்று இயற்கைக் காட்சிகளை கண்டு மகிழ்வார். ஈளை நோயால் துன்புற்று 'வேலம்' கிராமத்தில் ஒய்வு பெற்றுவந்த நாள் முதல் இறுதியாக மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பொறுப்பில் பணியாற்றிய போது மதுரைக்குப் பத்துக்கல் தொலைவிலுள்ள நாக-மலையில் வாழ்ந்தவரை இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ அவர் தவறியதே இல்லை.

கதிரவன் மலை வாயில் வீழும் மாலைநேரம், விண்முழுதும் குடை விரித்து விண்மீன்கள் மின்னும் இரவு நேரம், எந்நேரமாயினும் திறந்த வெளியில் அமர்ந்துகொண்டு நரிகள் ஊளையொலி தொலைவில் கேட்க அமைதியாக நீண்டநேரம் பக்கத்தில் அமர்ந்திருப்பவர்களிடம் கூடப் பேசாது இயற்கையின்பத்தில் மூழ்கிக் கிடப்பார்.

இயற்கையைக் கண்டு மகிழ்வதில் அவர்க்கேற்பட்ட ஈடுபாடே டாக்டர் பட்ட ஆய்வுக்குக்கூட 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' (The Treatment of Nature in Sangam Literature) என்ற தலைப்பை எடுத்துக்கொள்ளச் செய்தது போலும்.

1947இல் சென்னைப் பல்கலைக் கழகம் அவருக்கு பிஎச்.டி. பட்டம் வழங்கிற்று. அப் பல்கலைக் கழகத்தின் வழி தமிழ்த்துறையில் முதன் முதல் டாக்டர் பட்டம் பெற்றவர் மு.வ. அவர்கள்தாம்.

1944 முதல் 46 வரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் 'ரீடர்' பொறுப்பேற்றிருந்தார். அவ்வமயம் அவர்

நிகழ்த்திய ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளே 'புலவர் கண்ணீர்', 'ஓவச் செய்தி' போன்ற நூல்களாக வெளிவந்தன.

கடற்கரைக்காற்று அவருடைய ஈளைநோய்க்கு ஏற்றுக் கொள்ளாததால் அப்பொறுப்பை விட்டுவிட்டு மீண்டும் பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியர் பதவியில் சேர்ந்தார்.

ஆசிரியப் பணிபோகத் தமக்கு எஞ்சியிருந்த நேரத்தை-யெல்லாம் எழுத்துப் பணியிலேயே செலவிட்டார். இரவு நேரங்களையும் விடுமுறை நாட்களையும் எழுத்துப் பணிக்கே ஒப்படைத்தார். அதன் விளைவாகவே பல நூல்கள் வெளியாயின.

1940 முதல் 1955 வரை 15 ஆண்டுகள் அவருடைய எழுத்தின் பொற்காலம் எனலாம். அவர் எழுதிய 88 நூல்களில் 65 நூல்கள் அந்தப் பதினைந்து ஆண்டுகளில் எழுதியவையே. அவருடைய பல நூல்கள் பலமுறை மறுபதிப்பாயின.

அவர் எழுத்துக்களில் இழையோடியுள்ள சிந்தனைக் கதிர்களும் பொன்மொழிகளும் இளைஞர்களைக் கவர்ந்தது. அவற்றைத் தம் எழுத்-துக்களிலும் பேச்சுக்களிலும் கையாண்டனர். தம் வாழ்க்கைக்கு வழி-காட்டும் அறிவுரைகளாக அவற்றை ஏற்றுக் கொண்டனர்,

அவருடைய நூல்களில் மூன்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசையும் மூன்று சென்னை அரசாங்கத்தின் பரிசையும் பெற்றுள்ளன. அவர் எழுதிய 'அகல் விளக்கு' நூல் சாகித்திய அகாடெமியின் பரிசைப் பெற்றுள்ளது. மு. வ. தம் நூல்களுக்குக் கிடைத்த பரிசை ஏற்றுக் கொண்டாரே தவிர நடுவணரசு வழங்கிய பத்மஸ்ரீ (தாமரைத்திரு) பட்டத்தைப் பெறவும் கழக 1008 ஆவது வெளியீட்டு விழாவிலே கழகம் வழங்க விரும்பிய பாராட்டையும் பரிசைப் பெறவும் மறுத்துவிட்டனர்.

சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை மறைவுக்குப் பின் மு. வ. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பொறுப்பை 1961 ஆம் ஆண்டில் ஏற்றார்.

நீண்டகாலமாக மெல்லிய நடைபோட்டு வந்த ஆராய்ச்சித் துறையைத் மு. வ. முடுக்கி விட்டார். பல மாணவர்களை 'டாக்டர்' பட்ட ஆராய்ச்சிக்குத் தம் கீழ்ப் பதிவு செய்ய ஒப்புக் கொண்டார். அதனால் சென்னைப் பல்கலைக் கழகவழித் திறன்படைத்த இளைஞர்கள் விரைவில் 'டாக்டர்' பட்டங்கள் பெற்றுச் சிறந்தனர்.

தமிழ்த்துறையில் பல்வேறு மாறுதல்களைச் செய்து தம்மிடம் பயின்ற இளைஞர்களையே அத்துறையின் பல்வேறு பொறுப்புக்களில் அமர்த்தினர்.

ஆராய்ச்சித்திறன் மிக்க அறிஞர்களைக் கொண்டு தமிழ்த்துறையின் சார்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தார்.

மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மண்ணுலகும் விண்ணுலகும் வியக்கும் வகையில் சென்னையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி அதன் வழிவந்த பெருந்தொகையில் ஒரு பகுதியைச் சென்னை, அண்ணாமலை, மதுரைப்பல்கலைக் கழகங்களுக்கு அளித்தார்.

அத்தொகையைப் பெற்றுப் பல்கலைக் கழகத்தில் 'திருக்குறள் ஆராய்ச்சித்துறை' யை டாக்டர் மு. வ. செம்மையுற அமைத்து அத்துறை செய்ய வேண்டிய பணிகளைத் திட்டமிட்டுக் கொடுத்தார்.

தமிழ்ப் பேராசிரியராக மட்டுமே திகழ்ந்த மு. வ. அவர்களைப் பல்கலைக் கழக துணைவேந்தராகக் கண்டு மகிழ வேண்டுமென்று தமிழகமே விரும்பியது. அந்த அவாவுக்கு உருக்கொடுத்து மு. வ. வை மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக்கிய பெருமை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களையே சாரும். கல்லூரியில் பணியாற்றிய போது கல்லூரி முதல்வர் பொறுப்பை ஏற்க மறுத்தவர்; அரசர் முத்தையா செட்டியாரவர்களின் அன்பழைப்பை ஏற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர் பொறுப்பை ஏற்கமறுத்தவர் இறுதியாகத் தமிழாய்ந்த கூடலுக்குத் தண்டமிழ் வேந்தராய்ச் சென்றார்.

தமிழ் மட்டுமே பயின்று முதல் முதல் பல்கலைக் கழகத் துணை வேந்தரான பெருமை டாக்டர் மு. வ. அவர்களுக்கே உரியது.

மதுரைப் பல்கலைக் கழகம் தவழ்ந்து எழுந்து தளர் நடையிடத் தொடங்கிய நேரத்தில் மு. வ. அதன் துணைவேந்தரானார். இருக்குமிடம் சிறிதாயினும் அது தமக்கென்று சொந்தமான இடமாக இருக்க வேண்டுமென்பது டாக்டர் மு. வ. வின் நீண்டநாள் கருத்து. தமக்கு மட்டுமல்லாது தம்முடைய மாணவர்கட்கும் வசதியுடன் வாழ வளமானமனைகளை அமைத்துத் தந்தவர் அவர்.

சிறிய கட்டிடங்களில் வசதியின்றிச் செயல்பட்டு வந்த மதுரைப் பல்கலைக் கழகத்தைக் கண்டார் அவர். ஊருக்குத் தொலைவில் அமைதி

யான இடத்தில் புதிய புதிய கட்டிடங்களைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் அமைத்துக் கொடுத்தார். குழந்தைகள் சிறு வீடு கட்டி மகிழ்வதைப்போல ஒவ்வொரு கட்டிடமும் கட்டப்பெற்று முடிவுறும் போதும் அவர் மகிழ்வார். தம்மைப் பார்க்க வரும் அனைவரையும் அழைத்துச் சென்று பல்கலைக் கழகக் கட்டிடங்களைக் காட்டுவது அவர் மகிழ்ச்சியாகச் செய்த செயல்.

வாழ்நாள் இறுதியில் கூட, கொடிய நெஞ்சுவலி ஏற்பட்ட பின்னரும், நடுவண் அரசுக் கல்வி அமைச்சர் மாண்புமிகு நூருல் அசன் அவர்களைத் தாமே அழைத்துக் கொண்டு பல்கலைக் கழகக் கட்டிடங்கள் முழுவதையும் சுற்றிக் காட்டினாராம்.

மதுரைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் மு. வ. செய்துள்ள பணி செம்மையானதாகும். முதன் முறையாகத் தமிழகத்தில் தம் பல்கலைக்கழகவழி அஞ்சல்வழிப் பாடத்திட்டத்தைக் கொண்டு வந்தார். அதனால் பொருள் வசதியின்றி மேற்படிப்பு பெறமுடியாது நின்றுவிட்ட பலர் இன்று பட்டம் பெறும் நிலையிலுள்ளனர்.

அடுத்து, வாழும் எழுத்தாளரான அகிலன் அவர்களின் எழுத்துத்திறனை ஆயும் சிறப்பான 'கருத்தரங்கு' ஒன்றையும் பல்கலைக் கழகத்தின்வழி நடத்தியது அவருக்குச் 'சங்க இலக்கியத்தில் மட்டுமின்றித் தற்கால இலக்கியத்தில் பேரீடுபாடு உண்டு' என்பதைக் காட்டுவதாகும். இவையன்றித் தமிழக வரலாற்றுக்குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தலைவராகவும் சிறந்த பணியாற்றியுள்ளார். இவருடைய பல்துறைப் பணிகளையும் தமிழ்ப் பணியையும் பாராட்டித்தான் அமெரிக்காவிலுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்குக் கவுரவ டாக்டர் பட்டமான 'டி. லிட்.' பட்டத்தை வழங்கியுள்ளது. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் 'டி. லிட்.' பட்டம் பெற்ற தமிழறிஞர் டாக்டர் மு.வ. ஒருவரேயாவர்.

பல்கலைக் கழகப் பணி அவருக்கு நிறைவையளிப்பினும் விரைவில் ஓய்வுபெற்று மீண்டும் எழுத்துப்பணியைத் தொடங்க விரும்பினார்.

அதன் பொருட்டே இரண்டாம்முறை அவரே துணைவேந்தராகப் பொறுப்பேற்கத் தயங்கினார்; மறுத்தார். ஆனால் அரசின் விருப்பத்தைத் தம் விருப்பத்தினும் பெரிதாக மதித்ததால் குடும்பத்தார் எதிர்த்தும் அப்பொறுப்பை மீண்டும் ஏற்றுக் கொண்டார்.

நேரிய ஒழுக்கமும் சீரிய பண்பும் அளவறிந்துண்ணும் வாழ்க்கை அமைப்பும், நோய்க்கிடங்கொடா உடலோம்பு முறையும் இருந்துங் கூடக் காலன் அவரை விடவில்லை. சென்னையிலிருந்தபோதே 1969ஆம் ஆண்டு அவரை நெஞ்சடைப்பு நோய் முதன் முறை தாக்கிற்று. வேண்டிய ஓய்வெடுத்துக் கொண்டாரே தவிர ஆங்கில மருத்துவமுறையைக் கைக்கொள்ளவில்லை. இரண்டாவது முறையாக மதுரையை விட்டுக் கடைசியாகப் புறப்படுவதற்கு முன் மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சிக்குமுன் நெஞ்சடைப்பும் மார்வலியும் ஏற்பட்டன. விரைவில் தம் பணிகளை முடித்துக் கொண்டு சென்னையையடைத்தார்.

முத்தமிழை வளர்த்த மு.வ. விற்கு மூன்று ஆண் மக்கள் உள்ளனர். அரசு, நம்பி, பாரி ஆகிய மூவரும் ஆங்கில மருத்துவத்துறையில் மணிகள். இருப்பினும் மு. வ. தமக்கு இயற்கை மருத்துவம்தான் ஒத்துக்கொள்ளும் என்று மற்ற முறையைப் புறக்கணித்தார். அவர் தம் துணைவியார் ராதா அம்மையார் எடுத்துக் கூறியும் ஏற்றுக்கொள்ள மாட்டேனென்று அடம் பிடித்தார்.

'அடம்' என்றால் என்ன என்று மு.வ. 'குழந்தை' என்ற நூலில் விளக்குகிறார்.

"அடம் என்றால் என்ன? கொள்கையில் உறுதிதானே? அது தானே வேண்டும்' என்று நூல்கள் சொல்கின்றன. கொடுக்கும் லஞ்சத்திற்காக, புகழும் புகழ்ச்சிக்காகக் கொள்கையை மாற்றிக் கொண்டால் உலகம் பழிக்கிறதே! காந்தியைப் போல 'அடம்' பிடித்தவர்களைத்தானே உலகம் போற்றுகிறது."

காந்தியத்தைக் கடைசிவரைக் கைவிடாத மு.வ. அடத்தையும் கைவிடவில்லை. ஆனாலும் தாம் கைவிடாத இயற்கை மருத்துவமுறை தம்மைக் கைவிட்டு விட்டது என்பதை மறைவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் உணர்ந்த மு. வ. தம் மக்கள் வழி தம்மை ஒப்படைத்தார். அவர் கட்டுக்கடங்காத இதயத் துடிப்பைக் கட்டுப்படுத்தி அவரை மீட்க எண்ணிய நிலையில் அவருடன் பிறந்த ஈளைநோய் மிகுதியானது. ஒன்றுக்கு மருந்து கொடுத்தால் மற்றொரு நோய்க்கு அது நஞ்சாகிவிடும். எனவே ஈளைநோயும் இதய நோயும் சேர்ந்து அவர்தம் நற்றமிழைப் பேசிப்பேசி மகிழ்ந்த நாவை, எழுதி எழுதி ஓயாத கையை, இன்தமிழை எண்ணி எண்ணித் துடித்துக் கொண்டிருந்த இதயத்தை ஒடுக்கி விட்டன.

டாக்டர் மு. வ. ஓர் ஆல்மரம். அவருடைய மாணவர்கள் அம் மரத்தின் விழுதுகள். அவ் விழுதுகள் இன்று இந்தியாவில் மட்டுமின்றி உலகநாடுகள் பலவற்றிலும் தமிழ் கற்பிக்கப்பெறும் பல்வேறு பல்கலைக் கழகங்களில் வேரூன்றி வளர்ந்துள்ளன. விதிவலியால் இன்று ஆல-மரத்தின் அடிவேர்கள் அறுந்து விட்டன. ஆனல் சுற்றி நிற்கும் விழுதுகளால் ஆலமரம் ஆண்டாண்டுக் காலத்திற்குக் காப்பாற்றப் பெறும்.

செந்தமிழ்ச் செல்வி
நவம்பர் '74

# தமிழுக்கு விடுதலை தந்தவர்

கண. முத்தையா

இந்தக் கட்டுரைத் தலைப்பு என்னுடையதல்ல; என்னால் கடன் வாங்கப் பெற்றது. இருபது ஆண்டு- களுக்கு முன் ஒரு பெரிய அறிஞர், மகாகவி பாரதியாரைப் பற்றி எழுதிய கட்டுரைக்கு இத்தலைப்பை இட்டிருந்தார். ''தமிழுக்கு விடுதலை தந்தவர்'' என்ற அந்தச் சொற்றொ- டர் என்னை மிகவும் கவர்ந்தது. அந்தக் கட்டுரையை விரும்பிப் படித்தேன். அதில் தரப்பட்டிருந்த பாரதியா- ரின் சித்திரம் என் மனதில் பதிந்தது. ஆனால் காலகதி- யில் அச்சித்திரம் மறைந்து அந்த இடத்தில் டாக்டர் மு. வ. அவர்களின் உருவம் என் உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டது. மறக்க முடியாமல் என் மனத்தில் நிலைத்திருக்கும் அச்சொற்றொடர் நினைவுக்கு வரும்போ- தெல்லாம் டாக்டர் மு. வ. அவர்களின் உருவம்தான் என் மனக்கண்முன் நிற்கும்.

ஒரு மொழி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறதென்ருல் அது வளர்ந்து கொண்டேயிருக்கும். அதன் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டால், அது எத்தனை இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருந்தாலும் 'வாழும் மொழி' என்ற தகுதியை இழந்துவிடும். நம் தமிழ்மொழி பல்லாயிர வருட வரலாற்றுப் பெருமையுடையது; மிகப் பரந்த இலக்கியச் செல்வத்தையுடையது; எல்லாவற்றிற்கும் மேலாய் வாழ்ந்து வளர்ந்து கொண்டேயிருக்கிறது. இதைத்தான் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் ''ஆரியம் போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையா உன் சீரிளமைத்திறம்'' என்று புகழ்ந்திருக்கிருர்கள். வடமொழியையும் தமிழையும் ஒப்பிட்டு நோக்கினுல் இலக்கியச் செல்வத்தில் வடமொழி தமிழைவிட தாழ்ந்ததல்ல, உபநிடதங்கள், பாஷ்யங்கள் போன்ற அறிவுச் செல்வங்களும், வால்மீகி, வியாசன், காளிதாசன், பாணபட்டன் போன்றவர்களின் ஒப்பற்ற இலக்கியப் படைப்புகளும், சுக்கிரநீதி, பாஸ்கர நீதி, அர்த்தசாஸ்திரம் போன்ற எண்ணற்ற அறிவியல் நூல்களும் ஏராளமாகப் பெற்றிருந்தும் வடமொழி வழக்கொழிந்ததற்குக் காரணம், வளைந்து கொடுக்காத இலக்கண அமைப்பும். புதிய இலக்கிய உருவங்களையும், நெகிழ்ச்சியையும் பெருமல் தேங்கி நின்றதுமேயாகும்.

நம் தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் தேக்க நிலையை ஏற்படுத்தப் பன்முறை முயற்சிகள் நடந்தன. கவியரசர் பாரதியார் கூறுவதுபோல் ''ஆன்ற புலவர்கள் தவவலியால்'' அந்தக் குறுகிய மனப்பான்மை அவ்வப்போது முறியடிக்கப்பெற்று தமிழ்மொழி வளர்ந்து வளம்பெற்று வந்திருக்கிறது. அந்த முயற்சியில் பாரதியாரின் பங்கை எடுத்துக் காட்டுவதுதான் இருபது ஆண்டுகளுக்கு முன் நான் படித்த அக்கட்டுரையின் நோக்கம். அந்தக் கட்டுரையின் தாக்கத்தால் எனது மனத்தில் ஏற்பட்ட சிந்தனைகளின் விளைவே இந்தக் கட்டுரை.

பாரதியாரை அக்காலத்தில் தூண்டியது நாட்டுப் பற்றும், உத்வேகத்துடன் நாடெங்கும் கிளர்ந்தெழுந்த தேசிய இயக்கத்தின் வேகமுமேயாகும். விடுதலையுணர்வைத் தட்டியெழுப்ப முயன்ற கவியரசர் தமது கருத்துக்களை மக்களிடையே பரப்பக் கவிதையைக் கருவியாகப் பயன்படுத்தியபோது கவிதை தானே புதிய கருத்துக்களும் பெற்றுச் செழிப்படைந்தது.

டாக்டர் மு. வ. அவர்கள் முறையாகத் தமிழ் பயின்று இளமையிலேயே தமிழைப் பயிற்றுவிப்பதைத் தொழிலாகக் கொண்டவர்கள்;

இளமைதொட்டு அவர்மறையும் வரை பலநிலைகளிலும் இருந்து தமிழ் பயிற்றுவித்து வந்தவர்கள். தமிழாசிரியாகப் பணியாற்றிய காலத்தும், அத்துறையில் பல உயர் பதவிகளை வகித்துச் செயல்புரிந்த காலத்தும், தமிழ் ஆராய்ச்சிக்கு அவர்கள் செய்துள்ள தொண்டு மிக உயர்ந்த ஒன்றாகும். மொழிநூல், மொழி வரலாறு, மொழியின்கதை முதலிய சிறந்த ஆராய்ச்சி நூல்கள் அவர்களின் அறிவுத் திறனுக்குச் சான்று கூறும். ஆயினும் ஆசிரியத் தொழிலிலோ அன்றி ஆராய்ச்சி முயற்சியிலோ அவர்கள் உள்ளத்தை முழுதாக ஆட்கொண்டு நின்றது இலக்கிய ஆர்வமேயாகும்.

தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அவர்களுடைய பங்கு ஈடு இணையற்ற ஒன்றாகும். அவர்களுடைய படைப்பிலக்கியங்களில் பல, காலத்தை வென்று நிற்கக்கூடியவை. ''குறட்டைஒலி'' என்ற சிறு கதை மேலை நாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்றால் உலகின் சிறந்த இலக்கியப் படைப்புகளின் வரிசையில் நிச்சயம் இடம் பெறும். கள்ளோ காவியமோ, அகல்விளக்கு, நெஞ்சில் ஒரு முள் ஆகிய நாவல்கள் இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் முன்னணியில் நிற்கக்கூடிவை. இவ்வாறு சிறந்த இலக்கியங்களைப் படைப்பிலக்கிய கர்த்தா என்று கூறலாம். '' தமிழுக்கு விடுதலை தந்தவர்'' என்ற அடை மொழி ஏன்?

டாக்டர் மு. வ. அவர்கள் படைப்பிலக்கிய உலகிற்குள் புகுமுன்பே சிறந்த இலக்கியப் படைப்பாளர்கள் பலர் தமிழில் தோன்றிவிட்டார்கள். திரு. மாதவையா, ரரஜமய்யர், புதுமைப்பித்தன், கு. ப. ராஜகோபாலன், K. S. வெங்கட்டரமணி போன்ற பலர் பல நல்ல புதிய இலக்கியங்களைப் படைத்துவிட்டார்கள். ஆகவே டாக்டர் மு. வ. அவர்கள் அந்த வரிசையில் ஒருவரேயன்றி முன்னோடியல்ல. ஆனால் டாக்டர் மு. வ. வின் பெருமை மற்றொரு விதத்தில் புதிய இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய தொண்டால் உயர்ந்து நிற்கிறது.

டாக்டர் மு. வ அவர்கள் ஆசிரியத் தொழிலை ஏற்ற காலத்தை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். பாரதியார் போன்ற ஒரு மகாகவி தோன்றி வளமான கவிதைகளை அளித்திருந்தாலும், ஆங்கில மொழியின் தாக்கத்தால் தமிழில் புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றத் தொடங்கியிருந்தாலும் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி ஒரு தேக்க நிலையிலேயே இருந்தது. நாடு விடுதலை பெற்றதும் தாய்மொழிக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டது. அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே

சங்க இலக்கியங்களும், காப்பிய நூல்களும்,பிற பழந்தமிழ் இலக்கியங்களும் அச்சேறி மக்களிடையே பரவத் தொடங்கியிருந்தன. தமிழ்ப் பயிற்றும் ஆசிரியர்களும் பிற ஆசிரியர்களுடன் சமநிலையில் வைத்து எண்ணப்பட்டார்கள். இந்தச் சூழ்நிலையில் தமிழ் பயின்ற புலவர்கள் பலரும் பழைய இலக்கியங்களை அதிகமாகக் கற்று, தமிழின் பழம் பெருமையிலேயே மனம் லயித்து நின்றதில் அதிசயம் எதுவும் இல்லை. சங்க இலக்கியங்களிலும், சங்க மருவிய கால இலக்கியங்களிலும் இல்லாதன எதுவுமே இல்லையென்று நம்பத் தொடங்கி விட்டார்கள். இந்த நம்பிக்கையே தேக்க நிலையைக் கொண்டு வரப் போதுமானதாயிற்று.

அச்சு இயந்திரமும் செய்தித் தாள்களும் தோன்றிக் கால கதியைத் துரிதப்படுத்தத் தொடங்கியபோது, மக்கள் மனனம் செய்ய வாய்ப்பான யாப்பு முறையை அதிகம் விரும்பாமல் பார்த்துப் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடிய உரைநடையை மிகுதியாக விரும்பியதும் அக்காலத்தில் இயற்கையே. உரைநடையை மக்கள் அதிகமாக விரும்பிய காலத்தில் இலக்கியங்கள் உரைநடையில் படைக்கப்பெற்றால்தான் மக்களிடையே பரவும்; மொழி வளர்ந்து வாழும். உரைநடையைத் தவிர்க்க முடியாத காலத்தும், பன்னிரண்டாம் நூற்றாண்டு உரைநடையே உயர்ந்தது என்றும், அந்த இலக்கண மரபுகளுக்கு மாறுபட்ட உரைநடை தமிழ்மொழியைக் கெடுத்து விடுமென்றும் தமிழ்ப் புலவர்கள் பேசத் தொடங்கினார்கள். பழந்தமிழ் இலக்கியங்களை உரைநடையில் கூறுவதல்லாமல், புதிய இலக்கிய வடிவங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். திரு. வி. க. போன்ற பெரியவர்களே புதிய இலக்கிய வடிவங்களை அவ்வளவாக வரவேற்கவில்லை. புதிய இலக்கிய வடிவங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு உதவும் என்று கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட பேராசிரியர் S. வையாபுரிப் பிள்ளை, டாக்டர் ரா.பி. சேதுப் பிள்ளை போன்றவர்களும் புதிய படைப்பிலக்கியங்களைக் கல்லூரிகளில் நுழையவிடவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த டாக்டர் மு. வ. அவர்கள் 1946-47- இல் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியபோது "செந்தாமரை" என்ற நாவலைப் படைத்து அதைத் துணிவாகக் தமது மாணவர்களுக்குப் படித்துக் காட்டி, பின்பு அச்சேற்றினார்கள். தொடர்ந்து பல நல்ல நாவல்களைப் படைத்ததோடல்லாமல் புது வகைப் படைப்பிலக்கியங்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவும் என்று பேசியும் எழுதியும்

வந்தார்கள். தமிழ்ப் புலவர்களில் பெரும்பாலோர் 'ஒரு தமிழ்ப் பேராசிரியர் நாவல் எழுதலாமா' என்று எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் என்று தங்களை அழைத்துக்கொண்ட எழுத்தாளர்களோ 'மு. வ. வின் நாவல்களில் தமிழ் நடைதான் இருக்கிறது; கதையில்லை' என்று குறை கூறினார்கள். இந்த எதிர்ப்புக்களைப் பொருட்படுத்தாமல், படைக்க வேண்டுமென்ற ஆன்ம தாகத்தால் உந்தப்பெற்றுப் பல அரிய இலக்கியங்களைப் படைத்தளித்தார்கள் டாக்டர் மு. வ.

தமிழாசிரியராகப் பணியாற்றிக்கொண்டும், தமிழ் இலக்கிய வரலாற்றில் பல நல்ல ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டும் வந்த டாக்டர் மு. வ. தமது ஆத்மதிருப்திக்காகப் புதிய இலக்கியங்களைப்படைத்த தோடல்லாமல், புதிய இலக்கியங்களின் வளர்ச்சிதான் "தமிழை மொழி" யாகச் செய்யும் என்ற உயர்ந்த உண்மையை உணர்ந்து புதிய இலக்கியங்களை அறிஞர்களும் மாணவர்களும் கற்கவும் துணை நின்றார்கள். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவியேற்றதும் பெரிதும் முயன்று தமிழ்ச் சிறு கதைகளின் தொகுப்பொன்றைப் புகுமுக வகுப்பிற்குப் பாடமாக நியமிப்பதில் வெற்றி பெற்றார்கள். ஒரு நூற்றாண்டைக் கடந்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சிறுகதைகள் (புதிய படைப்புக்கள்) பாடமாக நுழைந்த மகத்தான நிகழ்ச்சிக்கு டாக்டர் மு. வ. அவர்களே முழுக்க முழுக்கக் காரணமாவார்கள்.

டாகடர் மு. வ. அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பதவியேற்ற பிறகு பாண்டி நன்நாட்டின் கல்லூரிகள் யாவற்றிலும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் பல்வேறு வடிவங்களில், பல்வேறு முறைகளில் பயிலப்பட்டு வருவதைப் பார்த்து, தமிழின் எதிர்காலத்தில் நமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்படுகிறது. பாண்டி நன்னாட்டில் புதுத் தமிழ் இலக்கியம் பயிற்றுவிக்கப் படுவதோடு மட்டுமல்ல, ஆராய்ச்சிக்குரிய பொருளாயும் ஏற்கப்பட்டுப் பல வழிகளிலும் ஆராயப்பட்டு வருகிறது. இந்த நல்ல முயற்சிகளின் சிகரமாக "இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய ஆசிரியர்கள்-கருத்தரங்கு வரிசை" என்று ஆண்டு தோறும் தொடர்ந்து நடக்கும் கருத்தரங்கு வரிசை ஒன்றையும் டாக்டர் மு. வ. அவர்கள் நன்கு தொடங்கி வைத்துள்ளார்கள். அதில் முதல் கருத்தரங்கு திரு. அகிலனவர்களின் படைப்பிலக்கியங்களைப் பல கோணங்களில் நான்கு நாட்கள் ஆய்ந்து விவாதித்து வெற்றி பெற்றுள்ளது. ஆராய்ச்சிக் கட்டுரைகளைத்

தொகுத்து மதுரைப் பல்கலைக் கழகம் நூலாகவும் வெளியிட விருக்கிறது. இந்த நல்ல முயற்சிகள் யாவும் டாக்டர் மு.வ. அவர்கள் தமிழ்-மொழியின்பால்கொண்ட'பக்தி'யின் மிகுதியாலேயே நடைபெறுகின்றன.

தமிழ் மொழியானது சங்ககாலந் தொட்டுப் பல இலக்கிய முயற்சிகளையும் மேற்கொண்டு, வடிவத்திலும், கருத்திலும், சொல் வளத்திலும், வளர்ச்சியுற்று முன்னேறி வந்துள்ளது. இடையிடையே ஏற்பட்ட தடைகளையெல்லாம் தாண்டி வெற்றிகரமாக முன்னேறியிருக்கிறது. ''இருண்ட காலம்'' என்று மொழி வரலாற்றுக்காரர்-களால் கூறப்படும் காலத்தில் ஏற்பட்ட தேக்கத்தைச் சயங்கொண்டார் கம்பர், சேக்கிழார், போன்ற பெரும் புலவர்கள் தோன்றி முறியடித்-துள்ளார்கள். பிற்காலத்தில் இரட்டுறமொழிதல், ரதபந்தம், நாக-பந்தம் போன்ற சித்து விளையாட்டுகள் என்ற குட்டையில் தேங்கத் தொடங்கிய தமிழைக் கவியரசர் பாரதியார், பாரதிதாசன் போன்ற பெருங் கவிஞர்கள் தோன்றி மக்களிடையே ஆற்று வெள்ளமாகப் பரவச் செய்தனர். யாப்பு முறை அவசியமற்றதாகத் தோன்றி, உரை நடை இலக்கியம் பரவத் தொடங்கிய காலத்தில் பன்னிரண்டாம் நூற்றூண்டு உரைநடை வரம்பிற்குள் அதைச் சிறைசெய்ய முயன்ற புலவர்களின் போக்கை ஒதுக்கிப் பள்ளிகள், கல்லூரிகளில் புதுத்தமிழ் இலக்கியத்தைப் புகுத்துவதில் வெற்றி பெற்றதோடல்லாமல் வளரும் தமிழ் இலக்கியம் பல்கலை நகரில் கொலுவீற்றிருக்கச் செய்த பெருமை டாக்டர் மு.வ. அவர்களையே சேரும்.

ஒரு மொழியின் வளர்ச்சி, அது எவ்வளவு புதிய இலக்கிய வடிவங்களையும், படைப்புகளையும் பெற்றிருக்கிற தென்பதைப் பொறுத்தே கணிக்கப் பெறுகிறது. உலகில் தோன்றும் புதிய அறிவுகளையெல்லாம் பெற்றுப் புதிய புதிய வடிவங்களை ஏற்று - தனது தன்மை கெடாமல் வளரும்போது தான் அது உயிருள்ள வாழும் மொழியாக ஏற்கப்படுகிறது. டாக்டர் மு. வ. அவர்கள் புதிய இலக்கிய வடிவங்களை ஏற்றுப் படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்காவிட்டால், ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் தமிழில் தோன்றிய புதிய இலக்கிய வடிவங்கள், முன்பு தமிழிலிருந்து மலையாளமொழி கிளைத்தெழுந்ததைப் போல் ஒரு புதுமொழி கிளைத்தெழ உதவியிருக்கக் கூடும். புலவர்களின் பழமைப்பற்றும் பன்னிரண்டாம் நூற்றூண்டு உரைநடையும் தமிழ் இலக்கியவளர்ச்சியில் ஒரு தேக்கத்தையே உண்டாக்கியிருக்கக் கூடும். இந்த இரண்டு ஆபத்துக்களையும் தவிர்த்தது டாக்டர் மு. வ. அவர்-களின் படைப்பிலக்கிய ஆர்வமேயாகும். டாக்டர் மு. வ. அவர்கள்

தமிழுக்குப் பல நல்ல நாவல்களை மட்டும் படைத்துத்தரவில்லை ; தமிழின் தன்மை கெடாத நல்ல நடையில் படைப்பிலக்கியங்கள் பல தமிழில் தோன்ற மறைமுகமான காரணமாகவும் விளங்குகிருர்கள். திரு. அகிலன், திரு. கு. ராஜவேலு, திரு. நா. பார்த்தசாரதி போன்ற சிறந்த நாவலாசிரியர்கள் நல்ல தமிழ் நாவல்களைப் படைத்ததற்கு டாக்டர் மு. வ. அவர்களின் தாக்கமும் ஒரு காரணமாகும்.

காலந்தோறும் ஏற்படும் புதிய வளர்ச்சிகளையெல்லாம் ஏற்றுத் தனதாக்கிக்கொண்டு வளர்ந்து வரும் தமிழ் மொழிக்கு இருபதாம் நூற்ருண்டின் முற்பகுதியில் ஏற்பட்ட தேக்கத்தைத் தமது படைப்பு முயற்சிகளாலும், பயிற்றுமுறையில் காட்டிய ஊக்கத்தாலும் தகர்த்து, நம் தாய்மொழி தனது இயற்கை வழியில் வளர்ச்சியுற உதவிய டாக்டர் மு. வ. அவர்களைத் தமிழுக்கு விடுதலை தந்தவர் என்று போற்றுவது முற்றிலும் பொருத்தமேயாம்.

தமிழ் ஒளி

1974—1975

# என் அனுபவங்களில் டாக்டர் மு.வ.

இரா. மோகன்

முதல் சந்திப்பு

தமிழ் எழுத்துலகில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியவர் டாக்டர் மு. வரதராசனுர். உயர்ந்த கற்பனையையும் விழுமிய உணர்ச்சியையும் தெளிந்த சிந்தனைகளையும் தம் சிறந்த நாவல்களின் வாயிலாகவும், சிந்தனை நூல்களின் வாயிலாகவும் அளித்த வள்ளல் மு.வ.வோடு பழகும் வாய்ப்புக் கிட்டுமா என்று இளமையில் ஏங்கி இருக்கிறேன். அவரோடு ஆறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

மு. வ. வை நேரில் கண்டு பேசி மகிழும் வாய்ப்பு 2 - 2 - 73 - இல் எனக்குக் கிடைத்தது. அன்று இரவு சென்னைக்குச் செல்லும் பாண்டியன் எக்ஸ்பிரஸின் முதல் வகுப்புப் பெட்டியில் முதல் முதலாக அவரைச் சந்தித்தேன். அவருக்கு முன்னே வணக்கம் தெரிவித்தேன். அவர் தலை நிமிர்ந்து என்னைப் பார்த்து 'வணக்கம்' என்ருர்.

அவர் என்னை இதற்கு முன் பார்த்தது இல்லை. எனவே நானே என்னை அறிமுகம் செய்துகொண்டேன். ''ஓ, மோகனா? உட்கார் தம்பி'' என்று முகம் மலர்ந்து அன்போடு சொன்னார். எதிரே அமர்ந்தேன். பிறப்பு, பெற்றோர், இப்போதைய நிலை பற்றி எல்லாம் கேட்டார். எல்லாவற்றுக்கும் விடையளித்தேன். '' மதுரையில் அதுவும் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்து கொண்டேயா எனக்குக் கடிதம் எழுதினாய்? நேரில் வந்து பேசி இருக்கலாமே? '' என்று கேட்டார். '' கடிதம் வாயிலாக உங்களோடு பேசுவது எளிதாக இருக்கிறது. அதோடு கடிதத்தில் தான் தடையின்றி என் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளியிட முடிகிறது. அதனால்தான் கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டேன் '' என்றேன்.

எங்கள் பேச்சு இருபது நிமிஷங்கள் நடந்தது, அந்த இருபது நிமிஷங்கள் என் வாழ்வில் மறக்க முடியாத பொன்னான நிமிஷங்கள்.

சில நினைவுகள்

முதல் சந்திப்புக்குப் பிறகு அவ்வப்போது அவருடைய ஓய்வைத் தெரிந்துகொண்டு வீட்டுக்குச் செல்வேன். நான் சென்ற நேரம் மாலை நேரமானால் வெளியே தோட்டத்துக்கு அழைத்து வந்து சுற்றிக் காண்பிப்பார்; தோட்டத்தில் உள்ள ஒவ்வொரு செடியைப் பற்றியும், கொடியைப்பற்றியும், தளிரைப்பற்றியும், கனியைப் பற்றியும் கூறி மகிழ்வார்.

மு. வ. பெரும்பாலும் நடந்து கொண்டே இருப்பார். சிற்றுண்டியும் நடந்துகொண்டே சாப்பிடுவார். '' நான் பெரும்பாலும் நடந்து கொண்டே இருப்பேன். உட்கார்ந்து கொண்டே இருப்பது எழுத்தாளர்களுக்குப் பெரிய இடையூறு. எழுத்து வாழ்க்கையில் முக்கியமானவை இரண்டு. ஒன்று, நெடுநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து எழுதுதல். இன்னொன்று, எண்ணுதல். எழுத்தாளன் எண்ணுமல் இருக்க முடியாது. உட்காராமல் இருக்கலாம். அதனால்தான் அவ்வப்போது நேரம் கிடைக்கும் போதெல்லாம் நடக்கும் பழக்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறேன்.'' இரவு உணவு உண்டு முடித்து வெளியில் வந்து நடந்து கொண்டிருந்தபோது இந்தக் கருத்தைக் கூறினார்.

ஒவ்வொரு முறை பேசிக் கொண்டிருக்கும் போதும் எழுத்து வாழ்வு பற்றி ஏதாவது உண்மையைக் கூறிவிடுவார்; ஒவ்வொரு

முறையும் ஒவ்வோர் உண்மையைக் கூறுவார். ''எழுத்து வாழ்வு செயற்கையான வாழ்வு; இரவைப் பகலாக்கி உழைத்து உருகும் வாழ்வு. போராட்டம் மிக்க வாழ்வு. உடம்போடு போராட்டம் உள்ளத்தோடு போராட்டம்; உலகத்தோடு போராட்டம். எழுத்தாளர்கள் விழிப்போடு இருந்து உடம்பைக் காத்தல் வேண்டும். இல்லாவிட்டால் உடம்பே அவர்களின் பகையாகிவிடும்.''

மு. வ. வின் பேச்சில் அடிக்கடி இடம் பெறும் கலைஞர் டாகுர். அவருக்கு மிகவும் விருப்பமான கலைஞர் டாகுர். ''டாகுரின் கீதாஞ்சலியை மட்டும் நூறு முறைக்குமேல் படித்திருப்பேன்'' என்று கூறுவார் ஒரு முறை; ''இருபதாம் நூற்றுண்டு கண்ட கலைஞர்களுள் உலகிலேயே மிகச் சிறந்த கலைஞர் டாகுர் என்பது என் எண்ணம்'' என்று கருத்துத் தெரிவிப்பார் இன்னொரு முறை.

ஒரு முறை மு. வ. வைப் பார்க்கச் சென்றிருந்தபோது உடல் நலம் இல்லாமல் இருந்தார். யார் வந்தாலும் இல்லை என்று சொல்லி விடுமாறு சொல்லி இருந்தார். வேலையாள் "நேற்றே சொன்னார். நீங்கள் வருவீர்கள் என்று. நீங்கள் வந்தால்மட்டும் அழைத்து வருமாறு சொன்னார். யாருக்கும் சொல்ல வேண்டாம் என்றும் சொல்லச் சொன்னார்'' என்று கூறி அழைத்துச் சென்றான். வீட்டை வெளியில் பூட்டச் செய்துவிட்டு, வீட்டுக்குள் மாடியில் முழு ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார் மு. வ.

மு.வ. படுக்கையில் பனியனோடும் வேட்டியோடும் படுத்திருந்தார். தனிமையிலும், நோய் தரும் சோர்விலும் படுத்தே பொழுதைப் போக்குவது எவ்வளவு தொல்லையாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். "என்ன புத்தகம் அது''? என்று கேட்டவுடன் என் எண்ணச் சுழலிலிருந்து விடுபட்டேன்.

"கீதாஞ்சலி" என்றேன்.

சிறிது நேரம் வேறு பேச்சு பேசிவிட்டு, "கீதாஞ்சலியிலிருந்து ஏதாவது படி; கேட்கலாம்'' என்றார்.

நான் தயங்கினேன். என் தயக்கத்தைச் சிரிப்பால் வெளிப் படுத்தினேன்.

"சும்மா படி. நான் தானே இருக்கிறேன்?'' என்று கூறி தூண்டினார். கரித்துண்டு நாவலில் அவர் தமிழில் மொழிபெயர்த்துத் தந்-

துள்ள நான்கு பகுதிகளைத் தேடிக் கண்டு பிடித்து அவற்றைப் படித்தேன். அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். அந்தப் பகுதிகளை அவரே மொழிபெயர்த்து எழுதி இருப்பதையும், நாவலில் அவை வரும் இடத்தையும் சொன்னேன்.

''இவற்றை மொழி பெயர்த்திருக்கிறேனா? நினைவில்லையே!'' என்றார் வியந்தவாறே. பிறகு நான் படித்த பகுதிகளைப் பற்றிப் பேசினார்.

மு.வ. வின் சமயக் கொள்கைகளை அறிய விரும்பினேன். ஒரு முறைபேச்சுவாக்கில் கேட்டுப் பார்த்தேன்: உங்களுக்கு உருவ வழி பாட்டில் நம்பிக்கை இல்லையா?''

''உருவ வழிபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. நான் கோயிலுக்கும் அவ்வளவாகப் போவது கிடையாது. ஆனால் சில உருவங்களில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. புத்தர் உருவம், நடராஜர் உருவம், தட்சிணா மூர்த்தி உருவம் இவற்றில் தனி ஈடுபாடு உண்டு. எப்போதாவது கோயிலுக்குப் போனால், போகும்போது தட்சிணாமூர்த்தி உருவத்தைப் பார்த்தால் சில நிமிஷம் கண்மூடி ஏதாவது ஒரு நல்ல பாட்டை மனத்துக்குள் நினைத்துப் பார்ப்பேன். இதுதான் என் வழிபாடு. பூ இட்டு வழிபடுவது எல்லாம் என் மனைவிதான்'' என்று தம் எளிய வழிபாட்டு முறையைப் பற்றிக் கூறினார்.

ஒரு முறை கல்கியின் 'சிவகாமியின் சபத'த்தைப் பற்றிப் புகழ்ந்து கூறினார். ஆயனச் சிற்பியைப்பற்றி நன்றாகக் கூறினார். கல்கியின் நாட்டுப் பற்றையும் பாராட்டி மொழிந்தார். அப்போது, ''உங்களுக்கு வரலாற்று நாவல் எழுத வேண்டும் என்ற ஆவல் எழுந்ததில்லையா?'' என்று கேட்டேன். ''இல்லை'' என்ற ஒரே சொல்லில் தம் மறுமொழியை முடித்துக்கொண்டார்.

இன்னொருமுறை, ''உங்கள் பாத்திரங்களிலேயே உங்களை மிகவும் கவர்ந்த பாத்திரம் எது?'' என்று கேட்டேன்.

அவர் சுருக்கமாக ஒரு வரியில், ''எல்லாப் பாத்திரங்களும் என்னைக் கவர்ந்த பாத்திரங்கள்தாம்'' என்று கூறிப் பேச்சை அத்தோடு முடிக்கப் பார்த்தார்.

நான் விடவில்லை. தொடர்ந்து கேட்டேன்: ''ஆனாலும் தனிப்பட்ட முறையில் சில பாத்திரங்கள் உங்களைப் பார்த்திருக்குமே.

உங்கள் வாழ்க்கையில் உறவு கொண்ட சிலரே கதை மாந்தராக உருப் பெற்றிருக்கலாமே...''

''கரித்துண்டில் வரும் ஓவியக்கலைஞர் எனக்கு விருப்பமானவர் தாம். உயிருள்ள ஒரு மனிதர். அவரைத் தொடர்ந்து அவர் வீட்டுக்-கெல்லாம் போயிருக்கிறேன்; பழகி இருக்கிறேன். அவரை வங்காளி ஆக்கி இருப்பது என் கற்பனை. அல்லியின் வருத்தம் என்னையும் வருத்திய வருத்தம். கள்ளோ காவியமோ' வில் வரும் மங்கை ஒரு நல்ல பாத்திரம். இவர்கள் எல்லாரையும்விட உயிரும் உணர்ச்சியும் மிக்க, எனக்கு மிகவும் பிடித்த பாத்திரம் கலெக்டர் செல்வநாயகம். நான் நன்றாகப் பழகிய உயிருள்ள நல்ல மனிதர் ஒருவரே அவர்'' என்று உணர்ச்சி வயப்பட்டுச் சிறிது நேரம் பேசினார். பிறகு நிறையப் பேசிவிட்டோம் என்று தோன்றியதோ என்னவோ, பேச்சை நிறுத்திக் கொண்டார்.

''கவலைக் காட்சியை அவர் முகம் வழங்குவதில்லை'' என்று பெரியார் திரு. வி. க., மு. வ. வைப் பற்றி, 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலின் அணிந்துறையில் எழுதி இருப்பது நூற்றுக்கு நூறு உண்மையே ஆகும். நல்ல மூளையும், நிலைத்த இளமையும், கவலை காணா முகமும் கொண்ட சிறந்த கலைஞர் மு. வ.

வீட்டில் ஒரு வாரம்

4-8-74 முதல் 10-8-74 வரையிலான ஒரு வார காலத்தை மு.வ. வின் வீட்டில் கழித்தேன்; அந்த ஒரு வார காலமும் மு. வ. வின் தாய்மையன்பில் திளைத்தேன். ஒவ்வொரு நாளும் காலையில் பார்க்கும் போது, ''இரவு நன்றாகத் தூங்கினாயா?'' என்று கேட்பார். உண்ணும் போது, ''உணவு உனக்குப் பிடிக்கிறதா?'' என்று கேட்பார். அவரே பரிமாறவும் செய்வார். சிறப்பு உணவாக ஏதாவது செய்திருந்தால் கொண்டு வந்து வைக்கச் சொல்வார். ஒரு முறை அவரே எழுந்து உள்ளே சென்று ஜாங்கிரி ஒன்றை எடுத்து வந்து, ''ஜாங்கிரி என்றால் உனக்குப் பிடிக்கும் அல்லவா?'' என்று கூறி என் இலையில் வைத்தார்.

மு. வ. மூன்று வேளையும் சப்பாத்தியே சாப்பிட்டார்; காய்கறி-களில் உப்பின்றியே உண்டார். ஒரு முறை சாப்பிடும்போது கேட்-டேன்: இப்படி மூன்று வேளையும் உப்பில்லாத காய்களைத் தொட்டுக் கொண்டு சப்பாத்தியே சாப்பிடுவது உங்களுக்குச் சலிப்பாக இல்லையா?

''என்ன சலிப்பு இதில்? I am the Master. My tongue is my server. நான் சொன்னபடி என் உடம்பு கேட்கும். என் உடம்பு சொல்வதன்படி நான் கேட்கமாட்டேன். உடலை நலம் கெடாமல் உரத்தோடு வாழ்வதற்குத் தானே உணவு வேண்டும்?'' என்று உறுதியும் பெருமிதமும் நிறைந்த குரலில் என்னையே திருப்பிக் கேட்டார்.

மு.வ. ஒரு பல்கலைக் கழகத் துணைவேந்தரைப் போல் நடந்து கொள்ளவில்லை; நூல்கள் பல எழுதிக் குவித்துப் பெயரும் புகழும் பெற்ற ஒரு எழுத்தாளரைப் போல் நடந்து கொள்ளவில்லை; என்னை விட இரண்டரை மடங்குக்குமேல் வயதில் மூத்த ஒரு பெரியவரைப் போல் நடந்துகொள்ளவில்லை. ஓர் இளைஞரைப் போலவே, நீண்ட நாள் பழகிய ஒரு நண்பரைப் போலவே என்னுடன் பழகினார். சென்னைத் தெருக்களில் அவரோடு ஒன்றாக மிக அருகே நடந்து சென்றது எனக்குப் பெருமிதமாக இருந்தது. பலரும் என்னை வியப்பாகப் பார்ப்பதைக் கண்டேன்.

இறுதி வணக்கம்

சென்னையிலிருந்து திரும்பிய பிறகு அவரைப் போய்ப்பார்க்க முடியவில்லை. வேலை மிகுதியும், உடல்நலக் குறைவும் அவரைச் சந்திக்க விடாமல் செய்தன. 10-8-74-இல் சென்னையிலிருந்து திரும்பி மதுரைக்கு வந்தேன்; சரியாக இரண்டு மாதங்கள் கழித்து 10-10-74 இல் என்னை இந்த உலகத்தில் விட்டுவிட்டுத் தன்னந்தனியே விண்ணுலகத்துக்குப் பறந்துவிட்டார்.

செய்தி அறிந்து, பல்கலைக் கழகத்தினர் ஏற்பாடு செய்திருந்த பஸ்ஸில் ஏறிச் சென்னை சென்றேன். வீட்டின் கூடத்தில் அவருடைய உடம்பைப் படுக்க வைத்தாற்போல் கிடத்தி இருந்தார்கள். பலவகையான அழு குரல்களுக்கு இடையே நெடுநேரம் அமைதியாக அவருடைய முகத்தையே உற்றுப் பார்த்தேன். முகம் சற்றுக் கறுத்திருந்தது. பரந்த நெற்றியில் மூன்று திருநீற்றுக் கோடுகள் விளங்கின. தாயுமானவர் பாடலை மனத்தில் எண்ணுபவர்போல் கண்களை நன்றாக மூடி இருந்தார். இதழ்கள் நன்றாக விரிந்திருந்தன. நெடிய உருவம் அசைவற்று நீள் துயிலில் ஆழ்ந்து கிடந்தது. உயர்ந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் கதைகளிலும் கட்டுரைகளிலும் அள்ளித் தந்த வள்ளலின் மெய்கரங்களுக்கு இறுதியாக முத்தமிட விரும்பினேன். ஆனால் கைகளைப் பார்க்கவே முடியவில்லை. கழுத்திலிருந்து கால்

...ந்தன.

அறிவுத் தந்தையின், அன்புத் தாயின் கால்மாட்டில் சிறிது நேரம் அப்படியே உட்கார்ந்தேன். கண்மூடிச் சில நிமிடம் அமைதியாக வழிபட்டேன். தனக்குத் துணையாக வந்து இருக்க வேண்டும் என்று தன்னல ஆசையில் ஒரு நல்ல அன்புள்ளத்தின் உயிரைப் பறித்துக் கொண்ட பொல்லாத கடவுளையும், சொல்லாமல் கொள்ளாமல் வந்து யாரும் அறியா நேரத்தில் ஒரு கோழைபோல் உயிரைத் திருடிச்-சென்ற இரக்கமற்ற சாவையும் எண்ணி எண்ணி நொந்தேன்; நொந்து நொந்து வெந்தேன். 'நெஞ்சில் ஒரு முள்' முதலான பல அருமை-யான கற்பனைக் களஞ்சியங்களை கி.பி. 2000 முதலான பல அழகான சிந்தனைச் செல்வங்களை-'ஓவச் செய்தி' முதலான பல சிறந்த ஆராய்ச்சி நூல்களை, 'தங்கைக்கு' முதலான பல உரைநடை விருந்துகளை எழுதித் தந்த மென்மையான மனத்துக்கு, இறுதி வணக்கம் சொல்லி விடை பெற்றேன்.

—'கலைமகள்'— டிசம்பர் '74

# பேராசிரியர் மு. வரதராசனுர் ஓர் ஒப்பற்ற கைவிளக்கு

டாக்டர் ஈ.ச. விசுவநாதன்

இந்த நூற்ருண்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரும், தமிழ்ப்பெரும் பேராசிரியர்களில் ஒருவருமாகிய மு. வரதராசனுர் அண்மையில் யாவரும் எதிர்பாரா வகையில் இயற்கை எய்திய செய்தியினை அறிந்து பதறியவர் பலர்.

அன்னுர் வெறும் எழுத்தாளர் மட்டும் அன்று ; பேராசிரியர் மட்டுமன்று ; ஒரு சிறந்த பண்பாளராகவும் வாழ்ந்தவர். வாழ்க்கையில் பின்பற்றத்தக்க பெரியோராக, சான்ருேராக, வாழ்க்கை என்னும் இருண்ட பாதைக்கு ஒளிகாட்டி, வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக விளங்கியவர்.

பேராசிரியர் மு.வ. வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சார்ந்த 'வேலம்' என்னும் சிற்றூரில் 1912-ஆம்

ஆண்டில் (2-4-1912) பிறந்தார். இந்தச் சிற்றூர் வாலாஜா ரோடு, புகை வண்டி நிலையத்திலிருந்து இரண்டு மூன்று கல் தொலைவில் உள்ளது.

இவர் தம் ஆரம்பக் கல்வியினை வாலாஜா பேட்டையிலும், உயர்நிலைக் கல்வியினைத் திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலைப் பள்ளியிலும் பெற்றார். பள்ளிப் படிப்பில் முதல்வராக இருந்தும், குடும்பச் சூழ்நிலையின் காரணமாக மேற்படிப்பினைக் கல்லூரியில் சேர்ந்து முறையாகப் படிக்க இயலாமற் போய்விட்டது.

பள்ளிப் படிப்பை முடித்தபிறகு, சில ஆண்டுகள் வடஆர்க்காடு தாலுக்கா அலுவலகத்தில் எழுத்தராகப் [Clerk] பணியாற்றினார். அந்தப்பணி அவருடைய உள்ளத்தைக் கவராத காரணத்தினால், 1932 ல் ஆசிரியர் பயிற்சி பெற்றுத் தாம் கல்வி பயின்ற திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலைப் பள்ளியிலேயே ஆசிரியராகச் சேர்ந்தார். ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே 1935 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தி வந்த வித்துவான் தேர்வினை எழுதி, மாநிலத்தில் முதல் மாணவராகத் தேறித் திருப்பனந்தாள் மடம் ஆண்டுதோறும் சிறந்த வித்துவான் மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் ஆயிரம் ரூபாய் பரிசினைப் பெற்றார்.

மு. வ. தமிழில் ஆழ்ந்த புலமை பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் முருகைய முதலியார் ஆவார். இவர் தமிழை முறையாகப் பயின்ற குடும்பத்தைச் சார்ந்தவர். இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தந்த தமிழாசிரியராக மட்டும் இல்லாமல், மு.வ. சிறந்த பண்பாளராகவும், சிந்தனையாளராகவும் விளங்குவதற்கு அடிகோலினார். வெளி உலகிற்குத் தெரியாமல் மறைந்த மாமேதையாக விளங்கிய தம் ஆசிரியர் 'முருகையாவின்' கருத்துக்களை, மு. வ. தம் நாவல்களில் வரும் 'அறவாழி' என்னும் கதை மாந்தரின் வாயிலாக வாழ்வித்துள்ளார்.

தமிழாசிரியராக இருந்து கொண்டே மு. வ. தம் கல்வியைப் படிப்படியாக வளர்த்துக் கொண்டு 1948 ஆம் ஆண்டிற்குள் பல பட்டங்களைப் பெற்றார். பி. ஓ. எல் பட்டத்தை 1939லும் எம். ஓ. எல். பட்டத்தினை 1944 லிலும் பி. எச். டி. அல்லது டாக்டர் பட்டத்தினை 1948 லும் பெற்றார்.

பி. ஒ. எல். பட்டத்தை 1939ல் பெற்றவுடன் பள்ளியாசிரியர் தொழிலை விட்டுவிட்டுச் சென்னையில் இருந்த பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக அமர்ந்தார். இப்பணியினைச் செம்மையாகச் செய்து கொண்டே கல்வித் துறையின் தம் தகுதியையும் படிப்படியே வளர்த்துக் கொள்ளலானார்.

தமிழில் அமைந்த 'வினைச் சொற்களை'ப் பற்றி ஆராய்ச்சி செய்து எம். ஒ. எல். பட்டத்தினைப் பெற்றார். சங்க இலக்கியத்தில் இயற்கை கையாளப்பட்டுள்ள முறைமை என்னும் பொருள் பற்றி ஆய்வு நடத்தி டாக்டர் பட்டத்தினைப் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறையில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்ற முதல் அறிஞர் மு. வ. அவர்களே.

டாக்டர் பட்டம் பெற்ற அந்த ஆண்டிலேயே பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராக மு. வ. நியமனம் பெற்றார். அதற்கு முன்பு அப்பதவியை வகித்த பெருமை மோசூர் கந்தசாமி முதலியார் அவர்களைச் சாரும்.

சென்னையில் இருந்த அக்காலப் புலவர்களில் பெரும் புலவராகக் கருதப்பெற்றவர் கந்தசாமி முதலியாரே; இவர் தமிழில் மட்டும் புலமை பெற்றவர் அல்லர்; தேர்ந்த ஆங்கிலப் புலமையும் பெற்றவர். ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் வல்லவர். அவருடைய தலைமையின் கீழ் ஒன்பது ஆண்டுகள் பணிபுரியும் வாய்ப்புக் கிட்டிய காரணத்தினாலேயே மு. வ. தமிழோடு ஆங்கிலத்திலும் தெளிந்த புலமை பெற வேண்டியதன் அவசியத்தை உணர முடிந்தது.

இரு மொழிப் புலமை பெற்று பலவகையிலும் முற்போக்குக் கருத்துக் கொண்ட அறிஞராக கந்தசாமி முதலியார் விளங்கிய போதிலும் அவர் தாம் கடைப்பிடிக்கும் சில நியதிகளைத் தம்மோடு பணிபுரியும் யாவரும் பின்பற்ற வேண்டும் என எண்ணியவர். தம்மைப் போலவே தம் துறையில் பணி புரிபவரும் தலைப்பாகை அணிந்து-கொண்டு நெற்றியில் நீறும். சந்தனப் பொட்டும் விளங்கக் கல்லூரிக்கு வரவேண்டும். என்று எதிர்பார்த்தார். தம்மிடம் நெருங்கி இருந்த மு. வ. விடமும் இதையே எதிர்பார்த்ததில் வியப்பில்லை அன்றோ.

இந்த நிலையில் மு. வ. வின் கடவுள், சமய நம்பிக்கைளை அறிந்து கொள்வது சிறப்பானது. அப்போதுதான் அவரைப்பற்றி தெளிவான மதிப்பீட்டை வெளி உலகு செய்ய இயலும்.

கடவுள் சமயம் இவைகளைப் பற்றி அதிகமாக நினைக்காத காலம் 'மு. வ. வாழ்வில் உண்டு. 'கடவுள் இல்லை' என்னும் கொள்கையில் ஈர்க்கப்பட்டிருந்த காலமும் உண்டு.' சுவாமி இராம தீர்த்தரின் 'Heart of Rama'; In the Woods of God Realisation' என்னும் இரண்டு நூல்களும் எனக்குக் கிடைக்காமல் இருந்திருக்குமேயானால் நான் மாற்ற முடியாத நாத்திகனாக மாறி இருப்பேன்' என்று பலமுறை கூறியுள்ளார்.

இராமதீர்த்தர் சிறந்த கணித மேதை; வியக்கத்தக்க கூர்மை-யான அறிவுள்ளவர்; ஆழ்ந்த தத்துவஞானி. சங்கரரின் 'ஏகான்ம வாத'த்தைப் பின்பற்றுபவர். சமயச் சடங்குகள், சமயக் குறியீடுகள் இவைகளில் நம்பிக்கை இல்லாதவர்.

இராம தீர்த்தரைத் தம் வழிகாட்டியாகக் கொண்ட மு. வ அவருடைய கருத்துக்களைத் தம் வாழ்விலும் கடைப்பிடித்து வாழ்ந்தார் என்று கூறுவது மிகை ஆகாது. மு. வ. வும் ஏகான்ம வாதி. சமயக் குறியீடுகள், சடங்குகள் இவைகளில் நம்பிக்கை அற்றவர்.

இக்கருத்துக்களை அவர் எழுதிய பல நாவல்களிலும் கட்டுரை-களிலும் காணலாம். அவர் இறுதியாக எழுதிய நூல் 'நல்வாழ்வு' (ஜூன் 1973) என்பதாகும். அதில் கூறியுள்ள பல கருத்துக்கள் அவர் எழுத்தாக வெளிவந்திருந்த போதிலும் அவைகளில் முக்கியமானவை-களில் பல இராம தீர்த்தரின் தத்துவங்களின் சாரமே ஆகும்.

நான் மு. வ. அவர்களிடம் பேசிய சில நேரங்களில் திரும்பத் திரும்பக் கூறிய இரண்டு கருத்துக்கள் இப்போதும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவை

1. "The real Atma, the true God, is beyond the Reach of words and mind."

2. "Feel yourself above the body and its environments, above the mind and His motives, above thought of success of feav."

(Swami Rama Tirtha, Heart of Rama, pp 81, 155).

உறுதியான கொள்கையும் தெளிவான கருத்தும் கொண்ட மு.வ., மோசூர் கந்தசாமி முதலியாரின் அன்புக் கட்டளையை மீற இயலாமல், அவர் கூறியது போலவே, தலைப்பாகையும், நெற்றியில் நீறும்,

சந்தனப் பொட்டும் அணிந்து கல்லூரிக்கு வந்த காலமும் உண்டு. இந்த நிகழ்ச்சியைப் பற்றி முதன்முதலில் மு. வ. வைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றைச் சிறு கட்டுரை வடிவில் எழுதிய அவருடைய தலைமாணுக்கரில் ஒருவராகிய டாக்டர் சி. பாலசுப்பிரமணியம். மிகச் சுவையாகப் பின் வருமாறு கூறியுள்ளார்: ''காலஞ்சென்ற மோசூர் திரு கந்தசாமி முதலியார் அவர்கள் ............ டாக்டரிடம் (மு. வ.) நிறைந்த அன்புடையவர்கள்........ அவர்கள் அன்புக்கட்டளையை மீற-முடியாமல் தலைக்குத் தலைபாகை அணிந்து, நெற்றியில் சந்தனப் பொட்டு இட்டு டாக்டர் அவர்கள் கல்லூரிக்கு வந்திருக்கிருர்கள். தலைமைக்குச் சிறப்புக் கொடுக்கும் பண்பு டாக்டர் அவர்களிடத்தே எப்பொழுதும் உண்டு.''

ஆன்மீகத் துறையில் இராமதீர்த்தரின் கருத்துக்களைப் பின்-பற்றி வாழ்ந்ததோடன்றி உபநிடதம், கீதை போன்ற நூல்களின் கருத்துக்களிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு. அவைகளை முறையா-கப் பயின்றவர், சங்கரரின் தத்துவ விளக்கத்தில் உள்ளத்தைப் பறி-கொடுத்தவர். நாவுக்கரசரின் அஞ்சாமையைத் தம் சொந்த வாழ்வி-லும் கடைப்பிடித்து வெற்றி கண்டவர். திருவாசகத்தில் நெஞ்சைப் பறிகொடுத்து அதனைத்தம் உடைமையாக ஆக்கிக் கொண்டவர். இந்த நூலில் அகவல் பகுதி தவிர பிறயாவும் இவருக்கு மனப்பாடம். இராமலிங்கர், தாயுமாணவர் போன்ருேர் பாடல்களை நுணுகிப் படித்-துத் தம் சொந்த வாழ்வில் கடைப்பிடித்தவர்.

சான்ருேர்களின் அருட் பாடல்களை உளமுருகிப் பாடி மகிழும் இசை ஞானம் உடையவர் மு. வ. பச்சையப்பன் கல்லூரியில் ஒவ்-வோர் ஆண்டும் நிகழும் ஆண்டு விழாவில் இறைவணக்கம் பாடி மகிழ்-வித்தவர் மு. வ. தினந்தோறும் கல்லூரியில்-பாடம் தொடங்கும் போது மௌனமாக ஓரிருவினுடிகள் நின்று, கடவுளை எண்ணித் துதித்த பிற-கே பாடத்தைத் தொடங்குவார். இறையுணர்வு தம் உள்ளத்தில் எப்-போதும் நிறைந்திருக்க வேண்டும் என எண்ணி அதற்கேற்ப வாழ்ந்-தவர் அவர். ஆனுல் ஆசாட பூதியாக வாழக் கற்க வில்லை.

திருவள்ளுவர், காந்தியடிகள், திரு வி. க., விநோபாவே முதலி-யோரைத் தம்முடைய பொது வாழ்விற்கு வழிகாட்டியாகப் போற்றி-யவர் மு. வ. செய்யும் தொழிலில் நேர்மையும், ஒழுங்கையும் கடைப்-பிடித்தவர் மு. வ. அவர் போற்றிப் பாராட்டிய மேலை நாட்டு அறிஞர்-களில் தலையாயவர்கள் பெர்னுட் ஷா, பெட்ரண்ட் ரஸ்ஸல், ஜோட்,

லெபனுன் நாட்டைச் சேர்ந்த தத்துவ ஞானியும், கவிஞருமாகிய கலீல் சிப்ரான் போன்றவர்கள். மேற் கூறிய சான்ரேர்களிடம் கொண்ட ஈடு பாட்டின் காரணமாகவே, திரு. வி. க., பெர்னுட் ஷா, காந்தியடிகள் ஆகியோரைப் பற்றித் தமிழில் வாழ்க்கை நூல்கள் எழுதினுர்.

நல்லறிஞர் கருத்துக்களேப் படிப்பது, அதில் துய்ப்பது, அதைப் பற்றி எழுதுவது என்பதோடன்றி அவைகளேத் தம் வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுகியவர் மு. வ. காந்தியடிகள், ஷா போன்று தாம் மேற்கொண்ட கடமையினே முறையாகச் செய்து வந்தவர் மு. வ.

பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய இருபத்திரண்டு ஆண்டு களில் ( 1939 முதல் 31 ஜுலே 1961 வரை ) அவர் விடுமுறை எடுத்த நாட்கள் மிகச் சிலவே. பதினேந்து ஆண்டுகளில் ஒரு நாள்கூட விடு முறை எடுத்ததில்லேயாம். திரு. வி. க. பள்ளிக்கூடத்து நிர்வாகக் குழுவில் பங்கு பற்றிப் பணியாற்றிய போது, அவர் பொது வாழ்வில் கொண்ட நேர்மையை எண்ணிப் பாராட்டியவர் பலர்.

தம் வாழ்க்கையில், முதல் 30 ஆண்டுகளேத் தம்மை வளர்த்துக் கொள்வதில் பயன்படுத்தினுர். 1947 முதல் பதினேந்து ஆண்டுகளில், சுமார் எழுபது நூல்களுக்கு மேல் எழுதினுர் மு. வ. அதில் அவர் புகழைப் பரப்பியவை நாவல்களே. கல்கியால் புகழ்ந்து பாராட்டப் பட்ட நாவல், 'மலர்வழி'. அகிலனின் கருத்தைக் கவர்ந்த நாவல் 'கயமை'. திறனுய்வாளர்களின் பாராட்டைப் பெற்ற நாவல், 'கரித் துண்டு' சென்னே தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுதலேப் பெற்ற நாவல், 'கள்ளோ? காவியமோ?'. இதுதான் மு. வ. எழுதிய முதல் நாவல். 'பலர் வாழ்வைச் செம்மைப் படுத்திய நாவல்' என்று அவர் ரசிகர்கள் போற்றிப் புகழும் நாவலும் அதுவே. 'அகல் விளக்கு' என்னும் நாவல் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றது. இவ்வாறு அவர் எழுதிய நாவல்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொறு வகையில் சிறந்து விளங்குபவையாய் உள்ளன.

திரு. வி. க. அறிந்த குடும்பத்துச் சிக்கலே ஒட்டி அமைந்த கதை 'கள்ளோ ? காவியமே ?'. 'அல்லி', 'நெஞ்சில் ஒரு முள்' இவை மு. வ. அறிந்த உண்மை நிகழ்ச்சிகளே அடிப்டையாகக் கொண்டு அமைந்த கதைகளாகும். அவர் எழுத்தராகப் (Clerk) பணியாற்றிய காலத்துப் பெற்ற அனுபவங்களின் எதிரொலியே 'கயமை' ஆகும்.

மு. வ. நாவல்கள் எழுதும் முறையே வியப்பானது. தாம் எழுத நினைக்கும் கதையை ஓராண்டு முழுவதும் ஆழ்ந்து சிந்தித்துக் கருத்தில் கொள்வார். எழுத ஆரம்பித்தால் மூன்று, நான்கு நாட்களுக்குள் எழுதி முடித்து விடுவார். எந்த நாவலையும் அவர் ஒரு வாரத்திற்கு மேல் எழுதியது கிடையாது.

அவர் கையெழுத்துப் பிரதிகளில் அடித்தல் திருத்துதல் குறைவு; மிகக் குறைவு. அவர் எழுதிய நாவல்களில் பக்க அளவில் மிகப் பெரிய நாவல் 'நெஞ்சில் ஒரு முள்'ளே. அந்நாவலின் கையெழுத்துப் பிரதியில் மூன்றே திருத்தங்களை பார்த்து நான் ஆச்சரியப்பட்டதுண்டு.

அவர் தமிழில் தொடாத துறையே இல்லை; தொட்டு அதில் தம் கைவண்ணத்தை தம் முத்திரையைப் பதிக்காத துறையே இல்லை.

அவர் எழுதிய நாவல்கள் மறையலாம். ஆனால் அவர் எழுதிய 'ஓவச் செய்தி' என்னும் இலக்கிய ஆய்வு நூல், காலங்கடந்து, வாழவல்லது.

காந்தியடிகளின் வாழ்வை நேரில் கண்டு, திருவள்ளுவரை அறிந்ததாக மு. வ. கூறுவார்கள். திருக்குறளுக்கு அவர் எழுதிய 'தெளிவுரை' 1969 வரை நாலரை லட்சம் பிரதிகள் விற்றுள்ளதாகக் கூறிய நினைவு எனக்குண்டு. 1961ல் ஏறக் குறைய இரண்டு லட்சம் பிரதிகள் விற்றுள்ளதாக டாக்டர் பாலசுப்பிரமணியம் 'உழைப்பால் உயர்ந்த அறிஞர்' என்று மு. வ. வைக் குறித்து எழுதிய கட்டுரையில் கூறியுள்ளார்.

மு. வ. அவர்கள் உழைப்பால், செயல் திறத்தால், வல்லமையால் உயர்ந்தவர். இப்படித்தான் வாழ வேண்டும் என வகை தெரிந்து வாழ்ந்தவர்; உயர்ந்தவர். தாம் வளர்ந்தது போலவே தம்மைச் சார்ந்தோரை வளப்படுத்த உதவியவர் மு. வ. அவர் தனக்காகவும் வாழ்ந்தார்; பிறர்க்காகவும் வாழ்ந்தார். அவரிடம் பொருள் உதவி பெற்றுக் கல்வித்துறையில் முன்னேறியவர் பலர் உண்டு. அவர் கைப்பொருள் பெற்று வாழ்வில் உயர்ந்தவர் பலர் உண்டு. அவர் செய்த உதவிகள் யாவும் பயன் கருதாமல் செய்தவை. தன்னைப் போல் மற்றவர்களும் உயரவேண்டும். வளர வேண்டும் என்று எண்ணி வாழ்ந்த வாழ்க்கை அவர் வாழ்க்கை. அவரால் இன்று வளர்ந்தவர்கள் ஆங்காங்கே தனிமரமாக அன்றித் தோப்புத் தோப்பாகச் செழித்து வாழ்வதை அவரோடு பல ஆண்டுகள் நெருங்கிப் பழகியர் உணரமுடியும்.

இறுதியாக அமைந்த 13 ஆண்டுகளில் (1961—1974) அவர் வாழ்வின் பெரும்பொழுது பிறருக்காகவே பயன்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பதவி ஏற்றது முதல் (ஆகஸ்டு 1961 முதல்) ஆராய்ச்சி மாணவர்களை உருவாக்குவதிலும் பல்கலைக் கழக அலுவல்களைக் கவனிப்பதிலுமே அவர் காலம் கழிந்தது. இதனால் அவரால் எந்தப் படைப்பிலக்கியத்தையும் உருவாக்க இயலாமற் போய்விட்டது. எழுத்துத்துறை ஓர் ஒப்பற்ற எழுத்தாளரை 1961-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலேயே இழந்துவிட்டது எனலாம்.

1971 ஆம் ஆண்டு முதல் 1974ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்வரை மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணிபுரிந்து, அப்புதிய பல்கலைக் கழகத்தில் நல்ல மரபுகளை வளர்க்கத் துணை புரிந்தார். கல்வித் துறையில் பணியாற்றுபவர்களுக்குத் தரவேண்டிய மதிப்பினை, ஒரு துணைவேந்தர் என்னும் வகையில் அப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களுக்கெல்லாம் தந்து, அங்கு உண்மையான கல்விப் பணி சிறப்பதற்கான வழிவகைகளை எல்லாம் செய்தார்.

தமிழகத்தில் அமைந்த பல்கலைக் கழகங்களில் முற்போக்காக அமைந்து வளர்வது மதுரையே என அகில இந்தியப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுத் தலைவர் பாராட்டும் வண்ணம் மதுரைப் பல்கலைக்-கழகத்தைக் கடந்த மூன்று ஆண்டுக்காலம் திறம்பட நிர்வாகம் செய்து வந்தார்.

அத்தகைய சான்றோர் ஒருவர் மறைவால் தமிழ் உலகம் ஓர் நாவலாசிரியரைப் பறி கொடுத்தது; மாணவர் உலகம் பேராசிரியப் பெருந்தகையைக் கொள்ளை கொடுத்துக் கவல்கின்றது. பொதுவாகத்-தமிழ்ச் சமுதாயம் ஒரு பண்பாளரை உண்மையான மனிதனை இழந்து-விட்டது. அவரைப்பற்றிய உண்மை ஓர் மதிப்பீட்டை அவர் சொல்லைக் கொண்டே கூறுவது சாலச் சிறந்தது. அந்த வாசகம் அவருடைய மாணவன் ஒருவனுக்கு எழுதிய கடிதத்தில் உள்ளது. அது பின் வருமாறு:

'வாழ்க்கை மிகப் பெரியகலை. அதில் தேர்தல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக விளங்குதலே, சமுதாயத்திற்கு நாம் செய்யத்தக்க நல்ல தொண்டு; எப்படி எனின், நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு, நாம் ஒரு நூலாகப் பயன்படுவோம்.'

அவரைப் பார்த்துப் பிறர் கற்குமாறு வாழ்ந்தார். அவரை ஓர் நூலாக எண்ணிப் படித்துப் பயன் பெறுமாறு வாழ்ந்தார். அவருடைய வாழ்வு தமிழ் மக்களுக்கு ஓர் ஒப்பற்ற கைவிளக்காக அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—'தமிழ்நேசன்'—16-10-'74

# அன்னையின் கண்ணீர்

கோ. வில்வபதி

இந்த ஆண்டு தமிழகத்திற்குப் பலவகைகளில் இழப்பைத் தரும் ஆண்டாய் அமைந்துவிட்டது. அதிலும் சென்ற திங்கள் அடுக்கடுக்காக நேர்ந்த அவல நிகழ்ச்சிகளால் தமிழ் மக்கள் துயர்க்கடலில் மூழ்கிக் கிடக்கின்றனர். பெறற்கரிய நன்மணிகளாகத் திகழ்ந்த அறிவியல் மேதை ஜி.டி.நாயுடு, கலைவளர்த்த கருமுத்து தியாகராசர், தமிழவேள் பி.டி. இராசன், தமிழ்க் கடல் இராய. சொக்கலிங்கம், திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் ஆகிய அறிஞர் பெருமக்களை எல்லாம் ஒரு திங்களிலேயே இறக்க நேர்ந்ததுடன் எளிமையின் திருவுருவாய், தமிழ்ப் பண்பாட்டின் சிகரமாய், ஆன்றவிந்தடங்கிய சான்றாண்மைச் செல்வராய், 'தமிழால் எதையும் சாதிக்கமுடியும்' என்ற தத்துவத்துக்கு மாற்றரும் ஒத்துக்கொள்ளும் எடுத்துக் காட்டாய் விளங்கிய பேரறிஞர், பெருந்தலைவர் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு.வரதராசனர் அவர்களையும் இழக்க நேர்ந்த கொடுமையை எண்ணி எண்ணித் தமிழன்னை கண்ணீர் வடித்து நிற்கின்றாள்.

டாக்டர் மு.வ. அவர்களை நினைக்கும்போது அவருடைய எளிய தோற்றமும் புன்முறுவல் பூத்த முகமும், அகன்ற நெற்றியும், அறிவொளி வீசும் கண்களும், அடக்கமும் பெருந்தன்மையும், எல்லோரிடமும் அன்புடன் இன்மொழி பேசி அளவளாவும் இனிய பண்பாடும் எல்லோர் நெஞ்சிலும் நிறைந்து நிற்கும். அவருடைய தூய தமிழ்ப் பற்றும், கொள்கை குன்ரு மன உறுதியும், தமிழினம் உயர உழைத்த தளரா உழைப்பும் எல்லோர்க்கும் நல்வழி காட்டும்.

தமிழ்ப் புலவர் தலைவராய் விளங்கிய டாக்டர் மு.வ. அவர்கள் எளிய தமிழ்க் குடியில் தோன்றி, தம் ஓயா உழைப்பால், தளரா நம்பிக்கையால், திட்டமிட்டுச் செயலாற்றும் திறனால் படிப்படியே உயர்ந்து, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராய், மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராய் விளங்கும் தகுதி பெற்று இன்றைய தமிழர்கட்கு, குறிப்பாகத் தமிழ் இளைஞர்கட்கு எடுத்துக் காட்டாய், அவர்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாய் விளங்கினர்.

மு.வ. அவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய்த் திகழ்ந்தார். பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றுவதிலும் தொன்றுதொட்டு வரும் தமிழ்ப் பண்பாடுகளை, நெறிகளைக் காப்பதிலும் அவர் தலைசிறந்து நின்ருர். அதே சமயத்தில் இன்றைய உலகப் போக்கை ஒட்டி அறிவுக்கு ஒத்த முறையில் நம் மொழியை வளர்க்க வேண்டும்; நம் பழக்கவழக்கங்களைச் சீர்திருத்திக் கொள்ள வேண்டும் என்பவற்றிலும் அவர் முன்னேடியாக விளங்கினர்.

எழுத்தாளராக வாழ்வைத் தொடங்கிய மு.வ. அவர்கள் தமிழ் செய்த புண்ணியத்தால், தமிழ்நாடு செய்த நற்றவத்தால் தமிழ்மேல் காதல் கொண்டார்; தமிழ் கற்கத் தொடங்கினர். அது அவர் வாழ்வின் திருப்பு முனையாய் அமைந்தது. கூரிய அறிவாற்றல் உடையவராய் விளங்கிய அவர் தனித்த முறையில் தமிழைக் கற்று 1935 ஆம் ஆண்டில் புலவர் தேர்வில் மாநிலத்திற்கே முதல்வராய்த் தேர்ச்சி பெற்று அதற்குரிய பரிசுத்தொகை ஆயிரமும் பெற்ருர். பின்னர் அவர் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார். அவருடைய நுண்மாண் நுழைபுலத்தை அறிந்து பச்சையப்பன் கல்லூரி அவர் பணியை விரும்பி ஏற்றது. அவர் தொண்டால் தமிழ் வளர்ந்தது. அதே சமயத்தில் அவரும் வளர்ந்தார். 'கற்றது கைம்மண்ணளவு' என்பதனை நன்குணர்ந்த அவர், தம் ஆசிரியப் பணிக்கிடையே தொடர்ந்து கற்று, பி.ஓ.எல்., எம்.ஓ.எல்., முதலிய

தேர்வுகளில் வெற்றி பெற்று 'டாக்டர்' என்னும் ஆராய்ச்சிப் பேரறிஞர் பட்டமும் பெற்ருர். தமிழாராய்ச்சித் துறையில் முதன்முதலாக 'டாக்டர்' பட்டம் பெற்றவர் மு.வ. அவர்களே என்பது குறிப்பிடத் தக்கது.

ஆசிரியப் பணியில் மு.வ, அவர்கள் தனிப்பெரும் புகழ் பெற்று விளங்கினர். அவர் தலைமையில் பச்சையப்பன் கல்லூரி ஒரு தமிழ்ப் பாசறையாகவே விளங்கியது. நறுமண மலரை மொய்க்கும் வண்டு-களைப்போல் நாற்றிசையிலிருந்தும் இளைஞர்கள் தமிழுக்காக அவரை நாடிவந்தனர். மு. வ. அவர்கள் ஆசிரியராக மட்டும் அல்லாமல் அன்னையாய் அன்பு காட்டி, தந்தையாய் கடமை, கண்ணியம், கட்டுப்-பாடு முதலியவற்றை அறிவுறுத்தித் தம் மாணவர் வாழ்வே தம் வாழ்-வாய் அவர்களைப் போற்றிப் புரந்து புலமைச் செல்வர்களாய் நாட்-டுக்கு அளித்தார். அவர்கள் உயர்வு கண்டு ஈன்ற பொழுதிற் பெரிது-வக்கும் தாயைப்போலப் பெருமகிழ்ச்சி கொண்டார். அவர்களும் தாம் பெற்ற பல்கலைக் கழகப் பட்டத்தைக் காட்டிலும் மு.வ. அவர்-களின் மாணவர் என்பதையே பெரும் பட்டமாக மதித்து அவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டொழுகி வந்தனர்.

தமிழ்த்தாயின் தலைமகனுகத் திகழ்ந்த மு.வ. அவர்கள் அன்னைக்-குச் செய்து பூட்டிய அருங்கலன்கள் பலவாகும். தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றப்பட்ட தமிழ்ப் பெரியார் திரு. வி.க. அவர்களின் அடியொற்றி இனிய எளிய உரைநடையில் ஆராய்ச்சிக் கட்டுரைகள், இலக்கிய கட்டுரைகள், வரலாறுகள், பயணக் கட்டுரைகள் எனப் பலவகை நல்லணிகளைப் புனைந்து தமிழன்னையை அலங்கரித்து மகிழ்ந்தவர் மு.வ.

அவருடைய நூல்கள் சிந்தனைக்கு விருந்தாக அமைந்ததோடு சிந்திக்கத் தூண்டுவன; உணர்ச்சியை மட்டுப்படுத்தி உள்ளத்தைப் பண்படுத்துவன ; அறிவை வளர்ப்பதோடு ஆற்றலைத் தூண்டிச் செயற்பட வைப்பன. அவருடைய நாவல்கள் தமிழ் இலக்கியத் துறையில் ஒரு புதுப்பாதை அமைத்துத் தந்துள்ளன. வங்காளத்தில் பக்கிம் சந்திரரும், மராத்தியில் காண்டேகரும் வாழ்க்கையோடு ஒட்டிய புனைகதைகளை எழுதி மக்கள் வாழ்வில் உள்ள சிக்கல்கள், சமுதாய மேடு பள்ளங்கள், இவற்ருல் விளையும் நன்மை தீமைகள் ஆகியவற்றை மக்கள் உளங்கொள்ளுமாறு செய்ததுபோலத் தமிழில் வாழ்க்கையோடு ஒட்டிய நிகழ்ச்சிகளை நளினமாகக் கையாண்டு நெடுங்கதை புனைந்து

வெற்றி கண்டவர் மு.வ. அவர் எழுதிய கரித்துண்டு, அல்லி, நெஞ்சில் ஒரு முள், கள்ளோ காவியமோ, அகல் விளக்கு போன்ற நாவல்கள் பொழுது போக்குக்காகப் படிக்கும் கதைகளாக இல்லாமல் அழியா இலக்கியங்களாக விளங்கும் சிறப்புப் பெற்றன.

மு.வ. அவர்கள் பணிகள் யாவற்றிலும் தமிழ் வளர்ச்சி, தமிழின முன்னேற்றம், தமிழ்நாட்டுயர்வு ஆகியவையே உயிர்ப்பாய் ஒளிர்ந்தன. அவற்றைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் பல இடங்களில் வற்புறுத்தித் தமிழர்களைச் சிந்திக்கச் செய்த சிந்தனைச் சிற்பியாகத் திகழ்ந்தார் மு.வ. குறிப்பாக நாளை மலர்ந்து மணம் வீச இருக்கும் இன்றைய அரும்புகளாகிய இளைஞர்களை உருவாக்குவதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். அரசியல் அலையில் சிக்கித் தம் நிலை மறந்து, உணர்ச்சி வேகத்தால் நெறி கெட்டு அல்லலுறு-வார்க்கு அரசியல் முதலியவற்றிற்கு அப்பாற்பட்டவராய்த் தமிழர்-களை மூடி மறைத்துள்ள மாயை இருளகற்றி அவர்கள் செல்லவேண்டி வழி இது எனக் காட்டும் அகல் விளக்காக விளங்கினர் மு.வ. அவர்கள். அந்தோ அந்த அகல் விளக்கு அணைந்து விட்டது! தமிழினத்தின் நல்வாழ்வே குறிக்கோளாய் இரவு பகலாய்ச் சிந்தித்த சிந்தனைச் செல்வம் ஒடுங்கிவிட்டது! எழுதிக் குவித்த கைகள் ஓய்ந்துவிட்டன! தமிழ்நாட்டின் தீயூழை எண்ணி வேதனைப் படுவதல்லது செய்வ தொன்றறியாமல் அறிஞருலகம் அல்லற்பட்டுழல்கிறது.

நம் தமிழக முதல்வர் எடுத்துக் காட்டியதுபோல டாக்டர் மு.வ. அவர்கள் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் தமிழன்னையின் மணி மகுடத்தில் எத்தனையோ முத்துக்களையும் வைரங்களையும் பதித்-திருப்பதோடு எதிர்காலத் தமிழர், நாம் தமிழர், நம்நாடு தமிழ்நாடு, நம் கடமை இது எனத் தெளிந்து மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும் இன உணர்வும் உடையவராய் வளர வழி வகுத்திருப்பார். அத்தகைய ஆற்றல் அவரிடம் அமைந்திருந்த காரணத்தினலேயே, ‘இதனை இதனல் இவன் முடிக்கும் என்ருய்ந்து, அதனை அவன் கண் விடல்’ என்ற வள்ளுவரின் தத்துவத்தை நன்குணர்ந்த நம் முதல்வர் அவரை வற்புறுத்தி மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஆக்கி வைத்தார். துணைவேந்தராகப் பணியாற்றிய குறுகிய கால எல்லை-யிலேயே, மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவிலே பேரறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதுபோல அப் பல்கலைக் கழகத்தைத் தமிழகத்தின் தனிப் பண்பை நிலைநாட்டும் உயரியதோர் அமைப்பாக உருவாக்கித் தமிழர் நெஞ்சங்களைப் பூரிக்கச் செய்தார்

மு.வ. அதனுல் இந்தியாவில் மட்டுமல்லாமல் அயல் நாடுகளிலும் வாழும் கல்வி வல்லுநர்கள். சான்றேர்கள் ஆகிய அனைவராலும் 'ஒப்பற்ற துணை வேந்தர்' என்று பாராட்டப்பெற்றூர்.

இத்தகைய பெறற்கரிய மாணிக்கத்தை இழக்க நேர்ந்தது அவர் குடும்பத்துக்கு மட்டுமன்று. தமிழ்நாட்டிற்கு, கல்வி உலகத்திற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்பதில் ஐயம் இல்லை. அவர் மறைவால் தமிழன்னை தன் தலைமகனை இழந்து கண்ணீர் வடிக்கிருள். தமிழ்ப்புலவர்கள் தம் தலைவரை இழந்து தவிக்கின்றனர். இளைஞருலகம்ஒப்பற்ற வழிகாட்டியை இழந்து அல்லல் உறுகிறது. அறிஞருலகம் அறிவறிந்த சான்றேரை இழந்து கையற்றுக் கலங்கி நிற்கிறது. மாணவர் மன்றம் இணையிலாப் புரவலரைத் இழந்து நிற்கின்றது.

டாக்டர் மு. வ. அவர்கள் மன்றத்தின் தொண்டுகளில் தனி ஆர்வமும் அக்கரையும் காட்டி ஒல்லும் வகையொல்லாம் மன்ற வளர்ச்சிக்கு உறுதுணை புரித்து வந்தார்கள். மன்றத் தந்தை பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களிடம் பேரன்பும் பெரு மதிப்பும் உடையவராய் அவர் மேற்கொள்ளும் நற்பணிகளுக்கெல்லாம் பல வகையிலும் உதவி வந்தார்கள். அவருடைய அறிவுரையை ஏற்று மன்றம் பல துறைகளிலும் தூய தொண்டாற்றி வந்துள்ளது. மன்றத்தின் இன்றைய வளர்ச்சிக்கும், தனக்கெனத் தனி நிலையம் கண்டு தமிழ்நாட்டில் மட்டும் அல்லாமல் கடல்கடந்தும் அது தன் பணியை விரிவிபடுத்திச் செயலாற்றுவதற்கும் மு. வ. அவர்களின் அன்பும் ஆதரவும் அறிவுரையுமே காரணமாகும். இங்ஙனம் துணையாய் இருந்து புரந்துவந்த தூயவரை இழந்து சிறகொடிந்த பறவைபோல மன்றம் செயலிழந்து கலங்குகிறது. 'ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மாண்டார் வாரார்' என்னும் மெய்ம்மொழியை உணர்ந்து ஆறுதல் கொள்வதைத் தவிர வேறு வழி தோன்றவில்லை. மு.வ. அவர்கள் காட்டிய நெறியில் தளராதுழைத்து அவர் கொள்கை வெற்றி பெற உழைப்பதையே அவருக்குச் செய்யும் அஞ்சலியாகக் கொண்டு மன்றத்தின் சார்பில் அவருடைய குடும்பத்தார்க்கும் உற்றூர் உறவினர்க்கும் நண்பர்கட்கும் மாணவர்கட்கும் அவர் தொடர்புடைய நிறுவனங்கட்கும் ஆழ்ந்த இரங்கலை அறிவித்துக் கொள்கிறேம்,

நித்திலக்குவியல் — டிசம்பர்'74

# மு. வ. வின் கடைசி நாட்கள்

புலவர் வேலவன்

இதோ! ஊர்வலம் புறப்படுகிறது. தமிழக மக்கள் மு. வ.என்று ரத்தினச் சுருக்கமாக இரண்டு எழுத்துக்களால் அழைக்கப்படும் இலக்கிய வேந்தர், தொண்டு மிகு துணைவேந்தர், மு. வரதராசனரின் எலும்புத்தூளை (அஸ்தி) கரைப்பதற்காக வைகைக் கரையை நோக்கி ஊர்வலம் புறப்படுகிறது.

அழகர்கோயில் சாலையிலுள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தின் பழைய கட்டிடத்திலிருந்து எறும்புகள் சாரை-சாரையாக ஊர்வது போல ஊர்வலம் ஊர்ந்து செல்கிறது.

ஊர்வலத்தின் முன்பகுதியில் காலடி ஓசைகூட எழாதபடி கல்லூரி மாணவர்களும், அடுத்து கல்லூரி முதல்வர்களும், பேராசிரியர்களும், பல்கலைக்கழகப் பணியாளர்களும் தொடர்ந்துவர இடையில் அலங்கரிக்கப் பட்ட வண்டியில் அறிஞர் மு. வ. வின் அஸ்திக்கலசம்

நிலையாமையை உணர்த்திவர, அதனை அடுத்து, துயரம் எழும் எண்ணங்களோடு, அழும் கண்களோடு—மாணவியர் கூட்டம் அணி அணியாய்த் தொடர்ந்து வருகிறது.

குன்றின் மேலிட்ட விளக்காக ஒளியோடு வாழ்ந்த மு. வ. அவர்களை இப்போது குடத்திலிட்ட அஸ்தியாகக் காணும்போது நம் இதயம் வேகிறது. உள்ளம் நோகுகிறது.

கண்கள் அருவியாக மு. வ. வை அழுது கொண்டே நினைக்கிறேன்.

மு. வ. — புல்லாங்குழல்

'நான் நாணலாக இருக்கிறேன்; நீ காற்றுகப் புகுந்து இசைக்கின்றுய் என்ற தாகூரின் பாடலை டாக்டர் மு. வ. அவர்கள் 9-9-74ல் தொடங்கிய 'எழுத்தாளர் அகிலன்' கருத்தரங்கத் தலைமையுரையில் உணர்ச்சி பொங்கக் கூறினர். அவர் அவ்வாறு கூறியபோது மு. வ. என்கிற புல்லாங்குழலும் காற்றுகிய இறைவனை இழந்து வாழ்விழந்து விடும் என்று யாராலும் நினைக்கமுடியவில்லை.

கடமை உணர்வு

அகிலன் கருத்தரங்கத் தொடக்க விழாவை முன்னிட்டு சென்ற நான் மு. வ. அவர்களையும் பார்க்கச் சென்றேன். கடந்த நான்கு ஆண்டு காலத்தில் எத்தனை முறை சந்தித்தாலும் சலிப்புத் தட்டாத சந்திப்பாக அமையும். எங்கள் சந்திப்பு காலை 9 மணியிருக்கும் போது அவரது வளமனைக்குச் சென்றேன். அப்போது அவர் தலைவாசற்கதவை திறந்து வைத்துக் கொண்டு அவ்விடத்திலேயே தரையில் அமர்ந்து கொண்டு கதர்உள்ரிட்டை (பனியன்) அணிந்திருந்த நிலையில் அலுவலக ஏடுகளை (பைல்களை) மடியின் மீது வைத்துப் புரட்டிக் கொண்டும் கையெழுத்திட்டுக் கொண்டும் இருந்தார்.

இடையிடையே அவரது இருமலையுங் கேட்டேன். அவரது அலுவலகங்களுக்கு இடையூறு செய்யாவண்ணம் வெளியேறும்போது வண்டியோட்டி (டிரைவர்) ராமச்சந்திரன் வந்தார். அவர் பாரி திருமணத்திற்கு பின் சென்னையிலிருந்த ஐயா வீட்டிற்குள்ளே கூடப் போகவில்லை ' அங்கேயே உட்கார்ந்து முக்கிய பைல்களைப் பார்க்கிருர் என்று கூறினர். மு. வ. அவர்களின் கடமை உணர்ச்சியைக் கண்டு வியந்தேன்.

ஐயாவிடம் நான் வந்ததாக கூறுங்கள்; அகிலனிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று கூறிவிட்டு விருந்தினர் மாளிகைக்குச் சென்றேன்.

**மதுரைத் தண்ணீரும் மு. வ. வும்**

விருந்தினர் மாளிகையில் அகிலனிடம் உரையாடிக் கொண்டி-ருந்தேன். இங்கு துணைவேந்தரும் வந்து சேர்ந்தார். அங்கு நடை பெற்ற உரையாடலின் போது பல்கலைக்கழகக் கிணற்றுத் தண்ணீரை வெகுவாகப் பாராட்டினர்.

சென்னையில் இதுபோன்ற சுவையுள்ள தண்ணீரைப் பார்க்க முடியுமா ? சென்னையிலிருந்து சீக்கிரம் மதுரைக்கு ஓடிவருகிறேன் என்-ருல் காரணம் இந்த மதுரைத் தண்ணீரே என்று கூறிய மொழிகளை மறக்க முடியுமா ?

பல்கலைக்கழகத் தண்ணீரைப் பருக அவர் இனி என்று வருவார்?

**பல்கலைக் கழகக் கட்டிடங்கள்**

மதுரைப் பல்கலைக் கழகத்தைத் திட்டமிட்டு நன்முறையில் உரு-வாக்கினர். எல்லாக் கட்டிடங்களும் ஒன்றுபோலிராமல் ஒவ்வொரு கட்டிடமும் ஒவ்வொரு தோற்றமாகக் கட்டப்பட்டுள்ளது. இதுபற்றி பலரும் கேட்டபோது பாட்டுக்கள் யாவும் ஒரே பாட்டுப்போல் இருந்-தால் சுவைக்குமா? ஒவ்வொரு பாடலும் வெவ்வேருக இருந்தால் தானே பாட்டின்பம் கிட்டும். அது போன்றே ஒவ்வொரு கட்டமும் வெவ்வேறு உருவில் கட்டப்பட்டது' என்று கூறிய இனிய பதிலிலும் இலக்கியச் சுவையைக் கண்டோம்.

**இயற்கையில் ஈடுபாடு**

வண்டியில் செல்லும் போது ஆங்காங்கே நிறுத்தி இதோ இது தான் 'வேப்பஞ்சாலை', அதோஅது தான் 'வாகைச்சாலை' என்று சுட்டிக் காட்டினர்.

'பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும் பைங்கிளிகள் அங்கி-ருந்து பாட வேண்டும்' என்ற கவிமணியின் பாடலை நன்குணர்ந்தவர். ஆதலால் பாலைவனம்போல் பொட்டற் காடாய்க் கிடந்த நிலத்தை தன்முயற்சியால் சோலைவனமாக்க முயன்று வந்தார். சோலைக்குள் பல்கலைக் கழகம் மூழ்கி இருக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில்

தாகூரின்விசுவபாரதி பல்கலைக்கழகம் போல் மதுரைப் பல்கலைக் கழகம் திகழவேண்டும் என்றும் திட்டமிட்டு மக்களை வளர்ப்பது போல் மரங்களை நட்டு வளர்த்தார். ஏறக்குறைய எண்ணாயிரம் மரங்களை நட்டு வளர்த்து வந்தார்.

ஓரிடத்தில் வண்டியை நிறுத்தி அதோ 'நடுவில் ஆலமரம், அதைச்சுற்றி வேப்பம் மரங்கள். எதிர் காலத்தில் இங்கெல்லாம் வகுப்புக்கள்—திறந்த வெளியில் நடைபெறும்' என்று கூறினர்.

கற்க கசடறக் கற்பவை

பல்கலைக்கழக நூலகத்திற்கு அருகில் எங்கள் வண்டி வந்தது அப்போது அதோ, நூலகத்தலைப்பில் உச்சியில் பார்த்தீர்களா ? என்று கேட்டார். நூலகத் தலைப்பில் 'நூலகம்' என்று எழுதப்பட்டிருக்கும் என்றுதான் அங்கு நோக்கினோம்.

ஆனால் அங்கு 'கற்க கசடறக் கற்பவை' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்த புதுமையினைக் கண்டோம், இதைப் படித்துப்பார்த்து இதுதான் நூலகம் என்று புரிந்துகொள்ளுமாறு ஒரு புதுமையைச் செய்திருந்தார்.

டாக்டர் மு. வ. நினைவு அரங்கம்

இறுதியாக எங்கள் வண்டி ஒரு புதிய கட்டிடத்திற்கு முன்னால் வந்து நின்றது. இக்கட்டிடத்திற்கு என்ன பெயர் வைக்கலாம்? அரங்கு! என்று பெயர் வைக்கலாம் என்றிருக்கிறேன். என்ன அரங்கு என்று வைக்கலாம் ? என்று கேட்டார்.

அப்படிக் கேட்டவர் பெயரையே அந்த அரங்கத்திற்கு 'டாக்டர் மு. வ. நினைவு அரங்கு' என்று வைக்கும்படியான நிலை ஏற்பட்டுவிட்டதே.

ஊர்வலம் நகர்ந்து கொண்டே சென்றது. மீண்டும் எனது நெஞ்சத்திரையில் விடுபட்டறுந்த இடத்திலிருந்த சிந்தனைப்படம் ஓடத் தொடங்கியது.

தன்னம்பிக்கை

மதுரை மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் 15-9-74 நானும் மற்றும் மூவரும் தூதுக்குழுவாகச் சென்று மு. வ.

அவர்களைக் கண்டோம். புலவர் பட்டத்தை பட்டப்படிப்பாக்குமாறு வேண்டிேனோம் ; சென்னை பல்கலைக்கழகம் செய்ததும் மதுரையில் செய்வோம்' என்றார். புலவர்களுக்குச் செவ்வாழைக் கனி தந்து விருந்து உபசரித்தார்.

எங்களுடன் பேசிக்கொண்டே பட்டமளிப்பு விழாவுக்கான-பட்டங்களில் கையெழுத்திட்ட வண்ணம் தன்கடமையையும் செய்து கொண்டிருந்தார். அப்போது ஐயா 7000 கையெழுத்துக்களையும் கையாலேயே போடுகிறீர்களே! முத்திரை குத்தினாலென்ன ? என்-றேன். அவர் கூறிய பதில் என்ன ? எனக்கென்ன வயதாகி விட்டதா ? இது என்ன பெரிய வேலையா ? வயதான பிறகு பார்ப்போம் என்றார்.

அவருக்குத்தான் என்னே தன்னம்பிக்கை!

சொல்லாராய்ச்சி வெற்றிலை

எங்களின் பேச்னிடையே எப்படியோ வெற்றிலை பற்றிய சொல்லாராய்ச்சியும் வந்தது 'வெற்றிலை'— வெளிறிய நிறமுடைய இலை என்ற பொருளுடைய சொல்லே வெற்றிலை என்று ஆகியிருக்க வேண்டும் என்று கூறினர்.

காக்கை குருவி எங்கள் சாதி

இன்னும் பல ஏற்றமிகு கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டோம். அன்போடும் பண்போடும் வாயில் வரையில் வந்து வழியனுப்பி வைத்தார். அப்போது மரத்திலிருந்த காகம் ஒன்று கரைந்தது. 'ஐயா! முன்பு இங்கு ஒரு காக்கைகூட இல்லையே சோறிட என்று உங்கள் துணைவியார் கூறியதாகக் கூறினீர்களே! இப்போது காகங்களும் வந்து பழகிவிட்டன போலும்' என்றேன்.

ஆமாம்! இப்போது காகங்களும் வருகின்றன. இதுவரை இங்குக்கூடாத மேகங்களும் கூடிப் பொழியத்தொடங்கி, நாலைந்து நாட்களாக இங்கு நல்ல மழை. இனி இங்கு என் மனைவி வரக் கூடும்' என்றார்.

ஊர்வலம் இப்போது அமெரிக்கன் கல்லூரியைத் தாண்டி வந்துவிட்டது.

எனது சிந்தனை ஊர்வலமும் இப்போது பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் இருந்தது.

நோய்வாய்ப்பட்டார்

பட்டமளிப்பு விழா மண்டபத்திற்குள் புகு முன்னர் மு. வ. அவர்களைக் காண விரும்பினேன். அப்போதுதான் ஐயா அவர்கட்கு உடல் நலமில்லை என்ற செய்தியை முதலில் கேள்விப்பட்டேன்.

விழாமேடைக்கு வரும்போது அவரின் முக வாட்டத்தையும் தளர்ந்த நடையையும் கண்டேன். விழா முடிந்ததும் அவர்களை சந்திக்க முயன்றேன். அந்நேரம் என்னுடன் நண்பர்கள் பலரும் ஆவல்மிகுதியால் கூடிவிட்டதால், தொல்லை தரக் கூடாது என்று கருதி பின்னர் பார்ப்பதாக கூறி மீண்டேன்

## Dr. M. Varadarajan a humane scholar

FROM a mere taluk office clerk, he rose to the prestigious position of a Vice-Chancellor. But before the frail-looking khadi - clad scribe donned the ceremonial robes of the Vice - Chancellor, he had acquired a Ph. D. in Tamil (the first in Madras University), joined the ranks of eminent authors who ushered in Tamil renaissance and won the hearts of thousands of students and teachers.

This was Mu. Va — Dr. M. Varadarajan — who passed away last month abruptly ending a glorious academic career. After his death, as one talked to his friends and admirers, one got the impression that his endearing qualities as a man and teacher formed the most outstanding aspect of his personality.

His kindness and concern to all those who came in contact with him seems to be legendary. His numerous friends and relatives remain grateful for some little help or other he did to them at the right time. He was the hero of thousands of young men and women, many of whom had been his students. He took a fraternal interest in his students and helped them solve their academic as well as domestic problems. Once a handicapped student—he had only two fingers on his right hand—met him after making unsuccessful attempts to join the M.A. course in some college or other. The colleges rejected him saying he could not cope with the studies on account of his handicap. Mu. Va. straightway asked him to demonstrate his capacity to write with his two fingers and when he found the boy could write really fast, he admitted him to the M.A.course.

Mu. Va. remitted the tuition fees and examination fees for his students who could not afford to pay. It is stated that a young man who worked in the Post and Telegraph department and attended the part-time Tamil degree course had to abandon it as he could not remit the fees. Finding the young man, who happened to be a promising student of his, absent. Mu. Va. learnt he had dropped out because of financial difficulties. He promptly paid the fees for the student and asked him to attend the classes. After completing his studies, the former postal employee has become a Professor in Malaysia.

Dr.Varadarajan shunned publicity and was so modest that there were occasions when he did not tell his own family members about his achievements. When he was conferred a Doctorate by the Illinois (US) University, excepting a handful of his intimate friends nobody knew about it. His family members came to know about it long after the event. He was the first Tamil scholar and writer to be honoured by an American University.

A great lover of Nature, his boyhood days were spent wandering over the Javvadu Hills near Tirupattur (North Arcot District) where he studied. As the Vice - Chancellor of the Madurai

University, he attached special importance to tree-planting. Rows and rows of.mango trees, long lines of coconut, palm and neem, guava and other species were planted during his regime to provide shady avenues.

Dr. Varadarajan began to repose faith in nature cure when as a young man he tried with success the method to get rid of the consumptive disease from which he was suffering. In fact, his belief in nature cure was so steadfast that in his last days when he was suffering from a heart attack he refused to take modern medicine. Although all his three sons were allopathic doctors he insisted on getting over the crisis by nature cure. When it failed him, he told his sons that even allopathic medicines would not succed. This became true: he did not respond to the medicines and passed away some hours after admission to hospital. He adopted the Gandhian approach not only in regard to curing his ailments but also an leading a simple life. He always wore khadi. He overcame a challenge to his faith in khadi. Once, as a young clerk in Tirupattur taluk office, he had to meet the British collector and hand over some papers to him. His colleagues in the office advised him not to wear khadi when he went to see the Collector. Those were the days when the Government frowned upon people who wore khadi and government employees clad in khadi wear considered to be anti-British. Young Varadarajan laughed at the idea that the powers-that-be should object to the dress worn by a clerk. He met the Collector fully dressed in khadi.

He had to his credit over 70 books, offering an interesting and varied fare — literary research, novels. dramas, short stories, not to speak of the numerous essays on character-building and good citizenship. Dr. Varadarajan's commentary on Tirukkural registered record sale of lakh copies. His novels mirrored life in modern times and enriched contemporary Tamil literature. He was acclaimed as a master artist in the genre of social novels in Tamil. He used the valuable literary technique called "amplification" which is very useful in enlarging the reading interests of the neo-literates who are coming up in their millions thanks to free

education. His novels generally dealt with the complex problems faced by the youth; the evil effects of money power on society; the shortcomings in family life in modern times; the emancipation of woman and nobility of woman-hood.

Mu. Va did not believe in talking. He rarely accepted speaking engagements,although he was a fluent speaker, because he felt talking was a waste of time. On the other hand, he thought, the time devoted to writing would be useful to posterity.

THE HINDU, 3—12—'74

# குறிப்புகள்

## தமிழ் வளர்த்த செம்மல்

பேராசிரியர் க. அன்பழகன்.

நாடு போற்றும் நற்பெயரும் ஓங்கிய புகழும் பெற்றுத் திகழ்ந்த தமிழ் வளர்த்த செம்மல் — டாக்டர் மு. வ. அவர்களின் திடீர் மறைவு தமிழுலகுக்குப் பேரிழப்பாகும்.

பலரும் பாராட்டும் வண்ணம் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக விளங்கி, மேலும் பல ஆண்டுகள் கல்வித் துறைக்கு வழிகாட்டியாக விளங்கவேண்டிய அனைத்துத் தகுதிகளும் பெற்றிருந்த மு. வ. அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாததாகும்.

காலத்தின் கண்ணாடி, கருத்தோட்டத்தின் முன்னோடி, ஆராய்ச்சிப் பெட்டகம், இலக்கியப் பூங்கொத்து எனத்தகும் நூல்கள் பலவற்றைப் படிப்பதற்கேற்ற எளிய, இனிய தீந் தமிழ்ச் சொற்களால் இடையீடற்ற தெளித்த நீரோடை போன்ற நடையில், நற்றமிழ்ப் பண்பும் மணமும் பரவ - அவர் இயற்றியதன் பயன் — தமிழ் நூல்கள் பயில்வோர் எண்ணிக்கையையே பெருக்குவதாயிற்று எனில் — வேறு பெருமையும் வேண்டுமோ ?

அவரது அறிவாற்றல் கடல் கடந்தும் — மேல் நாட்டினிலும் ஏற்றுப் போற்றப்பட்டது என்பது அமெரிக்க இல்லினொய்சு பல்கலைக் கழகம் அவரது இலக்கியப் பணியைப் போற்றி வழங்கிய டாக்டர் பட்டத்தால் புலனாகும்.

தமிழ் மொழி உணர்விலே ஆழ்ந்து
தமிழ்ப் பண்பாட்டிலே தழைத்து
தகைசால் தமிழ்ப்பெரியார் திரு. வி. க. விடம் உள்ளம் ஒன்றி நின்று
தமிழறிஞர் யாவரிடமும் நேயம் பூண்டு
தமிழ் மக்களுக்கும் - இளைஞர்கட்குமே தமது தொண்டை உரித்தாக்கித்
தமிழ்ப் பணியாற்றிய செம்மல் அவர்.

இன் சொல்லால், நன்னெஞ்சத்தால், உயர்ந்த நோக்கத்தால், பொறுமையால், பொச்சாவாமையால், புலவர்களிடையே கசப்புணர்வு, தோன்ற இடந்தராது — புதுமைப் புலவர் கூட்டத்தின் தலைவராய் விளங்கியவர் டாக்டர் மு. வ.

" டாக்டர் மு. வ. மாணவர் " என்னும் உரிமை உரையே பலப் பலருக்குப் 'பட்டமாக' விளங்கிப் பெருமை தேடித் தருவதெனில் ஒரு பேராசிரியர் எய்தத்தக்க வேறு புகழுமுளதோ ! அவர்களிடத்திலே தோழமை கொள்ள நட்புடன் பல்லாண்டு பழக வாய்ப்புப் பெற்ற பல்லோருள்ளும் யானும் ஒருவன் என்பதிலே நான் பெருமைப்படு-கிறேன்.

### புரட்சி செய்த புலவர் மணி

### திரு அன்புப்பழம் நீ

டாக்டர் மு. வ. அவர்கள் புலவர் குழாத்துள் புரட்சி செய்த புலவர் மணி. விழிப்புற்ற தமிழ்நாட்டைச் சிந்தனையில் ஆழ்த்திய-வர்.

சிறுமையைக் கண்டு சீறி எழும் மனப்பான்மையும் ஏழ்மை-யைக் கண்டு நிலை கலங்கும் சுபாவமும் நம்மில் மிகச் சிலருக்கே வாய்க்-கின்றது. அதிலும் புலமையின் துணை கொண்டு வாழ்க்கையின் இன்-னல்களைக் காண்பதுடன் நில்லாது அவற்றைப் பயன்படப் படம் பிடித்-துக் காட்டும் தொண்டன்றோ முக்கியமான இலக்கியத்தொண்டு. இந்-தப் பெருந்தொண்டைச் செய்துவிட்டு டாக்டர் மு. வ. அவர்கள் உடலை உதறிச் சென்றார். அவர் புகழ் மேலும் மேலும் பரவட்டும் !

### நடுவுநிலைச் செம்மல்

### டாக்டர் மோ. இசரயேல்,

டாக்டர் மு. வ. எளிமையை நாடிய இனியவர். குறை காணாது நிறையே போற்றிப் பாராட்டிய புரையோர். நேர்மை நெறி நின்று அறத்தின் அடிப்படையில், வரையறைக்குட்பட்டு செயலாற்றி நாட்-டுக்கும் மொழிக்குப் சீரிய பணியை ஆற்றிய பெருந்தகையாளர். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற நெறியில் வாழ்ந்த உயர்ந்த குறிக்கோளாளர். உழைப்பால் உயர்ந்த உண்மை நெறியாளர். பகுத்தறிவுக்கும் பல்கலைக் கழகத்திற்கும் பல்லாற்றானும் பணி-புரிந்த பெரியார்.

அவர் இனம், சமயம் ஆகிய வகுப்பு, வெறுப்புடன் செயலாற்றா-தவர். நடுவுநிலைச் செம்மல்; தமிழ் தமிழ் என்று கூறித் தமிழினத்-

திற்குத் தீங்கு செய்து வாழ்தலை ஏற்காது தமிழன் வாழ்ந்தால் தமிழ் தானுகவே வாழும் என்று கருதியொழுகித் தமிழனுக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய உரவோர்.

## தமிழ்க்கனி வழங்கும் தரு சாய்ந்தது

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி

அடுக்கடுக்கான அதிர்ச்சிகள் எத்தனைதான் தாங்கிக் கொள்ள முடிகிறது. அடக்கத்தின் உருவமாய் அருந்தமிழர் பண்பாட்டின் உறைவிடமாய்த் திகழ்ந்த தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள்— இந்தியாவின் புகழ்மிக்க மனிதர் கிருஷ்ணமேனன் அவர்கள்—தமிழ்க் கடலாக ஆங்கில மேதையாக விளங்கிய திருவாசகமணி பாலசுப்ரமணியம் அவர்கள்—கலையுலகில் நற்படைப்புக்களை வழங்கிய பந்துலு அவர்கள்-ஆகியோரைக் கடந்த பதினைந்து நாட்களுக்குள்ளாக ஒருவர்பின் ஒருவராகப் பறித்துக்கொண்ட இயற்கை, இதோ டாக்டர் மு. வ. அவர்களையும் பறித்துக்கொண்டு மற்ெருரு மகத்தான சோக வெள்ளத்தில் நம்மையெல்லாம் தள்ளிவிட்ட கொடுமையை நிகழ்த்திவிட்டது.

காலத்தின் கொடிய கரங்கள் தமிழ்க்கனி குலுங்கும் தருவொன்றை வெட்டிச் சாய்த்துவிட்ட அநியாயத்தை என்னவென்று சொல்லுவது? தமிழ் இலக்கியக்கடலில் சிந்தனைப் பாய் விரித்துப் பயணம் நடத்திய கப்பல், திடீரென மூழ்கி விட்டதே!

மு. வ. அடடா!

அந்தப் பெயர் ஒலிக்காத தமிழ் நெஞ்சங்களே கிடையாதே! அவர் கைபட்டுத் தமிழ் எழுத்து உயிர்பெற்று உலவிற்றே. அவர் சொல்லில் விளையாடிற்றே - இன்பத்தமிழ்-இனியதமிழ் - இலக்கியத் தமிழ் !

நிறைகுடமாகத் திகழ்ந்த அந்த நேர்மையாளர் எழுதிக் குவித்த ஏடுகள் தாம் எத்தனை! எத்தனை! மதுரைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக அவரைப் பார்த்து மகிழும் பேறு கிடைத்ததென்று பெருமை அடைந்திருந்தோமே—சென்ற திங்கள் 14ஆம் நாள் தானே மதுரை ஆலயத்தில் நடைபெற்ற புலவர்களுக்குப் பொற்கிளி வழங்கும் விழாவில் நானும் அவரும் கலந்து கொண்டோம். ஆலயத்தில் உள்ள சங்கப்புலவர்களின் சிலைகளை எல்லாம் என்னிடத்தில் காட்டி விளக்கங்கள்

தந்தாரே! அப்போதெல்லாம் இப்படி ஒரு முடிவு இவ்வளவு விரைவாக அவரைத் தழுவிக் கொள்ளும் என்று யாரும் நினைத்ததுகூடக் கிடை-யாது!

அறிஞர் பெருந்தகை!

அருங்குண சீலர்

அற்புத எழுத்தாளர்!

சிந்தனையாளர்!

சீர்திருத்தவாதி!

''நினைத்துப் பேசு—நினைத்ததை யெல்லாம் பேசாதே'' — என்ற இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய மேதை. அவர் பிரிவு தாங்கிட முடியாத ஒன்று!

அரிய துணையொன்றை இழந்துவிட்ட வேதனை என்னை வாட்டு கிறது. இன்னும் பல ஆண்டு காலம் வாழ்ந்திருந்தால் தமிழ்த்தாயின் மணிமகுடத்தில் எத்தனையோ முத்துக்களை, வைர வைடூரியங்களை அவர் பதித்திருப்பார்.

தக்கார் தகவில ரென்ப தவரவர்

எச்சத்தாற் காணப் படும்.

என்பதற்கேற்ப, அந்தத் தக்காரின் எச்சமாக அவர் எழுதிக் குவித்த நூல்கள் ஆற்றிய சொற்பொழிவுகள், எடுத்த நற்பெயர் — அனைத்தும் நிற்கின்றன.

டாக்டர் மு. வ. தமிழுலகம் என்றென்றும் மறவாத ஒரு பெயர். அந்த உயர்ந்த தமிழரை இழந்து தவிக்கும் அனைவரது கண்ணீரோடு என் கண்ணீரையும் சங்கமமாக்கி, அவருக்கு இதயமார்ந்த அஞ்சலி-யைச் செலுத்துகிறேன்.

## வள்ளலார் வாழ்வு நடத்தியவர்

டாக்டர் ந. சஞ்சீவி

பேராசிரியர் மு. வ. உழைப்பால் உயர்ந்த உத்தமர். நாட்டுப் புறத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து படிப்படியாகப் படிப்பாலும் பண்பாலும் முன்னுக்கு வந்தவர். ஒரு சிறுகாலம் எழுத்தராகப் பணி-யாற்றிப் பின்னர் எந்தக் கல்லூரியிலும் சேர்ந்து படிக்காமல் தம்

முயற்சியாலும் தனிக் கல்வியாலும் வித்துவான், பி.ஓ.எல், எம்.ஓ.எல்., பிஎச். டி பட்டங்களில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றூர். சென்னைப் பல்கலைக்கழகத்தின் வாயிலாகத் தமிழில் முதன் முதலாக டாக்டர் பட்டம் பெற்றவர் அவர் தாம். தம் அன்பாலும் அறிவாலும் கடந்த பத்துப் பதினைந்தாண்டுகளில் ஏறத்தாழப் பத்துப் பதினைந்து பேரை டாக்டர்களாக உருவாக்கிய பெருமையும் அவர் தனிஉரிமை.

பேராசிரியர் டாக்டர் மு. வ. பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் துறை போகக் கற்றவர். ஆயினும் தமக்கு முன்னோடிகளாக விளங்கிய பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள், திரு. வி.க. முதலியோர் தொடங்கிய தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தம்முடைய பற்பல புதினங்களாலும் பிற இலக்கியப் படைப்புக்களாலும் வலிவும் பொலிவும் பெறச் செய்தார். பேராசிரியர் கல்கியும் பேரறிஞர் அண்ணுவும் போற்றும் எளிய, இனிய தமிழ் நடையின் வாயிலாகத் 'தமிழ் நாட்டுப் பெர்ஞட் ஷா' என்று திரு. வி. க. வும் போற்றும் படியாகப் புதிய புரட்சிக்கருத்துக்களை டாக்டர் மு. வ. இளைஞர் நெஞ்சில் விதைத்தார். பத்தாண்டுகட்கு முன்பு ஒரு பத்தாண்டுக்காலம் டாக்டர் மு. வ. வின் கருத்துக்களில் மூழ்குவதையே தமிழ் நாட்டு இளைஞர்கள் தனிப் பேரின்பமாகக் கருதினர்.

## புகழ்க் கொடி நாட்டியவர்

திரு மா. சு. சம்பந்தன்

டாக்டர் மு. வ அவர்கள் தொடக்க முதல் தமக்கெனத் தனிக் குறிக்கோள் கொண்ட மாந்தராக விளங்கினூர். படித்து முன்னேறும் வரையில் பொது வாழ்வில் ஈடுபட்டதில்லை; நூல்கள் எழுதுவதில் நாட்டஞ் செலுத்தியது கிடையாது. தமக்கெனத் தனித் தகுதி கிடைத்த பின்னரே எழுதத் தொடங்கினூர்; நாள்தோறும் விடாது எழுதினூர், விடுமுறைகளை வீணுக்காமல் எழுதிக் குவித்தார். தாம் எழுதியதோடு தம்மோடு நெருங்கியவர்களையும் எழுதத் தூண்டினூர். அவர்தம் விடா முயற்சியும், சிந்தனைத் தெளிவும், ஆற்றொழுக்கான நடையும் தமிழர் உள்ளங்களைக் கவர்ந்து இழுத்து இன்புறச் செய்தன; அவர்தம் நூல்களை விரும்பிப் படிக்கும் ஒரு பெரும் கூட்டத்தையே உண்டாக்கி விட்டன! புகழும் பொருளும் கிட்டிய பிறகும் அவர் எழுதுவதை நிறுத்தியதில்லை. தாம் எண்ணியதை தமக்குக் கைவந்த எல்லா துறைகளிலும் சிறப்புறச் செய்து புகழ்க்கொடி நாட்டியவர் டாக்டர் மு.வ. ஆவர்.

## பீடுர் பெருமையும்மிக்க பேராசிரியர்

### திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா

டாக்டர் மு. வ. — தமிழ் நெஞ்சங்களில், தமிழாய்ந்த உள்ளங்-களுள் உறைந்துவிட்ட தண்டமிழ்ச் செல்வரின் பெயர்.

டாக்டர் மு. வ. அவர்களைச் சென்ற சூன் திங்களில் நிகழ்ந்த இஸ்லாமிய இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் கடைசி முறையாக நேரில் கண்டு உரையாடும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைப் பற்றிக் கேட்டுப் பெருமிதம் கொண்டு இரும்பூதெய்தினார். ‘மறைந்து கொண்டிருக்கும் நூல்களைக் கண்-டெடுங்கள்—அவற்றைப் பதிப்பிக்கும் ஆக்க வேலையில் ஈடுபடுங்கள். வளர்ந்துவரும் ஆராய்ச்சிக்கு வழிவகுங்கள்’ என்ற கருத்துப்பட அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கு ஆக்கமும் ஊக்கமும் ஊட்டியது. அந்தத் தமிழ்க் கடலிலிருந்து முகிழ்த்துக் கிளர்ந்த முத்துக்கள் அருந்தமிழ் மாநாட்டிற்கு அணிகலன்கள் பூட்டின.

டாக்டர் மு. வ. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூறியது போல தமிழ்க்கனி குலுங்கிநின்ற தரு. எளிய, இனிய, தெளிவான தம் நூல்களால் படிப்பவர் நெஞ்சைப் பற்றிப் பிடித்துக் கொண்டு உயிரும் உணர்ச்சியும் ஊட்டி, தமிழின் சிறப்பை நாட்டியவர். அள்ள அள்ளக் குறையாத தமிழ் அமுதை வாரி வாரி வழங்கிய பெரியார் — பன்னூலாராய்ச்சியாளர் — எழுத்துலக வித்தகர் — பீடும் பெருமையுமிக்க பேராசிரியர்.

வாழ்நாளெல்லாம் தமிழுக்குழைத்த இச்செம்மல் விட்டுச் சென்ற சுவையும் பயனும் மிக்க பேழையைக் காப்போமாக. வாழ்க அவர்கள் புகழ்.

## இலக்கிய நிலா

### திரு. சை. வே. சிட்டிபாபு.

தமிழ் இலக்கியத் தீபமாக விளங்கிய பேரறிஞர் மு. வ. அவர்-கள் சான்றாண்மை மிக்கவர். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கி, இலக்கிய மரபோடு திறன்மிக்க வாழ்வைக் கண்டு, பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்து அன்னார் ஆற்றிய இலக்கியத் தொண்டு எந்நாளும் போற்றுதற்குரியது.

எளிமையும், இனிமையும் இரு கண்ணுகக் கொண்டு வாழ்ந்த ஆன்றவிந்தடங்கிய அவ்விலக்கிய மேதையின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகம் அனைத்திற்கும் பேரிழப்பாகும். அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டு என்றும் வாடாமலராக நம் நெஞ்சப்பூங்காவில் எழிலையும், நறுமணத்தையும் பரப்பி நிற்கும் என்பதில் ஐயமிருக்க முடியுமோ?

திரு. வி. க. வின் மறுபிறப்பாக, நடமாடும் திருக்குறளாக விளங்கிய அன்னர் பல்வேறு துறைகளில் ஈடுபட்டு, ஈடுபட்ட துறைகளிலெல்லாம் ஈடு இணையற்றவராக விளங்கி உயர்ந்தவர்.

தமிழ் இலக்கியத்தின் புதுமையாய் — உலக இலக்கியத்தோடு ஒப்பிடும் அளவுக்கு—புதுப்புது நவீனங்கள், அறிவுத் திறன் மிக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள்—திறனய்வு நூல்கள் தந்து இலக்கிய வரலாற்றையும், மரபையும், திறனையும் அவர் ஆக்கித் தக்க பன்னூல் ஆசிரியராய் விளங்கிய பாங்கினை நினைக்க நினைக்க உள்ளம் நெகிழ்கிறது.

பேரறிஞர் மு. வ. வின் நூல்கள் இல்லாத பள்ளி நூலகங்கள் பல்கலைக் கழகங்கள் இல்லை. அவர் தமிழ் இலக்கியத்தின் கோபுரவிளக்காக நின்று எல்லாச் சமுதாயத்திற்கும் பயன் தரும் கருத்துக்களைத் தந்து சிறந்தவர்.

அவர் மாணவச் சமுதாயத்தில்—இளைஞர் உலகத்தில்— சான்ரேர் மத்தியில் ஒரு தன்னிகரற்ற உலா வந்த இலக்கிய நிலா. இயற்கை அம்மதியை மறைந்து விட்டாலும், நம் நினைவுலகிலிருந்து அவர் என்றும் மறைய முடியாது.

## எளிமையானவர்

### திரு. சிறுவை மோகனசுந்தரம்

டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் சென்னைக்கு வந்தது முதல் பழகும் பேறு பெற்றேன். நான் செயலாளனய் இருந்து பணியாற்றும் நக்கீரர் கழகத்தின் பணியில் கலந்து கொண்டு கழகத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்தவர். இந்தி மொழிப் போராட்டம் சம்பந்தமாக நல்ல அறிக்கைகளை டாக்டர் மு. வ. அவர்களைக்கொண்டு உருவாக்கச் செய்து, அதனை உடன் தினத்தாள்களில் வெளியிடும் பேறும் பெற்றவன்.

எளிமையானவர், தூயவர், பிறர்க்குத் தீங்கு நேரிடும் எப்பணி-யிலும் விலகி நிற்பவர். நக்கீரர் கழகப் பணிகளுக்கு நல்ல ஆய்வுரை-களை வழங்கியவர். நக்கீரர் கழக வெள்ளி விழாவிற்குத் தலைமை தாங்-கிச் சிறப்பித்தவர். 1948லிருந்து ஞாயிறுதோறும் தமிழ்த் தென்றல் திரு. வி. க. இல்லத்தில் கூடி, கலந்து உரையாடல் நிகழ்ச்சிகளில் திரு. வி. க. மகிழ்ந்து பெருமைப்படத்தக்க பல கருத்துகளை விருந்தா-கப் படைத்துள்ளார் திரு. டாக்டர் மு. வ.

## தமிழ் உள்ளவரையில் மு. வ.

நெ. து. சுந்தரவடிவேலு

கோடிக்கணக்கான மக்கள் பிறக்கிறார்கள்; வளர்கிறார்கள்; எப்படியோ இருக்கிறார்கள்; இறுதியில் மறைகிறார்கள். அவர்கள் வாழ்ந்த போதும் பலருக்குப் பயன்பட்டதில்லை. மறைந்த போதும் பலருக்கு அதிர்ச்சி உண்டாக்கியதில்லை.

இத்தகைய கோடிக்கணக்கான மக்கள் மந்தையிலே, ஒரு சிலர், கோடென உயர்ந்து நிற்கிறார்கள். கற்றுப்பெற்ற புலமையால், நுண்மாண் நுழைபுலத்தால், இடையரு உழைப்பால், பலருக்கும் பயன்படும் தொண்டால், அறிஞராக, சாதனையாளராக சிறந்து விளங்கும் சிலர் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றுவர். அச் சிலருடைய தோற்றமும் வளர்ச்சியும், வளமும் வாழ்வும் தங்கள் குடும்பங்களுக்குப் பயன்படுவதோடு நின்றுவிடாது, ஊருக்கும் நாட்டுக்கும் பெரிதும் பயன்படுவனவாகும். அத்தகையோர் நீர் நிறைந்த ஊருணி அனையர், வாழ்ந்தபோது பலருக்கும் துணைநின்ற அவர்கள், மறைந்தபோது, எண்ணற்ற மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆற்றாமையையும் விட்டுச் செல்லுகிறார்கள்.

டாக்டர் மு. வரதராசனாரை, அமைச்சர்கள் முதல் பொது மக்கள் வரை பலரும் மு. வ. என்று செல்லமாக, வாய் மணக்க அழைப்பார்கள் எல்லோருடைய உள்ளங்களையும் எப்படிக் கவர்ந்தார், மு. வ. ?

இயற்கை, மு. வ. வுக்குச் சிலவற்றைத் தாராளமாக வழங்-கியது. நல்ல மதிநுட்பத்தை நிறையக் கொடுத்ததைப் போலவே, ஓங்கி உயர்ந்த உடல் தோற்றத்தையும் கொடுத்தது.

தோற்றத்திலே உயர்ந்துநின்ற மு. வ. தமிழ்ப் புலமையிலேயும் உயர்ந்து விளங்கினர். பலருடைய தமிழ்ப் புலமைக்கு இல்லாத தனிச் சிறப்பு அவருடைய புலமைக்கு உண்டு. என்ன சிறப்பு?

கல்வியின் மேல் நம் மக்களுக்கு நாட்டம் ஏற்படாத கால கட்டத்திலேயே, நாட்டுப்புறத்திலே சாதாரண குடியில் பிறந்த மு. வ. பள்ளியிறுதி வகுப்பு வரை படித்ததே பெருமை. அதற்கு மேல் கல்விக் கூடங்களில் சேர்ந்து படிக்கும் வாய்ப்புகள் இல்லாது போயினும் மு.வ.-வின் கல்வி வளர்ச்சி தடைப்படவில்லை.

தமிழ்க் கல்லூரியில் சேராது, தாமே படித்து, 'வித்துவான்' பட்டம் பெற்றதோடு, அதற்கான முதற் பரிசையும் தட்டிக்-கொண்டவர், மு. வ. அவர்கள்.

அதோடு நின்ருரா? இல்லை. 'கற்றது கைம்மண்ணளவு' என்று உணர்ந்த, மு. வ. மேலும், தாமே தொடர்ந்து படித்து, தமிழில் மேற்-பட்டங்கள் பெற்ருர். ஆய்ந்து அறிந்து, டாக்டர் பட்டமும் பெற்ருர்.

அறிவுப் பெருக்கம், பலருக்குப் போதைப் பொருள்; ஆனல் மு. வ. வுக்கு அல்ல. விளைந்து பழுத்த நெற்பயிர், பணிந்து பயன் தருவதுபோல், பேரறிஞர் மு. வ. வின் நல்லியல்பாகிய அடக்கம் எல்லோருடைய நெஞ்சங்களையும் கவர்ந்தது.

மு. வ. அவர்களின் தமிழ்ப் புலமைக்கு உயிர் தமிழ்ப் பற்று. எனவே, பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கி, நூற்றுக்கணக்கான நன் மாணுக்கர்களை-காலமெல்லாம் தமிழ்ப் பற்று கொண்டவர்களை - உருவாக்கினர். அவருடைய மாணுக்கர்கள், இந்தியா முழுவதும் பரவி, தமிழ்த்தொண்டு ஆற்றி வருகிருர்கள்.

தமிழ் உள்ள வரையில் மு. வ. புகழ் ஒளிரும் என்பது உறுதி. தமிழ் மணக்கும் இனிய நண்பராம் பேரறிஞர் மு. வரதரா-சனர் அவர்களின் நினைவிற்கு அஞ்சலி.

## பண்பின் சிகரம்

### டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி

பேரறிஞர் மு. வரதராசனர் அவர்கள் பெருமையின் சிகரம். பெருமைக்குரிய நீர்மைகள் அனைத்தையும் அவர் நன்-கலனகப் பூண்டொழுகினர். எளிமையும், பணிவுடைமையும் மேற்-கொண்டு ஒழுகுவதில் அவர் மிகவும் உறுதியுடன் நின்ருர். அவர்பால் நிறைந்திருந்த மன உறுதி வியத்தற்குரியது. கற்புடைப் பெண்டிர்

ஒரு நிலையில் மனத்தை நிறுத்தி ஒழுகுவர். அதைப்போல் நல்லனவற்றில் தாம் கொண்ட உறுதியை உள்ளத்தில் நிலையாக நிலை நிறுத்தி ஒழுகும் ஒருவருக்குப் பெருமை ஏற்படும் என்பர் திருவள்ளுவர்.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு

இத் தமிழ் மறைக்கு மிகச் சிறந்த சான்றாகத் திகழ்ந்தவர் வரதராசனார் அவர்கள்.

ஆண்டுதோறும் கோடை விடுமுறைக் காலத்தில் மூன்று நாட்கள் இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றச் சார்பில் ஏதேனும் ஓர் ஊரில் அனைத்திந்தியத் தமிழ்க்கருத்தரங்கு நடை பெறுவதுண்டு. ஒவ்வொரு கருத்தரங்கிலும் டாக்டர் மு. வ. அவர்கள் பெரும்பங்கு கொண்டு இளம் தமிழாராய்ச்சியாளர்களை ஊக்குவிப்பார். 1970 ஆம் ஆண்டில் திருச்சி சூசையப்பர் கல்லூரியில் இக் கருத்தரங்கு நடைபெற்றது. டாக்டர் மு. வ. அவர்களுக்காக யான் செயலாளன் என்ற முறையில் ஓர் உணவு விடுதியில் அவர் தங்குவதற்கு நல்ல அறையாக ஏற்பாடு செய்திருந்தேன். இரயில் நிலையத்தில் அவரைச் சந்தித்ததும் உணவு விடுதிக்கு அவரை வருமாறு அழைத்தேன். ''மற்ற ஆசிரியர்களெல்லாம் எங்கே தங்குகிறார்கள்?'' என்று அவர் கேட்டார். கல்லூரி மாணவர் விடுதியில் தங்குகிறார்கள் என்று யான் சொன்னதும், ''அவர்களோடு சேர்ந்து அவர்கள் தங்கும் அறையில்தான் தங்குவேன்; தனியாக எனக்கு வசதி வேண்டாம்'' என்று மறுத்துரைத்தார். இதினின்றும் அவர் எவ்வளவு எளிமையான பண்புடையவர் என்பது தெரிகிறது. அப்போது அவர் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தார்.

### வியப்பிறந்த மேன்மையர்

ஔவை. சு. துரைசாமி பிள்ளை.

சிறந்த உள்ளமும் சீர்த்த பண்பும் உயர்ந்த ஒழுக்கமும் பணிந்த மொழியுமுடைய அவரது பண்பாடு நினைக்கும் நெஞ்சிற்கு நேரிய இன்பம் தருவது, நுண்மாண் புலமையும், தெளிவான எழுத்து வன்மையும் இனிமை சுரக்கும் சொல்வன்மையும், எல்லோரையும் மகிழ்விக்கும் நன்னீர்மையும் அவர்பால் இருந்து அழகு பெற்றன. அவருடைய கற்பனைப் புதினங்களும் கலைதெளி கட்டுரைகளும் தொண்டை நாட்டுச் சான்றோர்களின் புலமைக் காட்சியை என்

நினைவிற் கொணர்ந்து இன்புறுத்துவது வழக்கம். மொழி நூல் துறையில் அவரது மதிநுட்பத்தை நூல் வாயிலாகப் படித்துணரும் மாணவர் அனைவரும் தெளிந்த அறிவும் நிறைந்த அமைதியுமுற்று மலர்ந்த முகத்தினராவதைக் கண்டு என் மனம் வியப்புறுவதுண்டு. வாழ்வில் உயர்ந்தோரை நாடின், அவர்கள் சிலர்க்கு ஆகாதவருமாகப் பேசப் படுவதுண்டு. ஆனால் பேராசிரியர் மு. வரதராசனார் அவர்களை ஆகா-தவரெனப் பேசுபவரை நான் கண்டதில்லை. புலமைத் துறையாயினும் ஆட்சித் துறையாயினும் எவ்விடத்தும் ஒப்ப உயர்ந்த அவரது ஒட்பம் ''வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த'' மேன்மை சான்றது என்பேனாயின் அது மிகையாகாது.

## தமிழ்த்தாயின் தலைமகன்

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

டாக்டர் மு. வரதராசனார் மறைவின் மூலம் தமிழ்த்தாய் தனது சிறந்த தலைமகனை இழந்து விட்டாள்; தமிழால் அவர் ஏற்றம் பெற்றார். அவரால் தமிழ் ஏற்றம் பெற்றது.

ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், சிறந்த நுண்ணறிவும், பரந்த உள்-ளமும், மிக்க அடக்கமும், பெருந்தன்மையும் கொண்ட அவர் தமிழ் மக்களின் பேரன்பையும் பெருமதிப்பையும் பெருவாரியாகப் பெற்றிருந்-தார். சாதாரண ஆசிரியராக வாழ்வினைத் தொடங்கிப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக ஆகும் அளவுக்கு உழைப்பாலும், முயற்சியாலும் வளர்ந்தார். மறையாப் புகழை நிலை நிறுத்திவிட்டு டாக்டர் மு. வரதராசனார் தம் வாழ்வை முடித்து விட்டார். அவரது எதிர்-பாராத மறைவு நெஞ்சை உலுக்குகிற அளவுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது.

தமிழ்ப் பேரறிஞர் மு. வ. வரதராசனாரைப் பிரிந்து வருந்தும் குடும்பத்தினருக்கும் உற்ற நண்பர்களுக்கும் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் என்ற முறையிலும் தமிழகக் கல்வி அமைச்சர் என்ற முறை-யிலும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழர்—கலைஞர் – சான்றோர்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

1955 ஆம் ஆண்டு இடம் பச்சையப்பர் கல்லூரி. நான்காம் தமிழ் ஆனர்சு வகுப்பு. அறை எண் 2A. டாக்டர் மு.வ. அவர்கள்

'மொழி வரலாறு' பாடம் நடத்துகிறார்கள். சினமே கொள்ளாத மு.வ. அரிதில் சினங் கொள்கிறார். கண்கள் சிவந்து போகின்றன.

''அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ?
அன்றியும் ஐந்தெழுத் தால் ஒரு பாடைஎன்று
அறையவே நாணுவர் அறிவுடை யோரே''

என்ற இலக்கணக் கொத்துரை, பாயிரக் கூற்றினை எடுத்துச் சொல்லி, ''தமிழ் நாட்டு உணவை உண்டு வாழ்ந்து இவ்வாறு புலவர் மயங்கிக் கூறியிருக்கிறாரே'' என்று கடுமையாகக் குறிப்பிட்டார். அவருடைய அன்றைய ஆவேசப் பேச்சு மாணவர் தம் மொழிப் பற்றினுக்குத் தூண்டுதலாய் அமைந்தது.

எளிய சைவ உணவு, தூய வெள்ளை நிறக் கதராடை, இயற்கைக் காட்சிகளில் ஈடுபாடு கொண்டு ஊறித் திளைக்கும் உள்ளம்...

இவை மு.வ. விற்குச் சொந்தமானவை.
மு.வ. ஒரு நல்ல தமிழர்.

உணர்வுகளின் உந்தல்களால் கலை உருவாகின்றது. அவ்வுணர்வுகள் பண்பட்டு அமைய அமைய வாழ்விற்குத் துணை நிற்கும் தூய கலைப்படைப்புகள் தோற்றங்கொள்கின்றன. எண்பதிற்கும் மேற்பட்ட நூல்கள். அவை பல்வேறு பொருள் பற்றியன; பல்வேறு திறம் நோக்கின; வளம் வாய்ந்தன; அவர் தொடாத துறை ஒன்றுமில்லை; தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை' என்று கூறுமாறு நாவல் தொடங்கி நாடகம் வரை, சிறுவர் நூல் தொடங்கிச் சிறுகதைகள் வரை, இலக்கிய ஆராய்ச்சி தொடங்கி, இலக்கிய வரலாறு வரை, பைந்தமிழ் சான்ற மொழி நூல் தொடங்கிப் பயணக் கட்டுரை நூலாம் 'யான் கண்ட இலங்கை' வரையில், 'தங்கைக்கு' தொடங்கி 'அன்னைக்கு' வரையில் அவர் எழுதாத துறை நூல்கள் இல்லை. அவர் கைவண்ணம் அவர் எழுதிய முத்து முத்தான அழகுக் கையெழுத்தில் மட்டுமின்றி, அவ்வெழுத்துக்கள் வழியமைந்த சிந்தனைக்கு விருந்தாகும் சீரிய வாழ்வியற் கருத்துக்கள் வரையில் அமைந்திருந்தன.

தம்படைப்புகளால், மு.வ. ஒரு தேர்ந்த கலைஞர் என்ற காட்சியினை வழங்குகின்றார்.

அவர் தலைமையின்கீழ், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பொன் விழாவில் பேசும் பேற்றினை ஒரு ஞான்று யான் பெற்றேன்.

அதுபோது 'சான்ருண்மைக்கு ஆழி என விளங்கும் தலைவர் அவர்களே' என விளித்து என் சொற்பொழிவினைத் தொடங்கினேன். நல்ல தமிழ் இதயங்கள் சொற்பொழிவின் முடிவில் வந்து என்னைப் பாராட்டின. 'சான்ருேர்' என்று அவர் குறிப்பிடப்படுவது எல்லா அடைமொழிகளிலும் முற்றிலும் பொருந்துவதாகும் என்பதனை நடுக்கற்ற நல்லுள்ளம் வாய்ந்த நல்லோர் பலர் ஒப்புவர்.

அவர் பின்பற்றி வழிபட்ட இலக்கியச் சான்ருேர் திருவள்ளுவரும் இளங்கோவடிகளும், சமயச் சான்ருேர் திருநாவுக்கரசரும் தாயுமானவரும் ஆவர். அரசியலில் காந்தியண்ணலையும், வாழ்க்கை நெறியில் இராமதீர்த்தரையும் பின்பற்றினர். வாழ்நாளின் இறுதி நாட்களில் கூடத் தாயுமானவர்பாடல்களையும், இராமதீர்த்தர் அறவுரைகளையும் படிக்கக் கேட்டு அமைதி பெற்ருர்.

திரு. வி. க. எனும் தமிழ்ச் சான்ருேரிடம் நேரில் நெருங்கிப் பழகிய பழக்கம், பின்னல் பல நூல்களைப் படித்துத் தெளிந்த போக்கால் கனித்து நிறைந்தது.

சான்ருேர் எனப் பிறர் போற்ற வாழ்ந்தார். எங்கள் ஒப்பற்ற வழிகாட்டி மு.வ. அவர்கள் ஒரு நல்ல தமிழர், விழுமிய கலைஞர்; தூய சான்ருேர்.

### நிலையான பணி

பேராசிரியர் க. வடிவேலாயுதம்

டாக்டர் மு.வ. 80க்கு மேற்பட்ட நூல்களை எழுதித் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடத்தைத் தேடிக்கொண்டவர். தமிழ்ப் பேரறிஞராகத் திகழ்ந்ததோடன்றிச் சிலந்த நாவலாசிரியராகவும் விளங்கியது தமிழகத்தில் ஒரு புதுமையாகும். தமிழுலகிலே தமிழ் நூல்களை எழுதி அதனல் பெரும் பொருளீட்டியவர் டாக்டர் மு.வ. ஒருவர்தாம் என்ருல் அதை உண்மையுணர்ந்தோர் யாரும் மறுக்கவியலாது.

### "ஏழை நாடு"

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

டாக்டர் மு. வ. தமிழகத்திலும், இந்தியாவிலும் மட்டுமல்லாமல், வெளி நாட்டுப் பேரறிஞர்களாலும் பாராட்டப்பெற்றவர். அதற்கு

அமெரிக்க இல்லியனுய்சுப் பல்கலைக்கழகம் அவருக்கு "இலக்கியப் பேரறிஞர்" எனப் பட்டம் வழங்கிப் பாராட்டி யிருப்பதேபோதிய சான்ருகும்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையையும், பழந்தமிழ்ப் புலவர்களிடத்தில் ஆழ்ந்த பற்றும், கொண்டவர். குறிப்பாகப் புலவர் புகழேந்தியிடத்தில் அவருக்கு ஒரு தனிப்பற்று உண்டு என்பதைத் தம் பெயரனுக்குப் "புகழேந்தி" எனப் பெயர் வைத்துப் புகழ் ஏந்திக்கொண்டமையால் அறியலாம்.

பகுத்தறிவுத் தந்தை பெரியார், விஞ்ஞானத் தந்தை ஜி.டி.நாயுடு, கலைந்தந்தை கருமுத்து, தமிழவேள் பி. டி. இராசன், தமிழ்க்கடல் ராய. சொ., திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், துணைவேந்தர் டாக்டர் மு. வ. என்று அடுத்தடுத்து ஏழு பேரறிஞர்களைத் தமிழகம் ஓர் ஆண்டுக்குள் இழந்து தவிக்கிறது. இது தமிழகத்தின் தீயூழ். இஃது இவ்வேழு துறைகளிலும் வேறு எழுவரைத் தேடி ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

டாக்டர் மு. வ. அவர்தம் எழுத்திலும் பேச்சிலும் குழந்தையுள்ளம் களி நடம்புரிவதைக் கற்பாரும் கேட்பாரும் நன்கு அறிவர். தம்மை மட்டுமின்றி எதிரில் உள்ளவர்களையும் குழந்தைகளாக்கி, அவர் தம் உளங்கொள உயர்ந்த பொருள்களையும் எளிய வகையில் உரைக்கும் அவர் திறனை மாணவரும் மற்றவரும் நன்கு அறிவர். அத்தகைய அவர்தம் எழுத்தாலும் பேச்சாலும் பயன்பெற்ரோர் எண்ணற்றவர்.

குழந்தை உள்ளத்தால் உலகை ஒத்து நோக்கி—உற்று உணர்ந்து நோக்கி, அறிவறிந்த உள்ளத்தால் உயர்ந்த உண்மையை அவ்வுலகுக்கு உணர்த்திய அந்நல்லவர் இன்று நம்மிடமில்லை. அவர் குடும்பமும் நாமும் கவல்கின்ரேம். எனினும் அவர் நம் உணர்வு அலைகளின் வழி எழுப்பும் ஓசை அவரோடு உற்றவர் செவிகளில் என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும். அவர் தம் சொற்களின் எதிரொலி தமிழ் உள்ளளவும் கேட்டுக் கொண்டிருக்கும். ஆம்! அவர்மறைந்தும் மறையாதவராக, இறந்தும் இறவாப்புகழ் கொண்டவராக என்றும், மக்கள் மனதில் — வாழ்வில் — வரலாற்றில் நிலைத்து வாழ்வார் என்பது உறுதி! வாழ்க, மு. வ.

## முயற்சியின் வடிவம்

பேராசிரியர் பா. வளன் அரசு.

சங்க இலக்கியச் செல்வங்களை எளிமையாகவும் தெளிவாகவும் எல்லோருக்கும் விருந்தாக வழங்கி வந்தார். ஏறத்தாழ எண்பது விழுமிய நூற்களைத் தமிழகத்திற்குத் தந்துள்ளார். ''நல்வாழ்வு'' என்னும் கட்டுரை நூலுள், ''கடவுளின் ஆட்சி பற்றிய உண்மையை உணர்ந்து அன்பைப் போற்றி வாழும் நெறியே கடவுள் நெறி ஆகும்''...எனவும், ''ஒவ்வொரு நாளும் கடவுள் வழிபாடு செய்தல் நன்மை பயக்கும்; உள்ளத்தை உயர்த்தும்; அமைதி நல்கும்'' எனவும் கட்டுரைத்துள்ளார்.

திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்கு உருபா பதினொன்றாயிரம் நன்கொடையாக, நல்கியதோடு, நான்கு புத்தக உரிமையினையும் வழங்கியுள்ளார்.

எளிமையும் இனிமையும் பொருந்திய முனைவர் மு.வ. முயற்சியின் வடிவம் ஆகவே மிளிர்ந்தார். அவர் போன்று தமிழுக்கு விழுமிய எழுத்தோவியங்களை வழங்கிட முயலுவோம்.

## நவீனங்களால் தமிழ் வளர்த்தவர்

திரு. மயிலை சீனி வேங்கடசாமி

மக்களிடையே நல்ல தமிழ்நடை பரவ வேண்டுமானால், நல்ல தமிழ் நடையில் நவீனங்களை (நாவல்களை) எழுதுவது சிறந்த முறை என்று அடிக்கடி நான் கருதுவது உண்டு. டாக்டர் மு. வ. அவர்கள் இந்தத் துறையில் சிறந்த தமிழ்ப் பணி செய்துள்ளார்கள். அவர்கள் எழுதிய நவீனங்கள் மாணவர்களிடையும் பொதுமக்கள் இடையும் நன்றாகப் பரவியுள்ளன. அவற்றைப் படிப்பவர் தம்மை யறியாமலே தமிழ் நடையையறிகிறார்கள். டாக்டர் மு.வ. அவர்கள் இந்த நல்ல தமிழ்ப்பணியைத் தம்முடைய நவீனங்கள் மூலமாகச் செய்துள்ளார்கள் என்பதை நான் எண்ணி மகிழ்வதுண்டு. நவீனம் எழுதித் தமிழ் வளர்த்த அவருடைய பணியை நல்ல தமிழ்ப் பணி என்று கருதுகிறேன்.

## சீர்மிகு தமிழர்

திரு. கோ. முத்துப்பிள்ளை.

டாக்டர் மு. வரதராசனுர் அவர்களை நான் பலமுறை சந்தித்து உரையாடியுள்ளேன். இளமையிலேயே பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த காரணத்தால், அவர் அனைவருக்கும் தெரிந்த ஒரு புலவராய் விளங்கினுர்.

தமிழ் வளர்ச்சி குறித்த பல்வேறு குழுக்களிலும் இடம் பெற்றிருந்தார். இத்தகைய குழுக் கூட்டங்களில் அவர் கலந்து கொள்ளும் முறையை நான் நன்கு கவனித்துள்ளேன். கலந்து ஆய்வதற்கென எடுத்துக்கொள்ளப்பட்ட பொருளைப் பற்றி மட்டும்தான் பேசுவார். பிற பொருத்தமில்லாத பேச்சுகளில் சிறிதும் ஈடுபடமாட்டார். பெரிய புலவராகத் திகழ்ந்த அவர் சின்னஞ்சிறு புலவர்களையும் மதித்து நடந்தார். தமிழன்பர், தமிழ்த்தொண்டர் யாராக இருந்தாலும் அவரிடம் அன்பு மொழி பேசுவார். டாக்டர் மு.வ. ஒரு நல்ல மனிதர்; சிறந்த புலவர்; சீர்மிகு தமிழர்.

## திறன்படைத்த துணைவேந்தர்

தமிழக ஆளுநர் கே. கே. ஷா

இன்றைய இளந் தலைமுறையினரோடு ஒத்துப்போவது மிகக் கடினமான செயல். இச் சூழ்நிலையில் மதுரைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தராயிருந்து மறைந்த டாக்டர் மு. வரதராசனுர் மிகுந்த திறன்படைத்த துணைவேந்தர்களுள் ஒருவராய்த் திகழ்ந்தார்.

மாணவர்களாலும் அறிஞர்களாலும் இக்காலத்தவராலும் பொது மக்களாலும் பாராட்டும் அன்பும் செலுத்தப்பெற்றவர்அவர். டாக்டர் மு. வரதராசனுர் புகழ்மிக்க அறிஞர். பெருவளர்ச்சியுடைய தமிழ் மொழியில் அவர் சிறந்த அறிஞர். அவர் எங்கெங்குச் சென்றாலும் அங்கங்குத் தம்முடைய தனிப் பண்பையும் பேரறிவையும் நிலைநாட்டி வந்தார். முழுவதும் நேர்மையானவர். சிறப்பான கூர்ந்த அறிவு படைத்தவர். எப்பொழுதும் ஒளிவீசும் புன்சிரிப்புடன் கூடியவர். அடக்கமும் பண்பும் ஒருங்கே இணைந்தவர். இந்த நாடும், குறிப்பாகத் தமிழ் நாடும் அவருடைய மறைவால் ஏழ்மையை யடைந்துவிட்டது.

செந்தமிழ்ச்செல்வி — நவம்பர் '74

# தமிழ்த் திங்கள்

கி. வா. ஜகந்நாதன்

தமிழ் நாட்டில் திங்கள் போல விளங்கிப் புகழ் பெற்றுத் தமிழ் இலக்கிய உலகுக்கு வளம் உண்டாக்கிய டாக்டர் மு. வரதராசனுர் இறைவனடி அடைந்த செய்தி தமிழ் மக்களையே உலுக்கிவிட்டது. தமிழ்த் தென்றலாகிய திரு. வி.க. விடம் இளமையிற் பழகி அவருடைய பண்புநலங்களைத் தம்முடையன ஆக்கிக் கொண்ட டாக்டர் மு. வ. தண்ணிலவு பொழியும் தமிழ்த் திங்களாகவே திகழ்ந்தார். தமிழ் அறிவில் சிறந்து யாவருக்கும் அன்பராய்ப் பண்பு நிறைந்தவராய் நின்ற அவருடைய முயற்சியும் உழைப்பும் மேதையும் மிகச் சிலருக்கே வாய்க்கும்.

பள்ளி ஆசிரியராக வாழ்வைத் தொடங்கிய அவர் கல்லூரிப் பேராசிரியராகவும், பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் வளர்ந்து, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகக் கனிந்து விளங்கினர். எந்த நிலையிலும் யாவரிடமும் பணிவும் பண்பும் உடையவராகவே இருந்தார். சங்க நூல்களில் ஆழ்ந்த புலமையும், திறனாய்வு, மொழி நூலறிவு ஆகிய துறைகளில் பேரறிவும் உடைய அவர் அந்தத் துறைகளில் பல நூல்களை இயற்றினர். அவற்றோடு வளர்ந்து வரும் புதிய தலைமுறைக்கு ஆக்கம் உண்டாக்கும் வகையில் பல நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியவற்றையும் எழுதினர். பழந்தமிழ்ப் புலவராகவும், புதுத் தமிழ்ப் படைப்பாளராகவும் ஒருங்கே காட்சி அளித்தார்.

அவருடைய பழந்தமிழ் ஆராய்ச்சி நூல்கள் தெளிவும் ஆழமும் உடையன. அவருடைய நாவல்கள் பண்பாட்டையும் எழுச்சியையும் ஊட்டும் தன்மையுடையன. அவரை முதுபெரும் புலவர்களும் பாராட்டினர்; இளைஞர்களும் போற்றினர்.

அவர் எழுத்திலும் பேச்சிலும் அமைதியும் மென்மையும் இருந்தன. அவர் வாழ்க்கையும் அத்தகையதே. யாரையும் புண்படுத்தாமல் இனியவராக வாழ்ந்தார்.

மு. வ, என்பது தமிழ்ப் புலவர்களின் உள்ளத்தில் உவகையையும், இளைஞர்கள் உள்ளத்தில் எழுச்சியையும் உண்டாக்கும் மந்திரச் சொல்லாக இருந்தது.

அந்தச் சொல்லின் பொருளை இழந்துவிட்டோம். தமிழ்த்தாயின் அருமந்த மகன் தனக்கு விருப்பமான தமிழைத் துறந்து சென்றுவிட்-டான். என்றாலும் மு. வ. நமக்குத் தந்துள்ள நூல்கள் அவருடைய புகழுடம்பை இங்கே நிலைபெறச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

— தமிழ்உறவு அக்டோபர் '75

### மு வ. மறைந்தார்

தமிழ் இலக்கிய வானில் தனிச்சுடர் வீசிய "மு. வ." என்ற நட்சத்திரம் உதிர்ந்து விட்டது!

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்ப் பயிருக்கு லயம் ஊட்டிய ஆறு வற்றிவிட்டது!

மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக — மாணவர்களுக்கு சிறந்த ஆசிரியராக திகழ்ந்த உயர்ந்த அறிஞர் மீளாத துயலில் ஆழ்ந்து விட்டார்.

"மு. வ." என்ற இரண்டு சொல்லுக்கு தனி மதிப்பும் மரியா-தையும் இருத்தது. அவர் உழைப்பால் உயர்ந்தவர். எழுத்தால் தமிழை உயர்த்தியவர்.

ஏடுகளில் இருந்த தமிழ் இலக்கியங்களை எளிய தமிழில் எழுதி எல்லோரையும் விரும்பிப் படிக்கச் செய்தவர் அவர்.

"நாவல்" கள் என்று சொல்லப்படும் நெடுங்கதைகளை தூய தமிழில் எழுத முடியும்; நல்ல கருத்துக்களை சொல்லவும் "நாவல்" களை பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று செய்து காட்டிய பேரறிஞர் அவர்.

மதுரை பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்த அவர் ஆற்றிய அரும்பணிதான், அளவிடத்தக்கதோ! மதுரை பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிப் பாடத் திட்டத்தைத் தொடங்கி, தமிழ்நாட்டுக்கே வழி-காட்டியவர் ஆயிற்றே, அவர்.

டாக்டர் மு. வ. வின் மறைவு தமிழுக்கு மாபெரும் இழப்பு ஆகும். அவரது குடும்பத்துக்கோ தாங்கமுடியாத துயர். தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் தாங்கமுடியாத துயரில் நாமும் பங்குகொள்ளுகிறோம்.

ராணிமுத்து — நவம்பர் '75

அடுத்தடுத்து வந்த துன்பவெள்ளம்

நாமெல்லாம் எண்ணிப்பார்க்காத அளவிற்குத் தமிழ் கூறு நல்லுலகம் நெஞ்சம் நெகிழும் வகையில் பெருஞ் சோதனைக்கு ஆளாகியுள்ளது. ஒவ்வொரு துறையிலும் தனக்கு ஒப்பாரும்மிக்காரும் இல்லை யென்று கூறும் அளவிற்கு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்துகாட்டிய உழைப்புச் செல்வர்கள், அருட்செல்வர்கள், இயற்கை எய்திவிட்டனர். தமிழ்க்கடல் ஐயா இராய. சொ. என்னும் ஈடிலா தமிழ்ப் பேரறத்தை என்று காண்போம். திருவாசகமணி பாலசுப்பிரமணியம் அவர்களின் புலமைப் பெரும் தறுகண்மையை எப்படிப் பெறுவோம். பெருங்கவிஞர் முருகேசபாகவதர், சிந்தனைச் செல்வர் அரு. இராமநாதன், நாடகக் கலைத் தந்தை நவாப் இராசமாணிக்கம், தமிழவேள் பி. டி. இராசன், வள்ளல் தியாகராச செட்டியார், சிறந்த எழுத்தாளர் தி. ஜ. ர., நாட்டியக் கலை வித்தகர் தண்டபாணிபிள்ளை, கலைத் துறைச்செல்வர் பந்தலு, போன்ற தமிழுக்கு அணிசேர்த்த தண்ணளியாளரை மறக்க முடியுமா ?

இப்படி வேதனைப் பெரு நெருப்பில் துடித்த நம்மர்க்கு மேலும் ஒரு இடி! வீழாத இடி வீழ்ந்ததே! கள்ளத்தால் தமிழை இகழ்ந்தவர் முன்னிலையில் 'தெள்ளியே நீரோடையாய்த், தமிழருவியாய் வாழ்ந்த, தமிழ்நலமே தன்னலம்' — என்றகொள்கைக் கோபுர விளக்காக ஒளிர்ந்த செந்நெறியாளரை, நன்னெறி நாயகத்தை தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வ. அவர்களை இழந்துவிட்டோம் என்று எழுதுவதற்கே கை கூசுகிறது. மனம் மருள்கிறது.

பெருந்தகையர் மு. வ. அவர்களின் அறுபதாம் ஆண்டு மணி விழாகக் கொண்டாட எண்ணியப்பொழுது. 'வேண்டாம்' என்று மறுத்தார். ஆகவே அந்த ஏற்பாட்டை செய்தவர்கள் நிறுத்தினர். ஆனல் 'தமிழ்ப்பணி' ஐயா அவர்களின் மணிவிழாமலராக அவ்வாண்டு வெளி வந்தது. திருமிகு மு. வ. அவர்கள் எழுதிய புத்-

தகங்களை எல்லாம் தொகுத்தும், அதன் உட்கிடக்கை அறிந்தும், மிகச் சிறப்பாக அதனைத் தயாரித்து அண்ணன் நூலகக் கலாநிதி திரு. அ. திருமலை முத்துசுவாமி அவர்கள் தமிழ்பணியில் வெளி-யிட்டார்கள். அக்கட்டுரையை இன்றும் பலர் இது போல் வந்ததில்லை என்று புகழ்கின்றனர். இவ்வாறு அப்பெரியார் வாழும் காலத்தில் பாராட்டித் தன் கடமையைச் செய்த தமிழ்ப்பணி இதழ், டாக்டர் மு.வ. அவர்களின் நினைவு மலராக வெளிவந்துள்ளது. ஒத்துழைத்த நண்பர்கெல்லாம் நன்றி. வாழ்க மு. வ. பெரும்புகழ்.

— தமிழ்ப்பணி - நவம்பர் '74

# கவிதைகள்

## மூவாத் தமிழ் மகன்

### புலவர் அரசு

காலனிங் கொன்றுங் கருதான்கொல்! கல்விநலஞ்
சீலமென் றென்றையுந் தேரான்கொல்;—ஓலமிட்டுச்
செந்த மிழன்னை திடுக்கிடநன் மாமகனை
இந்தநாள் கொண்டேகி னன்!

மூவாத் தமிழ்மகனை மு. வரத ராசனை
ஓவாத நற்றமிழ்த்தொண் டூற்றினை—ஆவா!
எனத்தமி ழன்னை யிரங்கியே ஏங்கல்
உனற்கெளிதோ இப்பிரிவிங் குற்று.

தமிழா சிரியரெலாஞ் சார்ந்தின் புறவே
அமிழ்தாய் விளங்கிய ஐயா!—தமிழ்மக்கள்
உள்ளத்—தொளியாய்நீ ஓங்குக பல்லூழி
தெள்ளத் தெளியச் சிறந்து.

## தகைமைக் கோயில்

### புலவர் அருணா பொன்னுச்சாமி

திணை : பொதுவியல் துறை : கையறு நிலை

மூவாத தமிழ்வேந்தே ! மொழிநூல் யாத்து
 மொழிநலத்தின் மேன்மைக்கே முகப்பாய் நின்றாய் !
சாவாத தமிழாலே சாவை வெல்ல
 சந்தனமாய்த் தெளிவுரையைக் குறளுக் கீந்தாய் !
காவாத வரலாற்றைக் காத்தல் வேண்டி
 கரைகண்ட சிந்தனையால் கணித்துத் தந்தாய் !
பூவாத நூலெல்லாம் துறைது றைக்கும்
 பூத்ததுவே நின்னறிவுப் பூங்கா தன்னில் ! (1)

புடம்போட்ட அறிவாற்றல் கொண்ட உன்னைப்
 படம்போட்டுப் பார்க்கின்றோம் பரித வித்தே!

தடம்போட்டாய் தமிழர்தம் வாழ்விற் காகத்
    தடம்புரண்டாய் ஐயகோ ! அல்ல லுற்றோம் !
அடலேறே ! முன்னேறத் துடித்தோர்க் கெல்லாம்
    அஞ்சலிலே பாடத்தை அமைத்துத் தந்தாய் !
வடவைத்தீ வந்ததுபோல் தமிழர் வாழ்வில்
    வந்ததுதான் உன்சாவு ! என்ன செய்வோம் ! (2)

தமிழ்த்தென்றல் மாணுக்கன் ! அண்ணு போல
    தமிழ்மணக்க வாழ்ந்திட்ட தகைமைக் கோயில் :
இமிழ்கடல்போல் நூலீந்த சுரங்கம் ; இந்நாள்
    இருளகற்ற வாய்த்திட்ட விளக்கு ; நூலோர்
அமிழ்தொத்த ஆய்வுக்கே அரணாய் நின்றோன் ;
    அடிச்சுவடாய் மறைமலையின் நடைக்க மைந்தோன்
உமியொத்த ஆராய்ச்சிக் குப்பையெல்லாம்
    ஓட்டிவைத்த புயற்காற்றே ! ஓய்ந்த தேனே ! (3)

### ஒரு பாலை ஒரு தமிழை இழந்து விட்டோம்!

சா. ஆ. அன்பானந்தன்

முப்பாலில் ஒரு பாலை எரித்தாற் போன்றும்
முத்தமிழின் ஒரு தமிழை இழந்தாற் போன்றும்
எப்பாலும் தமிழின்றேன் இன்பம் இல்லை
என்றியங்கு மு. வ. வைத் தோற்று விட்டோம்!
தப்பாமல் தமிழ்த்தொண்டு செய்த வள்ளல்
தமிழ்ப்பண்பு குறையாது வாழ்ந்த அண்ணல்
தப்பாமல் இருள்நீக்கும் தமிழ வேந்து
கருணைமுடி! கலைமுதல்வன்! டாக்டர் மு. வ.

தம்பிக்கு, தங்கைக்குத் தமிழைக் காக்கும்
காளைக்கும் தாயகமாய்த் தழைத்திருந்தான்!
அம்பிக்கும் அக்கைக்கும் அன்னை யர்க்கும்
அருள்வழங்கு சுரபிஎன நூற்கள் தந்தான்!

எம்பி வரும் புத்துணர்ச்சிக் கின்பம் ஊட்டும்
இலக்கியமாய் திருக்குறளாய் இயங்கி வந்தான்
நம்பிக்கைப் பேரொளியாம் டாக்டர் மு. வ.
நல்லவர்க்கெம் அஞ்சலிப்பூ சாற்றுவோமே!

தமிழ் நேசன். 13.10.74
(முதல் பக்கம்)

இரங்கற்பா

முரசொலி

இலக்கியத்து வானத்தே கற்ருேர் பல்லோர்
எண்ணிறந்த தாரகையாய் நின்ருர் ஆனல்
இலக்கியத்தை எல்லோரும் நெஞ்சில் போற்றி
இனிதையுறப் படிப்பதற்கே என்ன செய்தான்?
கலக்கமிலாச் செந்தமிழைக் கட்டிக் காத்துக்
கசடின்றி எந்நாளும் கற்றுப் போற்றக்
குலவிளக்காய் ஒளியிட்ட வரத ராச
குளிர்ந்ததோ உன்னுடலும் மூச்சு நீங்கி!

அலேகடலுக் கப்பாலும் தமிழின் மேன்மை
அலேபோல நீங்காது என்றும் ஓங்கக்
கலேஞானத் திறத்தாலும் காட்டு வெள்ளக்
களங்கமிலா நடையாலும் கன்னித் தாயின்
நிலேபுகழை மேன்மேலும் உயர்த்த நல்ல
நிலேநூல்கள் செய்வித்தாய் செல்வ உந்தன்
கலேயறிவைத் தன்னவையில் நித்தம் காணக்
காலனவன் கொண்டானே என்ன விந்தை

(தமிழ் முரசு 12.10.74.
முதல் பக்கம்)

## டாக்டர் மு. வ.

கிரி. நா- இராசேந்திரன்

செந்தமிழின் சுவைகண்டுத் தீந்தமிழில் காவியங்கள்
சித்தரித்த என்றன் தமிழன்
சிந்தையிலே தேன்சொட்டச் சின்னஞ்சிறு நடைதனிலே
விளையாண்ட என்றன் கலைஞன்
சுந்தரத் தமிழ்கொண்டுத் தூயவனின் கழல்பாடித்
தூய்மைபெற்ற என்றன் அறிஞன்
தொன்றுதொட்டப் பண்புதனில் துவங்கிட்ட வாழ்க்கையிலே
புகழ்கொண்ட என்றன் தலைவன்
நடைவண்டி, தங்கைக்கு, நல்லதொரு மணல்வீடு
நற்றமிழில் நெய்த அண்ணல்
நன்நெஞ்சம் பெற்றிங்கே நலந்திகழக் குறளுக்கு
நல்லுரையும் தந்த மன்னன்
விடையேறும் பெருமானின் செந்தமிழை உண்டுவாழ்ந்துப்
பெயர்பெற்ற உயர்ந்த மாந்தன்
விண்புகழ மண்தனிலே சிறந்தோராய் விளங்கிட்ட
மெய்த்தொண்டர் டாக்டர் மு. வ.

## நல்லவழி காட்டும் நமக்கு

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

முத்தமிழைக் காத்தளங்கள் மு. வரத ராசனார்
இத்தலத்திற் பெற்றபுகழ்க் (கு) ஈடிலையவ் — உத்தமர்தம்
கல்வியுயர் பண்புநலம் கண்ட நெறிமுறைகள்
நல்லவழி காட்டும் நமக்கு.

## மூவாத் தமிழ்

புலவர் இரா. இளங்குமரன்

மூவாத் தமிழென்பார்; மூவா மருந்தென்பார்;
மூவா அமிழ்தென்பார்; மூன்றன் உருவாக
''மூவா' இருக்கின்ருர் முட்டில்லை'' என்றிருக்க
'ஆவா! எனவார்க்க ஐயா நீர் சென்றீரே!

மூத்த தமிழ்மைந்தீர்! மூவா இளநலத்தீர்!
பூத்த மலரனையீர்! போற்றருஞ் சிந்தனையீர்!
சீர்த்த திறமெண்ணிச் செம்மாந்தேம்; கூற்றென்னும்
கூத்தன் அரவணைப்பில் கூடிப் படர்ந்தீரே!

நாடு மொழிப்பற்றும் நற்றமிழர் மேற்பற்றும்
கூடு புவிப்பற்றும் கொள்கைத் தனிப்பற்றும்
பீடு பெருக்கெய்தப் பெய்த பெருமுகிலே!
கோடு நிறைமதியே! கோமகனே சென்றீரே!

'மண்மாண் பொருளில்லை மாத்தமிழர் வாழ்வென்றே'
நுண்மாண் நுழைபுலத்து நூலறிந்த சான்றீரே!
எண்மாண் திறத்தாலே ஏற்றப் பொறுப்பேற்றீர்!
விண்மாண் விளக்காக வேட்கையொடு சென்றிரோ?

ஓங்கும் உழைப்பின் உயர்வுக்கோர் ஓவியத்தை
ஈங்கெழுத வேண்டுமெனில் ஈடில்லா நும்முருவே
தேரா தெதுவும் கருத்துரையாத்
    தெளிந்த சிந்தைத் திருவாளன்
சீரார் வரத ராசனெனும்
    சேயை யிழந்தாள் செந்தமிழ்த்தாய்.
தாயிற் சிறந்த பேரன்பன்
    தமிழர்க் குழைத்த தாளாளன்
வாயிற் செயலின் மனத்தினுல்
    மக்கள் வாழ்வை வளர்த்திடலே

கோயிற் பணியென் றுளங் கொண்ட
　　கோமான் கூடற் கலைக்கழகம்
தாயிற் புரந்த துணைவேந்தன்
　　பிரிவால் தமிழர் கலங்குகின்றார்.
கலக்கந் தவிரக் கலைபயிற்றுங்
　　கல்வி நலஞ்சால் பேராசான்
பலர்க்கும் நிழல்தந் துயிரளிக்கும்
　　பயன்சேர் மரம்போற் பரவிநின்றான்
நிலைக்கும் பணியால் தமிழ்வளர்த்த
　　நெடியேன் மு.வ. தனையிழந்தே
அலக்க ணுற்றேம் அன்புருவாய்
　　இறைவ னடிக்கீழ் அவனமர்ந்தான்.

குருத்தெனவே நூல் தந்த குரிசில்
கோவை. இளஞ்சேரன்

எறும்பொன்று பனிமலையில் ஏறி
　　ஏறுக நின்றதெனச் சொல்வேன்;
அரும்பொன்று மலராகிச் சிரித்தே
　　அனைத்துலகும் மணம்பரப்பிற் றென்பேன்;
விரும்பென்று நமக்கெல்லாந் தமிழை
　　விரைந்தளித்துத் தம்பணியை நிரைத்துத்
திரும்பென்றே திரும்பிவிட்ட மேதை
　　திகழ் மு. வ. திருவாழ்வைக் கண்டே.
கடவுளுக்குத் தமிழாமோ என்பார்;
　　கல்விமொழி தமிழாகா தென்பார்;
முடவுளத்தர் தமிழாட்சிக் கொவ்வார்,
　　முற்றிலுமே தமிழால்மேம் பட்டார்,
மடவுளத்தர் தமையெண்ணி நொந்த
　　மறத்தமிழர் மனத்தளர்ச்சி நீக்கித்

திடவுளுத்த ராய்நிமிர்த்த மேதை ;
திகைப்புளத்த ராக்கியெமை நீத்தார்.
கருத்துடைய கட்டுரைகள் வேம்பாய்க்
கருதிவந்த காளையர்க்குக் கன்னி
ஒருத்தியென நூலணைக்கச் செய்தார்,
உலவாத ஒண்டமிழ்க்குப் புதிய
குருத்தெனவே நூல்தழைக்கத் தந்தார்
குரிசிலவர் பிரிவென்னும் நூலை
வருத்தெனவே பொருத்திவைத்துச் சென்ருர்,
வண்டமிழை வளர்த்தவரைப் பணிவோம்.

## மரணத்தை வென்றவர்

— இளந்துறவி

ஆடிற்ரே மரணத்தின் அதர்ம ஆட்டம்
அடங்கிற்ரே அதிலே ஓர் ஞான தீபம்
கூடிற்ரே கூற்றத்தின் கொடிய ஆட்சி
குலைந்ததுவோ அதிலேஓர் இனிய நாதம்
பாடிற்ரே அவலங்கள் ? நல்லார் நெஞ்சில்
படர்ந்ததுவோ சோகங்கள் ? துன்பம் சூழ்ந்து
மூடிற்ரே புதைகுழியை ; செந்தீ மூள
முடிந்ததுவோ தமிழறிஞன் ஒருவன் வாழ்க்கை ?

தேன்தமிழே உயிரென்ற எழுத்து வேந்தன்
திருமேனி எரிதழலில் வீழ்ந்த தாமோ ?
திசையாவும் தமிழ் ஒளியை பரப்பி நின்ற
திருவிளக்கு முதுமையினல் அணைந்த தாமோ ?
வான்புகழும் வள்ளுவத்தின் கருத்தை எங்கும்
வழங்கியநல் பெருமகனை மரண பீடம்
வரவேற்று மகிழ்வெய்த; அவன் சிறப்பை
வரலாற்றுச் சுவடிகளும் பதித்த தாமோ ?

தமிழாய்ந்த பெரியோனை மரணம் என்னும்
தன்பிடியில் கொண்டதொரு சரித முண்டோ ?
தகைசான்ற பேரறிஞன் சிறப்பு யாவும் ?
தழைக்காத இடமுண்டோ ? மறைந்த துண்டோ ?
தமிழிருக்கும் காலம் வரை சரித்தி ரங்கள்
தன்பதிப்பை காட்டும் வரை உலகை ஆளும்
தமிழறிஞன் பேராளன் வரத ராசன்
தனிப்பெயரும் வாழுமென சாற்று இங்கே !

அருந்தமிழை வாழ்த்துகின்ற அறிஞர் போற்றும்
அடியார்க்கு அடியராய் அவர் இருந்து
ஆற்றிய நல் பெருந் தொண்டை எளிய வாழ்வை
அவனிக்கு எடுத்துரைக்கும் வழியில் நின்று
பெருமையினை நீபாடி தமிழைக் காக்கும்
பெரும்பணியை முதல் நாடி தமிழர் நாட்டின்
உரிமையினை பெறுதற்கு சூளுரைத்து
ஒன்றுபடு நெஞ்சேநீ எழுந்தே நிற்பாய் !

நீட்டோலை
20. 10. 74

## சுடர்விளக்கு அணைந்தது

புலவர் திரு. கோ. இளையபெருமாள்

வேலமெனும் சிற்றூரில் மேலவனும் முனிசாமி
சீலமிகு சேயாகித் திகழ் மு.வ. செழும்புலவ !
காலனுனை வேண்டியதால் கடன்முடித்துச் சென்றனையே
ஓலமிடும் எம்போல்வார் உறுதுயரைக் காணுயே.

திருக்குறளின் பொருளுணரத் தெளிவுரையை வழங்கினையே
உருக்கமுடன் பலநூல்கள் ஓயாமல் எழுதினையே
பெருக்கத்துப் பணிவோடு பிறர்மதிக்க வாழ்ந்தனையே
தருக்கறியா நின்பிரிவு தாங்குவதற் கெளிதாமோ.

வண்புலவர் தமிழாய்ந்த மதுரைப்பல் கலைக்கழகக்
கண்போலத் துணைவேந்தர் கடமையினைப் புரிந்தனையே
பண்குலவு தமிழ்ச்சான்றோய் பழகுதமி ழமுதருந்தி
விண்குலவு புலவர்க்கு விருந்தாகி மறைந்தனையே.

அன்புமிகு தமிழ்த்தாயை அரியணையில் வைத்தாளும்
இன்பமிகு தமிழ்நாட்டில் ஏற்றமுற வாழ்ந்தனையே
என்புருகி நின்பிரிவால் எல்லோரும் ஏங்கியழத்
துன்பமொரு முடிவின்றித் தொடர்ந்தெங்கு படர்ந்தனையே.

பேர்வரத ராசனெனப் பேசுபுகழ் பெருந்தகையே
ஆர்வமிகு உழைத்தமையால் அரும்பதவி பெற்றுயர்ந்தாய்
சோர்வின்றி ஒளிவீசும் சுடர்விளக்கே அணைந்தனையே
யார்வந்து நின்னிடத்தை இனிநிரப்ப வல்லாரே

## நாமமே போற்றி...!

வித்துவான் ஆ. கணபதி

''உலகெலாம் போற்ற வாழ்ந்தவர்! சொந்த
உழைப்பினால் உயர்ந்தவர்! மக்கள்
உயர்நெறி செல்ல வழியினைக் காட்டும்
உயர்ந்தநன் னூல்களைச் செய்து

பலவகை யானும் இலக்கியம் வளரப்
பற்பல தொண்டுகள் செய்து
படைத்தவை எல்லாம் நிரந்தர மாகப்
பைந்தமிழ் அன்னையின் நெற்றித்

திலகமாய்ச் சூட்டி மகிழ்ந்தவர்! டாக்டர்!
திருப்பத் தூர்முனி சாமிச்
செல்வரின் மகனார்! டாக்டர் மு. வ. வென்
றேதினம் நாமெலாம் தொழுதோம்!

நலம்குறைந் தியற்கை எய்திய தெண்ணி
நாள்தொறும் அழுகிறோம்! அன்னார்
நாமமே போற்றிப் புகழினை வணங்கி
நாள்தொறும் தொழுகிறோம்! வாழி!''

## இமை நனையும் புருவம் உயரும்

பேராசிரியர் தி.வ. காந்திமதிநாதன்

தெள்ளுதமிழ்த் திறனாய்வுக் கட்டு ரைகள்
தெவிட்டாமல் இனிக்கின்ற வகையில் நெஞ்சை
அள்ளுகின்ற நெடுங்கதைகள் அறிஞர் நல்லார்
அரியவர லாறுரைக்கும் ஓவி யங்கள்
வெள்ளமென நன்னூல்கள் நாட கங்கள்
விரிவான கடிதங்கள் தூய நல்ல
உள்ளங்கள் உருவாக அறிவு ரைகள்
ஒப்புரைக்க முடியாத இலக்கி யத்தில்.
துறைதோறும் துறைதோறும் தொண்டு செய்தீர்
தூயதமிழ்ப் பாவேந்தர் சொன்ன வாறே
திறமான புலமையெனில் வேற்று நாட்டார்
சீரறிந்து அதைவணங்க வேண்டு மென்றே
இறவாத புகழீட்டி இங்கு வாழ்ந்த
இனியதமிழ்ப் பாரதியார் அன்று சொன்னார்
மறவாது நீரிந்நாள் ''இல்லி னாய்சில்''
மலையனைய புகழ்பெற்று வந்து நின்றீர்
ஆங்கெழுத லாமென்னும் மாண்புடையீர்! என்றென்றும்
நீங்கா நிலைபெற்றீர்! நேயத் தமிழ்போன்றே!

## மன்னு புகழ் டாக்டர்

திருமுருக கிருபானந்தவாரியார்

மன்னுபுகழ் டாக்டர் வரதரா சப்புனிதன்
பன்னு தமிழ்த்திறனைப் பண்ணவர்க்குப்—பொன்னுலகில்
கற்பிக்கச் சென்றனன்கொல்? கந்தனரு ளாலன்மா
தற்பரனாய் வாழ்க தழைத்து.

## புகழில் வாழ்வார்!

மா. பா. குருசாமி.

உள்ளத்தில் ஒளிபெற்ற சான்றோர்; எண்ணம்
உயரத்தில் நின்றிடவே வாழ்ந்த நல்லார்
வெள்ளம்போல் கற்பனையைப் பெற்ற தாலே
விளக்காக வழிகாட்டும் கதைகள் தந்தார்,
தெள்ளுதமிழ் தானாகத் திகழ்ந்தார்; வாழ்வில்
திறம்வளர்த்துச் சிறப்புக்கள் சேர்த்துக் கொண்டார்.
அள்ளத்தான் குறையாத புகழைப் பெற்றார்
அறிஞரவர் மு. வ. வை அறியார் யாரே!

தமிழ்மரபு தனைக்காத்த தமிழர்; எங்கும்
தமிழ்மணக்க எழுத்தாலே தொண்டு செய்தார்
அமிழ்தாகும் அன்பதனை நெறியாய்க் கொண்டார்
அறிவதனை வளர்க்கின்ற பணியும் செய்தார்
தமிழ்நாட்டார் நெஞ்சத்தில் அறத்தை நட்டார்
தனிவாழ்வும் பொதுவாழ்வும் சிறக்க வாழ்ந்தார்;
தமிழ்உள்ள நாள்வரைக்கும் பெயரும் வாழ
தன்னுழைப்பைத் தந்தவரோ மறைந்து விட்டார்!

இலக்கியத்தை எல்லோரும் கற்கும் வண்ணம்
எளிமையுடன் சாரத்தை வடித்துத் தந்தார்,
இலக்கோடு மலர்வாழ வாழ்க்கை நோக்கை
இதுவென்றே இனங்கண்டு சொன்னார் மு. வ.
கலக்கத்தைப் போக்குகின்ற கதைகள் சொல்லி
காலத்தை வென்றாரை மறக்க மாட்டோம்
இலக்கியமாய் நிற்கின்ற மு. வ. புகழ்தான்
என்றென்றும் வாழ்ந்திருக்கும்! நினைப்போம் என்றும்!

## தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

கவிஞர் த. கோவேந்தன்.

இயற்கையோ டொன்றி இயற்கை நெறியில்
இயற்கையை வாழ்வோ டிணைத்தே—இயற்கை
இயற்கை எனத்தமிழ் ஏமுறத் துய்த்தோன்
இயற்கை அடைதலும் ஏது?

குருதியைச் சிந்தாமல் கொள்கைப் பிடிப்பைக்
குருதிக்குள் ஏற்றிக் குறைவில்— திரு. வி. க.
செந்தமிழர் நீழலாய்ச் சீர்திருத்தம் செய்தவன்
செந்தழலில் வேவானோ செப்பு.

புலவர்க் கியல்பாம் பொருமை இலாமல்
புலவரில் பூங்குன்றன் போன்றோன் — தலைமை
தமிழ்கடலாய் இந்தத் தலைமுறைக்கு வந்தோன்
நமைப்பிரிந்தான் என்பதா நன்று?

அமைதி பொறுமை அடக்கம் அறிவின்
சுமைதிகழும் நெற்றி, சுடர்கொள்—இமைவிழிகள்
மின்னல் ஒளிமூரல் மெல்லிய இன்மொழியான்
நென்னல் இறப்புண்ணு மோ?

தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை என்று
தமிழுக்குத் தொண்டுசெய்த சாவில் — தமிழ்ப்புலவன்
பாவேந்தன் சொன்னபினும் மு. வ. பெருந்தமிழன்
சாவேந்திச் செல்வதுண் டா?

## இதயமே! நீ ஏன் அழுகின்றாய்?

குருவிக்கரம்பை சண்முகம்

சாவென்னும் கொடிய வயலுக்கு அப்பால்
காவியச் சிங்கம் கண்மூடி விட்டதால்,

குடிசை வாசலின் கோலங்கள் கூடக்
குமுறிக் குமுறிக் கண்ணீர் கொட்டின!
வசந்தப் பறவை வந்த வழி சென்றதால்
சமுதாயக் கிளைகள் பூக்கண்ணீர் சொரிந்தன!
ஒளிதந்த விளக்கு மரணத்தைத் தழுவியதால்
எங்கள் பகலெல்லாம் இரவாகி விட்டன!
கரும்பாய் இருந்தஉடல் காலனெனும் கொடியவனுல்
அரும்பாக்கக் காட்டில் அடையத்தான் பெற்றதுவே!
ஏன்அழு கின்ருய் இதயமே! அவரும்தான்
போன இடத்திற்குப் போகவழி இருக்கையிலே!

### தமிழ்த்தேர் வலவன்

அருட்டிரு சாந்தலிங்க இராமசாமியடிகள்

அறநெறி தழைக்க அருந்தமிழ்ப் பணியைத்
திறம்பட வாற்றிய செம்மல் நல்லோர்
உளமெலாம் மகிழ உயர்பண் பொழுக்கம்
வளமைசேர் புலமை வரதரா சப்பேர்
சான்ருேன் தமிழ்வளந் தழைத்திடத் தழைத்து
ஆன்ருேர் போற்றும் அறிவும் நுட்பமும்
பொதுளிய தமிழியல் பொலியப் பலநூல்
முதுவரும் இளையரும் முறைமுறை பயில,
புதுவது புனைந்த பொய்யா நாவின்
இலக்கிய அறிஞன் இளைஞர்தம் தலைவன்
கலக்கமில் சிந்தையன் கனிந்த சொல்லாளன்
பழகற் கினிய பான்மையன் தமிழ்த்தேர்
அழகும் அடக்கமும் அமைந்தவன் மு.வ.

எனவுல குரைக்க எம்மிடைக் கலந்து
மனமொரு மித்து வண்டமிழ்ப் பணியில்
வாழ்வினை நடத்திய வாய்மையன் மறைந்தனன்
ஊழ்வலி யிதுவோ? உயர்தமிழ்த் தாய்க்கு
நற்பணி புரிந்து நாவுக் கரசர்
சொற்றிடும் கருத்தறி தூய சிந்தனை
வலவன் தமிழ்த்தேர் வலவன் மறைந்தனன்
உலகு போற்ற உயர்பணி பலசெய்
வரத ராசன் நல்லுயிர்
வாழ்க இறைவன் மலரடி மன்னியே.

### சாவால் உனக்குச் சாவுண்டோ ?

கவியோகி சுத்தானந்த பாரதியார்

நாவால் இனிய நாவலனே
நட்புக் கினிய பெட்புடையாய்
பாவால் எனது பாட்டுவந்தாய்
பண்பா டுடைய நண்பரசே
சாவல் உனக்குச் சாவுண்டோ ?
தமிழ்போல் வாழ்வாய் தமிழாலே
மூவாப் புகழின் வாழ்வோனே
மு. வ. என்னும் முத்தமிழா !

சொல்லும் பொருளும் சொக்கிடவே
சுடரும் கதைகள் பலகோத்தாய்
அல்லும் பகலும் காலத்தின்
அருமை யறிந்தே அளவுவந்தாய்
வெல்லும் மொழியை வீண்டுரைத்தாய்
வெற்றிக் கொடியை நாட்டிவிட்டாய்
சொல்லும் கூற்றும் குழைந்திடவே
† கோலைச் செலுத்திக் கலையாண்டாய்

---

† எழுதுகோல்

புலமை தன்னைச் சொல்வேனே
    புலமைச் செருக்கே யில்லாத
நலமார் எளிமை நவில்வேனே!
    நாவின் இனிமை நயப்பேனே
கலையார் தொண்டே கண்ணான
    காலச் செட்டைப் புகழ்வேனே
நிலையார் அமைதி நின்றீந்த
    நின்னூற் பணியை நினைவேனே

வேறு

தெளிவுரை கோலித் திருக்குறளைத்
    திகழச் செய்தாய் நாடெங்கும்
ஒளிபெறு கதைகள் பலகோத்தே
    உலகியல் ஓவியம் தீட்டினையே!
எளிய நடையுடை யெய்தியவா
    ஏற்றங் கொள்அறி வாற்றலுளாய்
வளியற வுடலம் வீழ்ந்தாலும்
    வண்ணத் தமிழால் வாழ்வாயே!

## இதயத்தில் ஒளி வீசும் உதய வான் வெள்ளி மு.வ.

கவி அரசு எஸ்.டி. சுந்தரம்

அண்ணலே என்று நாங்கள் எவரை யாம் அழைப்போம் அய்ய!
தண்ணிலாப் போலிருந்து தமிழ் ஒளிகாட்டி இன்று
விண்ணிலா ஆகி எம்மை வெறுமையில் ஆழ்த்தி விட்டுக்
கண்ணிலாச் சேய்போல் எம்மைக் கதறவே செய்யலாமா?
புண்ணியம் என்ற சொல்லின் புதுப்பொருள் நீயே அன்றோ
கண்ணியம் என்ற பண்பின் காட்சியும் நீயே அன்றோ!
மண்ணியல் போதும்என்று மாண்புறு ஒளியாய் ஆகி
விண்ணியல் நாடிச்சென்றாய் வழியைநாம் அறியோம்என்றோ?
எமக்கும் அந்த வழிதெரியும் வருவதற்கும் விதிதெரியும்
சுமக்கும் இவ்வுலகப் போரைச் சுமையென எறிந்துவிட்டு
தமக்குமுன் ஆங்கே சென்று தமிழ்ச்சுவை அமுதமாந்த
உமக்குமுன் இருக்கும் எங்கள் உள்ளமும் உயிரும் ஆங்கே!

உழைப்பதற்கு மட்டுந்தானு உத்தமா நீ பிறந்தாய்?
பிழைப்பதற்குரிய டாக்டர் மருத்துவம் ஏன் மறுத்தாய்?
தழைப்பதற்கென்று ஞாலம் தயவுடன் பேசும் ஞானப்
பொழிப்புரையாக வாழ்ந்த புனிதனே எங்கே சென்ருய்?
தாய்எனும் தெய்வத்தைப்போல் தமிழ்என வாழ்ந்தாய் அய்ய!
ஆய்வுரை ஆயிரங்கள் அவைதர மறந்தாயில்லை
ஓய்வினை எடுக்கமட்டும் உறுதியாய் மறந்தாய் அந்த
ஓய்வதே வந்து உந்தன் உடலினைப் பறித்ததய்யா!
இதயத்தின் பசியைத் தீர்க்கும் ஈடிலா அறத்தின் தாயே!
உதயத்தின் ஒளி வெள்ளம்போல், ஓங்கிடும் புகழைப்போல
பதவிகள் உன்னைச்சுற்றிப் பவனிகள் வந்தபோதும்,
பதமிகு எளிமை ஒன்றே பெருந்தனம் என்று காத்தாய்!
உத்தமன் காந்தியண்ணல் உன்னிலே தமிழாய் வந்தான்
சத்தியத் திரு வி. க. வின் சமரச உருவம் கொண்டாய்!
நித்திய வாழ்வில் எந்த நேரமும் உண்மை காத்தாய்!
தத்துவ மறைகளுக்கு நித்திய உருவம் தந்தாய்!
கொஞ்சும் நின் தெய்வப்பண்பை குலவிடும் அன்பின் பாங்கை
எஞ்சிய வாழ்வில் நாங்கள் எவரிடம் பெறுவோமய்யா!
துஞ்சிடும் வாழ்வென்ருலும் துணிவிலை உனைமறக்க
நெஞ்சுக்கும் தெரியவில்லை-நினைவதும் மாறவில்லை!
இதயத்தின் இதயமேஎம் இன்பமே மு.வ. என்ற
உதயத்தின் வெள்ளியாக உணர்விலே வாழ்க அய்யா!

### உன் பார்வை எங்கள் மீது

டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்

தமிழுக்காக
எல்லாரும் உலகைச் சுற்றி வந்தார்கள்.
நாங்கள் எல்லாம் உன்னைச் சுற்றி வந்தோம்.
ஏனென்ருல்
தமிழ் உன்னைச் சுற்றியது—அதனுல்
நாங்கள் உன்னைச் சுற்றி வந்தோம்.
எத்தனையோ பேர்
தமிழில் கதை பண்ணிஞர்கள்.
நீ
கதை எழுதிஞய்!

கதை என்ற பெயரில் அவர்கள் எல்லாம் தமிழைக்
கொலையாக்கி விலையாக்கிக் கொண்டிருந்த போது
நீதான் தமிழைக் கலையாக்கினாய்.
அவர்கள் தமிழுக்கு வில்லர்களாக இருந்த வேளையில்
நீ கதாநாயகனாக இருந்தாய்!
எல்லாக் கதையிலும் வில்லர்கள் விடைபெறுவார்கள்.
எங்கள் கதையிலோ 'நாயகன்' விடைபெற்றுவிட்டாயே

பலர் எழுதத் தவித்துக் கொண்டிருந்தபோது நீ
ஒருத்தன்தான் எழுதிக் குவித்தாய்!

எழுத்தாளர் சிலர் தம் பேனாவில் கிறுக்கிக் கொண்டிருந்த தருணத்தில்— நீ ஒருவன் எழுத்தாலே தமிழ் வீதியில் மாக்கோலங்களைப் போட்டாயே!

அறவாழி—உன் நெடுங்கதைகளில்
வரும்போது இல்லாத கற்பனை என்றார்கள்
அப்போது நான் சொன்னேன்!
அது இருக்கின்ற உண்மை என்றேன்.
மூவா என்றேன்; ஆம்; மூவா 'மு. வ'. என்றேன்.
ஆனால்
இப்போது கற்பனையில் கலந்துவிட்ட கற்பனையாகி விட்டாயே!
சாவா 'மூவா' என்றிருந்தேன். எழுத்தில்
சாவா 'மூவா' ஆகிவிட்டாய்.

எத்தனையோ பேர் 'வெளிச்சம் போட்டு' மின் விளக்கில் பாவங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

நீ அகல் விளக்கில் 'புண்ணியங்'களைச் செய்து கொண்டிருந்தாய்.

பணம் நிரம்ப உடையவர்கள் குணங்களின் ஏழைகளாய் இருந்தார்கள்!

அதிகாரம் பெற்றவர்கள் அன்பில் ஏழைகளாக இருந்தார்கள்.

உன் எழுத்துகளில் எளிமை
பேச்சில் எளிமை
உடையில் எளிமை
வாழ்வில் எளிமை

எளிமைகளுக்கு எல்லாம் நீதான் பணக்காரனாக இருந்தாய்! ஆமாம்
அவர்கள் எல்லாம் பகலிலே'இருட்டு விளக்கு' ஏற்றினார்கள். நீ
மட்டுந்தான் இருட்டிலே ஒளி விளக்கை ஏற்றினாய்!
எங்களை 'இரட்சிக்க' வந்த எழுத்துத் தேவனே!

உன் பார்வை எங்கள் மீது பட்டபோது
படுகின்றபோது—எங்கள் பாவங்கள்
போய்விடும்,
எங்கள் மீது அன்பு காட்ட வந்த அன்னையே!
'நலமா' என்று அன்பு தளும்ப எங்களை
விசாரிக்கும்போது—விசாரித்த போது
தாயில்லையே என்று எங்களுக் கிருந்த தவிப்பு பறந்துவிடும்.
ஆமாம்!

You are the mother for the motherless
You are the lover for the loveless.

மங்கையையும் அல்லியையும் செல்வநாயகத்தையும் வேலய்யாவையும் படைத்து, பூவுலகில் பரவவிட்ட எழுத்துலகப் பிரம்மாவே!

எப்போதும்
பிரம்மா படைத்த உயிர்கள் தாம் சாகும்!
ஆனல்
இங்கே உயிர்களை உலவவிட்டு, பிரம்மா—
போன தெங்கே?
'மங்கை' யைப் பார்க்கவா 'சந்திரனை'ச் சந்திக்கவா?
உன் நீண்ட கைகள் முப்பதாயிரம்
பக்கங்களை எழுதிய போது,
அந்தப் பக்கங்களில் உள்ள எழுத்துக்களை
எல்லாம் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கி
அந்த எழுத்து மலைமேல் இருக்கும்
திருப்பரங்குன்றத்தானை—திருமலைத்தேவனை
நாங்கள் 'ஞானதரிசனம்' செய்து கொண்டிருந்தோம்
நீ உயர, உயர
நீ மேலும் மேலும் உயருகிருய் என்று
நினைத்துக் கொண்டிருந்தோம்!
நீ மேலே மேலே போகும்போது
நாங்கள் மகிழ்ந்து கொண்டிருந்தோம்!
ஆனல்
எங்களை விட்டுவிட்டு 'மேலேயே'
போய்விடுவாய் என்று நினைக்கவில்லையே!
ஆமாம்!
நாங்கள் அதிருஷ்டக் கட்டைகள்! துர்பாக்கியசாலிகள்!

## செந்தமிழ் வளர்த்த செம்மல்!

பேராசிரியர் சிவ. சிவராமலிங்கம்.

செந்தமிழ் வளர்த்த செம்மல் சிறப்பெலாம் அமைந்த சீலர்
சிந்தனைக் கொருவர் என்றே தினம்தினம் யாரும் போற்ற
இந்தமா நிலத்தார் உய்ய இனிதெனக் கருத்துப் பேழை
தந்தவர் டாக்டர் அந்தோ சடுதியில் மறைந்தார் என்னே!

தவஞ்செயும் மாந்தர் பல்லோர் வாழ்ந்திடும் தமிழ்நா டென்பார்
அவம்வளர் பல்லோர் வாழ அறம்வளர்த் திட்ட டாக்டர்
கவலைகள் வருத்தி வாட்டக் கடிதினில் பிரிந்து போனார்
இவணுளார்க் கெல்லாம் என்ன இயம்பியாம் தேற்றல் செய்வாம்!

சித்திரப் பாவை யாகித் தேனினைச் சுவைத்தல் போன்று
அத்தனை பேரும் அன்னார் வகுப்பினில் பாடங் கேட்போம்
சத்துளக் கருத்துச் செல்வம் சார்ந்தவர்க் கீந்த வள்ளல்
இத்தரை வாழ்வை நீத்தார் என்றனர் என்ன செய்வோம்?

## ஓங்கு குன்றம்

பேராசிரியர் ஆ. சிவலிங்கனார்

என்றுமுள தென்தமிழ் இயம்பியிசை கொண்டு
நன்றுபுரி மு. வரத ராசனெனும் ஓங்கு
குன்றம்நிலை குன்றவுயிர் கொண்டகொடுங் கூற்றம்
என்றுதன தின்னுயிர்விட் டேங்குறுமோ ஐயோ.

## கல்வியை வளர்த்த சீராளன்

பேராசிரியர் அ. சீனிவாச ராகவன்

செந்தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வன்,
திறன்மிகு புலவரில் முதல்வன்,
பைந்தமிழ்ப் பனுவல் மலர்ந்திடும் தெய்வப்
பசுமையார் கற்பகம் ஆனான்;

எந்தையாய் மதுரைப் பல்கலைக் கழகம்
    ஏந்திய எந்துணை வேந்தன்,
சிந்தையிற் செயலில் தூயவன், பண்புச்
    செம்மலாய் விளங்கிய சான்றோன்.

புலமையால் உலகைக் கவர்ந்தவன், சென்னை
    பரிவுடன் வழங்கிய டாக்டர்
விலையிலாப் பட்டம் விஞ்சிய அவன்தன்
    மேன்மையால் உயர்ந்தது. எங்கோ
பலகலை பயிற்றும் அமெரிக்க இலினாஸ்
    பார்த்திவன் தகுதியைத் தேறி
அலகிலாப் பெருமைப் பட்டமொன் றளித்துப்
    பெருமையை வரித்தது தனக்கே.

இலக்கிய நலன்கள் இடையறு தெவர்க்கும்
    ஈந்திடும் பெருங்கணக் காயன்,
கலக்கமி லாத ஆய்வுரை நிகழ்த்திக்
    கல்வியை வளர்த்த சீராளன்,
அலக்கணை ஏற்றுத் தன்முயற் சியினால்
    அடர்தடை வென்றமெய் வீரன்,
விலக்கிட ஒண்ணா அறத்தினைத் தேர்ந்து
    விளக்கிய வாழ்க்கையன், சீலன்.

என்னதான் எதிர்ப்பு வரினும் அப்போதும்
    இன்முகம் கோணிடா இயல்பால்,
தன்னையே பிறர்க்குத் தந்திடும் உயர்ந்த
    தகைமையால், தொல்புகழ்த் தமிழாம்
அன்னையின் பணியே பணியென உழைத்த
    அருமையால், இவன் தமிழ்த் தெய்வம்
முன்னிய வரமாய் வரந்தரு வரத
    ராசனாய் விளங்கினன், மேலோன்.

இன்றிவன் தன்னை இழந்தனள் தமிழ்த்தாய்,
    என்றிவன் இணையினி வருவான்
என்றவள் நொந்து கலங்கிடு நிலையில்
    ஏதுசெய் தவள்துயர் தீர்ப்போம்?

நன்றென வாழ்க்கை முழுதினும் அவனே
நாட்டிய நெறியினில் நடந்து
சென்றிடில் அதுவே யாம்செயும் நன்றி
செந்தமிழ் மகனவன் வென்றி.

செந்தமிழ்ச் செல்வி—டிசம்பர் '74

## கலைமேதை மு.வ.

மின்னூர் சீனிவாசன்

கரித்துண்டே போதும் என்று
கலைதந்த வள்ளல்! நெஞ்சில்
வரித்தது தமிழே என்ற
வாழ்வுக்கோர் சான்றும்! அன்பு
சிரித்திடும் உதடு பூத்த
சிந்தனை முகமாம்! அன்னார்
விரித்திடும் விளக்க மெல்லாம்
வீழாது நிற்கும் என்றும்!

ஓவியம் முதலாய் மேலை
உயரறிவாளர் நூலும்
மேவியே அறிந்த மேதை
மென்மையில் பூங்காற்றனார்!
தேவரின் குறளுக் கீந்த
தெளிவுரை வென்று நின்று
யாவரும் வணங்க வைத்த
இணையிலா உழைப்பே போற்றி!

பெண்மையை மதிக்கும் மாண்பு,
பேருல கெல்லாம் ஈசன்
உண்மையாய் இயற்கை யாகி
உளன்என்று நம்பும் வாழ்வு,
கண்ணிகர் தமிழின் ஆக்கம்
கருதிய மேன்மை யெல்லாம்
வண்மையாய் வரத ராசர்
வடிவினில் கண்டோ மையா!

தயிர்க்குடம் தன்னை நோக்கித்
　　தகாச்சிறு பையன் கல்லை,
செயலறி யாமல் எய்த
　　சிறுமைபோல் மு.வ. என்னும்
உயிர்க்குடம் தமிழ் நிறைந்தே
　　உறைகுடம் இலக்காய் வந்த
மயல்நிறை கால னுக்கே
　　மதியில்லை என்ப துண்மை!

### டாக்டர் மு. வ. மீது இரங்கற்பா

வி. ஜி. சீனிவாசன்

சந்த மிகுசெந் தமிழ்தழைக்கத் தொண்டுசெய்த
சுந்தரனே! தூயகதர் தோயுமெழி — லுந்துலங்கும்
வண்ணமிவண் வாழ்ந்த வரதரா சப்புலவ!
தண்ணளியை ஏன்மறந்தாய் தான்?

நல்ல அகல்விளக்கால் நாட்டார் மனவிருளும்
செல்லவழி காட்டிய செந்தமிழ்ச் — சொல்லழகா!
சாந்திதரு காந்திநெறி சாற்று வரோதயனே!
வேந்தேயேன் வீய்ந்தாய்? விளம்பு!

நாட்டில் உயர்பரிசு நல்லவகல் விளக்குக்குப்
பாட்டில் உயர்புலவர் பார்த்தளிக்க — நாட்டமுடன்
பெற்ற வரதப் பெருமானைப் பூவுலகுள்
என்றைக்குக் காண்போம், இனி?

நாடுந் தமிழரசு நல்ல பரிசதனைக்
கூடும் படிநூல்கள் கோதறவே — நீடுலகோர்க்கு
ஈந்த பெருமானே! ஈடில் வரதனெனும்
ஏந்தலுன் பேர்வழி இங்கு!

மண்ணுடர் போற்றும் வரதரா சப்பெயரோய்!
விண்ணுடு போக விரும்பியது — பண்ணரும்
செந்தமிழ் நல்லமுதைத் தேவர்களும் தாமுணரத்
தந்தருள வேண்டுமென்றே தான்!

மன்னு மலையலற வாய்ந்த மகவலற
இன்னும் பலரலற இன்றமிழ்க் — கன்னியழப்
பூதலத்தைத் தான்மறந்து போதல் வரதவென்
நாதவுனக் கேற்றமோ? நன்கு!

வண்ணத் திருவள் ளுவர்வாழ்க்கை இன்னமுதை
மண்ணுலகோர் காண மகிழ்ந்தளித்த — அண்ணலெனச்
செப்பு வரதச் செழுந்தமிழ்க் காவலனே!
இப்பொழுதெங் குற்ருய்? இயம்பு!

தெய்வமாகிய மு.வ. வுக்கு வாழ்த்து

புலவர் செங்கைப் பொதுவன்.

எளியவுடை தரித்துவந்த இன்முகத்து நெடியோராய்
அளியுடைய நன்மனத்தோ டறிவடக்கம் சால்மலையாய்
தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்காத நிலைக்களனாய் நின்றுதமிழ் தந்தவராய்
மற்றையோர் கருத்துக்கு மதிப்பளிக்கும் மாண்பினராய்
கற்றவர்க்கு மு. வ. தான் கனிந்திருந்தார் வாழியவே.

காலம் பொன்னாய்க் கருதியவர்
கடமை கண்ணாய் ஆற்றியவர்
பாலைத் தவிரப் பருகா தார்
பண்பைத் தவிரப் பேணுதார்
கோலத் தமிழை எழுதியவர்
குறிக்கோள் வாழ்வு நடத்தியவர்
ஏழைக் கறிவால் உயர்த்தியவர்
எண்ணத் தெய்வ மாகியவர்.

தெய்வமாய் நிற்கின்ற செம்மலர் மு. வ. வை
உய்வா மெனவாழ் உலகத்தார் எல்லேமும்
மெய்வாய்எண் ணுல்வாழ்த்து வோம்.

## நேரெழுத்து ஓவியத்தை என்று காண்போம்

### கவிஞர் செவ்வியன்

முத்தமிழை முக்கனியின் பிழிவு மாக்கி
முறையறிந்து முப்பாலில் தேனை ஊற்றி
இத்தரையில் உழலுந்தமிழ் மக்கட் கூட்டம்
இதயங்கள் வளமையுற்று வாழ்வ தற்கே
நித்தநித்தம் புதுமைதரும் நிலைக்கும் நூல்கள்
நீபடைத்து தமிழர்படை தெளிவு கொள்ளும்
சித்துபல தமிழ்மொழியில் புரிந்த வீரா
சினந்தெங்கே போயொளிந்தாய் எம்மைவிட்டு
குறுந்தொகையும் நற்றிணையும் குறளும்; போற்றும்
கடைச்சங்கம் பெற்றெடுத்த பிறவும்; நெஞ்சில்
உறைகின்ற மூவர்தமிழ் அனைத்து மிங்கே
உனதாக்கி எமக்களித்த உயர்வுக் குன்றே!
அன்பொன்றே உளம் நிறைத்து; அருளும் ஏற்றி
தேன்பிழிவில் பாலாக கலந்து நல்ல
பண்பொன்றே படைத்தளித்து பாரில் நாளும்
பகுத்தறிவை ஊட்டியநீ எங்கு சென்றாய்
கார்வண்ணத் திருமேனி கனிவு உள்ளம்
கடுகளவும் சினங்காணா நகைத்த முகம்
நேர்கொண்ட நெறிப்பார்வை நித்தம் நித்தம்
நன்னெறியை நாட்டிற்கு மொழியும் வாய்ச்சொல்
தமிழ்த்தென்றல் திரு. வி. க. அடியைப் போற்றி
தமிழ்முழக்கம் செய்ததிரு டாக்டர் மு. வ
தமிழன்னை துடிக்கின்றாள் எங்கு சென்றாய்
தமிழ்மகனும் துணையின்றி ஏங்கு கின்றான்
ஆல்விழுதாய் அவர் சொற்கள் நிலைத்து இந்த
அவனியதை சீர்செய்த பெருமை யென்னே!
நீள்விரல்கள் நெளியுமிடம் அழகு சொட்டும்
நேரெழுத்து ஓவியத்தை என்று காண்போம்
உன்தமிழைச் சுவைப்பதற்குத் தேவர் நாடு
துடித்துன்னை அழைத்ததங்கா சென்று விட்டாய்
வன்கொடிய சொர்க்கமதை அழித்து; உன்னை
அழைத்து வர தமிழ்க்குடிகள் துணிந்து விட்டோம்.

## இதயத்தில் வீழ்ந்த இடி

நெல்லை ந. சொக்கலிங்கம்.

என்னருமைத் தமிழ்நாட்டின் ஏற்றங் கண்ட
எமனுக்குப் பொறுமைதான் மிகவும் உண்டோ?
பன்னரிய பலகலையும் கற்று வல்ல
பாங்குடைய அறிவாற்றல் மிகவும் கொண்ட
வன்மையுடை மு.வ. வைப் பிரித்து விட்டான்!
வஞ்சத்தால் கவர்ந்தவனே! எங்கள் நெஞ்சின்
துன்பந்தான் உனக்கெங்கே தெரியும்? உன்னால்
துயருற்றோர் பலருண்டு சொல்லி விட்டேன்!

கண்ணில்லை உனக்குத்தான்; தமிழர் நாட்டின்
கருத்தூற்றாய் உலவிவந்த மு.வ. வைத்தான்
எண்ணமின்றிப் பிரித்திட்டாய் இரக்க மின்றி!
ஏனிந்தக் கல்நெஞ்சம் உனக்கு? கூறாய்!
பண்ணமைந்த பைந்தமிழ்க்கோர் ஒளிவி ளக்காய்ப்
பலகாலும் விளங்கிவந்த புதுஞா யிற்றைக்
கண்ணிமைக்கும் பொழுதினிலே பிரித்து விட்டாய்!
கனிவில்லா நெஞ்சந்தான் உந்தன் நெஞ்சம்!

படிப்படியாய்ப் பணிகளிலே உயர்ந்து வந்து
பாரிலுள்ள உழைப்பாளர்க் கெடுத்துக் காட்டாய்ப்
படிப்பினிலே உயர்ந்தவரைப் பண்பால் யாத்துப்
பண்பாளர் எனத்திகழ்ந்த எங்கள் உள்ளப்
பிடிப்பினிலே நல்லிடத்தைப் பிடித்துக் கொண்ட
பெரும்புலமைப் பெட்டகத்தை ஏன்பி ரித்தாய்?
இடியெனவே இத்துயரச் செய்தி எங்கள்
இதயத்தில் வீழ்ந்ததுநீ அறிய மாட்டாய்.

## மலர்விழி மூடியதேன்

ப. சோமசுந்தரம்.

ஏழிசையும் உந்தன்
எழுத்தினில் நின்றிலங்க

ஆழிசூழ் இவ்வுலகில்
அருந்தமிழ்த் தொண்டாற்றி
விழியன்பு தான்கொண்ட
வேந்தே! எமைமறந்து
விழிமூடித் துயின்றனையோ
வேதனையில் எமையாழ்த்தி!

வள்ளலார் கண்டநெறி
வாழ்வினில் • கடைப்பிடித்து
எள்ளளவும் சோர்விலா
துழைத்த துணைவேந்தே!
பல்கலைக் கழகமதைப்
பெருந்துயரில் ஆழ்த்திநீ
தொல்லுலகு சென்றனையோ
தமிழன்னை கண்கலங்க!

''கள்ளோ காவியமோ?''
காவலனே உன்பேச்சு!
நல்லதோர் "அகல்விளக்கு''
நின்வாழ்வு எங்களுக்கு
உள்ளமதில் "கயமை''க்கு
இடந்தாராப் பெருமகனே!
முள்ளிலெமைத் தள்ளிவிட்டு
"மலர்விழி" மூடியதேன்.

தமிழ் உறவு—அக். '74.

## மு. வ. வைப் பிரிந்தோமே நாம்

செந்தமிழ்த் திருவாட்டி சௌந்தரா கைலாசம்

அயர்ந்திடல் சிறிது மின்றி
அருந்தமிழ் மொழிமென் மேலும்
உயர்ந்திடல் கருதி நாளும்
உழைத்தவர் மு. வ. சென்று

மறைந்தத னாலே நாட்டு
மக்களின் நெஞ்சி லெல்லாம்
நிறைந்திடும் துயரம் கண்ணில்
நீரெனப் பெருகிற் றின்று!

கோலெடுத் தெழுதி நல்ல
சிந்தனைக் குவிய லென்ன
நூலெடுத் துலகம் உய்ய
நுண்ணறி வாலே தந்து
பாரெடுத் துருகிப் போற்றும்
பாராட்டு மொழிச்செல் வத்தை
யாரெடுத் திருப்பார் எங்கள்
அருமை மு. வ. வைப் போலே!

திறமைக்குப் பஞ்ச மில்லாச்
செந்தமி ழறிஞர் கொல்லும்
வறுமைக்குத் தப்பி இங்கே
வாழ்ந்திடும் கலையைக் கற்றுப்
பொறுமைக்குப் பொறுமை பேணி
பொழுதெலாம் தமிழைப் பேசிப்
பெருமைக்கு ஆளாய் விட்ட
மு. வ. வைப் பிரிந்தோமே நாம்!

இருளிலே கவலைக் காட்டில்
இருப்பவர் நெஞ்சில் நூலின்
அருளினால் ஒளியுண் டாக்கி
அதன்பய னாகத் தம்மைப்
பொருளிலே மிகுந்து வாழும்
புலவராய் ஆக்கிக் கொண்ட
ஒருவரை இழந்து வாடும்
உலகத்தைத் தேற்றுவார் யார்?

## சாவே உனக்கும் ஒரு சாவு வந்து நேராதா ?

புலவர் தணிகை உலகநாதன்

இனியதமிழ்ப் பேச்சில் எழுத்தில் புதிய
தனிநடையைக் காட்டித் தமிழ்வளர்த்தப் பேரரசான் ;
தமிழே உருவெடுத்துத் தானிங்கு வந்தான்
அமுத மழைபொழியும் அன்பான மு. வ. வை
எங்கும் தமிழுணர்வே ஏற்றம் பெறச்செய்த
தங்கத் தலைமகனைத் தண்ணமுதச் சொற்கோவை,
வஞ்சகச் சாவே ! நீ வந்து பிரித்துவிட்டாய்
நெஞ்சம் மிகக்கலங்கி நிற்கின்றார் எந்தமிழர்.
நடந்த வனமழிக்கும் நாசக் குரங்கதுபோல்
செந்தமிழ்ச் சோலையிலே சீரார் மலர்க்கொடியைப்
பற்றி அறுத்திட்டாய் பைந்தமிழர் செல்வத்தைச்
சற்றும் இறக்கமின்றித் தான்கவர்ந்து சென்றாயே ;
கண்கள் குளமாய்க் கதிகலங்கி நிற்கின்றோம் ;
வண்ணத் தமிழ்க்குலத்தின் வாழ்வைப் பறிகொடுத்தோம்.
அறிஞர், தலைவர், அரும்புலவர் என்றே
சிறந்தோர் பலரையும்நீ தின்றாயே ; இன்னும்உன்
பாழும் வயிற்றின் பசியடங்க வில்லையோ ;
சூழும் துயரைத் தொடர்ந்து நடத்துகின்றாய்,
மெல்லியபூங் காற்றாய், முளிர்ந்த பெருமகனை,
நல்லோர் உளம்ஆண்ட நாயகனை மு. வ. வை
பாவலனை — நாவலனை — பற்றிநீ சென்றாயே ;
சாவே ! உனக்குமொரு சாவுவந்து நேராதோ ?

## நின் முயற்சி இயம்பவற்றோ

மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்.

நாமகளும் திருமகளும் பலநாட்கள்
ஒருங்கிருந்து நாடி நாடி
நாமிருவர் இணைந்திருக்கும் நல்லிடந்தான்
இதுவாகும் என்றே எண்ணிப்

பாமணக்கும் திருநாவன் மு.வ. வின்
இல்லத்தில் இருக்கக் கண்டு
ஏமாப்பார் திருமாலும் அயனுமெனின்
நின்முயற்சி இயம்ப வற்ருே!

நெஞ்சில்வலி யார்மட்டும் நினையாத
உன்பாலே பழியைத் தீர்க்க
நெஞ்சுவலி வந்ததுவோ! நேராக
மருந்துமுதல் பகையை மூட்டி
நைஞ்சுருகச் செய்யாதார்; நனிநல்லர்;
எனத்துணிந்து நயந்த தாலோ
மைஞ்சரெலாம் மருத்துவர்கள் ஆயிருந்தும்
மயக்கிநினை மடித்த தாலோ!

நின்னுடைய பேராசான் திருவிக,
நெஞ்சத்தைத் திறந்து காட்டித்
துன்பத்தை வரவேற்கும் துயநெறி
வகுத்திட்ட தூயோன் காந்தி
மன்பதைகள் உயவேண்டி வழிவகுத்த
வள்ளுவனர் முதலா உள்ளார்
இன்பத்து நிலைபெற்ருர் என்றெண்ணி
இங்கிருந்து ஏகி ஞயோ!

## தமிழ்த் தென்றல்

கவிஞர் ப. தண்டபாணி

(அறுசீர் விருத்தம்)

மூவா மருந்தாம் இலக்கியத்தை
மு.வ. நற் றமிழில் நமக்களித்தார்
தேவா மிர்தம் அதற்கீடோ?
தென்றல் வீசும் நடையழகே!
நாவாற் புகழ நமக்கிருந்த
நல்ல புலவர் மறைந்தனரே!
சாவால் அவரைப் பிரிந்து விட்டோம்
சாவே உன்னைச் சாகடிப்போம்!

## ''காலனுமை அழைத்த தேனோ?''

புலவர் க. சு. தமிழ்ப்பிரியன்

அலைகடலில் அமுதிருக்கும் என்று சொல்வர்
அதையாரும் இதுகாறு மறிந்த தில்லை
கலையாழும் இசையமுதும் காட்டு மென்பர்
கதையன்றி அதையாருங் கண்டதில்லை
விலைமதிக்க முடியாத அமுத மெல்லாம்
வரதராச! உம்பேச்சில் விளையக் கண்டேன்
தலைமைசால் உமதெழுத்துந் தந்து வக்கும்
தமிழான அமுதம்போ லமுத முண்டோ?

பச்சையப்பன் கல்லூரிப் படிக ளெல்லாம்
பைந்தமிழ்ப்பே ராசானுய்ப் பார்க்கு மும்மை
இச்சையுடன் உமைநாடி வருவோ ரெல்லாம்
இனியமொழி எளியகாட்சி இனிது காண்பர்
பிச்சையென என்போன்ருேர் பேசு முன்னே
பெறும்பொருளைக் கொடுப்பதிலே வள்ள லானீர்
அச்சிற்ற வண்டியென எம்மை விட்டு
அகமற்ற காலனுமை அழைத்த தேனோ?

## மங்காத புகழுக்கோர் மு. வ.

க.த. திருநாவுக்கரசு

பாரதியை நினைப்பூட்டும் பார்வையினன்
பழகுதற் கினிய பண்பாளன்
ஆர்வமிகு தமிழர்க்கு அன்னையாவான்
அன்புடனே அனைவரையும ணைத்துச்செல்வான்
நேர்மைமிகு அறநெறியைப் போற்றி
நற்றமிழின் இன்பமிகு நயந்தன்னைப்
பாரெங்கும் படித்தவர்க்கும் பாமரர்க்கும்
பரிவோடு விருந்து வைத்தான்

செந்தமிழைப் பயின்றமையால் தலைமைபெற்றான்
　　சீரார்ந்த தமிழிற்குச் சிறப்பைத்
தந்தான்; தமிழ்வாழத் தானும் வாழ்ந்தான்;
　　தயங்காமல் புதுவழியில், தமிழின்
மந்தநிலைமாற் றியதை மாண்பு புறச்செய்தான்
　　மங்காத புகழுக்கோர் மு. வ. ஆனான்
எந்தநிலை வந்தாலும் இனித்தமிழை
　　யாருமழித் திடவியலா தெனப்புகன்றான்

நின்புலமைத் திறங்கண்டு மகிழ்ந்துபோற்றி
　　நிலைத்தபுகழ் இலினாய்சுபல் கலைக்கழகம்தானே
முன்வந்து மூதறிஞரெனும் பட்டமதை
　　முறியெழுதித் தந்தன்றோ? மேலோங்கும்
அன்புடனே, நம்மாய்வு நிறுவனத்தை
　　அணைத்துலகும் போற்றச் செய்வீரென
எண்ணிச்செருக் குற்றவெங்க ளெண்ணமதில்
　　இன்றிடியேறு விழுந்த தன்றோ?

ஆண்டுகள் அறுபதைத்தான் கடந்தான்
　　அதற்குள் நம்மைப் பிரிந்தான்
மாண்டநல் திரு. வி. க. மறை மலையைத்தேடி
　　மீளாத பயணத்தைத் கொடங்கிவிட்டான்
வேண்டிய தமிழுணர்வை இனிநமக்கு
　　ஊட்டுபவர் யார்? ஊழிக்காலம்
தாண்டியநல் தமிழைத்தணி யாக்காதலொடு
　　தழைத்தோங் கச்செய்பவர் யார்?

## எழுத்தில் நீ வாழ்ந்திருப்பாய்

புலவர் கல்லை ஆ. துரை

இரண்டுவரி குறளைப் போல
　　இதயத்தைத் தட்டித் தட்டி
திரண்டபெரும் அன்பைக் கொட்டித்
　　தனியிடம் பெற்றி ருந்த

இரண்டெழுத்து வேந்தே! நாளும்
இன்கதை தந்த ஊற்றே!
இருண்டிருந்த எழுத்தி ருட்டை
இல்லையெனச் செய்த ஐயா!

எழுத்தினல் எண்ணற்ரேரை
எழுப்பினய்! அதனல் இந்த
எழுத்துள கால மெல்லாம்
எழுத்தில்நீ வாழ்ந்தி ருப்பாய்!
அழுத்தமாய்ச் சொல்வேன், ஆமாம்,
அற்புத மான உன்றன்
எழுத்துத்தான் என்னைக் கூட
எழுதிடச் செய்த தென்பேன்!

### அமிழ்தான தமிழுக்கு ஏற்றம் தந்தார்

புலவர் அ. நக்கீரன்

தமிழ்நாட்டி லேபிறந்தும் தமிழ்வி டுத்துத்
தரங்கெட்ட எழுத்தாளர் பல்லோர் நூலில்
உமியன்ன பிறசொற்கள் உலவ விட்டே
உயிரன்ன தமிழ்கெடுத்தே உயர்ச்சி பெற்ருர்
துமியெழுந்து மத்தடியால் துள்ளு தற்போல்
சுரணைகெட்டவ் வெழுத்தாள ரிடையே யின்று
தமியனுளேன் தமிழாள என்றே மு. வ.
தலைநிமிர்ந்து எழத்தமிழ்த்தாய் மகிழ்ச்சி கொண்டாள்

அகல்விளக் கேந்திரித் துண்டெ டுத்து
அந்தநாள் தமிழ்வரலா ருக்கித் தந்து
அகத்தினிலே குறட்டையொலி கேட்ட பாவை
அல்லிசெந் தாமரைமண் குடிசை கட்டி
அகிலாவைக் கொண்டுமணல் வீட்டின் கண்ணே
அழகொழுகு கண்ணகிமா தவியாள் பெற்ற
மகவுக்கு ஓவத்தின் செய்தி போல
மலர்விழிக்கு மைதீட்டும் பெண்மை வாழ்க !

குழந்தைக்கு நடைவண்டி தந்து சுட்டிக்
குருவிப்போர் காட்டிமொழிப் பற்று மூட்டி
பழிபாவம் கயமையோடு அகலும் வண்ணம்
பச்சையப்பர் பள்ளியிலே கல்வி கற்க
விழிப்புடனே கி. பி. ஈராயிரத்தில்
விடுதலையா என்போர்க்கு நாட்டுப் பற்று
விழுப்பமுடன் ஊட்டிட்ட காந்தி அண்ணல்
வேறுபல நூல்களெல்லாம் மு. வ. தந்தார்.

தமிழ்நாட்டில் தமிழெழுதி நிதிகு வித்தார்
தகுதிமிக்க மு. வ. வே றெவரோ சொல்வீர்
அமிழ்தான தமிழுக்கு ஏற்றந் தந்தார்
அதனாலே அவருமிக உயர்ந்தா ரன்றே
இமியேனும் சோம்பியவர் இருந்த தில்லை
ஏனையர்க்கு வழிகாட்டி யாகி நின்றார்
இமிழ்கடல்சூ ழுலகினிலே யாரும் ஏங்க
இந்நிலம்விட் டேகியுயர் வானம் புக்கார்.

## நெருப்பு நினைவுகள்

[மா. நவநீதகிருட்டிணன்,]

நீலக் கடல்வற்றி நிலவெடிப்பாய்ப் பிளந்ததுபோல்
ஓலப் பேரிடிகள் ஒருநூறு விழுந்ததுபோல்
கோலத் தமிழ்க்குயிலார் குரல்ஒடுங்கி நடுங்கிநிற்பச்
சீலத் தமிழ்ச்செல்வர் திருமு. வ. கலங்கவைத்தார்
மலையொன்று சாய்ந்திங்கு மண்குவிய லாகிடுமோ
சிலைபோலக் கிடக்கின்றான் சிந்தனையின் முதற்குழந்தை
வானத்து மேகத்தை வளர்நெருப்பில் வாட்டுவரோ
கானத்துக் குயில்ஐயோ! கழுத்தொடித்துத் திருகுவரோ?
அஞ்சுகத்தின் சிறகை அனலெரிய விடலாமோ?
கஞ்சமல ரிதழைக் கனலிடையே இடலாமோ
கோபுரங்கள் இங்கிருக்கக் குலவுபுரு சென்றதெங்கே?
நூபுரங்கள் இங்கிருக்க நுன்பரல்தான் போனதெங்கே?

கூடுடைந்து சிதைந்திருக்கக் குஞ்சொன்று சென்றதெங்கே?
நீடுமணல் மூச்செரிய நீர்வெள்ளம் போனதெங்கே?

வெளிவானம் இங்கிருக்க வெண்ணிலவு சென்றதெங்கே?
ஒளியின்றி விளக்கிருக்க ஒருசுடர்தான் போனதெங்கே?

மின்னல் பெற்றது அவன் சிரிப்பை
மீன்கள் பெற்றது விழி ஒளியைக்
கன்னல் பெற்றது அவன் தமிழை
கதிரொளி பெற்றன சிந்தனையைச்
செந்நெல் பெற்றது அவன் பணிவைச்
சிற்றெறும் புற்றது சுறுசுறுப்பைத்
தண்மணல் பெற்றது அவனுரையைத்
தளிர்கள் பெற்றன அவன்மென்மை

### மண்பதைத் தமிழர் நெஞ்சில் வல்லிடி வீழ்ந்த தின்று

(பரணன்)

அன்பினல் அறிவால் எம்மோர்
அகத்துறை நினைவே கல்விப்
பண்பினல் முதிந்து நின்ற
பழத்தரு வனைய மேலோய்!
தன்பணி முடிந்ததென்ரு
தலையினைச் சாய்த்துக் கொண்டாய்!
பண்பதைத் தமிழர் நெஞ்சினை
வல்லிடி வீழ்ந்த தையா!

முயற்சியால் ஏற்றம் கண்ட
முனைவனிங் குன்போல் யாரோ!
பயிற்சியால் எழுத்தை ஆளும்
படிப்பினைத் தந்த சீரே!

அயற்சியில் பொது நாட்டுக்
களித்தமெய் நூல்க ளெல்லாம்
வயற்கதி ராக நின்று
வாழ்வினைப் பேணி நிற்கும்!

மாணவத் தலைமு றைக்கு
வாய்த்தவன் உன்போல் இல்லை.
பேணியெம் தமிழைக் காக்கப்
பிறப்பெடுத் தாருமில்லை
தானெனும் தருக்கும் உன்னைத்
தாக்கிய தில்லை! மு. வ.
பேரளவு சாவு றென்றால்
பொறுப்பது உள்ளமில்லை!

கரித்துண்டு நூலைப் போலக்
காலங்கள் வென்று நிற்பாய்
அரிக்கின்ற துயர்வி லக்கி
அகல் விளக்காய் வாழ்வாய்
சிறக்கவே கலைநூல் செய்த
செம்மலுன் வழியில் நூல்கள்
பெருக்கிடும் நலத்தால் உன்றன்
பெயரினை நினைந்தி ருப்போம்!

**'உளந்தேற்றி உரைப்பதற்கோ ஒருவற் காணோம்'**

புலவர் ஆ. பழனி

இரண்டடியான் மூவுலகும்
இருள்தீர நடந்தானின்
மு.வ. என்னும்

இரண்டெழுத்தாற் செந்தமிழர்
எண்ணமெலாம் நடந்தவனே!
எங்கள் கோவே!

இரண்டெழுத்தாற் செந்தமிழர்
எண்ணமெலாம் நடந்தநீ
இன்றி யாங்கள்

புரண்டழுது துடிப்பதெலாம்
போற்ருதே நடந்ததெனப்
புகல்வாய் ஐயா!

பண்திறந்து விட்டதெனப்
பழந்தமிழின் சுவைத்தேனைப்
பாய்ச்சிப் பாய்ச்சிக்

கண்திறந்து விட்டனையே!
கலக்கமெலாம் ஒழித்தனையே!
கனிசெய் தாயே!

கண்திறந்து விட்டநினைக்
காணுவதற் கிமைக்கதவம்
திறந்த காலை

மண்திறந்து படுத்தனையே!
மதிகலங்க வைத்தனையே
மயங்கு மாறே.

கறவையினை இழந்தவனக்
கட்டுதுறை காணு தொறும்
கலங்கு மாபோல்

நிறைகுடமே! நீஎழுதி
நிறைத்துள்ள நூல்காணின்
நெஞ்சம் மாய்வேம்!

நிறைகுடமே! நின்னூலின்
நிரைகண்டு நெஞ்சுணங்க
நேருங் காலை

## இது முறையோ?

சு. பாலச்சந்திரன்

### பல்லவி

எத்திசைச் சென்ருய்—எமைப் பிரிந்து
முத்தமிழ் மலரே மு.வ. எங்கள்
உத்தமத் தலேவா ஓங்குபுகழ்ச் செல்வா (எத்திசை)

### அநுபல்லவி

தாயினேப் பிரிந்த சேய் போலே
தமிழர் தம் நெஞ்சம் தடுமாற (எத்திசை)

### சரணம்

எண்ணும் எழுத்தும் கண்ணுக
எழுதும் நூலே உயிராக
கண்ணிய வாழ்வே நெறியாகக்
கடமை உணர்வே வழியாக
முன்னேத் தமிழே முறையாக
முளேத்த புதுமை நலம் போற்றி
மண்ணக மாந்தர் மனவளந்தான்
மலேயெனப் பெருக்கிய மணிவிளக்கே ஐயா (எத்திசை)

### விருத்தமாகப் பாடுவது :

பூத்துக் குலுங்கிய தமிழ்ச்சோலே எங்கே
புன்னகை தவழ்ந்திடும் தமிழ்மகன் எங்கே
பார்த்துப் பரவசம் அடைந்திட வாழ்ந்த
படைப்புக் கற்பனேச் சுரங்கம் எங்கே
யார்க்கும் அருள்பொழி மாமுகில் எங்கே
எவர்க்கும் இனியவன் எங்கே எங்கே
ஆர்த்துப் பரவிய ஆல்போல் நின்ற
அற்புதக் கலேமகன் எங்கே எங்கே?

## வேறு

தமிழரின் நெஞ்சினை அடைந்ததுன் பெருமை
தாரணி அடைந்ததுன் கீர்த்தி
இமிழ்கடல் உலகை அடைந்ததுன் எழுத்து
இசையினை அடைந்ததுன் நாவல்
அமைவரக் கற்ற அறிஞரின் இதயம்
அன்புடன் எடுத்ததுன் பண்பு
எமையினி மிகவும் இளைத்திட வைத்தே
ஏகினாய் இதுசெயல் முறையோ?

## இரங்கல் வரி

திரு. அ. பிச்சை

மண்ணாள வந்தவேந்தே! விண்ணாளச் சென்றதாலே
புண்ணான எம்நெஞ்சு பூகம்பம் ஆனதய்ய
புண்ணான எம்நெஞ்சு பூகம்பம் ஆனதாலே
கண்ணான கண்மணியும் கண்ணீர் வடிக்குதய்ய.

கள்ளாய்க் காவியமாய்ப் படைத்தநும் புதினங்கள்
உள்ளத்தின் கயமையிருள் விரட்டகல் விளக்கானதே
உள்ளத்தின் கயமையிருள் விரட்டகல் விளக்கானதால்
துள்ளுமனங் கூடஇன்று துயர்க்கடலில் துவளுதய்ய.

குறட்டைஒலி விட்ட குமரப் பருவர்களை
அறமூட்டும் எழுத்தால் அன்பூட்டி எழுப்பினிரே
அறமூட்டும் எழுத்தால் அன்பூட்டி எழுப்பியதால்
திறங்காட்டும் தமிழ்நெஞ்சம் திசையதிரப் புலம்புதய்ய.

சதைபொதி பொய்யுடல் கரித்துண் டானாலும்
இசைபொதி மெய்யுடல் வாடா மலரன்றோ
இசைபொதி மெய்யுடல் வாடா மலராயின்
நசைபொதி எம்கனவு விசையிழந் துபோனதய்ய.

இதயவா னத்தில் துக்கமஞ்சு படர்ந்ததனுல்
இதயத் துடிப்படக்கி உயிர்மூச்சு விடுத்தீரே
இதயத் துடிப்படக்கி உயிர்மூச்சு விட்டதாலே
இதய வெடிப்புத்தான் இவ்வுலகில் நடக்குதய்ய.

நும்பிரிவெனும் ஒருமுள் எம்நெஞ்சில் தைக்கவே
எம்பரிவெனும் கண்மழை இமைதீய்த்து விட்டதய்ய
எம்பரிவெனும் கண்மழை இமைதீய்த்து விட்டதாலே
நும்அறவழி எண்ணம் நுண்முளே கொண்டதய்ய

பல்கலே நகரிலே பைந்தமிழ் வளர்த்தவரே
சில்கலே பயிலச் சிறைநீக்கம் பெற்றீரோ
சில்கலே பயிலச் சிறைநீக்கம் பெற்றதாலே
பல்கலே மலரெல்லாம் பனித்துளி சிந்துதய்ய.

மணல்வீடாய்ப் போன தெங்கள் கனவெல்லாம்
மண்குடிசை யான தெங்கள் இனமெல்லாம்
மண்குடிசை யான எங்கள் இனமெல்லாம்
கண்பட்டு புண்பட்டுக் கலங்கித் தவிக்குதய்ய.

செந்தமிழின் நலமெல்லாம் செந்தாமரைத் தேனுக
அந்தநாள் தந்ததெல்லாம் அன்பர்கள் மறக்கலேயே
அந்தநாள் தந்ததெல்லாம் அன்பர்கள் மறந்தாலும்
இந்தநாள் கொண்டதுயர் இனியாரும் மறப்பாரோ.

### அறிஞர் மு. வ. வுக்கு அஞ்சலி

அ. பிச்சை
ஆராய்ச்சி மாணவர் தமிழ்த்துறை
மதுரைப்பல்கலேக்கழகம்

வரதனுர் மறைந்தனரே வளர்துயர் பரந்ததுவே
வரிபடர் இருவிழியும் வெப்பநீர் உகுத்தனவே

முல்லைமலர் உதிர்ந்தனவே முத்தமிழும் அழுதனவே
எல்லையிலாத் தொண்டுசெய்த எங்கோவின் பிரிவிற்கே

பேரவலம் சூழ்ந்ததுவே பெருமலை வீழ்ந்ததுவே
ஊரெல்லாம் தமிழிசைத்த உத்தமரின் துஞ்சலுக்கே

நெஞ்சரி மலையாச்சே நெக்குருகி அலையாச்சே
விஞ்சுதமிழ்தான் வளர்த்த வித்தகரின் மறைவிற்கே

அறிவிமயம் சாய்ந்ததுவே அன்புநதி ஓய்ந்ததுவே
செறிமலர்க் கொன்றையவன் சேவடி எய்தினதே

தமிழ்மகள் பல்லணியிழக்கத் தமிழகம் வேந்திழந்ததுவே
அவிழ்மலர் மணம்போலே அருவம்கால் கலந்ததுவே

புலவர்கண் ணீரெல்லாம் புலம்புமுத் தாயினவே
சிலம்பாய்ந்த தமிழ்நெஞ்சம் கலங்கவிட்டுச் சென்றதுவே

நொந்துநொந்து துயருறவே வெந்துசாம்பல் ஆனீரே
பந்தம்சொந்தம் உறவறவே விந்தைஉல குற்றீரே

சான்ரோர் பலர்புகழச் சரித்திரமே படைத்தீரே
ஈன்ரோர்தாம் சென்றவழி இன்றேனோ பறந்தீரே

தமிழ்வையைத் தண்ணம்புனலில் இமிழ்குமரிப்பூம் புனலில்
தமிழ்மண்ணில் உடல்கலந்தீர் தமிழ்ப்பண்ணில் உயிர்கலந்தீர்

அஞ்சலிதான் செய்தாலும் நெஞ்சழிவைக் காட்டிடுமா
அழுதுதான் பெய்தாலும் அடிமலரை எட்டிடுமா

### தொடர்கதையை இங்ஙன் முடிப்பதுதான் நன்ரோ?

டாக்டர் இராம. பெரியகருப்பன்,
மதுரைப்பல்கலைக் கழகம்.

தெளிய எழுதும் சிறப்பால் புகழ்கொண்(டு)
அளிதிகழும் பேராசான் ஆகி மதுரை
விளிவில் துணைவேந்தாய் வீறுநிலை பெற்றுயர்ந்தும்
எளிமையறம் போற்றும் இயல்புடையார் எங்கே?
எள்ளளவும் மாசில்லா எம் மு. வ. எங்கே?

பச்சைப் பயிரில் படரும் கொடிகளிலே
இச்சை மிகவுடையார் எய்ப்பகற்றும் நன்மரங்கள்
வைச்சு வளர்க்கும் மனமுடையார் எப்பொழுதும்
மெச்சும் இயற்கையிலே மேவினரோ மு. வ.?
மேகமெனக் கண்பொழிய ஏகினரோ மு. வ.?

எள்ளிநகை யாடும் இயல்பறியார்; முன்னேயும்
எள்ளளவும் நேர்மை பிறழார் பகையறியார்
விள்ளுபுகழ்க் காந்தியென வீறுபெற வாழ்ந்திருந்த
உள்ளம் உயர்ந்தொளிரும் உத்தமர்தாம் எங்கே?
உள்ளொளியால் நம்மை உயர்த்தியவர் எங்கே?

வேண்டாச் செலவை விரும்பார் பகட்டதனை
வேண்டவே வேண்டார் புகழை வெறுத்திடுவார்
வேண்டாம் மருந்தெனவே யாக்கைதனைப் பேணிடுவார்
வேண்டாமை பெற்றெடுத்த செல்வரவர் எங்கே?
வெள்ளுடையின் உள்ளொளிர்ந்த வீரரவர் எங்கே?

தாவாப் புகழ்படைக்கும் தம்மெழுத்தில் வெற்றிகண்(டு)
ஏவாப் பணிமக்கள் நன்மனைவி பெற்றுயர்ந்(து)
ஓவா உழைப்பால் உயர்ந்துயர்ந்து மேற்சென்று
மூவாத் தமிழ்வளர்த்த மு. வ. தாம் எங்கே?
முறையாக வாழ்ந்துயர்ந்த மூதறிஞர் எங்கே?

எந்தப் பொருளும் எழிலோ(டு) எடுத்துரைக்க
முந்தித் தவமிருந்து முத்தமிழ்த்தாய் பெற்றெடுத்தாள்
தந்ததெலாம் போதுமென்றே தாய்,மகனைக் கூப்பிட்டாள்?
சிந்தனைகள் எல்லாம் கனிந்துயர்ந்த காலம்
சிந்திய தோர்கனியாய்ச் செய்ததென்ன கோலம்?

உண்மையுறும் வாழ்வு ஒளிதிகழப் புன்னகைக்கும்
கண்கள் அகல்நெற்றி காட்சிக் கெளிமைஉளத்
திண்மை மிகுவரத ராசனர் கொள்கையினல்
உண்ணெகிழச் செய்யும் அருளாளர் அன்றே?
ஓர்நொடியில் யாம்கலிங்க ஓடியதும் நன்றே?

படிப்பு முடியுமுன்ஏன் பாடம் விடுத்தார்?
நடிப்பு முடியுமுன்ஏன் நாடகம்கை விட்டார்?
முடிப்பறியும் முன்னே கதைஏன் முடித்தார்?
துடித்தமுகச் செய்ததெலாம் ஓய்வுகொள அன்ருே?
தொடர்கதையை இங்ஙன் முடிப்பதுதான் நன்ருே?

## மு. வ. வாழ்கின்ருர்!

—பெருங்கவிக்கோ—

ஏக்கமும் சோர்வும் இதயப் பெருஞ்சுமையும்
தாக்க இதயம் தளர்ந்த நடையோடு
வந்துள்ள பெரியோரே! வாஞ்சைப் பெருங்குணத்து
விந்தைக் கலைச்சான்ருேர் வெற்றித் தமிழ்வள்ளல்
வறுமையில் தொடங்கி வேந்தராய் வளர்ந்தாலும்
சிறுமை சிறிதும் தீண்டாதார் மறைந்ததனுல்
கண்ணீர் அருவி கரைபுரண்டே ஓடமனம்
புண்ணுகித் தவித்துப் புலம்பித் துடிதுடிக்க
வற்றிய குளமாக வண்டமிழர் வாழ்வு செலப்
பற்றி எரிந்து பதைபதைத்து உளம் நோவக்
கூடியுள்ள நல்லோரே கும்பிட்டேன் உம்மையெல்லாம்
பாடிப் பாடிப் பைந்தமிழால் பரவிடினும்
உழைப்புத் தலைவன் உயிர்த்தமிழ்த் தலைவனினி
அழைத்தால் வருவானே? அவனுயிரைப் பெருவோமோ?
நாடி நரம்புகளில் நன்மானக் குறிதியினைத்
தேடிச் செலுத்திய திருத்தமிழ் மருத்துவனை
எவன்தயவும் இல்லாமல் ஏற்ற தமிழெழுத்தால்
புவனத்தை வெல்வே' னெனப் புதுச்சரிதை தந்தவனை
தனித்த வழிவகுத்துத் தமிழ்த்தலைவர் ரெல்லாரும்
இனித்தமுறை பாராட்ட ஏற்றம் பெற்றவனை
என் போன்ற எளியாரும் ஏற்றங்கள் பெற்ருரும்
'தன்னளவில் சரிசமமாம்' தத்துவத்தில் நின்றவனை
வாழ்வார்க்கே ஒரு நீதி வறியவர்க்கோர் நீதியென

பாழ்முறைகள் தெரியாத பண்பாட்டின் தலைமகனே
நெஞ்சிலே நின்றவனே! நினைவெல்லாம் இனித்தவனே,
கொஞ்சக் கொடுத்து [வைக்காக் கொடுமதியர்யாமானோம்!
நட்ட பயிர்நாம் நன்குகுத்திட் டேவளர
பட்ட பயிராகிப் பழம்புதுமை பறந்ததெங்கே!
முத்தமிழே! மு. வ. வே முறையறியும் செங்கோலே
செத்தோம்யாம்! நீசாகவில்லை! செந்தமிழில் வாழ்கின்றாய்.

## வளமிகு மு. வரதராச! உடல் மறைந்தீர், புகழ் மறையீரே!

வித்துவான் கோ. வே. பெருமாள்,

சிந்தனைசெய் தேனீயே! செழுந்தமிழின் வான்புள்ளே!
வந்தனைக்கே உரியசெல்வ! வளமிகு மு. வரதராச!
தந்தையென மதுரைவந்தீர், தனிக்கழகந் துணைவேந்தே!
சொந்தமென இருந்தோமே, சொல்லாதே சோர்ந்தீரே.
கொள்கைகளை விளக்குதற்கே கூடுங்கலை வடிவுகண்டீர்;
பள்ளத்தே வாழ்வோர்கள் பார்த்துயரப் பாதைதந்தீர்;
விள்ளுற்ற அரியவற்றை விளங்கவைத்தீர், இலக்கியத்தே!
தள்ளுற்ற உடல்மறைந்தீர், தெள்ளுபுகழ் மறையீரே!
தாய்மொழியைத் தழைக்கவைத்தீர்; தமிழ்மொழியால் தனிவளர்ந்தீர்;
ஓய்வின்றி உழைப்பதற்கே ஒருசான்றாய் வாழ்ந்துயர்ந்தீர்;
ஆய்வுந்தும் நூல்யாக்கும் ஆசிரியர் ஆட்சிசெயப்
போய்முந்தும் கலையினிலும் புகழ்ச்சிகரம் பெற்றீரே!

கொடிமரந்தான் ஒடிந்ததேயோ? கோபுரந்தான் இடிந்ததேயோ?
அடியொற்றிப் படர்ந்துநின்ற ஆலமரம் வீழ்ந்ததேயோ?
மிடிபோக்கிக் கடல்கடந்த மீகலந்தான் கவிழ்ந்ததேயோ?
கொடிதையோ, பொறுக்ககிலோம்; கோ. மு.வ. மறைந்தீரே!

## மு.வ. வணக்கம்

பேராசிரியர் க. பெருமாள்,

கலைநலமே கண்டறியாக் கல்மனமே! வாழ்க்கைக்
கலையனைத்தும் தந்துன்னைக் காப்பாற்றி முன்னேற்றி
அன்பின் நெறிநிறுத்தி ஆட்கொண்ட அப்பாவைப்
பொன்மனத்து மு.வ.வைப் போற்று.

முத்துபோல் கையெழுத்தும் முத்தமிழின் வித்தகமும்
எத்தகைய மாணவர்க்கும் இன்பூட்டிக் கற்பிக்கும்
நற்றிறமும் நல்லறமும் நன்னெஞ்சும் என்நெஞ்சைப்
பற்றியிழுத் தாண்டன பார்.

ஆடம் பரமே அறியார், அமைதியை
நாடி அடைந்த நலமுடையார் - நாடறிந்த
பீடுடையார் வாலறிவன் பேரருளைப் பெற்றுடையார்
ஏடுடையார் என்னுடையார் யார்?

வீண்பெருமை இல்லாத வீரர்; வீறுதமிழ்
பூண்பெருமை மிக்க புகழுடையோர் - ஆண்தகைமை
கோடா அறமுடையோர் கொள்கைத் தெளிவுடையோர்
பாடாண் திணையைப் பாடு.

கார்நிறத்தால் கைம்மாறு வேண்டாக் கடப்பாட்டால்
ஏர்முகத்தால் எல்லோர்க்கும் இன்பூட்டும் ஏற்றத்தால்
வான்முகிலும் மு.வ.வும் ஒப்பெனினும், வான்முகிலில்
தேன்தமிழ் ஒன்றுண்டோ செப்பு!

குன்றாத நல்லுழைப்பால், குன்றின்மேல் நின்றெரியும்
பொன்றாத தீபம்போல், பொற்புடைய நற்றமிழ்க்கு
நன்றான நன்னூல்கள் நல்கியுயர் மு.வ.வை
என்றும் மறவாமல் ஏத்து.

உண்ணும் உணவும் உடையும் ஒழுக்கமும்
எண்ணும் எழுத்தும் எனக்களித்த ஏந்தலைப்
பண்பினுக்கோர் வேந்தரைப் பாட்டிசைத்துப் போற்றியன்பு
பண்ணாத நாளெல்லாம் பாழ்.

காட்டில் நெருப்பானார் கடலில் புனலானார்
வீட்டில் இறையானார் விண்ணில் வளியானார்

## சரிசெய்ய யார் வருவார்?

பொற்கோ

தமிழுலகில் எல்லோர்க்கும்
தகுந்ததமிழ் நடைகொண்டு
தமிழ்த்தாய் நெஞ்சம்
நமக்கினிமேல் குறையில்லை
நன்றென்று மகிழ் வெய்த
நாளும் நாளும்
தமிழ்மொழியில் பலதுறையில்
சலிக்காமல் பலநூல்கள்
தந்த தாலே
தமிழ்ப்புலவர் நிலைமீறித்
தமிழ்வள்ளல் என நின்ருர்
சான்ருேர் மு.வ.

புலமையினுல் உயர்சீர்த்திப்
புலவரிவர், பலபேர்கள்
போற்றி ஏத்த
நிலமகள்போல் பொறுமையுடன்
நின்றதனுல் தாயானுர்
நேர்மை நெஞ்சால்
கலைக்கழகத் துணைவேந்தாய்க்
கனிவுடைய புரவலராய்க்
கடமை செய்தார்.
தலைப்புலமைத் தமிழ்மகனுர்
சால்பாளர் இவர்பிரிவால்
தவிக்கின் ருேமே.

தமிழ்நெஞ்சால் தமிழுலகைத்
தன்பக்கம் ஈர்த்திட்ட
தவக்கொ ழுந்தைத்
தமிழ்மணக்கும் தனிமலரைச்
சால்புருவை நிறைகுடத்தைச்
சந்த னத்தைத்

தமிழ்வழங்கும் இடமெல்லாம்
    தவிப்படைய இழப்பென்னும்
        தளர்ச்சி தோன்றத்
தமிழ்நோக இழந்தோமே
    சரிசெய்ய யார்வருவார்?
        தமிழே சொல்க.

## பேசாத படமானூர்

புலவர் பொன்னரசன்

உழைப்பாலே உயர்ந்தவரே! தமிழர் நாட்டின்
    உயர்வுக்கே வாழ்ந்தவரே! நாளும் நாளும்
தழைக்காதா தமிழ்என்ற ஏக்கத் தோடு
    தளராமல் பல நூல்கள் எழுதி வைத்த
மழைக்காலக் கருமுகிலே! மு. வ. என்றே
    மனமினிக்கத் தமிழரெலாம் கூறி வந்த
பிழைக்காத காவிரியே! இன்று நீங்கள்
    பேசாத படமானீர் கலங்கு கின்றோம்!
திரு. வி. க. எனும்தென்றல் ஓய்ந்த பின்னர்
    தெளிவுடனே அவர்வழியில் தொண்டு செய்ய
திருமகனே! நீர்வந்தீர் ஆனால் இன்றே
    சிறந்தவரே! ஒளிவிளக்கே! மறைந்து விட்டீர்!
இருப்பினும்நீர் எழுதிவைத்த நூல்க ளெல்லாம்
    எங்களுக்கு வழிகாட்டும்: தமிழைக் காக்கும்;
வருகின்ற தமிழ்ப்பகையை வீழ்த்தும்; என்றே
    வணங்குகிறோம் உமதுபுகழ் வாழ்க! வாழ்க!

## மூவாத மு.வ.

அ.அ. மணவாளன்

மூவா முதலா உலகத்து
    மூத்து முகிழ்த்த மொழியவற்றுள்
தாவா இளமைத் தனியினிமை
    தன்னே ரிலாத தமிழ்த் தாயின்

ஓவாப் புகழை உலகெங்கும்
    ஓங்கிப் பரப்பும் ஒளிமலேயுள்
மு.வ. எனவே பெயர்விளக்கி
    முதலாய் நிற்கும் முழுமலேயே!

அண்ணு அருளால் ஆலெனவே
    கிளேக்க எழுந்த பெருஞ்சிறப்பின்
பண்ணுர் உலகத் தமிழாய்வு
    நிறுவ னத்தின் வளர்முறையை
கண்ணே யெனத்தன் கடமையுடன்
    கருணை மழையும் கலந்துமிக
நண்பாய் நடத்திப் புகழ்பெற்ருய்
    பண்பின் உருவம் பகலன்ணுய்

தூயநல் உடையும் தோமில்
    அகமகிழ் தோற்றம் அன்பால்
ஆயநற் சொல்லும் ஆன்று
    அகழ்ந்திடும் அன்பர் தம்மைத்
தாயெனப் பொறுத்துத் தண்ணென்
    றருள்புரிந் துவக்கும் சான்ருேய்
ஆவிணப் பிரிந்த கன்றிங்
    கலமரல் இயற்கை யன்ருே.

மூவாத் தமிழ்மு.வ.

தாழை. மதியவன்

அமைதியாய்ப் புரட்சி செய்த
    அய்யாபோல் தமிழ்ப் புரட்சி
அமைதியாய்ச் செய்த மு. வ.
    அணிச்சுடர் அணைந்த தம்மா.
சமைத்திட்ட நூற்கள் அன்ஞர்.
    சரிதத்தைக் கூறி நிற்கும்.
இமைமூடிக் கொண்ட வேந்தர்
    இதயத்தில் வாழ்ந்தார்; வாழ்வார்.
''மூவாத தமிழே'' என்று
    மொழிகின்ற போழ்தி லெல்லாம்

மு. வ. தமிழ்போ லாகி
முழுமையாய் வாழ்ந்திருப்பார்.
சாவா வரங்கள் பெற்றார்.
சரியான இயலைத் தந்தார்.
தீவாய் உடல்போ னாலும்
தென்மொழி யாகி விட்டார்.
ஆவிவிட்ட பூக்க லெல்லாம்
அழகாய்ச் சிரித்தி ருக்க
ஆவிவிட்ட மாந்தரெல்லாம்
அடைவதே மயான பூமி.
கூவித் தமிழ் வளர்த்தக்
கோமகன் 'மு.வ.' போன்றோர்
ஆவிவிட்டும் வாழ்வர், நம்முள்
ஆவியொடு ஆவி யானார்.

## தமிழின் தலைவர்

திரு. இ. மறைமலை

செஞ்சொற் காவலர் அறிஞர் மு. வ.
நெஞ்சு வலியால் இன்னுயிர் நீத்த
அவலச் செய்தியை எவரே பொறுப்பர்?
முதிய தமிழின் பழமை உணர்த்த
வரலாறு கண்ட வல்லவர் அவரே!
புதின இலக்கியப் புதுமை தேர்ந்து
புதினம் புதிய புனைந்தவர் அவரே!
பதின்மர் வகுத்த உரைக்குப் பிறகும்
புதுமைப் பொருளைக் குறளில் தெளிந்து
தமிழகம் போற்றும் தெளிவுரை வரைந்தார்!
தகவுடைத் தொண்டு தமிழ்க்கெனப் புரிந்தார்!
முதன்மை தமிழ்க்கே முகிழ்த்திட உழைத்தார்
பொறுமை சிறிதும் இல்லாக் கூற்றம்
திறமிகு புலவரைத் தமிழின் தலைவரை
அறமின்றிப் பிரித்தது! அந்தோ! நொந்தோம்!
தமிழன் னையின் தலையில் பேரிடி
அளியை! அளியை! அருந்தமிழ் உலகே!
அருந்துயர் மாற்றல் நினக்கினி அரிதே!

டாக்டர் மு.வ.

ம. முகமதுமைதீன்

நாவற்கனி மேனி—தமிழை
நாடுவோர்க் கோர் ஏணி—நிமிர்
சேவற் கொண்டை போலே—பிடரி
சிறந் திருப்பான் மேலே
எளிய உரை தந்தோன்—“குறள்”
இனிமை யுறத் தந்தோன்—என்றும்
அழிவில்லாத நாவல்—தமிழ்
அகத் துறைக்குக் காவல்
எரிந்த ‘‘கரித் துண்டால்’’—நாவல்
இலக் கியத்தை வரைந்தோன்—வாள்
முறிந்ததைப் போல் முறிந்தே—போர்
முடியு முன்னே மறைந் தோன்—
‘‘அல்லி’’ மல ராலே—வாடா
ஆரம் தொடுத் திட்டோன்—‘‘நெஞ்சில்
முள்ளி’’ ருக் கும்’’ மங்கை—தனை
நிலவு தற்கும் விட்டோன்
‘‘இலக் கியத்தில் இயற்கை’’—தனை
எடுத் துரைத்த மேதை—தமிழ்
இலக்கியத் தில் என்றும்—மாறு
திருக்கும் இவன் பாதை—
‘‘அன்னைக்’’ கொரு நூலும்—அருமைத்
“தங்கைக்” கொரு நூலும்
என்றைக்கு மே வாழும்—மு.வ.
என் றெழுத்து நீளும்—
‘‘பெற்ற மன”த் தாலே—புகழ்
பெற்றுயர் ந்து நின்றேன்—பகை
அற்ற உல கமைக்க—நல்
அறம் வளர்த்து வென்றேன்—
வள்ளலா ரின் பண்பை—திரு. வி. க.
வளர்த்துச் சென்ற அன்பை—தன்
உள்ளத்திலே காத் தோன்—இன்று

உறங்கி விட்ட மூத்தோன்—
இரண் டெழுத்தி னாலே—புலவர்
இனி யாரை யழைப்பார்—கண்ணீர்
புரண்ட மூவ தன்றி—அறிஞர்
புதுமை யென்ன உரைப்பார்?

### காலத்தால் அழியாத காவியம்

கவிஞர் பு. ஆ. முத்துக்கிருட்டிணன்

மூவா அமுதனைய மு. வ. மறைந்தாரா ?
சாவாத இலக்கியங்கள் தந்தவர் தாம் எங்குற்றார் ?
கனிதரு வீழ்ந்ததுவோ ! கலைக்கதிர் சாய்ந்ததுவோ ?
இனியவரின் இன்னுயிரை இயற்கை பறித்ததுவோ?
ஆறுமா இத்துயரம் அந்தோ தமிழ்த்தாயே !
தீருமா சோகநிலை தேம்புதே தமிழுலகம் !
குறளின் இருவரிபோல் குறில்எழுத் திரண்டுகொண்டு
இருள்தீர ஒளிசேர எழுத்துலகம் காணவந்த
ஈரெழுத்து சொல் மு. வ. இலக்கியக் கடல் மு. வ.
பேரெழுத்து மு. வரத ராசனெனும் பேரன்பு
மலைசாய்ந்த தோஅம்மா ! கடல் தூர்ந்த தோஅம்மா !
தலைசாயும்வரை நல்லதமிழ் வளர்த்த தாளாளர் !
திசைதோறும் திருக்குறள் தெளிவுரை வழங்கிடவே
இசை பெற்றார் ! கழகத்தின் ஏடுகண்டார் நாடுகண்டார்
தொண்டைநா டிதுசான்றோர் உடையதென்று சொல்கின்ற
பண்டைநாள் அவ்வை தமிழ்ப் பாட்டிற் கிலக்கணமாய்
வேலத்தில் தோன்றியவர் ஞாலப் புகழ்பெற்றார்
காலத்தால் அழியாத காவியமாய் ! ஓவியமாய் !

### என்றினி மு. வ. காண்பேன்

புலவர் தெ. முருகசாமி

என்றினி மு. வ. காண்பேன் ! எப்பகல் மு. வ. வின்தன்
பொன்றிகழ் எழுத்தால் கூறும் பொற்புடைக் கருத்தைக் காண்பேன்!
நன்றினி தாற்றும் மதுரைப் பல்கலைக் கழக வேந்தாய்ப்
பொன்றிய மு. வ. வின்தன் பொலிவினைக் காண்பேன் மன்னோ!

## இருக்கின்றோம் நாங்கள் மட்டும்

திரு. கு. மோகனராசு.

தமிழ்முல்லைத் தேன்சொரிய, மாந்தும் நெஞ்சில்
தமிழ்ப்பண்பு முளையரும்பக் கண்ட வானோர்
அமிழ்தத்தை அருந்திமனம் சோர்ந்த பின்னர்
அருந்தமிழ்த்தேன் மாந்தவுனை அழைத்திட்டாரோ ?
அமைதியேதன் உருவாகி, அன்பு ஈன்ற
அருளே தன் உளமான அறஞ்சொல் நூலே !
இமையாக உம்நெஞ்சக் கோட்டைக் குள்ளே
இடிவைத்துத் தகர்த்தானோ வஞ்சக் காலன் ?

அறக்கடவுள் மனிதவுரு ஏற்றோ இந்த
அருந்தமிழர் நாட்டினிலே உலவு தென்று
பிறஇனத்தார் கூறுகின்ற கூற்றைக் கேட்டுப்
பித்தேறி நின்றோமே உம்மால் ஐயா!
அறமறிந்த வானோர்கள் அறத்தை மேலும்
அறிந்திடவே விரைந்துன்னை அழைத்திட்டாரோ?
அறமறியாக் காலனும்உம் வரவிற் காக
அழைப்போலை விரைந்தனுப்பி அழைத்திட்டானோ?

தமிழுணர்வு சிறிதுமிலாத் தமிழர் வாழ்வைத்
தனித்தே நீ சிந்தித்த காரணத்தால்
தமிழ்நெஞ்சில் செங்குருதி திரண்டு வந்து
தலைவாயில் அடைத்ததுவோ ? பலபேர் இன்று
தமிழையே விலையாக்கி விற்றுத் தம்மின்
சவக்குழிக்குக் கல்லடுக்கும் செயலைக் கண்டு
தமிழ்நெஞ்சு பதைபதைத்த கார ணத்தால்
தடுமாறி இறுக்கியதோ உயிரின் மூச்சை ?

பண்பாட்டுக் கொடுமுடியே! அன்பின் ஊற்றே!
பைந்தமிழின் புறப்பாட்டே! அறத்துப் பாலே!
எண்ணத்துள் நிலைத்திட்ட நினைப்பே! எங்கள்
'இதயப்பா' வடிக்கின்ற பாவே! அன்பு
கண்ணிலொளிர் கருமணியே! கருத்துக் கோவே!
காலன்வாய் நீபுகுந்த போதில் அந்த
வன்செயலைத் தடுத்திடவோ இயலா தாகி
மனம்பதைத்தோம்! இருக்கின்றோம் நாங்கள் மட்டும்!

## தெய்வத் திருவிளக்கு

பேராசிரியர் ரம்போலா மாஸ்கரேனஸ்

கருவில் திருவுடையான்
கன்னல் சுவைநடையால்
திருவள் ளுவர்குறள் நூல்
தெளிவுரையை வழங்கியவன்

ஆசான் நிலைக்கிசைந்த
பண்புநலன் அத்தனையும்
தேசாய் ஒளிர வந்த
தெய்வத் திருவிளக்கு

உள்ளத்தின் உண்மையொளி
வீசிடுவ தவன்வாக்கு
பள்ளத்தில் விழுவோரும்
பதவிபெற்றே எழஉதவும்

உழைப்பதனல் ஒழுக்கத்தால்
உயர்வான குறிக்கோளால்
தழைத்தான் தமிழ்தழைக்கத்
தாயகத்தின் புகழ்தழைக்க

முயற்சிக்கும் வளர்ச்சிக்கும்
முற்போக்கின் வளத்தினுக்கும்
மு. வ. தான் முதல்எழுத்தாய்
முகிழ்த்தெழுந்த மந்திரச்சொல்.

## முத்தமிழ் டாக்டர் மு. வ.

வித்துவான் பா. சொ. லிங்கம்

மூவாத் தமிழ்மொழியில் முப்பதிரே டைம்பதெனும்
தாவா இலக்கியங்கள் தந்தமகன்—நாவேந்தன்
முத்தமிழன் டாக்டர் ‘மு.வ’ வெனும் மேதை
இத்தரையில் இல்லையால் இன்று.

பாமரரும் இங்கே படித்துத் தெளிவுறவே
தேமதுர நூலாம் திருக்குறட்கு — நாமணக்க
நல்ல உரையளித்து நற்றமிழ்க்குத் தொண்டுசெய்த
வல்லவனும் டாக்டர் 'மு.வ.'

முத்துப்போல் பற்கள் முறுவலித்துக் காண்பாரின்
சித்தம் கவர்ந்திட்ட சிந்தனையான்—எத்திக்கும்
துன்பம் துடைக்கத் துடிக்கும் உளமுடையான்
அன்பே சிவமென்பான் ஆய்ந்து.

### நெஞ்சப் பாறையில் நினைவு நுரைகள்

திருவாட்டி விசயலக்குமி நவநீத கிருட்டிணன்,

மன்னவரே! நீரிந்த மண்ணைவிட்டுப் போனதெல்லாம்—நாங்கள்
மணலுற்ற மீன்போல மயங்கிக்கிடப்பதற்கோ?
பொன்னவரே! நீரிந்தப் புவியைவிட்டுப் போனதெல்லாம்—நாங்கள்
பொருதகளக் கருவிகள்போல் பொடிப்பொடியாய்க் கிடப்பதற்கோ?
தந்தையரே! நீரிந்தத் தரையைவிட்டுச் சென்றதெல்லாம்-நாங்கள்
தணலுற்ற மண்புழுவாய்த் தவித்துக் கிடப்பதற்கோ?—எங்கள்
சிந்தையரே! நீர்ந்தச் சீமைவிட்டுச் சென்றதெல்லாம்—நாங்கள்
சிப்பிகளின் சிதைவுகளாய்ச் சீரழிந்து கிடப்பதற்கோ?
எம்மரசே! நீரிந்த இடம்விட்டுச் சென்றதெல்லாம்— நாங்கள்
இலவம்பஞ் சினைப்போல் எங்கெங்கோ பறப்பதற்கோ?
அன்புருவே! நீரிந்த அவனிவிட்டுச் சென்றதெல்லாம்— நாங்கள்
அரசிலைச் சருகுகள்போல் அலைந்து திரிவதற்கோ?

### புலம்பும் நெஞ்சே!

கோவாத முத்துப்போல் குமுறிவிழி கலங்காமல்
மு. வ. வின் இலட்சியத்தை முகனமர்ந்து புரிந்திடுக!
நாவாரப் புலம்பிமனம் நலிந்திங்கே வாடாமல்
மு. வ. வின் கொள்கைகளை முழுமனத்தாற் செயல்படுத்து!
ஏவாமல் இயங்கிவரும் இயற்கைச்சக் திகள்போல
மு. வ. வின் பாதையிலே முழுமூச்சாய்த் தொடர்ந்திடுக!

## செந்தமிழாம் அன்னைக்குத் தொண்டு செய வருக !

மகாவித்துவான் மே.வீ. வேணுகோபாலப் பிள்ளை

(குறள் வெண்செந்துறை)

வள்ளுவர்செய் திருக்குறளின் வழிவாழ்ந்த அறிஞன்
வரதரா சச்செம்மல் மறைந்திட்ட செய்தி
உள்ளத்தை அழலடைந்த மெழுகென்ன உருக்க
ஓயாதென் இருகண்ணும் உகுக்கும்நீர் பெருக்கி.

தன்முயற்சி யாலுலகிற் றடையெல்லாங் கடந்து
தனிச்சிறப்புக் குரியவனாய்த் தமிழ்நாட்டிற் சிறந்து
முன்னிடத்தைத் தானடைந்த மூதறிஞன் மறைவால்
முத்தமிழ்த்தாய் மணங்கசிய முடிவடைந்தா னந்தோ

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்', என்னும்
கவிஞர்மொழிக் கிலக்கியமாய்க் கற்றாரை உன்னும்
முற்றார்வம் உடையவனாய் மு.வ. வைக் கண்டு
முகமலரும் வாய்ப்பெனக்கிங் கினியென்று நண்ணும்!

புலவர்குழுத் தலைவனெனப் பொலிந்திட்ட அறிஞன்
புலமையினால் ஒழிக்கத்தாற் புகழடைந்த பெரியன்
நிலமகளின் பொறுமையினை நெஞ்சினுளே நிறுவி
நேயமுடன் எவருடனும் உரையாடும் நெறியன்

பட்டத்தாற் பதவியினாற் பதனழியா உளத்தன்
பாங்குபெற எவருடனும் பழகுகின்ற வளத்தன்
கிட்டியநற் பொருளதனை இட்டமுடன் உதவிக்
கிளைஞரென் மாணவரைப் புரந்திட்ட செல்வன்

பிறந்தவெலாம் இறந்திடுதல் பெருநிலத்தின் பெருமை
பிறவாத பேறடைதல் பெரும்பாலார்க் கருமை
சிறந்தகுணச் செம்மலவன் பிறப்புண்டேல் இனியும்
செந்தமிழாம் அன்னைக்குத் தொண்டாற்ற வருக!

## ''தமிழ் வீணை அறுந்ததம்மா''!

(புலவர் வேலவன் )

மின்னாமல் முழங்காமல் வீழ்ந்துவிட்ட
மிகப்பெரிய இடியைப்போல் துயரச் செய்தி
என்காதில் வீழ்ந்ததம்மா! அறிஞர் மு.வ.
இறந்திட்டார்' என்றார்கள்! எழுத்துச் செம்மல்
'தென்னாட்டுக் காண்டேகர்' எங்கே சென்றார்?
'தென்னாட்டுப் பெர்னாட்சா' என்றே வாழ்ந்த
அண்ணாவைப் பின்தேடிச் சென்றார் கொல்லோ?
அமரரிடம் யாதுசொலச் சென்றீ ரையா?

சேற்றில் 'செந் தாமரை' யாய் நீபிறந்தாய்!
சின்ன'மலர் விழி'யாலே நீயும் பார்த்தாய்!
காற்றிலசை 'அல்லி'யென நீமலர்ந்தாய்!
'கள்ளோ? காவியமோ?' வென் றுன்னைக் கண்டோர்
போற்றிசைக்கப் புகழ்பூத்தாய்! 'அகல் விளக்கை'ப்
போல்ஒளிர்ந்தாய்! 'கரித்துண்டு' தந்தாய்! அந்தோ!
கூற்றுவனின் 'கயமை'யினால் 'நெஞ்சில் ஓர்முள்'
குத்திடவே நீபிரிந்தாய்! குலைந்தே போனோம்!

தமிழ்வீணை அறுந்ததம்மா! இனிமை தந்த
தமிழ்க்கதிரோன் மறைந்ததம்மா! பயனில் லாத
உமியெல்லாம் உயரத்தில் பறக்க விட்டே
உயர்வகையாம் நெல்மணியைப் பிரிவுச் சேற்றில்
அமிழ்த்திவிட்டாய்! அம்மம்மா! தகுமோ அம்மா!
ஆழமிகு கருத்தாழி! தமிழின் பூங்கா!
அமிழ்துவிளை கருத்துமழை! அறிஞர் மு.வ.
அன்புவழி என்றென்றும் வளர்க! வாழ்க!!

## தமிழ்ச்சோலை வேலி எங்கே?

திரு.கா. வேழவேந்தன்

மொழி விழிக் கிமையே! எங்கள்
மு.வ. வே! எங்கே சென்றீர்?

எழுதுகோ லாலே நித்தம்
　　எமையாண்ட இறையே! பேசும்
அழகான தமிழ்ப்பேச் சாலே
　　அன்ருடம் நெஞ்சை ஈர்த்த
கெழுதகைச் சுடரே! ஐயா!
　　கேளாத தொலேவேன் போனீர்?

அமரர் மு.வ.

கலேமகள் ஆசிரியர் கி. வ. ஜகந்நாதன்

பள்ளியா சிரிய ளுகப் பணிபுரிந் தூக்கம் கொண்டு
தெள்ளிய தமிழை யோர்ந்து சிறப்புறு புலவ ளுகி
உள்ளிய சிந்தனேக்கும் உயர்தரு கற்பனேக்கும்
கொள்ளிட மாளுன் மு. வ. குவலயம் இந்நாள் நீத்தான்.

பெருமையும் சிறுமை தானும்
　　தான்தரப் பெறலா மென்ற
அருமையார் மொழியை வாழ்வில்
　　அறிந்தவன்; ஏவர் மாட்டும்
மருவிய அன்பு பூண்டு
　　மலர்முகம் காட்டி ளுன்; அத்
திருவுடை இயல்பால் யாரும்
　　சிறப்பிக்க ஓங்கி நின்ருன்.

பகையிலான்; கொடிய சொற்கள்
　　பயின்றிலான்; எக்கா லத்தும்
நகையுள முகமே கொண்டான்;
　　நல்லவ னென்றி யாரும்
புகல்தர ஒழுகி நின்ருன்;
　　புதுமையும் பழமை தானும்
இகல்தரா தவன்பால் ஒன்றி
　　இணேந்தன பலரும் போற்ற.

பண்பிலே உயர்ந்தான்; கல்விப்
　　பயிற்சியில் உயர்ந்தான்; ஓங்கும்

நண்பிலே உயர்ந்தான்; நூல்கள்
நல்கலில் உயர்ந்தான்; சற்றும்
புண்பட்டா வகையில் பேசும்
பொறப்பிலே உயர்ந்தான்; இன்று
விண்பெறு மேலோர் மாட்டே
மேவினன் வரத ராசன்.

அவனைத்தண் டமிழ்த்தாய் பெற்றாள்;
அலறுகின் றாள்இந் நாளில்
அவன்தரு நூல்கள் எல்லார்
அகத்திலும் நிலவும்; ஆக

அவன் பெயர் மறையா திந்த
அருந்தமிழ் உள்ள காறும்
அவன் புக ழோடே மேவி
அழிவிலா தியலும் ; தின்மை.

## புலவர் கண்ணீர்

வ. ஜெயதேவன்

எழுதுகோ லோச்சிய
எம்மிதய வேந்தே
விழுதுகா லூன்றவும்
வெங்கோடை தணிப்பவும்

நிழல்தந்து நித்தம்
காத்த பெருமரமே!
அழலிடை வீழ்த்தி
எங்கே போனாயோ!

இமயம் வீழினும்
இமையோரம் பனிக்காத
இதயம் எல்லாம்
அருவியாய் அழுகிறதே!

'புலவர் கண்ணீர்'
தீட்டியவனே! உன்மறைவால்
புலவர் கண்ணீர்
பொழிந்ததையார் தீட்டுவார்!

எல்லார் கதையையும்
    எழுதிய ஏந்தலே!
நல்லாய் நின்கதையை
    நின்போல்யார் வடிப்பார்?

நாவாய் நடத்திய
    நாயகனே! நடுவழியில்
தீவாய்ப் புகுந்ததென்?
    தங்கமே! தமிழே!

துறக்கப் பல்கலைக்
    கழகந்தனைத் தூய்மையால்
துலக்கப் போனாயோ
    தூய்தமிழ்த் தென்றலே?

## பொருளாரம்

இந்நூலில் பயின்று வந்துள்ள படைப்புக்களைத் தந்த ஆசிரியர்களின் பெயர்கள் அகவரிசைப்படித் தொகுக்கப்பட்டுள்ளன. எண் பக்க எண்ணைக் குறிக்கும்.


அகிலன் 1, 9
அடியார் 11
அரசு 227
அருணு பொன்னுசாமி 227
அறிவு ஒளி 18
அன்பழகன், பேராசிரியர் க. 204
அன்பானந்தன், ச.ஆ. 228
அன்புப்பழம்நீ 206

இசரயேல், டாக்டர் மோ. 206
இராசேந்திரன், கிரி.நா. 230
இராமச்சந்திரன்,
பேராசிரியர் கோ. 23
இராமநாதன் செட்டியார்
பேராசிரியர் லெ.ப.கரு. 230
இளங்குமரன், புலவர் இரா. 231
இளஞ்சேரன், கோவை. 232
இளந்துறவி 233
இளைய பெருமாள், புலவர்
திரு.கோ. 234

கணபதி, வித்துவான் ஆ. 235
கருணாநிதி, டாக்டர் கலைஞர்
மு. 207
காந்திமதிநாதன், பேராசிரியர்
தி.வ. 236

கிருபானந்தவாரியார்,
திருமுருக 236

குருசாமி, மா. பா. 27, 237

கோவேந்தன், கவிஞர் த. 238

சஞ்சீவி, டாக்டர் ந. 29, 208
சண்முகம், குருவிக்கரம்பை 238
சம்மந்தன், மா. சு. 209
சனார்த்தனம், டாக்டர் இரா. 31
சாதிக்பாட்சா, எஸ்.ஜே. 210
சாந்தலிங்க இராமசாமியடிகள்,
அருட்டிரு 239

சிட்டிபாபு, சை. வே. 210
சிவராமலிங்கம், பேராசிரியர்
சிவ. 245
சிவலிங்கனார் பேராசிரியர் ஆ. 245
சிறுவை மோகனசுந்தரம் 211

சீனிவாசராகவன், பேராசிரியர்
அ. 245
சீனிவாசன், மின்னூர் 247
சீனிவாசன், வி.ஜி. 248

சுத்தானந்த பாரதியார் 240
சுந்தரம், கவியரசு எஸ்.டி. 241
சுந்தரவடிவேலு, நெ.து. 41, 212
சுப்பிரமணியம், டாக்டர்
ச.வே. 242

செகந்நாதன், நா. 45
செங்கைப் பொதுவன்,
புலவர் 49, 249
செவ்வியன் 250
சொக்கலிங்கம், நெல்லை ந. 251

சோமசுந்தரம், ப. 251

சௌந்தரா கைலாசம் 252
சௌரிராசன், பொன். 52

ஞானமூர்த்தி, டாக்டர் தா. ஏ. 213

தசரதன், பேராசிரியர் மா.கி. 58
தணிகை உலகநாதன் 254
தண்டபாணி, கவிஞர் ப. 255
தண்டபாணி தேசிகர், ச. 254
தண்டாயுதம், டாக்டர், இரா. 66,
77
தமிழன்பன் 89
தமிழ்ப்பிரியன் 256

திருநாவுக்கரசு, க.த. 93, 96, 256
தில்லை நாதன், சி. 109

துரை, புலவர் கல்லை ஆ. 257
துரைக்கண்ணன், நாரண. 115
துரைசாமிபிள்ளை ஔவை 215

நக்கீரன், புலவர் அ. 258
நவநீத கிருட்டிணன், மா. 259

நெடுஞ்செழியன், டாக்டர் நாவலர் இரா. 25

பரணன் 260
பரமசிவானந்தம், பேராசிரியர் அ.மு. 126, 128

பழனி, புலவர் ஆ. 261
பார்த்தசாரதி, நா. 130
பாலசுப்பிரமணியன், டாக்டர் சி. 132, 138, 25
பாலச்சந்திரன், சு. 263

பிச்சை, அ. 264, 265

பெரிய கருப்பன், டாக்டர் இராம 266
பெருங்கவிக்கோ 262
பெருமாள், கோ. வே. 269
பெருமாள், க. 270
பொற்கோ 271
பொன்னரசன் 272

மகாதேவன், கொண்டல் சு. 144
மணவாளன், அ. அ. 272

மதியவன், தாழை. 273
மறைமலை, இ. 274

முகமதுமைதீன், ம.275
முத்துக்கிருட்டிணன், பு. ஆ. 276
முத்துக்குமாராசாமி, இரா. 149
முத்துப்பிள்ளை, கோ. 220
முத்தையா, கண. 164
முருகசாமி, தெ. 276

மோகனராசு, கு. 277
மோகன், இரா. 171

ரம்போலா மாஸ்கரேனஸ் 278

லிங்கம், பா. சொ. 278

வடிவேலாயுதம் 217
வளன் அரசு, பா. 219

விசயலக்குமி நவநீத கிருட்டிணன் 279
விசுவநாதன், டாக்டர் ஈ.ச. 178
விசுவநாதம், கி. ஆ. பெ. 217
வில்வபதி, கோ. 187

வேங்கடசாமி, மயிலை சீனி. 219
வேணுகோபாலப் பிள்ளை, மே.வீ. 280
வேலவன், 192, 281
வேழவேந்தன், கா. 281

ஷா, கே. கே. 220

ஜகந்நாதன், கி. வா. 221, 282
ஜெயதேவன், வ. 283

## மதுரைப் பல்கலைக்கழகத்

## தமிழ்த்துறை வெளியீடுகள்

1969

ரூ.பை

1. **Philosophy of Tiruvalluvar**
   — Dr. T. P. Meenakshisundaran 1-50

1971

2. *வீரபாண்டிய கட்டபொம்மு கதைப்பாடல்*
   — பதிப்பாசிரியர் : திரு நா. வானமாமலை 4—00

3. *முத்துப்பட்டன் கதை* — ,, 2—00

4. *காத்தவராயன் கதைப்பாடல்* ,, 2—00

1972

5. *கான்சாகிபு சண்டை* — 2—75

6. *கட்டபொம்மு கூத்து* ,, 2—25

7. *திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்*
   *முதற்பகுதி அறத்துப்பால்* 8—00

   திரு கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்கவுரையும், கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கில மொழி பெயர்ப்புடன்

1973

8. **The Treatment of Morphology in Tolkappiam**
   — Dr. M. Israel 7-00

9. **Dravidian Languages and Literatures**
   —Compiled by Busangi Rajamani 5-00

1974

10. வையை : மலர் ஒன்று
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்,
டாக்டர் இராம. பெரியகருப்பன் 12—00

11. **The inner meaning of Human History**
The one increasing purpose that Runs through the Ages
— Justice S. Maharajan 2—25

12. அகிலன் ஆய்வடங்கல்
— சு. வேங்கடராமன் 10—00

13. ஐவர் ராஜாக்கள் சரிதம்
— பதிப்பாசிரியர் ; திரு நா. வானமாமலை 7—50

1975

14. தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணையியல்
உரைவளம் — மு. அருணாசலம்பிள்ளை
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் தா. வே. வீராசாமி 18—00

15. வையை : மலர் இரண்டு
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் இராம. பெரியகருப்பன் 8—00

16. நாடகக் கலையின் வரலாறு
— திரு வி. சகஸ்ரநாமம்

17. மு. வ. ஆய்வடங்கல்
— சு. வேங்கடராமன்

18. அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள்
பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் இராம. பெரியகருப்பன்

19. *மு. வ. நினைவுமலர்*

பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
சு. வேங்கடராமன்

20. *வையை : மலர் மூன்று*

பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் தே. ஆண்டியப்பன்

அச்சில்

*திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்*
*— இரண்டாம்பகுதி : பொருட்பால்*
திரு கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய
தெளிபொருள் விளக்கவுரையும், கருத்துரையும்
குறிப்புரையும், ஆங்கில மொழி பெயர்ப்புடன்
திருக்குறள் ஆய்வக வெளியீடு

1973

1. *குறள் கண்ட பொருள் வாழ்வு*
— டாக்டர் தி. முருகரத்தனம் 5—00

1974

2. *குறள் கூறும் இறைமாட்சி*
— டாக்டர் திரு. முருகரத்தனம் 6—00

3. *வள்ளுவர் வகுத்த அரசியல்*
(கருத்தரங்கக் கட்டுரைகள்) 6—00

75

4. *வள்ளுவர் வகுத்த பொருளியல்*
(கருத்தரங்கக் கட்டுரைகள்) 7—50

அச்சில்

5. குறள் கண்ட சமுதாயம்
— காமாட்சி சீனிவாசன்

6. குறள் கூறும் அரசாட்சி
— டாக்டர் தி. முருகரத்தனம்

கிடைக்குமிடம் :

மதுரைப் பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு அங்காடி
பல்கலைநகர்-625021
மதுரை மாவட்டம்.

விலை ரூபாய் 10-00

## மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை

*1975 - ஆம் ஆண்டு வெளியீடுகள்*

1. தொல்காப்பியம் — பொருளதிகாரம் — அகத்திணையியல் உரைவளம் — மு. அருணாசலம்பிள்ளை — 18—00
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
   டாக்டர் தா. வே. வீராசாமி

2. வையை : மலர் இரண்டு 8—00
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
   டாக்டர் இராம. பெரியகருப்பன்

3. அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள் 16—00
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
   டாக்டர் இராம. பெரியகருப்பன்

4. நாடகக் கலையின் வரலாறு 6—00
   — திரு. வி. சகஸ்ரநாமம்

5. மு. வ. ஆய்வடங்கல் 12—00
   — சு. வேங்கடராமன்

6. மு. வ. நினைவு மலர் 10—00
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
   சு. வேங்கடராமன்

அச்சில்

7. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்
   — இரண்டாம்பகுதி : பொருட்பால்
   திரு கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய
   தெளிபொருள் விளக்கவுரையும்,
   கருத்துரையும் குறிப்புரையும்
   ஆங்கில மொழிபெயர்ப்புடன்

8. வையை : மலர் மூன்று
   பதிப்பாசிரியர்கள் : டாக்டர் முத்துச்சண்முகன்
   டாக்டர் தே. ஆண்டியப்பன்

**10-00**

JACKET PRINTED AT SANGAM PRINTERS, MADURAI-625001.